# மலேசியா - சிங்கப்பூர் சுற்றுப் பிரயாணச் சொற்பொழிவுகள்

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

# மலேசியா - சிங்கப்பூர்
# சுற்றுப் பிரயாணச்
# சொற்பொழிவுகள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

பண்டிதர், சைவப் புலவர், செஞ்சொற் செம்மணி (மதுரை ஆதீனம்), சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்த ஞானகரம் (காஞ்சி ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம்)

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

2086

210950


தெல்லிப்பழை
இந்து இளைஞர் சங்கம்

முதலாம் பதிப்பு
விரோதிகிருது ௵
கார்த்திகைமீ 27உ.

பதிப்புரிமையுடையது

294.5

அச்சகம்:
திருமகள்
அழுத்தகம்
சுன்னாகம்



பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்,
பேராசிரியர் சு. வித்தியானந்தன், அவர்கள்
எம். ஏ. (இலங்கை) பிஎச். டி. (லண்டன்)

அளித்த

# அறிமுகவுரை

கல்வி வளர்க்கும் பெரியோர்களும் சமயம் பரப்பும் தொண்டர்களும் நிரம்பியுள்ள ஊர் தெல்லிப் பழை. அத்தகைய புகழ்படைத்த தெல்லிப்பழையைப் பிறப்பகமாகக் கொண்டு, தென்கிழக்காசியா வரை கல்வித் தொண்டும் சமயப் பணியுஞ் செய்து வருபவர் பண்டிதர், சைவப்புலவர் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள். நாற்பத் தாறு வயதுள்ள சிவத் தமிழ்ச் செல்வி, சேர் பொன்னம்பலம் இராம நாதன் நிறுவிய இராம நாதன் கல்லூரியிலும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி யிலும் கற்று ஆசிரியப் பயிற்சி பெற்றவர். அந் நிறுவனங்களிற் கல்வி கற்ற காலத்திலேயே புராணம் வாசித்தும் பயன் கூறியும் வந்தார். இவரின் சமய ஞானத்துக்குரிய வித்து அக்காலத்திலே இடப்பட்டது.



இருபத்தாறு ஆண்டுகள் ஆசிரியராகச் சேவை செய்து வரும் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், இப்போது தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரிய ராகக் கடமையாற்றுகின்றார். பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவும் பண்டிதராகவும் சைவப்புலவராகவும்

இவர் பெற்றுள்ள தகைமைகள் இவரின் தமிழ்க் கல்விப் பணிக்கும் சமய சேவைக்கும் உறுதுணையாக அமைந்துள்ளன.

இவர் கடந்த பத்தொன்பது ஆண்டுகளாகச் சொற்பொழிவுகள் செய்து வருகின்றார். தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பேச்சொலி கேட்காத ஆலயங்களும் சபைகளும் இல்லை என்ற அளவிற்குச் சமயப் பேச்சுக்கள் நிகழ்த்தியுள்ளார். குறிப்பாகக் காரைநகர் சிவன் கோயில், தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் கோயில், மாவைக் கந்தன் ஆலயம், குரும்பசிட்டி சன்மார்க்க சபை, மத்திய மாகாணச் சைவமகாசபை, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், சேக்கிழார் மன்றம் ஆகியவற்றில் இவர் பலமுறை சொற்பொழிவு ஆற்றியுள்ளார். சென்ற பதினைந்து ஆண்டுகளாகத் திருவெம்பாவைக் காலங்களிற் காரைநகர்ச் சிவன் கோயிலிலும் குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்திலும் சமயச் சொற்பெருக்காற்றிவரும் சிவத்தமிழ்ச் செல்வி, அழைப்பு எதையும் தட்டிக்கழிக்காது, தூரத்தையும் தேசத்தையும் பொருட்படுத்தாது, சைவப்பணி செய்து வருகின்றார்.

தென்னகத்தில் ஆற்றிய சொற்பெருக்கு இவருக்குப் பல வகையிற் புகழீட்டின. மதுரை ஆதீனம் 'செஞ்சொற் செம்மணி' என்ற பட்டத்தையும், காஞ்சி ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம் 'சித்தாந்த ஞானகரம்' என்ற பட்டத்தையும் அளித்தன. சென்னையிலும் சிதம்பரத்திலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் 65ஆம் ஆண்டு மகாநாடுகளில் உரை நிகழ்த்தியுள்ளார். தமது பேச்சுத் திறத்தினால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஈழத்தின் பெருமையை நிலைநாட்டினார். அண்மையில் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் செய்த சொற்பொழிவுகளின் மூலம் பலரின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

இலக்கியப் பேச்சிலும் வல்லவராக விளங்கும் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், கருத்தரங்குகளிலும்



பட்டிமன்றங்களிலும் தர்க்கரீதியாகப் பேசும் ஆற்றலுடையவர். காலத்துக்குக் காலம் மல்லாகத்தில் நடாத்தப்பட்ட பண்டித வகுப்புக்களில் ஆசிரியராய்ப் பணியாற்றிப் பல பண்டிதர்களை உருவாக்கியுள்ளார். மாணவர்களுக்குச் சமயப் பேச்சுப் பயிற்சியும் திருமுறை ஓதுதலிற் பயிற்சியும் அளிப்பதோடு அமையாது, சமயக் கருத்துக்களை நாடகம் மூலம் பரப்புவதற்காக அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் மூலம் சைவ சமய நாடக எழுத்துப் போட்டிகளையும் நடிப்புப் போட்டிகளையும் நடத்தியுள்ளார்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் ஆலய அபிவிருத்திச் சபை, யாழ். இலக்கிய வட்டம் ஆகியவற்றில் முக்கிய உறுப்பினராகச் சேவைசெய்யும் இத் தொண்டர் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்; வானொலியிலும் பல தடவை பேசியுள்ளார்.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சொற்பொழிவுகளின் வெற்றிக்குப் பல காரணங்கள் உள. கவர்ச்சியான தோற்றம், கணீர் என்ற குரல், இராகத்துடன் திருமுறை பாடும் தன்மை, இலக்கிய ரசனையுடன் பக்திச் சுவை சொட்டப் பேசும் ஆற்றல், சமயத்துக்குத் தக்க சொல்லாட்சி, பொருத்தமான மேற்கோள் போன்றவை அவற்றுட் சில.

அளவாக உரையாடும் பண்புள்ள இப் பெரியார் அசையாத இறைபக்தி உடையவர். பெரியோர்களை மதிக்கும் பண்பு இவருக்கு வாழ்க்கையில் முன்னேற வழிவகுத்துக் கொடுத்திருக்கின்றது. சைவத் தொண்டுக்கே எஞ்சிய வாழ்வினைக் கழிப்பது என்ற குறிக்கோளோடு வாழ்ந்துவரும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவை எமக்கு இன்னும் பல்லாண்டு கிடைக்கவேண்டும்.

15-11-71. சு. வித்தியானந்தன்

உ

திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை முன்னைநாள் தமிழ்ப் பேராசிரியர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

அருளிய

# ஆசியுரை

சிவசத்தியின் கடாட்சத்தை வேண்டி நிற்கும் யாழ்ப்பாணத்துப் பெண்மணி ஒருவர், மலாயா மக்களின் வேண்டுகோளுக் கிணங்கி, 'தனித்துணை' யாகிய திருவருள் துணை யொன்றனையுமே தலைக் கொண்டு, ஆகாய வழிச் சென்று, 'கணபதி கடாட்சம்' தொடங்கி இருபத்தேழு பிரசங்கங்கள் இருபத்துநான்கு நாளிற் செய்து, பொன்னுடாகிய அந்நாட்டிற் கைம் மாறு சிறிதும் வேண்டாது, மலாயா மக்களின் இருதயங்களை மாத்திரங் கொள்ளைகொண்டு, 'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்து' மீண்ட சம்பவம், உள்ளுந் தோறும் மிக்க பெருமிதத்தை உண்டுபண்ணுகின்றது:

'சொல்லின் செல்வியார்', அங்கே நிகழ்த்திய தொரு திருவாசகப் பிரசங்கத்தில், இனிய திருவாசகப் பாடற் கனியொன்றைத் தமது இன்னிசைத் தேனுடன் அளாவிக் குழைவு செய்தபோது, எதிரில் செவிமடுத் திருந்த சீமாட்டி ஒருவர், தம்வசமிழந்ததும், குளிர்ந்த நீர்கொண்டு செய்த பரிகாரத்தால் அறிவு தெளிந்ததும், தெளிந்த அக்கணமே சீமாட்டி வைரக்கற் பதித்த விலையுயர்ந்த தமது கணையாழியைச் செல்வியார் கைக்கு அணி செய்ததும், செல்வியார் தமதாய்விட்ட கணை யாழியைத் திருப்பிச் சீமாட்டியாருக்கே மிக்க வேண்டுதல் செய்து உபகரித்ததும் ஆகிய இச்சம்பவம்,



அநுமான் ஸ்ரீராமனிடம் பெற்றுவந்த கணையாழியை, சீதாபிராட்டியின் இருதயத்தில் ஸ்ரீராமனிருக்கக் கண்டு, அவனிடம் பெற்றதை அவனிடமே ஒப்பித்த பழைய இலங்கைச் சம்பவத்தைப் புதுமை செய்வதாயிருந்தது.

பிரசங்கங்கள் அவ்வப்போது ஒலிப்பதிவு செய்யப் பட்டவை. அவை அவ்வாறே புத்தக வடிவில் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது; இளம் பிரசங்க மேகங்கள் படிந்து பருகிக் கருக் கொள்ளுதற்கும் உபகாரமாம்.

நாஸ்திகம் தலைநிமிர்ந்து நிற்கும் இக்காலத்தில், தெய்வ பத்தியாகிய வித்துக்களை வித்தி, அவை முளை கொண்டு விளைவு தரும் வகையில், பிரசங்கமழை பொழிந்து, 'சென்ற இடமெல்லாம் சிறப்பு'ப்பெற்று, பிறந்த நாட்டுக்குப் புகழ் பூத்து, இனிது பயன் செய்ய, எல்லாம் வல்ல இறைவன் திருவருள், கல்விச் செல்வியாராகிய இன்னிசைச் சொல்லின் செல்வியாருக்கு என்றுங் கைகூடுவதாக.

1-11-71. சி. கணபதிப்பிள்ளை

உ

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீன மெய்கண்டதேவர்
சந்தான ஞானபீடத்துக் குரு மகாசந்நிதானம்
சிவஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அருளிய

# பாராட்டுரை

சொற்பொழிவுகளின் திரட்டாகிய இந் நூலைச் சைவ உலகுக்குச் சிவஞான தானமாக வழங்கியவர் சைவத்திருவாளர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இவ்வம்மையார் யாழ்ப்பாணத்துப் பண்டித பரீக்ஷையிலும் சென்னை சைவசித்தாந்த சமாசத்துச் சைவப் புலவர் தேர்விலும் வெற்றிபெற்றவர். எம்மிடத்தில் சிவஞானசித்தியார்க்குப் பொருள்விளக்கங் கேட்டறிந்த மாணவர் பலருள் மிகச் சிறந்து விளங்கினர் இவ்வம்மையார். இவரிடங் கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியுந் திறனும் எளிபொருளாக்கிச் சொல்லி மிக மகிழ்விக்கும் ஆற்றலும் நூல்களின்கண் அறிவும் இயல்பினில் வாய்க்கப்பெற்றவராய் விளங்குதலின் நாடவர் யாவரும் இவர் புகழைப் பெரிதும் நவிலுவாராயினர்.

எமது தலைமையில் திருக்கேதீசுவரத்தில் 'திருக்கோவையார்' என்னும் பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றக் கேட்டோம். அப்போது இவர்தம் பேச்சாற்றலை நாம் வியந்து இவர் முன் நாம் பேசுதல் இயலுமோ எனப் பயந்து விட்டதுமுண்டு.

சிவபக்தியிற் காரைக்காலம்மையாரையும் சகோதர வாஞ்சையில் திலகவதியாரையும் சைவத்தை வளர்க்கும் பெரும்பணியில் மங்கையர்க்கரசியாரையும் தாம் கற்



பிக்கும் கல்லூரியில் மாணவர்களைத் தமிழ்ச் சைவத்திற்குப் பெற்றளித்து வருதலில் இசைஞானியாரையும் தம் சொற்பொருட் பொழிவைக் கேட்கும் நன்மக்கட் கெல்லாம் ஞானசம்பந்தம் தோற்றுதலில் பகவதியாரையும் மாதர்க்கு நன்னெறி காட்டி இனியவாய் விளங்குவதில் மாதினியாரையும் வழிப்படும் மாட்சி இவ்வம்மையாருக்கு மிக்குள்ளது.

இச் சொற்பொருட் பொழிவுகளால் சைவநன்மக்கள் மிகப் பயனுறுவார்கள் என்பதுறுதி. வாழ்க புலவர், நிறைஞானச் செல்வர் தங்கம்மா அப்பாக்குட்டி. வளர்க இவரது நலம். விளங்குக இந் நூல்: ஓங்குக இவரது உயரிய உள்ளம். இவருக்கு எண்பொருட் பெருக்கமும் திருப்பெருகு சிவஞானமும் உணர்வரிய மெய்ஞ்ஞானமும் உளவாகுக.

1-10-71. சிவம்

மலேசியாச் சர்வகலாசாலைப் பேராசிரியர்
கலாநிதி, புலவர் ப. அருணாசலம், A. M. N. அவர்கள்
அளித்த

# அணிந்துரை

திருவாட்டி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சில நாட்களுக்கு முன்னர், மலேசியா - சிங்கப்பூர் வாழ் தமிழர்களுக்குச் சிறப்பாகச் சைவ அன்பர்களுக்கென்று ஆற்றிய சொற்பொழிவுகள் இன்றும் நம் காதில் ஒலித்த வண்ணமாகவுள்ளன. நல்ல கருத்துக்கள், ஆற்றல்மிக்க மொழி, இனிய இசை, எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறந்த சமய உணர்வு இவை அம்மையாரின் பேச்சைப் பலரும் விரும்புமாறு செய்துள்ளன. சமயச் சிந்தனைகளை மக்களிடையே பரப்ப விரும்புவோருக்கு வேண்டிய கொள்கை — உறுதியும் பணிவும் — இவருக்கு மேலும் ஏற்றத்தைத் தருவன.

மலேசியாவில் இவ்வம்மையார் பேசிய 'கணபதி கடாட்சம்' தொடங்கி 'வாக்குக்கருணகிரி' வரையுள்ள இருபத்தேழு பேச்சுக்களும் இன்று நூல்வடிவில் வரவிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தரும் என்பதில் ஐயமில்லை. சமய உண்மைகளை அறிய விரும்புவோருக்கு இந்நூல் ஒரு கையேடுபோல உதவும். தமிழ் இலக்கியங்களுக்கும் இந்நூல் ஓர் அறிமுகம் என்று கூறலாம். இந் நூலாசிரியர் பெரிதும் திருமுறைகளில் திளைத்து நின்றாலும் சங்க இலக்கியங்களிலிருந்து இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் வரையிலும் இவர் பேச்சுக்களில் கலந்து நின்று இந் நூலுக்கு அணிசெய்கின்றன: நூலாசிரியர்தம் புராணப் பயிற்சியும், சைவசித்தாந்தப் பயிற்சியும், சமயக் கருத்துக்களை விளக்கிச் செல்வதற்குத் துணை நின்று சைவமும், தமிழும் எந்த அளவுக்கு ஒருங்கிணைந்து செல்லமுடியும் என்பதை நன்கு காட்டி நிற்கின்றன. எனவே இந்நூல் தமிழர்களின் பாராட்டுதலைப் பெறும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை:

சைவத்துக்கும் தமிழுக்கும் அம்மையார் செய்து வரும் இத்தகைய பணிகள் மேலும் மேலும் சிறந்து விளங்கத் தில்லைக் கூத்தப் பெருமான் அருள் பாலிப்பானாக.

கோலாலம்பூர் — ப. அருணாசலம்
11 - 10 - '71



'தமிழ் நேசன்' ஆசிரியர், முத்தமிழ் வித்தகர்,
திரு. முருகு சுப்பிரமணியன், A. M. N. அவர்கள்
அளித்த

# அணிந்துரை

சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் நிகழ்த்திய சமயச் சொற்பொழிவுகள் அனைத்தையும் இந்நூல் வடிவில் திரட்டித் தந்திருப்பது சைவ சமய வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் நற்றொண்டாகும்.

சைவ சமயத்தின் அரும்பெருங் காவலராகத் திகழ்ந்து அந்நெறிக்கு யாழ்ப்பாணத்தில் நேர்ந்த இன்னல்களைக் களைந்து அஃது தழைக்க நாளும் வழிவகை செய்த நாவலர் பெருமானின் புனித வழியில் நின்று சைவ நெறியை அழுத்தமாகப் பேணி வருகின்ற பெருந் தொண்டராகச் சிவத்தமிழ்ச்செல்வி விளங்குகின்றார். மலேசியாவில் அவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் கருத்துச் செறிவும் மக்களை ஈர்த்துத் தன்வயப்படுத்தும் உருக்கமும் நிறைந்தவை. சிவத்தமிழ்ச்செல்வியின் சொற்பொழிவுகளின் மூலம் இங்கு உருவான நற்பயன் விளைந்ததையும் காணமுடிந்தது:

இந்நூலில் அடங்கியிருக்கும் 27 சொற்பொழிவுகளும் நீரோட்டமான எளிய நடையில் அமைந்திருப்பதால் சைவ நன்னெறி நமது மக்களின் உள்ளத்திற் பசுமரத்தாணி போல் பதிவதற்கு இவை உதவுமென்பது என் கருத்து: இந்நூலுக்குத் தமிழ் மக்களின் ஆதரவு நன்கு கிட்டும் என்பதும் என் நம்பிக்கை.

கோலாலம்பூர் — முருகு சுப்பிரமணியன்
17 - 9 - 1971

உ

சிவமயம்

# முன்னுரை

"ஐய னேஅர னேஎன் றரற்றினால்
உய்ய லாம்உல கத்தவர் பேணுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர்மாற் பேறரே."

துர்க்காதேவி திருவருள் துணை கொண்டு 'மலேசியா - சிங்கப்பூர் சுற்றுப் பிரயாணச் சொற்பொழிவுகள்' என்னும் இந்நூல் உருவாகியமை குறித்துப் பெருமையடைகிறேன். "நன்றி மறப்பது நன்றன்று". எனவே நூல் உருவாய சூழ்நிலையை வாசகர்களுக்கு அறிய வைப்பது அடியேனின் முதற் கடனாகும். கடந்த பத்தொன்பது வருடங்களாக ஈழநாட்டிலும் தமிழகத்திற் சில இடங்களிலும் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றி வந்ததன் பேறாகவே மலேசியா - சிங்கப்பூர் சைவத் தமிழ் மக்களால் அழைக்கப்பட்டேன். 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எனது வாழ்விலே ஒரு பொற்கால மெனலாம். மிக நெருக்கடியான ஒரு காலச் சூழ்நிலை இலங்கையில் உருவாகி யிருந்தமையால் நிகழ்ச்சி நிரலிற் குறிப்பிட்ட படி பிரயாணமாவதற்குத் தடையேற்பட்டது. எனினும் "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" என்றபடி திருவருள் வழிகாட்ட 8-4-71இல் நான் மலேசியா நாட்டைச் சென்றடைந்தேன். முன்னரே சொற்பொழிவு உருவாட்சிக் குழுவினரால் பிரசுரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்து 9-4-71 வெள்ளிக்கிழமை (பங்குனி உத்தரம்) தொடக்கம் 1-5-71 சனிக்கிழமை வரை பிரதான நகரங்கள் தோறும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. மலேசியா வானொலியிலும் சிங்கப்பூர் வானொலியிலும் இலக்கியப் பேச்சுக்கள் ஒலிபரப்பப்பட்டன. தொலைக் காட்சியிலும் பேட்டி அளித்து ஓர் உரையாற்ற வாய்ப்புக்



கிட்டியது. சொற்பொழிவு உருவாட்சிக் குழுவினர் கோலாலம்பூர் ஸ்கொட் ரேட் கந்தசுவாமி கோவிலில் வைத்துச் சிறந்த வரவேற்பு உபசாரமளித்தனர். சிலாங்கூர் இலங்கைச் சைவசங்கம், மகாமாரியம்மன் கோவில் தேவஸ்தானம், நகரத்தார் கோவிற் சபை, அருள் நெறிக் கூட்டம், சங்கீத அபிவிருத்திச் சபை, பெற்றாலிங் ஜெயா இந்து சபை, கிள்ளான் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிற் சபை, மாறான் மரத் தாண்டவர் கோவிற் சபை, குவாந்தன் இலங்கையர் சங்கம், கோலாரங்கனு இந்து சங்கம், கொட்டாபாரு இந்து சபை, ஈப்போ தெய்வீக வாழ்க்கைச் சங்கம், ரைப்பிங் இந்து இளைஞர் சங்கம், கெடா இராமகிருஷ்ண ஆச்சிரமம், பினாங் இராம கிருஷ்ண சபை, சிறம்பான் நெகிரி செம்பிளான் இலங்கையர் சங்கம், மலாக்கா இந்து சங்கம், யோகூர் பாரு இராசமகாமாரியம்மன் கோவிற் சபை, சிங்கப்பூர் இலங்கையர் சைவர் சங்கம், சிங்கப்பூர் தண்டாயுத பாணி கோவிற் சபை, சிங்கப்பூர் பெருமாள் கோவில் தர்மகர்த்தாக்கள் சபை ஆதியன அளித்த பேராதரவே சொற்பொழிவுச் சுற்றுப் பிரயாணம் வெற்றி பெறப் பெருந்துணையாயிற்று. எனவே மேற்படி சபைகள் அனைத்திற்கும் என் உள்ளங் கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் உள்நாட்டில் ஏறக்குறைய 1500மைல் வரையில் பிரயாணஞ் செய்து சொற்பொழிவுகளாற்றப்பட்டன. ஆங்காங்கு சென்ற விடமெல்லாம் சிறப்பான விருந்துபசாரங்களை மகிழ்ந்து அளித்தனர் அந்நாட்டு மக்கள். 25-4-71இல் கோலாலம்பூர் நகரத்திலமைந்த கலா மண்டபத்தில் மலேசியா சைவத் தமிழ் மங்கையர் சார்பில் மகத்தான பிரியாவிடை விழாவை நடாத்தினர் உருவாட்சிக் குழுவினர். 1-5-71இல் சிங்கப்பூர் சைவத் தமிழ் மக்கள் சார்பில் செண்பக விநாயகராலயத்திலும் கலியாண மண்டபத்திலும் பொன்னாடைகள் போர்த்துக் கௌரவிக்கப்பட்டேன். இத்தனைக்கும் என் சிரம் தாழ்த்தி, சிந்தை மகிழ்ந்து நன்றிக்

கடனைச் சமர்ப்பிக்கின்றேன்: எனது சொற்பொழிவுப் பிரயாணத்துக்கு உயிர்நாடியாக அமைந்த உருவாட்சிக் குழுவினரை என்றும் என் நெஞ்சம் மறக்கமுடியாது. சிறப்பாக திரு. M. பொன்னம்பலம் அவர்களினதும் திரு: V. செல்வநாயகம் அவர்களினதும் திரு. S. தில்லையம்பலம் அவர்களினதும் அயரா உழைப்பே அடியேனுக்குப் பெருங் கௌரவத்தை ஈட்டித் தந்தது. அவர்களை என்றும் என் இதயத்தில் வைத்துப் போற்றக் கடமைப்பட்டுள்ளேன்.

நூலைப் பிரசுரித்து வெளியிடுவதற்குப் பேராதரவு நல்கியவரும் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கோலாலம்பூரில் வதிபவருமாகிய செல்வி M. முத்துலட்சுமி அம்மையார் அவர்களுக்கும் என் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

மலேசியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் Dr. புலவர் ப. அருணாசலம் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை நல்கி உதவினார்கள். அவ்வப்போது விளம்பரங்கள் மூலம் அடியேனை அறிமுகஞ் செய்தும் பேச்சுச் சுருக்கங்களைப் பிரசுரித்தும் நூலுக்கு அணிந்துரை நல்கியும் உதவியவர் 'தமிழ் நேசன்' ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியம் அவர்கள். சொற்பொழிவு நிகழ்ச்சிகளை வானொலிச் செய்தியில் அறிவித்தும் இலக்கியப் பேச்சுக்களை நிகழ்த்த இடமளித்தும் உதவியவர்கள் மலேசியா, சிங்கப்பூர் வானொலி அதிகாரிகள்: பேட்டியளிக்க வாய்ப்பளித்தவர் தொலைக்காட்சி நிலையப் பொறுப்பாளர். இவர்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலுக்கு மேலும் அணிசெய்வதாக அமைந்தது எமது யாழ்ப்பாணத்துப் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை ஐயா அவர்களின் ஆசியுரையே என்றால் அதில் மிகை யொன்றுமில்லை: அப் பெருந்தகையாருக்கும் பாராட்டுரை வழங்கிய தொண்டைமண்டலம் மெய்கண்டாராதீனம் சிவஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்களுக்கும் என் நன்றிக் கடனை அன்னார்



பொன்னடிகளிற் சமர்ப்பிக்கின்றேன்: நூலைப் பிழையறவும் அழகுறவும் அச்சிட்டுதவிய திருமகள் அழுத்தக முதல்வரும் சிறந்த சிவ கைங்கரிய சீலருமாகிய திரு: மு. சபாரத்தினம் அவர்களுக்கும், இந்நூல் வெளியீட்டை ஏற்றுக்கொண்ட தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினருக்கும் என் நன்றி உரித்தாகுக.

நாத்திகம் பேசி நாத்தழும்பேறுகின்ற மக்கட் கூட்டம் பெருகிவரும் இக்காலத்திலே உணர்ச்சி மிகு சைவத் தமிழ்க் கூட்டமொன்று மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் சைவத்தையும் தமிழையும் பேணிக் காப்பதைக் கண்ணாரக் காணும் பேறு பெற்றேன்; அத்துடன் ஆங்காங்கு நகரங்கள் தோறும் வழிபாட்டுக்கென அமைக்கப்பட்டிருக்கும் அழகான தூய ஆலய அமைப்புக்களும் என்றும் என் உள்ளத்தை விட்டு நீங்கா. ஆங்கு நாற்பதுக்கு மேற்பட்ட சிறந்த ஆலயங்களைத் தரிசிக்கும் பேறு எனக்குக் கிட்டியது. சிவநெறிச் செல்வர்கள் சைவ சித்தாந்த வகுப்பை நடாத்தியும், கூட்டுப் பிரார்த்தனைகள் புரிந்தும், ஞாயிற்றுக்கிழமை தோறும் சைவ சமய வகுப்புக்களை நிகழ்த்தியும் சமய உணர்வை வளர்த்து வருகிறார்கள். அத்தகைய சைவாபிமானமுடைய அந்நாட்டு மக்கள் இந்நூலை ஓரளவு மனமுவந்து ஏற்றுக்கொள்வர் என்பது எனது தாழ்மையான நம்பிக்கையாகும். எம் நாட்டிலும் உயர்தர வகுப்பிற் கல்வி பயிலும் சைவ மாணவர்க்குப் பரும்படியான சமய அறிவைப் பெற இந்நூல் பயன்படும் என்ற நினைப்பினாலேயே பேச்சுத் தமிழை எழுத்து வடிவில் சமர்ப்பிக்கின்றேன்: எனது சொற்பொழிவுகளை விரும்பிக் கேட்டுப் பலகாலும் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

''என் கடன் பணி செய்து கிடப்பதே.''

தெல்லிப்பழை — தங்கம்மா - அப்பாக்குட்டி

1 - 11 - 71

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அறிமுகவுரை ... ... | iii |
| | ஆசியுரை ... ... | vi |
| | பாராட்டுரை .. ... | viii |
| | அணிந்துரை ... ... | x |
| | முன்னுரை ... ... | xii |
| 1. | கணபதி கடாட்சம் ... ... | 1 |
| 2. | முருக வழிபாடு ... .. | 9 |
| 3. | திருநாவுக்கரசர் திருவுள்ளம் ... | 17 |
| 4. | கோயில் என்பது இல்லையே ... | 25 |
| 5. | மக்கட் பிறப்பின் மாண்பு ... | 33 |
| 6. | திருப்பள்ளியெழுச்சியும், திருவெம்பாவையும் | 41 |
| 7. | கல்வியின் நோக்கமும், சமுதாயத் தொண்டும் | 49 |
| 8. | ஆறுமுகநாவலர் சிந்தனைத் திறன் ... | 57 |
| 9. | ஆலயம் அவசியமா? ... ... | 65 |
| 10. | கம்பர் கவிதை ... ... | 73 |
| 11. | மங்கையர்க்குத் தனியரசி ... ... | 81 |
| 12. | வள்ளுவர் காட்டிய வழி ... ... | 89 |
| 13. | சம்பந்தர் செந்தமிழ் ... ... | 97 |
| 14. | திருவாசகம் ... ... | 105 |
| 15. | சேக்கிழார் காட்டிய பெண்மைச் சிறப்புக்கள் | 113 |
| 16. | மணிவாசகத்தில் ஞானமார்க்கம் ... | 121 |
| 17. | பட்டினத்தார் பாடல் ... ... | 129 |
| 18. | காரைக்காலம்மையார் சிவானுபவம் | 137 |
| 19. | திருக்கோவையார் ... ... | 145 |
| 20. | நால்வர் காட்டிய நெறிகள் ... | 153 |
| 21. | பண்ணும் பரதமும் ... ... | 161 |
| 22. | யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் | 169 |
| 23. | சேக்கிழாரின் செந்தமிழ்ப் புலமை ... | 177 |
| 24. | சைவசித்தாந்தம் ... ... | 185 |
| 25. | சுந்தரர் செந்தமிழ் ... ... | 193 |
| 26. | சிவபணியின் சிறப்பு ... ... | 201 |
| 27. | வாக்குக்கருணகிரி ... ... | 209 |


உ

# கணபதி கடாட்சம்

"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே."

சைவசமய வழிபாட்டில் விநாயகப் பெருமானுக்கு முன்னிடமளித்து வழிபடும் மரபு பேணப்படுகிறது. இவ்வழிபாட்டில் ஈடுபட்டுள்ள பக்தர்கள் விநாயகன் என்றும், விக்கினேஸ்வரன் என்றும், கணபதி என்றும், யானை முகன் என்றும், பிள்ளையார் என்றும் பெருமானை வழுத்துகின்றனர். விநாயகன் என்பது மேலான தலைவன் என்பதையும், விக்கினேஸ்வரன் என்பது இடர் களைவோன் என்பதையும், கணபதி என்பது மோட்சத்தை யருளுபவன் என்பதையும், யானைமுகன் என்பது ஓங்கார மூர்த்தி என்பதையும், பிள்ளையார் என்பது குழந்தைக் கடவுள் என்பதையும் உணர்த்துவன. உலகில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுபவர் மூத்தோர் அல்லது உயர்ந்தோராவர். ஆனால் இனிப்பு வழங்கல் சிற்றுண்டி வழங்கல் என்பவற்றில் முன்னுரிமை பெறுபவர் குழந்தைகளே. இது சைவ

சமயக் கடவுள் வழிபாட்டிலும் அமைந்துள்ளது. சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனினும் வழிபாட்டு மரபில் முதற் பூசை பெறுபவர் யானைமுகக் கடவுளாகிய விநாயகரே. இது சிவபெருமானே அவருக்களித்த முதன்மையாகும்.

ஒரு காலத்தில் கயாசுரன் என்ற அசுரன் தேவர்களுக்குப் பேரிடுக்கண் விளைவித்தான். அவன் மாகதர் என்ற முனிவருக்கும் விபுதை யென்ற அசுரப் பெண்ணுக்கும் மகனாகப் பிறந்தவன். அவன் சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் புரிந்தான்; யாதோர் ஆயுதத்தாலும் அழியா வரம் பெற்றான்; அழிவுண்டேல் மீண்டும் பிறவா வரத்தையும் பெற்றுவிட்டான். இறைவனிடம் வரம் பெற்ற செருக்கினால் தேவர்களை அடக்க நினைத்தான். இந்திரன் முதலிய தேவர்களை நோக்கித் தன் கட்டளைக்கு அடங்குமாறு பணித்தான்.

“வைக லும்மிவண் வந்துழி நுங்கள்தம்
மொய்கொள் சென்னியில் மும்முறை தாக்கியே
கைகள் காதுறக் கால்கொடு தாழ்ந்தெழீஇச்
செய்க நம்பணி தேவர்கள் நீரென்றான்.”

தேவர்களும் அவன் கட்டளையை ஏற்றுச் செய்வதிலே சலிப்படைந்து சிவனுக்கு முறையிட்டனர். யானை முகத்தவனை அழிக்க யானைமுகப் பிள்ளையைத் தந்தார் எம்பெருமான். பூஞ்சோலைச் சித்திர மண்டபத்தில் உள்ள பிரணவ ஓவியங்கள் அம்மையாரின் நோக்கினால் களிறும் பிடியுமாகக் கூடின. உடனே மூத்த பிள்ளையார் தோன்றினார். வலத் தந்தத்தை யொடித்துக் கயமுகனை வென்றார். அவனை ஒரு பெருச்சாளியாக்கி வாகனமாக ஏற்றுக்கொண்டார். இவ்வெற்றி குறித்து விநாயகருக்குச் சிவபெருமான் ஒரு வரம் கொடுத்தார்.



“என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதி.”

இப்படியாக முதன்மையைக் கொடுத்த பெருமான் திரிபுரம் எரிக்கச் சென்றபோது தான் கொடுத்த வரத்தையே மறந்து விட்டார். உடனே தண்டனை கிடைத்தது.

“அப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா”

என்பது அருணகிரியின் திருப்புகழ்.

விநாயகப் பெருமானுடைய அருளைப் பல கோணங்களில் வைத்து நாம் நோக்கும்போது சைவத் திருமுறைகளையும் நமக்குத் தொகுத்துத் தந்தவர் அவரென்றே போற்றவேண்டும். திருநாரையூரிலே பொல்லாப்பிள்ளையாரருள்பெற்ற நம்பியாண்டார் நம்பி தில்லைத் தலத்தில் மறைந்து ஒழுங்கின்றிக் கிடந்த திருமுறைகளையெல்லாம் எடுத்துத் தொகுத்து பதினொரு திருமுறைகளாக்கினார். விநாயகர் அருள் பெற்ற அடியார்கள் எம்மனைவரையும் அவரிடம் ஆற்றுப்படுத்தினார்கள். ஔவையார் பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் படைத்துச் சங்கத் தமிழ் மூன்றையுங் கேட்டார். உமாபதி சிவம்,

“நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.”

எனப் பாடினார். விளக்கை முன்வைத்து இராவழி போவதுபோல அறிவை முன்வைத்துக் கருமமாற்ற வேண்டும். அதனையே விநாயக வழிபாடு நமக்குக் காட்டுகிறது. பெருமான் தன்னை வழிபடுவோருக்குப் புத்தியையும் சித்தியையுங் கொடுக்கிறார். மனித வாழ்க்கையிலே ஞானமும் வெற்றியும் கைவரப்பெற்றால் அதுவே பூரணத்துவ நிலையை அளிக்கும்.

அடுத்தபடியாகப் பெருமானுடைய ஐந்து கரங்களைக் கவனிப்போம்:

"பண்ணிய மேந்துங் காந்தலக் காக்கிப்
பானிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி யாதனக் கலச
வியன்கரம் தந்தைதாய்க் காக்கிக்
கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற் கிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகை வரைவள ராபச்
சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்."

மோதகம் ஏந்துகின்ற கையைத் தனக்காக்கியும் தந்த மேந்தியகையைத் தேவர்களுக்காக்கியும் இரத்தினக் கலசமேந்திய கையைப் பெற்றோராகிய உமைக்கும் சிவனுக்கு மாக்கியும் பாசத்தையும் அங்குசத்தையும் ஏந்திய இரு கைகளையும் மண்ணவர்களுக்காக்கியும் அருள் விளையாடல் புரிபவர் விநாயகர். மண்ணுலகத் தார் மேல் கருணைமழை பொழிபவர் என்பதை இரு கரங்கள் கொண்டு இரட்சிப்பது காட்டுகிறது. அன்பர் களின் அறியாமையையும் இடரையும் பாசத்தாற் பிணித்து அங்குசத்தால் அடக்குகிறார்.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து."

இவ்வாறு வழிபடுவோருக்குத் திருவாக்கும்; செய் கருமம் கைகூட்டும்; செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும்; உருவாக்கும். இன்னும் என்ன நீங்கள் பெற வேண்டும். "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது" என்று எமக்குக் கிடைக்கும் பேறுகளையும் காட்டி யருளினர்.



விநாயகப்பெருமான் அருளைப் பெற்ற அடியார்கள் பலர். "முன்னொருகால் இந்திரன் சீர்காழியிலிருந்து ஆற்றிய சிவபூசைக்குச் சிறிது இடையூறு ஏற்பட்டது. சிவபூசைக்காக அவன் அமைத்த நந்தவனம் நீரின்றி வாடியது. இதனால் வருத்தமுற்ற இந்திரன் நாரதரிடம் அதனை முறையிட்டான். உடனே நாரதர் அவனை நோக்கி அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் உள்ள காவிரி ஆற்றை அங்கே வரவழைத்தால் மனக்குறை நீங்கிவிடும் என்று எடுத்துரைத்தார். கமண்டலத்து நீரைக் கவிழ்த்துவிடுவதே மேலும் அதற்கு வழியென எடுத்துக்காட்டி அதற்கு உதவிபுரிய விக்கினேஸ்வரன் இருக்கிறான் என்பதையும் சுட்டிக்காட்டினார். இதைக் கேட்ட இந்திரன் விநாயகக் கடவுளை உள்ளன்போடு வழிபட்டுக் காவிரித் தீர்த்தத்தைப் பெறுவதற்குக் காத்துநின்றான். சொற்பதங் கடந்த தூயமெய்ஞ்ஞான அற்புதக் களிறாகிய பெருமான் இந்திரனுக்குக் காட்சி கொடுத்து அவன் விரும்பியபடி காவிரித் தீர்த்தத்தைச் சீர்காழிக்குக் கொண்டுவரத் திருவருள் புரிந்தார். கொங்கு நாடு சென்று காகவடிவமாகத் தன்னை மாற்றி, அகத்தியர் கமண்டலத்தின் மீதமர்ந்து அதனைக் கவிழ்த்துவிட்டார். உடனே கமண்டலநீர் காவிரியாகப் பாய்ந்தது. இந்திரன் மகிழ்ச்சியுற்றுத் தமது திருப் பணியை நிறைவேற்றினன். அகத்திய முனிவர் காகத் தைத் துரத்தினார். காகம் அந்தணச் சிறுவனாக மாறி யது. ஆத்திரங்கொண்ட அகத்தியர் சிறுவனது தலையிற் குட்டுவதற்குக் கரங்களைக் குவித்தார்; முடியவில்லை. பெருமானே மனமிரங்கித் தனது வடிவைக் காட்ட அகத்தியர் அறிவிழந்து குட்டவோங்கிய கரத்தால் தனது தலையிலேயே குட்டிக்கொண்டார். விநாயகப் பெருமானும் அகத்தியர்க் கருள்புரிந்து மறைந்தார்" என்று கந்தபுராணங் கூறுகிறது.

இனி, பெருமானுடைய திருவுருவையும் வழிபடும் முறைகளையும் கவனிப்போம். விசாலமான செவிக ளோடு கூடியதும் தந்தத்தையுடையதும் பிரணவ வடிவ மானதுமான முகம் பல தத்துவங்களை அடக்கியுள்ளது;

அன்பர்களின் முறையீட்டைக் கேட்பதற்குச் செவிகளை விரித்து வைத்துக்கொண்டிருக்கிறார். நாமும் அவ்வாறு சமய சாத்திரங்களைக் கேட்க எமது செவிகளைக் கூர்மையாக வைத்திருக்கவேண்டும். 'கற்றில னாயினும் கேட்க' என்றார் வள்ளுவர். பெருமானுடைய இரு தந்தங்களும் மதிப்பு வாய்ந்தவை. மயிலுக்கு மதிப்பு தோகையிலேயும் கவரிமானுக்கு மதிப்பு வாலிலேயும் யானைக்கு மதிப்பு தந்தத்திலேயும் தங்கியுள்ளது. தனது தந்தத்தின் மதிப்பையும் உணராது ஒரு தந்தத்தை ஒடித்துப் பாரதம் எழுதினாரென்றால், 'தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமானால் அழகையும் தியாகம் செய்ய வேண்டும்' என்ற அறிவுரையை நமக்கு நல்குகிறார். இன்னும் இரண்டு கண்களின் நடுவேயுள்ளது நெற்றிக்கண். இது ஞானத்தின் அறிகுறி. தொங்குகின்ற வாய், நாதம் விந்து என்ற குறிகளை விளக்குவதாகும். பெருமான் பிரணவ சொரூபி; அதுவே ஞான அடையாளம். தன்னை வணங்குவோருக்கு ஞானத்தை அள்ளி அள்ளி வழங்குவான். இதனாற்றான் நூலாசிரியர்கள் எல்லோரும் பெருமானை முன்னிட்டே நூல்களை யாப்பது வழக்கம்.

பெரிய வயிறும் கொழுகொழுத்த தோற்றமும் குழந்தைத் தன்மையைக் காட்டி நிற்கின்றன. இத்துணைப் பெரிய பெருமானைத் தாங்குவது ஒரு சிறிய எலி. ஞான சொரூபி பாரமற்றவர். எனவே சிறிய எலி தாங்குந்தானே. பெருமானைக்கொண்டு வாகனத்துக்குப் பெருமையே யல்லாமல் வாகனத்தைக்கொண்டு பெருமானுக்குப் பெருமையில்லையல்லவா? குழந்தைக் கடவுளுக்கு இனிப்புப் பண்டங்களை நிவேதிக்கிறோம்.

"கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணி"

என்றார் அருணகிரிநாதர்.

இனிப்பைக் கொடுத்து இனிப்பை வாங்கத் தெரிந்துகொள்ளவேண்டும். இறைவன் நமக்குக் கனியினுங்



கட்டிபட்ட கரும்பினும் தனிமுடி கவித்தாளு மரசினும் பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும் இனியவன். அத்தன்மையானுக்கு நாமும் இனிமையை நிவேதிக்க வேண்டும். நாம் படைப்பதும் வழிபடுவதும் திரும்பியும் எம்மை வந்து சேருகிறதேயன்றி வேறில்லை.

"பொன்னாற் பிரயோசனம் பொன்படைத் தார்க்குண்டு
பொன்படைத்தோன்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டுஅத்
தன்மையைப்போல்
உன்னாற் பிரயோசனம் வேணதெல் லாம்உண்டு
உனைப்பணியும்
என்னாற் பிரயோசனம் ஏதுண்டு காளத்தி
ஈச்சுரனே."

என்ற பட்டினத்தடிகளின் பணிமொழியினையும் உணர்வார்க்கு இவ்வுண்மை இனிது விளங்கும். விநாயகப் பெருமானுடைய வழிபாட்டிலே குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம், தேங்காய் உடைத்தல் என்பன முக்கியமானவை. எம்மை நாம் இழந்து நிற்கும் நிலையை இவை காட்டுவன.

"நஞ்செய லற்றிந்த நானற்ற பின்நாதன்
தன்செயல் தானே யென்றுந் தீபற
தன்னையே தந்தா னென்றுந் தீபற."

கயாசுரன் தேவர்களுக்குக் கட்டளையிட்டபோது அவர்கள் எவ்வாறு கயாசுரனை வழிபட்டார்களோ, அதேபோல் கயாசுரனை வென்ற விநாயகரை வணங்கினர். 'தேடுங் கயமா முகனைச் செருவில் சாடும் தனியானை' என்கிறார் அநுபூதியில். தனியானை — ஒப்பற்ற யானை. இது அங்குசத்துக்கு அடங்குவது அன்று; அங்குசத்தால் அடக்குவது. ஏனைய யானைகள் மயக்கந் தரும் மதநீர் பொழிய இது ஞான மதநீர் பொழிகிறது; எனவே தனியானை என்றார்.

ஒருமுறை சேரமான் பெருமாளும் சுந்தரரும் திருக்கயிலாயத்துக்குச் சென்றுகொண்டிருந்த போது ஒளவையாரைக் கண்டனர். கயிலை செல்லும் செய்தியைக் கூறினர். ஒளவையும் கயிலைக்குச் செல்ல ஆசைப்பட்டார். தான் வழக்கமாகச் செய்யும் விநாயக பூசையை வேகமாகச் செய்தார். இடையிலே பெருமான் ஒளவைக்குக் காட்சி கொடுத்து "கயிலைக்குச் செல்லும் ஆசையில் என்னையும் மறக்கிறாய்போலும்" என்றார். ஒளவை திகைத்து அயர்ந்து பாடினார். அதுவே விநாயக ரகவல். பாடிய முடிவில் அவர் கயிலையிலே சேர்க்கப்பட்டார். சேரமானும் சுந்தரரும் ஒளவை கயிலையை அடைந்தபின்பே வந்து சேர்ந்தனர். திகைத்துக் கண்டவுடன், "எப்படி வந்தனை?" என வினவினர். ஒளவை விநாயகரருளை ஏத்திக் கூறினர் என்பர். எனவே முத்தியையும் தந்து இம்மைக்கேதுவாய சித்தியையும் புத்தியையும் நல்கி அருள்புரியும் ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்தல் நம் கடனாகும்.

"ஒருமையால் உணருவோர் உணர்வினுக் குணர்வதாம்
பெருமையான் எங்கணும் பிரிவரும் பெற்றியான்
அருமையான் ஏவரும் அடிதொழும் தன்மையான்
இருமையாம் ஈசனே என்னநின் றருளுவான்."

உ

# முருக வழிபாடு

"ஆடும் பரிவேல் அணிசேவ லெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே."

மனிதவாழ்வின் இன்றியமையா அடிப்படை கடவுட் கொள்கையாகும். கடவுளொருவர் உண்டு என்ற வுணர்வும் அவரை வாழ்த்தி வணங்கி உய்தி அடைவதே பிறவியின் குறிக்கோள் என்பதும் சமய வாழ்வின் முக்கிய அம்சங்ளாகும். இந்த நம்பிக்கையோடு ஆதியில் வாழ்ந்த மனிதன் இயற்கையிலே இறைவனை இசைத்தான். மலையிலும் காட்டிலும் நாட்டிலும் கடலிலும் மணலிலும் இறைவனை வைத்துப் போற்றினான். இவற்றுள் மலையில் வைத்துப் போற்றப்பட்டவனே முருகப் பெருமான். மிகப் பழங்காலந்தொட்டே முருகனைக் கண்கண்ட தெய்வமாக நினைத்துப் போற்றி வந்தவர் தமிழர். தமிழ் நாட்டில் முருகன் பெருமை யறியாதாரில்லை. தமிழ் மக்களின் உள்ளங்கள் முருகனுறையும் ஆலயங்களாகும். முருகா என்று ஒருமுறை கூவியழைத்தால் போதும்; அவன் அன்பர்க்கு அன்பனாகவும், அடியவர்க்கு எளியவனாகவும், கவிஞர்க்குப் புலவனாகவும் காட்சியளிப்பான். 'நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும் முருகா என்று ஓதுவார் முன்' என்று பாடினார்கள்.

பெருமானைச் சங்கத் தமிழில் வைத்துப் பாடினார் நக்கீரர். புராணத் தமிழில் வைத்துப் பாடினார் கச்சியப்பர். சந்தத் தமிழில் வைத்துப் பாடினார் அருணகிரி. பிள்ளைத் தமிழில் வைத்துப் பாடினார் பகழிக் கூத்தர். இவ்வாறு புலவர்கள் எல்லாரும் தமது வாக்காலும் மனத்தாலும் முருகனைப் பூசித்து மெய்யருள் பெற்றனர். புதுமைக்கவி பாரதி,

“ வெற்றி வடிவேலன் — அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ பகையே
துள்ளி வருகுது வேல்.”

என்று பாடி ‘வேலைச் சிந்தித்தால் பகையறும்’ என்ற நம்பிக்கையைக் கூட்டுகிறார்.

அவன் கையிலுள்ள வீரவேல் விண்ணோர் சிறை மீட்ட தீரவேலாகும். சூரனது மார்பையும் கிரௌஞ்ச மலையையும் துளைத்த வேலாகும். இவ் வேல் குகையைப் பிளந்து பூதத்தைக் கொன்று நக்கீரரைக் காப்பாற்றியதுமன்றி அதனுள் அடைபட்டுக்கிடந்த தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேரையும் சிறை மீட்டுத் தந்தது. நக்கீரர் சங்ககாலத்துத். தலைமைப்புலவர். ஒரு நாள் திருப்பரங்குன்றத்தை அடுத்த தடாகக் கரையில் சிவபூசை செய்துகொண்டிருந்தபோது அவர் கவனம் மற்றுமோர் காட்சியில் தலைப்பட்டது: மரத்திலேயிருந்து விழுந்த இலையொன்று பாதி மீனாக நீரிலும் பாதி பறவையாக நிலத்திலும் போவதைக் கண்டார். சிவபூசையிலே மன ஒடுக்கமின்றிக் குற்றப்பட்டார். அதனால் கற்கிமுகி என்ற பூதம் குகையுளடைத்தது. இதற்கு முன் அடைபட்ட பலரங்கிருந்தனர். பூதம் உண்பதற்கு ஆயத்தம் செய்தபோது அங்கிருந்தோர் நக்கீரரை நிந்தித்தனர். தமக்கு அழிவு தேடவே அவர் வந்தாரெனக் குற்றம் சாட்டினர். ஆனால் நக்கீரருக்கோ முருகப் பெருமானின் சிந்தனை யெழுந்தது. உடனே சங்கத் தமிழிற் பாடினார்;



“ உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன் ”

எனத் தொடர்ந்து பாடிக்கொண்டு போனார். குகையிலே வேல் பாய்ந்தது; குகை பொடிபட்டது; பூதம் கொல்லப்பட்டது: எல்லோரும் கரையேறினர். இதனை அருணகிரிநாதர்,

“ பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை இடித்து — வழிகாணும்
பணைக்கைமுக படக்கசட மதத்தவள கசக்கடவுள்
பதத்திருகி களத்துமுளை தெறிக்க — அரமாகும்...”

என்றும்,

“ மலைமுகஞ் சுமந்த புலவர் செஞ்சொல் கொண்டு
வழிதிறந்த செங்கை வடிவேலா ”

என்றும் பாடியருளினார்.

எனவே முருகனின் கருணைத் திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்து தான் பெற்ற பேற்றை மற்ற யாவரும் பெறவேண்டுமென்று வழிப்படுத்துவதாக அமைந்ததே திருமுருகாற்றுப்படையாகும்.

அடுத்தபடியாக புராண நாயகனாக முருகன் விளங்கும் தன்மையைக் கவனிப்போம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்தது கந்தபுராணம். இதனை இயற்றிய கச்சியப்பர் சிறந்த முருகபக்தர். குமர கோட்டத்து முருகனை அல்லும் பகலும் வழிபட்டுப் பேணும் பேறு பெற்றவர். இவ்வருட் பேற்றினாலேயே கந்தபுராணத்தைப் பாடத் தொடங்கினார். முருகப்பெருமானே அதற்குத் திருத்தஞ் செய்து தினந்தோறும் ஊக்குவித்தார் என்று கூறப்படுகிறது. முருகன் ஞானந்தான்

உருவாகிய நாயகன்; ஞானவித்தகன்; தன்னை யடைந்தோர்க்கு ஞானம் வழங்குபவன்; ஈசனோடு ஞான மொழி பேசியவன்; பகைவனாகிய சூரனையே ஞானமுறச் செய்தவன். ஒரு முறை தேவர்களெல்லாரும் அசுரர்களால் துன்பமுற்றனர். தேவர்கள் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லையென்று இன்பக் களிப்பில் ஈசனைக்கூட மறந்துவிட்டனர். இதனால் அசுரர்களின் தண்டனை அவர்களை வந்து சாருகின்றது. கொடிய தோற்றமும் கடிய சொற்களும் கரிய மேனியும் கொண்டவர் அசுரர். இவர்களுக்கஞ்சித் தேவர்கள் தலைசாய்த்துப் புலால் சுமந்து வாழ்ந்தனர். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களுக்கு ஆட்சி செய்ய வரம் பெற்றவன் சூரன். அவன் தேவர்களைச் சிறை வைத்தபோது தேவர்கள் அஞ்சினர். முருகனுடைய அவதாரம் தேவர்களுக்கு அபயம் அளிக்க வந்த அவதாரமாகும். கச்சியப்பர் இதனைக் குறிப்பிடும்பொழுது எல்லாம் வல்ல பரம்பொருளே முருகனாக அவதரித்தார் என்று சொல்கிறார்.

“அருவமும் உருவ மாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய.”

உலகமுய்யவேண்டி உதித்த பிரான் அன்பர்களின் அல்லல் போக்கியருளுவானன்றோ! தாரகனை எதிர்ப்பதற்கு முதலில் சித்தங்கொண்டார். தாரகன் வழிச் செல்வோரை மயக்கிக் கிரௌஞ்சம் என்ற மலையில் மறைத்து வைப்பவன். வீரவாகுதேவர் போர்க்கோலம் பூண்டு எதிர்த்துச் சென்றபோதும் அவரையும் படைகளையும் மயக்கி விட்டான் தாரகன். எனவே முருகனே நேரே எதிர்த்துச் செல்கிறார். கண்டான் தாரகன்;

“முழுமதி யன்ன ஆறு முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்கும்
செழுமல ரடியும் கண்டான் அவன்தவம் செப்பற் பாற்றே.”


விசேட சேர்க்கைப் பகுதி

பூரண சந்திரனை ஒத்த ஆறு திருமுகங்களையும், அருள் ஒழுகும் பன்னிரண்டு நயனங்களையும், ஞான சக்தியாகிய வேலையும், மற்றைய திவ்விய அஸ்திரங்களையும், அவற்றைத் தாங்கும் செவ்விய திருக்கரங்களையும், அழகிய தண்டை யொலிக்கும் திருவடிகளையும் கண்டான் தாரகன். இத்தகைய, அருட் காட்சியைக் காணப்பெற்றமையால் அவனுடைய தவம் செப்புதற்கு அரியது என்கிறார் ஆசிரியர். சூரனும் இதேபோன்று யுத்தகளத்தில் முருகப் பெருமானை நேரே காணும் பேற்றைப் பெறுகிறான். வீரவாகு தேவர், சமாதானத்தை விழைந்து தூதுவராக வந்த சமயத்தில் பாலன் என்று முருகனை இகழ்ந்தவன் சூரன். ஆனால் நேரே கண்டபோது தன் கருத்தை மாற்றுகிறான். காரணம் பெருமானுடைய காட்சியைக் கண்ட அளவிலேயே அசுரனின் அகந்தை அடங்கியது என்பதுதான். அசுரர்களுக்கே இத்துணை மனமாற்றத்தைக் கொடுத்தது என்றால் அன்பர்களுக்கு அது எத்துணைப் பேரின்பத்தை விளைக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அருணை முனிவர் ‘சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே’ என்று பாடுகிறார். சூரனும் தனது மனக் கருத்தை மாற்றி ‘மால் அயன் தனக்கும், மேலாம் வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தி’ என்றான். பாலன் என்று சொன்னவன் பரம்பொருள் என்ற நிலைக்கு வருகிறான். இம்மூர்த்தி என்று சொல்வதிலிருந்து அவன் முருகனை உணர்வினால் மிக அணுகிவிட்டான் என்பது புலனாகிறது. அணுகிக் கண்ட காட்சியைத்தான்,

“முண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமும் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன்
மௌலியும் கோல மார்பும்

210950

எண்டகு கரமீ ராறும்
இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையும் சிலம்பு மார்க்கும்
சரணமும் தெரியக் கண்டான்.''

இந்தக் காட்சியினால், அதாவது மூவிரு முகத்து வள்ளல் முன்னர் வந்தெய்தப் பெற்றதனால், 'ஆ! இவன் தவத்திற்கு அன்றி அறத்திற்கும் முதல்வனன்றோ?' என்று போற்றப்படுகிறான்.

கந்தபுராணத்தில் அசுரர்களை அடக்கியதும், தேவர்களுக்கு அருள் புரிந்ததும், பிரமன் கர்வத்தை நீக்கியதும், தெய்வயானை அம்மையைத் தேவர்களின் நன்றியின் சின்னமாக ஏற்றுக்கொண்டதும், வள்ளியை மணம் புரிந்ததும் முருகனுடைய கருணைத் திருவிளையாடல்களாகக் கூறப்பட்டுள்ளன.

'கலியுக வெப்பத்தினின்று உயிர்களைக் காப்பாற்றிக் கருணை பொழிய வல்லவர் முருகப்பெருமானே' என்று வியாசர், ஏனைய முனிவர்களுக்கு மொழிந்திருக்கிறார். முருகு என்ற அடிப்பதமே உயிர்களைக் காப்பாற்றும் கருணையுடையவன் என்ற கருத்தை வழங்குகிறது. அந்த மூன்று எழுத்துக்களும் உகரமாகிய உயிரை அடக்கியிருப்பன. உகரம் காத்தற்றொழிலை விளக்குவது. எனவே முருகன் முக்காலமும் 'காப்பவன் என்ற கருத்தையே நாம் உணரமுடிகிறது. அவனுடைய வேல் ஞானத்தின் சின்னம்; மயில்வாகனம் பிரணவ சொரூபம். திருமுகங்கள் ஞான அடக்கம். அவன் வேலைப் போற்றினார்கள் தேவர்கள். அந்த வேல் அவுணர் என்கின்ற அறியாமையை நீக்கித் தேவர்களாகிய அறிவைப் பிரகாசிக்கச் செய்தது. சூரனுடைய மார்பிற் பட்டவுடனே அவன் ஞானம் பெற்றுச் சேவலும் மயிலும் ஆகிறான். வேல் என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் போக்க வல்லது. பெருமானுடைய அங்கங்கள் அனைத்திற்கும் ஒரு போற்றி சொன்ன கச்சியப்பர், திருக்கை வேலுக்கு இரு தரம் போற்றி சொல்கிறார்.



"தனித்து வழிநடக்கும் எனதிடத்தும், ஒருவலத்தும்
இரு புறத்தும் அருகடுத்து
இரவு பகல் துணையதாகும்."

என்று பாடி வேல் துணையாக நிற்கும் தன்மையை அருணகிரிநாதர் விளக்கினார்.

"அந்திப்போ தழகுறவே கடித்தருளும்
வழித்துணைவர் அருளும் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயில்எறி
அயிலெடுத்து வரும்செவ் வேளைச்
சிந்திப்போம் புகழ்ந்திடுவோம் மலரணிவோம்
அவர்கமலத் தாளும் தோளும்
சிந்திப்போம் ஆதலினால் கமதுபழ
வினைகளெல்லாம் சிந்திப் போமே."

பெருமானை மறவாதவருக்கு ஒரு தாழ்வும் இல்லையென்பது அருணகிரி வாக்கு. இவர் முருகனிடமிருந்து சும்மாவிருக்கின்ற சுகத்தைப் பெற்றவர். தன் செயலற்று அவன் செயலிலே ஆயிரம், ஆயிரம் பாடல்களை அள்ளிச் சொரிந்தவர். இவர், அலங்காரத்தில் முருகனை அழகுபடுத்தினார்.

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே."

செந்தமிழ் நூல் விரித்த பெருமான் முருகன். அவன் சிறந்த இலக்கணப் புலவன். இறையனார் களவியலுக்கு உரை முடிவு கண்டவன். தமிழ்நாட்டில் குறக்குடியில் தோன்றிய தமிழணங்கு வள்ளியம்மையாரிடம் தமிழ் கேட்க விழைந்தான். பேரினைக் கேட்டான், ஊரினைக் கேட்டான், ஊர்க்குச் செல்லும் வழியினைக் கேட்டான். அவள் வாயிலிருந்து வெளிப்படும் தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றான்.

பேராதரிக்கும் அடியவர் தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கவல்லவன் என்பதைப் பிள்ளைத்தமிழில் அழகாகப் பாடிவைத்தனர். பாலனுகிய முருகன் ஞானம் வழங்குந்தன்மையை அருமையாகப் பிள்ளைத்தமிழ் மொழிகிறது. இம்மைப்பேறு மறுமைப் பேறு ஆகிய இரண்டுக்கும் அவனருளே தேவை. இவ் வுலகில் வேண்டிய வரங்கொடுப்பவன், அவ்வுலகில் அழி யாத வீடுந் தரக் கடவன் என்று அம்புலிக்குக் கூறுவது போல எமக்குக் கூறி வழிப்படுத்துகிருர் பக்தர் ஒருவர். எண்ணியதை முடிக்கும் சிறப்பு முருகப்பெருமானின் முதன்மைச் சிறப்பாகும். இதனுற்ருன் 'முன்னியது முடித்தலின் முருகொத்தீயே' எனப் பாடி அரசனெருவனைப் போற்றுகிருர் நக்கீரர். தேவர்களின் பகைநீக்கி, பிரமனின் கர்வம் போக்கி, அருணகிரியின் பழி நீக்கி, குமரகுருபரரின் மூங்கை நீக்கி, பகழிக்கூத்தரின் வயிற்று வலி நீக்கி அருள்கொடுத்த வள்ளல் எம் முருகன். சங்க இலக்கியம் முப்பத்தாறில் முதனிலக்கியம் திரு முருகாற்றுப்படை. அதன் கதாநாயகன் முருகன். தமிழ் மக்களின் முதற்றரமான பக்திக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் 'சேயோன்' என்று முருகனைக் குறிக்கிறது. எனவே மிகப் பழம் பெருமை வாய்ந்த வழிபாடு முருக வழிபாடே என்பதில் ஐயமொன்று மில்லை.

"துய்யதோர் மறைக ளாலும்
துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க
சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க அன்னன்
பொய்யில்சீ ரடியார் வாழ்க
வாழ்கவிப் புவன மெல்லாம்."

உ

# திருநாவுக்கரசர் திருவுள்ளம்

"திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணுமை யுணராதேன்."

தமிழ் நாட்டிலே 6ஆம், 7ஆம் நூற்றுண்டு ஒரு புரட்சிகரமான காலமாகும். வேற்று மதத்தினர், தமிழ் நாட்டிற் புகுந்து தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் சீர்குலைத்தவொரு காலமதுவாகும். சமணரும், பௌத்தரும் தமிழ் நாகரிகத்தைச் சாடினர். இந்நிலையிலே சிவநெறியும், திருமால் நெறியும் தமிழ்நாட்டில் நலிவுற்றன. ஆலயங்களில் விழாக்களோ, பூசைகளோ இடம்பெறவில்லை. அக்காலத்தில் திருநீறு பூசுவாரைக் காணுதல் அரிது. இப்படியான ஒரு சூழ்நிலையிற்ருன் திருநாவுக்கரசர் அவதரித்தார். சைவத் தமிழ் வரலாற்றிலே இவரது அவதாரம் மிகவும் மகத்தானதாகும். திருத்தொண்டின் மூலம் திருநின்ற செம்மையைச் செம்மையாகக் கொண்டவரிவர். எண்பத்தொரு வருடம் இவ்வுலகில் வாழ்ந்தவராகையால் பழுத்த அநுபவம் இவருக்கு நிரம்பவுண்டு. சமணர்களின் துன்புறுத்தலும் இவரது அநுபவத்தை வலுவடையச் செய்ததெனலாம்.

சுவாமிகளின் திருவுள்ளம் திருத்தொண்டையே உறைப்பாகக் கொண்டது. 'தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற வாசகங்களையே அவரது வாய் எந்நேரமும் ஒலித்துக் கொண்டிருந்தது. இவ்வகையிலே அவரையோர் சிறந்த கர்மயோகி என்று நாம் கூறமுடியும். மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபட்ட நிலையிலேயே அவர் திருத்தொண்டுகள் அமைந்திருந்தன. வாயிலே வாய்மையும், மெய்யிலே மெய்ம்மையும், உள்ளத்திலே உண்மையும் கொண்டவராகையால் அவரைப் போற்றிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட திருநாவுக்கரசன்' என்று பாடினார்.

இவருடைய பிள்ளைத்திருநாமம் மருள்நீக்கியார் என்பது. அது பெயரளவில் மட்டுமன்று. செயலிலேயும் அமைந்திருந்தது. உள்ளத்திலே எழுந்த மயக்கச் சுருள்களை எல்லாம் நீக்கி அவ் வுள்ளத்தை மலர்விக்கக்கூடிய மெய்யுணர்வுக் கலைகளை யெல்லாம் இளமையிலே அவர் பயின்றிருந்தார். செழுங் கலையின் திறங்களெல்லாம் முறைமையிற் பயின்று அறிவு முதிரப் பெற்றவர். நிலையாமை கண்டு அறங்கள் செய்தவர். கா வளர்த்துக் குளந் தொட்டு, மேவினர்க்கு மகிழ்ந்து நல்ல விருந்தளித்து, நாவலர்க்குப் பொருள் நல்கி நல்லறஞ் செய்தவர். இளமையிலேயே நற்கருமங்களிலே ஈடுபட்டுப் பணிபுரிந்தாரேனும் அவருக்கு இல்லறத்திலே ஏற்பட்ட இன்னல் காரணமாகச் சிறிது மனமாற்றம் ஏற்பட்டுவிட்டது. அமண சமயம் குறுகியமைக்குக் காரணம் அவர் உள்ளத்திலே ஏற்பட்ட துன்ப உணர்வும் நிலையாமை பற்றிய தெளிவுமேயாகும். ஆனால் சமணத்திலே அன்று இருந்த நூல்கள், பள்ளிகள் யாவும் நிலையாமையைப் பற்றிய விளக்கத்தை அதிகம் அளிப்பனவாக இருந்தன. எனவே, மருள்நீக்கியார் சமணத்திலே சேர்ந்து பலவகை ஆராய்ச்சிகள் செய்து அவர்களாலேயே போற்றுதலும் பெற்று தருமசேனர் என்ற பட்டத்தையும் வாங்கிக் கொண்டார். அவருடைய இந்த மாற்றம் மதமாற்ற



மன்று. சிறிது மனமாற்றம் என்றுதான் கூறவேண்டும். இதற்குச் சான்றாக 'நினையா தொருபோதும் இருந்தறியேன்', 'இரவும் பகலும் பிரியாது வணங்குவன்' என்றெல்லாம் முதற் பதிகத்திலேயே பாடியுள்ளார். சமணத்திலேயிருந்து சூலைநோய்வாய்ப்பட்டுச் சைவத்திற்குத் திரும்பும் நிலையேற்படுவதற்கு முன்பு இறைவனை திலகவதியாருக்குக் கூறுகிறார்.

"மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண் மழவிடையார்
உன்னுடைய மனக்கவலை யொழிநீஉன் னுடன்பிறந்தான்
முன்னமே முனியாகி எனையடையத் தவம்முயன்றான்
அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வன் எனவருளி"

என்பது சேக்கிழார் வாக்காகும். முற்பிறப்பிலே சிவசம்பந்தமும் இளமையிலே அதேநிலையும் சமணத்திலே கூட அதன் மணமும் சைவத்திற்குத் திரும்பியபின் அதன் எழுச்சியும் திருநாவுக்கரசருடைய திருவுள்ளத்திலே மல்கியிருந்ததென்பது கண்கூடு.

திலகவதியாரின் வேண்டுதலுக்கு இரங்கிய இறைவன் சூலைநோயின் மூலமே அவரைச் சைவத்திற்குத் திருப்பவெண்ணினார். இதனால் அப்பர் சுவாமிகள் சூலைநோய்க்கே ஒரு இடத்தில் நன்றி சொல்கிறார். தமக்கையார் சொற்படி திருநீறு அணிந்து திருப்பதிகம் பாடி உய்தியடையக்கூடிய நிலைக்கு ஆளானார். அவருடைய சமயப்பற்று, தமிழ்ப்பற்று, கடவுட்பற்று அளவிடற்கரியது. இதனை நான்காம் ஐந்தாம் ஆறாந் திருமுறைகளிற் சிறப்பாகக் காணக்கூடிய இடங்கள் பலவுண்டு. அவர் சமயவெறி பிடித்தவரென்று நாம் கருதக்கூடாது. சமய ஒருமைப்பாட்டைத்தான் அவர் வேண்டி நின்றார். 'விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே எரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்ற தாகும்' என்பது அவர் வாக்கு. அதே நேரத்தில் பிற சமயம் தமது சமயத்தின்மேல் ஆட்சிசெய்வதை அவர் வெறுத்தார். பெண்மைக்கும் இசைக்கும் பெரும் பங்கு அளித்த பெருமை தமிழ்ப் பண்பாட்டுக்கும் கலா

சாரத்துக்கு முண்டு. ஆனால் சமணர்கள் பெண்மையை இழித்துரைப்பதிலேயும் இசையை நுகரக்கூடாது என்று பிரசாரம் செய்வதிலேயும் காலங்கழித்தனர். தன்னோடு பிறந்த தாய்த்தமிழை மறந்து இசைத்தமிழை மறந்து தாய்மையைப் போற்றாது வாழுகின்ற வாழ்வு தமிழ் வாழ்வு ஆகாது என்பதை உணர்ந்து வீறு கொண்டார் அப்பர். 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்பது அவருடைய வீரமுழக்கம். இயற்கையை நுகரக் கூடாதென்று போதித்த சமணருக்கு எதிராகக் 'காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்' என்று பாடி அறிவுறுத்தினார். இதனை அவர் செய்தவொரு சமூகப் புரட்சியென்றே கூறவேண்டும். சைவம் இன்றேல் தமிழ் இல்லை, தமிழின்றேல் சைவம் இல்லை என்பதை அவர் உணர வைத்தார்.

ஆறாவது நூற்றாண்டிலே தலையாத்திரை இவராலே தொடங்கப்பட்டது. காலால் நடந்து கயிலை மலைவரை கோயிற்பயணஞ் செய்து அனுபவம் மிக்க பாடல்களைச் சைவ உலகிற்கு அளித்தார். சம்பந்தர் பிறப்பதற்கு முன்பே இவர் சைவராகப் பிறந்தவர். இவருடைய சைவப் பொலிவைக் கண்டவுடன் சம்பந்தர் ''அப்பரே'' என்று அழைத்தார். சமய அனுபவத்தை அச்சொல் விளக்கி நிற்கிறது. அடிகளுடைய் கோலம் பழைமையானதெனினும் கொள்கை மிகப் புதுமையானது. இவர் கோலத்தை விளக்கிய சேக்கிழார் எம் மனக் கண்முன் அவரை நிறுத்துகிறார்.

''தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.''

கையிலே உழவாரமும், கண்ணிலே பெருக்கெடுக்கும் நீரும், வாயிலே செஞ்சொல் மேவிய திருப்பாட்டுக்களும், நடையிலே துறவும், உள்ளத்திலே இறையுருவும் நிறைந்து அவர் தோற்றத்தில் மிளிர்ந்தது. அடுத்த



படியாக அவருடைய புதுமைக் கொள்கைகளைக் கவனிப்போம். 'சாத்திரம் பேசி கோத்திரம் பார்த்துத் திரியும் சளக்கர்களை நோக்கி நீவிர் உள்ளத்தில் உண்மை நிலையில் இறைவனை வழிபடாவிட்டால் இவற்றால் ஆகும் பயன் என்ன?' என்று கேட்கிறார். சிவபிரானுக்கு அன்பரானால் அவரைக் குலம் நோக்காது குணம் நோக்காது நாம் வணங்கவேண்டும் என எடுத்துக்காட்டுகிறார். 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை வார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்பது அவர் வாக்கு. தன்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு ஊரூராய்ச் சுற்றி வந்திருக்கிறார். கேட்குங் கூட்டம் சேராதபோது,

''மனிதர் காள்இங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தால்கனி உண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே.''

சிக்கலான ஒரு சூழ்நிலையில் அவர் வாழ்ந்திருக்கிறார் என்பதை இப் பாடல்களின் மூலம் அறியலாம்: சொல்லுவதை அச்சுறுத்தி மனதிற் பதியவைக்கக்கூடிய முறையிற் பாடல்கள் அமைந்துள்ளன.

''தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே.''

மக்களின் உள்ளங்களைத் தொடுகின்ற அளவிற்கு அவர் இசையோடு பாடினார். அத்துடன் அவர் கருத்துக்கள் அரசியற் புரட்சியையே ஏற்படுத்தக்கூடிய பாங்கிலும் அமைந்துள்ளன. மன்னனுக்காக மக்கள் இல்லாமல் மக்களுக்காக மன்னன் என்ற அரசியற் சித்தாந்தம் ஏழாம் நூற்றாண்டில் அப்பரால் ஏற்படுத்தப்பட்டது. சமணர்களின் துர்ப்போதனையில் மயங்கிய மன்னன் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும் சமய சுதந்திரத்திற்கும் இடம் கொடுக்கவில்லை. நீதியின்படி ஆட்சி

செலுத்தவும் இல்லை. ஓருயிர்களுக்கும் துன்பஞ் செய்ய மாட்டோம் என்று ஏட்டிலே எழுதிவைத்த சமணர்கள் நாட்டிலே நடைமுறையில் அதனை மறந்துவிட்டார்கள். அரசனும் இதற்குச் சாதகமாய் இருந்தமை அப்பருக்குப் பிடிக்கவில்லை. தூதுவரைப் போக்கி அடிகளை அழைத்த நேரத்தில்,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே."

இவ்வாறு பாடி ஒரு சாம்ராச்சியத்தையே எதிர்க்கக் கூடிய பிரசாரத்தைத் தொடக்கிவைத்தவர் அவரே. இது ஒரு சமய உரிமை முழக்கம் என்று கூறினாலும் தவறில்லை. பொல்லாத் தீங்குகளைச் சமணர்கள் புரிந்த நேரத்திலும் திருப்பதிகம் பாடி அவற்றிலிருந்து மீட்சி பெற்றார். 'அஞ்சுவதுமில்லை அஞ்சவருவதுமில்லை' என்பதும், 'கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சி வாயவே' என்பதும் அவருடைய அஞ்சாமை உள்ளத்தைப் பிரதிபலிக்கிறது. இவர் அருளிய திருமுறைகளில் திருக்குறுந்தொகைப் பதிகங்கள் திருவிருத்தப் பதிகங்கள், திருநேரிசைப் பதிகங்கள், புதுமையும் சிறப்பும் பொருந்தியவை. சிறந்த உவமைகளால் நிறைந்த கருத்துக்களை விளக்கியுள்ளார்.

"வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத் துலையை யேற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற ஆமைபோல் தெளிவி லாதேன்
இளைத்துநின் றாடுகின்றேன் என்செய்வான் தோன்றினேனே."

இப்பாட்டில் ஆமையின் மகிழ்ச்சியையும் நாம் அனுபவிக்கும் ஐம்புல இன்ப நுகர்ச்சியையும் ஒப்பிட்டுக்



காட்டியுள்ளார். மற்றோரிடத்தில் 'பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை' என்று எடுத்துக் காட்டியுள்ளார். இறைவனை இனியவன் என்று எமக்கு விளக்குவதற்குக் கனியையும் கட்டிபட்ட கரும்பையும் பாவை நல்லாரையும் தனிமுடி கவித்தாளும் அரசையும் ஒப்பிட்டு அவற்றினும் இனியவன் என அறிவுறுத்துகின்றார்.

'சொற்குறுதிக் கப்பரெனச் சொல்' என்ற முதுமொழி மிகப் பொருத்தமானது. அவரது பழுத்த அனுபவம் உள்ளத்திற் கருத்துக்களாக முகிழ்த்து வாயில் நல்வாசகங்களாக மலர்ந்தது. உயிர்களின் பக்குவத்தை நோக்கி அவ்வவற்றைக் கொண்டு தன்னை அடைய வைப்பவன் இறைவன். அவன் வழிநின்று முயலாத உயிர்கள் அவனை அடைய முடியாது. விறகிலே தீ போன்றும் பாலிலே நெய்போன்றும் மணியிலே ஒளி போன்றும் எம்பெருமான் விளங்குகின்றான். தீக்கடைக் கோலினின்றும் மிகவும் சிரமத்தோடு இழுத்துக் கடையத் தீ வெளிப்படும். பாலினின்று நெய்யை எடுக்க அத்துணைச் சிரமம் இல்லை. ஆனால் மணியிலிருந்து ஒளியைக் காண இன்னும் குறைந்த சிரமமே தேவை. இந்த நிலையில் ஆன்மாக்களுக்கு அவரவர் பக்குவ நிலைக்கேற்ப வெளிப்படுவான் என்பதைப் பின்வரும் பாடலால் விளக்கியுள்ளார்.

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

கயிலையைக் காணவேண்டும் என்ற அயரா விருப்பினால் உருண்டும் தவழ்ந்தும் மலையேறிச் சென்றார். காணமுடியாது என முனிவர் ஒருவர் கூறிய நேரத்திலேயும் அவர் மனந் தளர்ச்சி அடையவில்லை. 'ஆளும் நாயகன் இருக்கை கண்டல்லால் மாழும் இவ்வுடல் கொண்டு மீளேன்' என்பது அவரது மன உறுதிப்

பாட்டை விளக்குவதாகும். இன்னும் வழிபாட்டின் பொருட்டு உண்ணு விரதம் இருந்தும், கதவு திறக்கப் பாடியும், பல்லவ நாட்டுப் பஞ்சத்தைப் போக்கியும், பரந்த மனப்பான்மையோடு பரந்த செயல் செய்து சமுதாயத்தை எழுச்சியுறச் செய்தவர் அவர். அவருடைய திருவுள்ளம் தெய்வீக உணர்விலே தோய்ந்தது. உலக இன்பத்தையே தனது இன்பமாகக் கண்டது. நாட்டை, பண்பாட்டை, மொழியை, மதத்தைப் போற்றிப் பாதுகாத்த பெருமகன் திருநாவுக்கரசு நாயனரே என்று சைவ உலகம் என்றும் போற்றுதற்குக் கடமைப்பட்டது.

"இடையருப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவா ரத்தின்
படையருத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதிந்த நெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையருச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்."

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

உ

# கோயில் என்பது தில்லையே

"எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவனருள் தன்விளை யாட்டத்தே."

மக்களாய்ப் பிறந்தோர் உலகியலாகிய எல்லையிலிருந்து நீங்கி உயிரியலாகிய எல்லையை அடைய முயற்சிக்க வேண்டும். இந்த எல்லையே சிதம்பரம் எனப்படும் திருக்கோயிலாகும். எண்ணற்ற கோயில்கள் நம் நாட்டிலிருந்தும் சிறப்பாகத் தில்லையம்பலத்தையே கோயில் என்று சொல்லுவர்.

"தீர்த்தம் என்பது சிவ கங்கையே
மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே
ஏத்தருந் தலம் எழிற்புலி யூரே."

என்பது ஆன்ருேர் வாக்கு. சிவானந்தத்தேனைக் கண்ணாலும் மனத்தாலும் அனுபவிக்க வழங்குமிடம் தில்லையம்பலமே. அங்கு நடைபெறும் திருக்கூத்தே நமது பெருவாழ்வு. எல்லாம் 'நான்' என்று ஆட முதற் பொருளாகிய சிவன் 'தான்' என்று ஆடுகிருன். அந்த ஆட்டமே உலகை ஆட்டுவிக்கிறது. தில்லை வெளியே உலகின் நடுநாயகமாய் விளங்குவது. அப் பரவெளியைச்

சிதாகாசம் என்பர். எமது இருதயத் துடிப்பு எம்மை இயக்குவதுபோல இறைவனின் தில்லைக்கூத்து உலகை இயக்குகிறது. ஐந்தொழில் நடாத்தும் திருக்குறிப்பு அக் கூத்திலடங்கியுள்ளது.

"தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் — ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

பெருமான் திருக்கரத்திலேந்திய உடுக்கு, படைத்தலைக் காட்டுகிறது. சத்தத்திலிருந்து சகம் பிறக்கும்; மொழி பிறக்கும். மொழியினின்று மானிட உறவும் கலையும் பிறக்கும். உடுக்கு இதனைக் காட்டுகிறது. அபயகரம் எம்மை நோக்கி 'வா, இரு, உய், இன்புறு' என்று குறிப்புக் காட்டுகிறது. அக்கினி கரம் தீமைகளை ஒழிக்கிறது. ஊன்றிய பாதம் மறைத்தலைக் காட்டுகிறது. தூக்கிய திருவடி துயரொழிக்கிறது.

பாரதநாட்டுக் கலைகள் யாவும் அருட் கலைகளாகும். அங்கே தெய்வீக உணர்வு நிரம்பி வழிகிறது. தாண்டவ மூர்த்தியாகிய பெருமான் அம்மையை நோக்கித் தாண்டவஞ் செய்ய அம்மையும் அதனைக் கண்டு உலகுக்கு வழங்குகிறாள்; ஏனெனில், இந்த அற்புதக் கூத்தை எல்லா உயிர்களும் கண்டு களிப்பது அரிது. தாயாக நம்மைத் தாங்குகின்ற பெருமாட்டி உயிர்களின் பக்குவமற்ற தன்மையை உணர்ந்து தானே பிரதிநிதியாக நின்று இக்கூத்தைக் காண்கிறாள். பாலை மாத்திரம் உணவாகக் கொள்ளும் பச்சிளங் குழந்தைக்கு நோய் வந்தால், தான் மருந்துண்டு பிள்ளையைக் காப்பாற்றுகிறாள் தாய். மும்மலப் பிணியில் நலிவுறும் உயிர்களைப் பேதித்து வளர்த்தெடுப்பவள் தாய். மலநோய் அகலவேண்டுமாயின் திருக்கூத்தைத் தரிசிக்கவேண்டும். அங்கே ஆண்டவன் ஆடல்புரிந்து ஆடலும் (ஆள் + தல்) புரிகின்றான். சிவகாமியம்மை தாளம் பிழைக்காது



காலங் கொடுக்கின்றாள். அந்தத் தாள அமைதிக்கு ஏற்ப ஆடும் அற்புதக் கூத்தைத் தானே கண்டு உயிர்களுக்குக் காட்டுகிறாள். இதுதான் தாய்க்கருணை.

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தானுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூல் கொண்ட வையரித் தடங்கண்
திருமான் சாயல் திருந்திழை காண
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த"

என்று எம்பெருமாட்டியின் அருட் செயலையும் இறைவனின் திருக் கூத்தின் மகிமையையும் விளக்கிப் பாடினார்கள்.

மகேசுர வடிவங்கள் இருபத்தைந்தாகும். அவற்றிற் சிறந்தது நடராச வடிவமே. நடமிடும் அவ் வடிவத்தைக் கண்டு திளைத்து,

"அஞ்சலென் றங்கை காட்டி
அழகிய முறுவல் காட்டிக்
குஞ்சித பாதங் காட்டிக்
குறித்தொரு பொருளைக் காட்டிச்
செஞ்சுடர்ச் சோதி காட்டிச்
செகவினை யாடல் காட்டி
நெஞ்சுளே நடஞ்செய் கின்ற
நின்மலப் பொருளே போற்றி."

என நெஞ்சாரப் போற்றிப் புகழ்ந்தனர்.

பஞ்சபூதத் தலங்களிற் சிறப்புப்பெற்ற ஆகாயத் தலமாக விளங்குவது தில்லைக்கோயிலே. நமது சமயா

சாரியப் பெருமக்கள் நால்வரும் தில்லைப்பெருமான் திருவருட் கோலத்தைத் தமது அகக்கண்களாலும் புறக் கண்களாலும் கண்டு களித்தனர். அந்தக் களிப்பிலே, 'அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே' என்று பாடுகிறார் மணிவாசகர். 'இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே' என்று பெருமிதமடைகிறார் அப்பர். 'மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்' என்கிறார் சுந்தரர். 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' என்கிறார் சம்பந்தர். இவர்கள் நால்வரும், நடராஜப் பெருமானைக் கண்டு களித்த முறையை அவர்கள் திருவாக்குகளாலும் சரிதங்களாலும் அறியமுடிகிறது. இவர்களில் மணிவாசகப் பெருமான் அனுபவித்த தில்லைத் தரிசனத்தை முதலிற் கவனிப்போம். திருப்பெருந்துறையில் 'இரங்கி' நின்ற அடிகளுக்கு ஒரு குறித்த நாளில் 'சிதம்பரத்திற்கு வா அங்கு நாம் அருள் செய்கிறோம்' என்று குருமூர்த்திகள் கட்டளையிட்டார். இதனை அடிகளாருடைய வாசகத்தால் அறியலாம்.

"நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி"

அவ்வாறே மணிவாசகர் புறப்பட்டு வழியிடைப் பட்ட தலங்களில் குருமூர்த்தியின் வடிவத்தைக்கண்டு கொண்டு தில்லையை அடைந்தார். அங்கே நிகழும் எம்பெருமானின் திரு நடனத்தில் அவரது உள்ளங்கலந்த நிலையைத் திருவாசகம் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. திருவாசகத்தின் உயிரோட்டம் முழுவதும் தில்லை அனுபவத்தையே பிரதிபலிக்கிறது. கோயில் மூத்த திருப்பதிகத்திற் பொன்னம்பலத்தரசே என்று விளித்துப் பாடிய அடிகள் கோயிற் பதிகத்தில் 'திருப் பெருந்துறை மேவிய சிவனே' என விளித்துப் பாடுகிறார். 'தேறலின் தெளிவே சிவபெரு மானே திருப் பெருந் துறையுறை சிவனே, ஈறிலாப் பதங்கள் யாவை



யுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே' என்று தில்லையில் நின்று போற்றுகிறார். தில்லைவாழ் அந்தணர்கள் திருவாசகத்தின் பொருளைக் கேட்டபோது திருநடனம் ஆடித்திரியும் சிவனே அதன் பொருள் என்று சுட்டிக்காட்டி மறைந்தார் மணிவாசகர். திருவாசகத்தில் இருபத்தைந்து பதிகம் தில்லையிலேயே அருளிச் செய்யப்பட்டது. இதனாலேயே தில்லை பாதி திருவாசகம் என்று சொல்லப்படுகிறது.

இறைவன் அம்மையாரது திருமுலைப் பாலோடு குழைத்து ஊட்டிய மெய்ஞ்ஞானமே திருவம்பலமாகவும் அந்த ஞானத்தில் எழுங் கூத்தே ஆனந்த நடராஜருடைய அருள் நடனமாகவும் கண்டவர் சம்பந்தர். 'உணர்வின் நேர்பெற வருஞ் சிவபோகத்தை ஒளிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை' என்று தாம் பெற்ற அனுபவத்தை வியக்கக் கூடிய முறையில் அருட்காட்சியில் ஈடுபட்டவர்கள் இவர்கள். சுவாமிகள் தமது தேவாரத்தில் தில்லைவாழ் அந்தணர்களைப் போற்றுகிறார். அவர்கள் தாம் கற்றபடியே எரிமூன்றும் வளர்த்து உலகிற் கலியை வாராமே நீக்கி உபகரிக்குஞ் செயலை முன்வைத்துப் போற்றுகிறார்.

" கற்றாங்கெரி யோம்பிக் கலியை வாராமே
செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய
முற்றாவெண் டிங்கண் முதல்வன் பாதமே
பற்றாநின் றாரைப் பற்றா பாவமே."

தில்லைப்பெருமான் கழல் காணும் பெருமையை உலகிற்கு இவர் அறிவுறுத்தினார். ஒருநாள் எம்பெருமான் தில்லைவாழ் அந்தணர்கள் எல்லோரையும் சிவகணங்களாக இவருக்குப் புலப்படும்படி அருள்புரிந்தார்.

தில்லையை வந்து அடைந்த நாவுக்கரசருக்கு என்று வந்தாய் என்ற ஒரு திருக்குறிப்பு எம்பெருமானிடம் இருந்து தென்பட்டது. இதில் ஈடுபட்ட அடிகள்,

"ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடந்தவன் அடியவர்க்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு மான்தன் திருக்குறிப்பே."

என்று உபதேசிக்கிறார். பத்தனாய்ப் பாடமாட்டேன். எனினும் 'அத்தா, உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தேன். என்னை நீ இகழவேண்டாம்' என்று பாடுகிறார். பெரியோர்கள் வேண்டாமென்று வெறுத்த மானுடப் பிறவியைக்கூட வேண்டுந்தான் என்று நினைக்கும் அளவிற்கு நடராஜர் திருக்கூத்தில் அவர் திளைத்துவிட்டார். 'நினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ' என்று தம் நெஞ்சில் தில்லையம்பலக் கூத்தனை இருத்திவிட்டார்.

திருவெண்ணை நல்லூரிலிருந்து தில்லைக்குச் சென்ற சுந்தரர், 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும், சிந்தையே யாக குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக' நின்று தில்லைக்கூத்திலே ஈடுபட்டார். கயிலைக் காட்சியைவிடத் தில்லைக்காட்சியே பெரியது என்று பெருமிதம் கொண்டார். அதாவது, பூமியிலே போய்ப் பிறக்க வேண்டுமென்று எம்பெருமான் கட்டளையிட்ட ஞான்று கயிலையிலே நின்று அழுதார். 'செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்' என்று துன்புற்றார். ஆனால், பின் பிறந்து சிதம்பரத்திலே தரிசனம் பெற்றபோது மண்ணிலேவந்த பிறவியே வாலிதாம் இன்பம் என்று நினைத்து நடராஜப் பெருமானின் ஆனந்தமான எல்லையில்லாத தனித்துவம் மிக்க பெருங் கூத்திலே நின்றும் எழுந்த பேரின்பத்தில் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

நமது உள்ளமே தில்லைச் சிதம்பரமாகும். உள்ளக் கோயிலில் தியானத்தை ஊன்றினால் சிலம்பொலி கேட்கும். சேரமான் பெருமாள் நாயனார் தினந்தோறும் சிவபூசை செய்து சிலம்பொலி கேட்டு நிறைவு செய்து கொள்ளுவார். ஒவ்வொரு உயிருக்கும் இந்தச் சிலம்பொலி கேட்கவே செய்யும். ஆனால் உணருவோர் மிகச்



சிலர். ஊன்றிய தியானத்தினால் அன்றி அதனை உணர முடியாது. அந்தண மாணிக்கமாகிய மணிவாசகரும் கரிசன மாணிக்கமாகிய நந்தனாரும் நடராஜர் சோதியில் இரண்டறக் கலந்தார்கள். திருநீலகண்டர் தில்லை நடராஜர் அருளால் நீங்கா இளமை பெற்றார். சேக்கிழார் பெருமான் சிலம்படி வாழ்த்திப் பெரிய புராணம் பாடினார். 'உலகெலாம்' என்ற முதலடி கூத்தப்பெருமான் அருளிய வாக்காகும். அதிலே பிரணவங் கலந்து ஒலிக்கிறது. அதனை மந்திர வாக்காகக் கொண்டு, பெரியபுராணத்தைச் சிறந்த காவியமாக எழுதி முடித்தார் சேக்கிழார். நூலின் தொடக்கத்திலே 'உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்' என்று தொடங்கியவர் நூலின் முடிவிலே 'மன்று ளாரடி யாரவர் வான்புகழ் நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்' என்று முடிக்கிறார். ஒலிக்கு முதலிடம் ஆகாயம். ஆகாயத் தலமாகிய தில்லை இதனை விளக்குகிறது.

பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி தில்லையிலேயே திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுத்தார். எனவே, திருமுறைகளைத் தந்த பெருமையும் தில்லைக்கே உண்டு. இதனாற்றான் திருமுறைகள் ஓதுவோர் 'திருச்சிற்றம்பலம்' என்று எல்லாவற்றிற்கும் முதற் கூறுவது வழக்கம். மாதவச் சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணத்தைப் பாடியபோது முதலில் நடராஜருக்கே துதிகூறிப் பாடினார். அங்கே இருந்தவர்களுக்கெல்லாம் ஐயம் எழுந்தது. கச்சியேகம்பனைப் போற்றாமல் தில்லையம்பலவனைப் போற்றியமைக்குக் காரணமென்ன என்று கேட்டபொழுது அவர் எதுவித விடையும் அளிக்காமல் ஓதுவார்மூர்த்தி ஒருவரை அழைத்தார். காஞ்சித் தேவாரம் ஒன்றைக் குறிப்பிட்டுப் பாடும்படி பணித்தார். அப்பொழுது ஓதுவார்மூர்த்தி திருச்சிற்றம்பலம் என்று சொல்லித் தேவாரம் பாடத் தொடங்கினார். உடனே சுவாமிகள் அதனை மற்றவர்களுக்கு விளக்கிக்காட்டி திருச்சிற்றம்பலமே முதலிற் கூறுவது மரபு என்பதையும் திருமுறை தந்த பெருமான் தில்லையம்பலவனே என்பதையும்

சைவத்தின் தனிக்கண் தில்லையென்பதனையும் விளக்கியருளினார். சிதம்பரத் தலத்தின்மேல் பதினொரு தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்றுள்ளன. இன்னும் பட்டினத்தார், சிவஞானசுவாமிகள், உமாபதிசிவம், இராமலிங்க வள்ளலார் போன்ற ஞானிகள் எல்லோரும் சிதம்பரத் தலத்தின்மேல் பல நூல்களைப் பாடியுள்ளனர். திருக்கோவையார் எழுந்த தலமும் அதுவேயாகும்.

பெருமானுடைய ஒரு கரம், தூக்கிய பாதத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அதாவது நீங்கள் அடைய வேண்டிய இடம் இதுவே என்பதை அக்காட்சி அறிவுறுத்துகிறது. நடராஜ தத்துவத்தை நோக்கினால் ஓங்காரம் தூல உடம்பாயும் உயிர் சூக்கும உடம்பாயும் திருவருள் பரசரீரமாயும் பராசக்தி திருவம்பலமாயும் விளங்குவதை உணர்ந்து கொள்ளலாம். 'பொன்னம் பாலிக்கும்' என்பதனால் ஆன்மாவைச் சிவமாக்கும் சக்தி தில்லைப்பெருங் கூத்துக்கு உண்டு என்பது புலனாகிறது. தில்லையைக் கண்டாலே முத்தி என்று சொல்வார்கள். தில்லை மூவாயிரவர்க்கும் வியாக்கிரபாதர், பதஞ்சலி முதலிய முனிவர்க்கும் இந்த ஆட்டமே ஊட்டங் கொடுத்தது. எனவே நம் நாட்டில் எண்ணற்ற ஆலயங்கள் இருப்பினும் கோயில் என்பது தில்லையையே சிறப்பாகக் குறித்து நிற்கும் தன்மையை ஒவ்வொருவரும் உணரமுடிகிறது.

"ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகி
சோதியா புணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி."

௨

# மக்கட் பிறப்பின் மாண்பு

"மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே."

**பி**றவிகளில் மிகச் சிறந்த பிறவி மக்கட் பிறவியேயாகும். மற்ற வுயிர்களுக்கில்லாத அறிவுடைமையே மக்கட் பிறவியைச் சிறப்படையச் செய்கிறது. இவ்வறிவுடைமையைக் காண்டல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பவற்றால் மக்கள் பெறுகின்றனர். இவற்றின் முதிர்ச்சியே நிட்டை கூடல் என்கின்ற மோன நிலையாகும். அறிவினால் ஆகிய பயன் நல்லதன் நலனையும் தீயதன் தீமையையும் அறிவதும் பாவ புண்ணியங்களைப் பகுத்துணர்வதுமாகும். அதற்காகவே சமய வாழ்வை நம் முன்னோர் நமக்குக் காட்டிச் சென்றனர். உண்மைச் சமயி வாழ்க்கையின் அடிநிலையை அறிந்துணர்பவனாவான். அந்த அறிவு தன்னை ஆராயச் செய்து தலைவனை அறியவைக்கும். இறைவன் எமக்கு மானுடப் பிறவியை அளித்ததன் நோக்க மிதற்காகவேயாகும்.

'எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதுஅரிது காண் இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாதுவருமோ அறிகிலேன்' என்று ஏங்கினார் தாயுமானவர். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனுக்கு நன்றி செலுத்தலே மானுடப் பிறவியின் முதல் நோக்கமாகும். மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன். சிந்தனையின் மூலம் வந்தனையின் அவசியத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கண்டுகொண்டவன். விஞ்ஞானத்தினால் மண்ணை வளமாக்கலாமே யல்லாமல் மனத்தை வளமாக்க முடியாது. ஆனால் மெய்ஞ்ஞானத்தினால் உள்ளத்தையும் உயிரையும் வளமாக்க முடியும். உயிரின் மாண்பே பிறப்பின் மாண்பு.

முருகப்பெருமான் ஒளவையாரை நோக்கி அரியது எது என்று வினவியபொழுது, 'அரிது அரிது மானுடராதல் அரிது' என்று கூறிய ஒளவையார் இறுதியில் 'ஞானமுங் கல்வியும் நயத்த லரிது' எனவும் 'தானமுந் தவமும் தாம்செய்த லரிது' எனவும், 'தானமும் தவமும் தான் செய்வராயின் வானவர் நாடு வழி திறந்திடும்' எனவும் மானுடப் பிறவியின் குறிக்கோளை மிக விளக்கிக் கூறினார். நாம் உலகத்திலே சஞ்சரிக்கும் போதும் இறைவன் எம்மோடு கூட விருக்கிறான். ஆனால் நாம் அவனை அறிவதில்லை. திருவடியுணர்வு பெற்று நாம் நிற்கும்போதுதான் அவனோடு நாமிருக்கிறோமென்பதை உணருகிறோம். இந்த வுணர்வைப் புறத்திலே தேடிக் காண முடியாது. அகத்திலேதான் காணமுடியும். அகவளத்தைத் தேடாத மேற்குநாடுகள் அவலப்பட்டு அழிகின்றன. இதே நிலையில் நம்நாடு பெரும் பேறு பெற்றதெனலாம்.

சமய வாழ்வின் மூலம், நாமெதற்காகப் பிறந்தோம்? என்ற வினாவை எந்நேரமும் எழுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். ஒரு பெரியார் இவ்வுணர்விலே நின்று பாடியதைக் கவனிப்போம்.



"இட்டா னறிந்திலன் ஏற்றவன் கண்டிலன்
தட்டா னறிந்தும் ஒருவர்க்கு முரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனு மாங்குளன்
கெட்டேன்இம் மாயையின் கிழமையெவ் வாறே."

பிறவியை மாண்பாக்கச் சிவதரிசனத்தைக் காண்டலும் சிவன் அருட் செயலை நினைத்தலும் சிவானந்தத்துட் திளைத்தலும் வேண்டற்பாலதாகும். இதற்காகவே வழிபாட்டை நம் முன்னோர் நமக்கு வகுத்துக் காட்டினர். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருமயிலாப்பூருக்குச் சென்றபோது சாம்பரும் என்புமாகக் குடத்திலடைக்கப்பட்டுக் கிடந்த பூம்பாவை யென்ற பெண்ணை யெழுப்பிச் சிறந்த கருத்தைத் தெளிவுறுத்தினார்.

'மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்."

மானுடப் பிறவியை யெடுத்து வந்தோர்க்கு இரண்டு பெருங் கடமைகளை முன்வைத்துள்ளார். அடியார் பூசையும் அரன்பூசையும் அவையாகும். பூவுலகத்திலே இப்படியான பூசைகள் நடைபெறுவதால் இறைவன் இங்கேயே எழுந்தருளி அருள்புரிகின்றான் எனத் தேவர்கள் நினைத்துப் பூமியிற் பிறக்க ஆசைப்படுகின்றார்களாம் என மணிவாசகர் திருப்பள்ளி யெழுச்சியிற் பாடியுள்ளார். 'புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோ மவமே இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றது' என்று பிரமனுந் திருமாலும் ஆசைப்படுகின்றார்கள் என்பது அப் பாடலின் கருத்தாகும். இதனையே சிவஞானசித்தியாரிலும் 'வானிடத் தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர், ஊனெடுத் துழலு மூமர் ஒன்றையு முணரா ரன்றே'

என்று கூறப்பட்டுள்ளது. நாம் வசிக்கும் நிலத்தின் பெருமை, நாம் எடுத்த பிறவியின் பெருமை, நாம் பேசும் மொழியின் பெருமை, நமது சமயத்தின் பெருமை நமக்குத் தெரியாது. வேறொருவர் இதனை எடுத்துக் கூறும் பொழுதுதான் நாம் சிறிது விழிப்படைகிறோம்.

தெய்வமென்பதோர் சித்தம் உண்டாக்குவதே மானுடப் பிறவியின் முடிவான நோக்கம். அதன்மூலம் இனிப் பிறவாப் பெருநிலையை எய்திவிடலாம். ஆனால் இதற்கு இறைவன் திருவருள்தான் வழிகாட்டுகிறது. அத் திருவருளை முன்னிட்டுப் பல படிகளை நாம் கடக்க வேண்டும். முதற்படி மானுடப் பிறவி யெடுத்தல்,

“வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தாற்குப் பாசு பதம்அருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரம் தீவளைத் தான்தில்லை யம்பலத்து
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங் கூழைமையே.”

கருவாயிருக்கும்போது கூடப் பல இடையூறுகள் குறுக்கிட்டுப் பிறவிக்குப் பங்கம் செய்துவிடுகின்றன. பூமியிற் பிறந்த பின்பும் பருவங்கள்தோறும் ஏற்படும் பிணிகளும், பாராட்டின் காரணமாய்த் தலைதடுமாறிச் செல்லும் மயக்க வழியும் பிறவியைப் பாழாக்குகின்றன. அவை மாத்திரமன்று; கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும், செல்வமென்னும் அல்லலிற் பிழைத்தும், நல்குர வென்னும் தொல்விடம் பிழைத்துஞ் சென்றாலும் தெய்வமென்பதோர் சித்தம் உண்டாவதற்குத் தடைகள் மேலும் வருகின்றன. மாயாவாதம் உலோகாயதம் போன்ற கொள்கைகளில் மயங்கி, ஆண்டவனை மறந்து விடுபவர் பலர். இந்த நிலையிலே நின்றும் நீங்கி இறைவ னிடத்திலே சாயா அன்பினை வளர்த்தால் தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகும் என்பது மணிவாசக ருடைய கருத்தாகும். திருவாசகத்தில் ஓரிடத்தில்,



“பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்த னாண்டுதன் அடியருட் கூட்டிய
அதிசய மறியேனே.”

என்று பாடியுள்ளார். அடுத்தபடியாக மானுடப் பிறவி யில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் பற்றிக் கவனிப்போம். அன்றும் இன்றும் மக்களாய்ப் பிறந் தோர் விடுகின்ற தவறுகள் இரண்டுண்டு. ஒன்று, தவறான செயல்களைச் செய்தல். இரண்டாவது, தரமான செயல்களைச் செய்யாமை. சமய வாழ்வின் மூலம் இவற்றை நீக்கிக்கொள்ளலாம். அது தன்னல மற்ற சேவை மார்க்கத்திற்கு வழி காட்டுவது. எவ்வுயிரையும் தன்னுயிர்போல் எண்ணி இரங்கச் செய்வது; அகத்தேயும் புறத்தேயும் தூய்மையைப் பேணுவது; இத்தன்மையில் வாழ்ந்தவர்கள் நமது மெய்யடியார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் கயிலைக்குச் சென்றபோது எல்லா முனிவர் களும் அவரைப் போற்றினார்கள். அவர் பெருமித மடைந்து ‘மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார் பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டேன்’ என்று பாடினார். மனிதனை உயர்த்தும் வழி அவனுடைய செயலிலேயே தங்கியுள்ளது; வள்ளுவரும் அழகாகத் திருக்குறளில்,

“பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.”

என்று மொழிந்தார். பரஞ்சோதி முனிவரும் அர்ச்சனைப் பயனை விளக்குகின்றபோது ‘குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க்கு இமயாக் குஞ்சரமும் படங்கொள் பாயும் பூவணையும் தருபவன் மதுரைப் பரமன்’ எனப் பாடி யருளினார்.

இதயக் கோவிலில் ஆண்டவனை இருத்தினாலன்றி மானுடப் பிறவியின் மகத்துவத்தை உணரமுடியாது: திருவடி சேர்தல் என்பதுகூட இதுதான். அஃதாவது

திருவடிக்கீழ் இருப்பதை ஆன்மா அறிவதுதான் திருவடி சேர்தல் ஆகும். திருவங்கமாலையில் அப்பர் சுவாமிகள் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன் என்று பாடியுள்ளார். இதனாற்றான் உடம்பின் பெருமையையும் ஞானிகள் தாமுணர்ந்து எமக்குங் காட்டி வைத்தார்கள்.

" உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில்கொண் டானென
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.''

சமய வாழ்விலே அன்புக்குத்தான் ஆதிக்கம். அன்பே சிவம் என்பது எமது பரந்த கொள்கை. இடத்தாலோ ஏனைய காரணத்தாலோ அன்பிற்கு வரம்பு கட்டுவது ஆரம்பநிலை. அன்பு ஒவ்வொருவர் உள்ளங்களிலும் நிரம்பி வழியவேண்டும். சாதி சமய வெறி ஒழியவேண்டும். யாதும் ஊராய் யாவரும் கேளிராய்க் காணும் பரந்த உள்ளம் ஏற்படவேண்டும். உலகம் உய்யப் பாடியவர்கள் அடியார்கள். அவர் வழி நாம் சென்றால் துன்பமில்லை; சுயநலமில்லை; திருப்தியீனம் இல்லை; பூசலில்லை; இன்பநிலை தானே வந்தெய்தும். தாயுமான சுவாமிகள் 'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானேவந்தெய்தும் பராபரமே' என்று பாடினார். அன்புநெறி நின்று இன்பப்பணி செய்ய முன்வந்தார் காந்தியடிகள். சத்தியமும் சேவையுந்தான் அவருடைய சமயம். இந்து சமயத்திலே ஒரு உயிர்த்தன்மையிருப்பதாற்றான் அது அன்றும் இன்றும் வாழுகின்றது. புத்தரின் அறமும், சைனரின் அகிம்சையும், யேசுவின் தியாகமும், வேதகால வழிபாடும், முகமதுவின் உபதேசமும், அடியார்களின் அனுபவமும், ஒன்றாய் அடங்கி மிளிர்வது



இந்துசமயம். மனிதப் பிறவியின் மகத்துவத்தில் நல்லாரிணக்கத்தின் பங்கு அதிகம் அடங்கி யுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனைத் திரும்பத் திரும்ப வேண்டிக்கொண்டது இதுவே. 'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' என்று தில்லையம்பலவனை இரந்து கேட்டார். பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவரே ஒரு அதிகாரத்தால் விளக்குகிறார். நாம் உயர்வடைய வேண்டுமானால் பெரியோர்கள் வாழ்க்கையைப் பின்பற்றி அவர் நூல்களைக் கருத்துடன் கற்று அதன்வழிச் செல்லவேண்டும். 'நாலுபேர் சொன்னபடி நட' என்ற பழமொழியும் இக் கருத்திலேயே எழுந்ததாகும். மக்களிடையே இலட்சியப் பிரசாரம் செய்தவர்கள் சமயாசாரியர்கள். இதற்காக ஊர் ஊராகச் சென்றனர். தாம் வாழ்ந்து காட்டினர். உழவாரத்தையும் தாளத்தையும் கருவியாகக் கொண்டனர். அதனால் சரித்திர வரலாற்றிலே சிறந்தவொரு சமய நாகரிகத்தை நிலைநாட்டினர். மதத்தை உதாசீனஞ் செய்யும் நாகரிகம் நிலைக்காது. எமது சரித்திரம் இந்த உண்மையைக் காட்டுகிறது. இதனாலேயே காலத்திற்குக் காலம் ஆண்டவனால் மதபோதகாசிரியர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் காலத்தினாற் செய்த நன்றி ஞாலத்தின் மாணப் பெரியதாகும்.

'சைவமாம் சமயஞ் சாரும் ஊழ்பெற லரிது' என்றார் அருணந்திசிவம். ஆனால் அந்த நல்ல ஊழும் வாழ்வின் மூலமே சிறப்படைய முடியும். பிறவியென்பது கடல்; உடம்பென்பது தோணி; உயிர் மீகாமன். கடலைக் கடப்பதற்குத் தோணியும் நல்லபடி அமையவேண்டும்; மீகாமனும் அறிவுடையவனாய் விளங்கவேண்டும். மீகாமனின்றித் தோணியினாற் பயனில்லை. அதே நேரத்தில் உடம்பாகிய தோணிக்கும் நல்ல பலம் இருக்கத்தான் வேண்டும். இதனாற்றான் உடம்பையும் போற்றி வாழ்ந்தார்கள். இந்த வாழ்விலே மேம்பட்டுத் தம்மை

யுணர்ந்து தலைவனை உணர்ந்து அவன்தாளிற் தலைப்பட்டனர். அதனால் பிறவியாகிய கடலை நீந்திக் கரையேறினர். எனவே, வையத்தில் வாழ்வாங்கு அமைந்த தெய்வநெறியிற் றலைப்பட்டால் மானுடப் பிறவியும் மாண்புடையதாய்ப் போற்றப்படுமன்றோ !

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே.

உ

# திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும்

"போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே."

திருவாசகத்தில் அமைந்துள்ள பதிகங்களில் திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் அருட்சுவையோடு பொருட்சுவையும் சொற்சுவையும் மிகுந்த பாடல்களைக் கொண்டனவாகும். பள்ளி எழுச்சி என்பது துயிலெழும்புதல். மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சியே முதன் முதலாக வெழுந்த திருப்பள்ளியெழுச்சிப் பாசுரமாகும். இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. இறைவனைத் துயில் உணர்த்துகின்றேம் என்றால் அதன் பொருள் யாது?

ஞானசொருபிக்கு உறக்கமும் விழிப்பும் உண்டா? எனவே ஆண்டவனைத் துயிலுணர்த்துவான் போல் நம்மை நாமே துயிலுணர்த்திக் கொள்வதாகும். திருப்பள்ளி யெழுச்சியின் உட்கிடை 'திரோதான சத்தி' எனக் குறிக்கப்பட்டதும் நினைக்கற்பாலது. அஃதாவது உயிர்களின் மல மறைப்பை நீக்குதல். சங்கார காலத்தில் ஒடுங்கிய உயிர்களுக்கு மீளவும் பக்குவம் வருதற் பொருட்டு இறைவன் ஐந்தொழில் செய்யத் தொடங்கும் அவதரமே திருப்பள்ளி யெழுச்சியாகும்.

அரசியற் பணியைச் செய்து காலங்கழித்த மணி வாசகர் இறைபணி செய்ய அவாவுகிறார். அதிகாலையில் ஆண்டவனிடஞ் சென்று என்ன பணிசெய்ய வேண்டு மென்று கேட்கிறார்.

"அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுஅவன் திருவுரு இவனவ னெனவே
எங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே."

உண்மையில் அவன் செயலன்றி நம் செயலேது, எனவே, இப் பதிகம் முழுவதும் அவன் செயலேற்று நாம் நடக்கும் தகைமையினையே எடுத்துக் காட்டி நிற்கிறது.

திருவெம்பாவை யென்பதும் ஆதியும் அந்தமு மில்லா எம்பெருமானின் அருட்சத்தியை வியந்து கூறப் பட்ட பாசுரமாகும். மார்கழிமாதம் மதிப்புக்குரிய மாதம். இறையன்பில் எம்மை ஈடுபடுத்தும் இயற்கை நிலை இம் மாதத்திலுண்டு. சிவனுக்குரிய திருவாதிரைத் திருநாளும் இம் மார்கழியிலேயே வருகிறது. திருஞான



சம்பந்தர் பூம்பாவையை எழுப்புகின்றபோது ஆதிரை நாட் பெருமையைத் திருப்பதிகத்தில் அமைத்துப் பாடி யுள்ளார். ஆதிரைக்கு முந்திய பத்துநாட்களும் நீராட்டு நாட்களே. இவை சிறப்பாகப் பெண்களுக்கே உரியன. இல்லறத்தாற் கிடைக்கக்கூடிய இம்மை மறுமைப் பயன்களை ஆடவரும் பெண்டிரும் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கையாற்றான் பெற்றுக் கொள்ளலாம். மண வாழ்க்கை ஏற்பட்டுவிட்டாற் பின்பு அதனை மாற்றிவிட முடியாது. அதனாற்றான் பெண்கள் இந்த நோன்பை அநுட்டித்து நல்ல மணவாழ்க்கைக்கு வரம் கேட்கி றார்கள். சங்ககாலப் பாடலொன்றில் தை நீராடிப் பெரு வரம் பெற்ற செய்தியொன்று குறிப்பிடப்பெற்றுள்ளது. ஒரு பெண் தான் விரும்பிய தலைவனை அடைவதற்காகத் 'தைத்திங்கள் தண்கயம் படிந்தாள்' என்பது நற்றிணைப் பாட்டு. பரிபாடலில் கதிரவன் கடுகிக் காயாத மார்கழி ஆதிரைக்கண் இறைவனுக்கு மழை வேண்டி விழா எடுத்தனர் பண்டைத் தமிழர் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. பின்னே வரும் வேனில் வெப்பத்தால் வியன் ஞாலங் கருகாது வளம்பல சுரக்க மழை வேண்டு மென்று நீராடிய செய்தி அப்பாடல்களிற் குறிப்பிடப் பட்டுள்ளது.

'ஞாயிறு காயா நளிமாரி பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்க
வெம்பா தாக வியன்நில வரைப்பென
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டத்
தாயொடு நின்று தைநீ ராடுதல்"

பிற்காலத்து இதுதான் மார்கழி நீராடல் எனப் பட்டது. இதற்குக் காரணமும் உண்டு. அக்காலத்தில் மார்கழி இறுதிப் பகுதியிற்றான் திருவாதிரை நாள் வருவது வழக்கம். அதனால் தை நீராட லென்று கூறினர் போலும்:

சமய வாழ்க்கைக்கு அடியாரிணக்கம் மிக அவசியமாகும். 'உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம், உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம், அன்னவரே யெம்கணவ ராவார்' என்பதால் சமய வாழ்வில் ஒத்த கருத்துள்ள குடும்பங்கள் நம் நாட்டில் நிலைபெற வேண்டுமென்று அடிகள் விரும்பினார்; பெண்களெல்லாரும் மார்கழித் திங்கள்தோறும் வெள்ளியெழுமுன் னெழுந்து வீடுவாசல் பெருக்கி மற்றவரையு மழைத்துக் குளித்து, தூய உள்ளத்தோடு வழிபாடாற்றுவர். ஊர் வம்பு பேசார்; ஆண்டாள் பெருமாட்டி இதனை அழகாகக் கூறுகிறார்.

"நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்."

திருவண்ணாமலையில் அடிகள் தங்கியிருந்த காலத்திற் பெண்களெல்லாரும் ஒருவரையொருவர் துயிலெழுப்பி ஏதோ நாட்டுப் பாடல்களைப் பாடிக்கொண்டு செல்வதைக் கண்ட மணிவாசகர் உள்ளத்தில் ஒரு ஞானக் காட்சி பரிணமித்தது. இதுவே பாவைப் பாட்டாக வெளிவந்தது.

"மாதர்கொண் மாத ரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன்னி ரைந்தே ஆகிய தினங்கள் தம்மின்
மேதகு மனைகள் தோறும் அழைத்திருள் விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றட மாடல் செய்வார்."

'அன்னவ ரியல்பு கண்டார் ஆங்கவர் புகன்ற தாக மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி' எனக் கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்திற் காட்டியுள்ளார்.



திருவெம்பாவையிற் பாடப்பட்ட பெண்களின் உரையாடல் ஒன்பது பேருக்கிடையே நடைபெறுகிறது. ஒன்பதாம் பாடலிலிருந்து இருபதாம் பாடல்வரை பெண்களெல்லாரும் சேர்ந்து பாடிய தன்மை காட்டப் பட்டுள்ளது. பத்தாவது பாடலிலே இறைவனின் ஒப்பற்ற முதன்மையைக் காணலாம். அவன் பாதங்கள் பாதாள மேழினுங் கீழ்ச்சென்று சொற்பதத்தையுங் கடந்து நின்றவை யெனவும், அவன் முடி எல்லாப் பொருள்களின் முடிவையுங் கடந்து அப்பாலுள்ளதெனவும், திருமேனி ஒன்றல்லனெனவும், ஓத உலவா ஒரு தோழனெனவும், பெயர் ஊர் கிளையற்றவனெனவும் இறைவனின் சொரூப லட்சணத்தை அப் பாடலிற் காட்டியுள்ளார். பதினைந்தாவது பாடலிலே இறைப் பித்துக்கொண்ட ஒரு பெண்ணியல்பை வர்ணிக்கிறார்.

"ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
/தான்பணியாள்
போரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்."

என்பது அப்பெண்ணை வர்ணிக்கும் திறமாகும். இதிலிருந்து இறையுணர்விலே நின்று சிவபோதம் கைவரப் பெற்றவர்கள் ஞானச் சார்பன்றி ஊனச்சார்பொன்றையும் உணரமாட்டார்கள் என்பது வெளிப்படை. பத்தொன்பதாவது பாடல் அடைக்கலப் பாடலாக அமைந்துள்ளது. பெண்கள் எல்லாம் கூடி 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல' மென்று குரலெழுப்புகிறார்கள். அப்படி யெழுப்பும்போது அச்சமும் ஒருபுற முண்டாகிறது. இறைவனுக்கிது தெரியாதா?

புதுமையாக இதைச் சொல்ல வேண்டுமோ என்று அவர் கருத்திற் பட்டாலும் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டுமென்ற ஆசை மேலெழுகின்றது. ஆசையினால் தமது வேண்டுகோள்களை விடுக்கின்றார்கள். 'இறைவா! நாங்கள் உனது அடைக்கலம். எங்களுக்கு நீயே துணை. உமது அடியார்களே எமது கணவர்கள். எமது கைகள் உமக்கே திருப்பணி செய்யவேண்டும். எமது கண்கள் உமது திருக்காட்சியையே காணவேண்டும். இந்த நிலை நமக்குக் கிடைத்தால் எமக்கு வேறு உலகியல் ஆராய்ச்சிக்கு இடமில்லை,' என்பது அவர்கள் வேண்டுதல்களாகும். இறைவனே தமது பிதா என்றும் அவரே தம்மை யாருக்காவது கொடுக்க உரிமையுடையவரென்றும் கூறிக் கூறி அவர்கள் களிப்படைவதிலிருந்து இறைவனை முன்னிட்டு நடத்தும் இல்லறம் நல்லறமாகக் கழியுமென்ற உண்மை புலனாகிறது. பாவை நோன்பின் அடிப்படைக் கொள்கையும் இதுவே.

இறுதிப் பாடலில் இறைவனின் ஐந்தொழில் விளையாட்டுக்கள் கூறிப் போற்றிப்பாவைப் பாட்டை முடிவுசெய்கிறார். பாடல் முழுவதிலும் அம்பலவாணன் புகழே கூறப்படுகிற தென்பதற்குச் சான்றாக மூன்றிடத்திற் 'சிற்றம்பலம்' என்ற சொல் அமைந்துள்ளது. 'சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி' என்பதும் 'நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங் கூத்த' னென்பதும், 'தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்தில் ஈசனார்க்கன்பார்யா'மென்பதும் அத்தொடர்களாகும். திருவாதிரை நாளில் சிதம்பர நடராஜப் பெருமானுக்குச் சிறப்பான பூசைகளும் ஆருத்ராதரிசனமென்னும் சிறந்த அருட் காட்சியும் எடுக்கப்படுகிறது. இதனாற்றான் ஆதிரை விழாவைக் காண ஆசைப்பட்டார் திருநாளைப் போவார்.

காலத்தோடொட்டியும் மார்கழிக்கு ஒரு சிறப்புண்டு. எங்கும் குளிர்; சிறு சிறு மழைத் தூற்றல்; பசும்புல்லடர்ந்து பச்சைப்பசேலென்ற காட்சி. சிறு



மழையும் குளிர் பனியும் சேர்ந்து உள்ளத்தையும் உடம்பையும் அமைதிப்படுத்தும் சிவத்தைத் துயில் எழுப்புவது போல் திருப்பள்ளியெழுச்சியிலும் சித்தத்தையே துயில் எழுப்புகிறார் மணிவாசகர். துயிலுணர்ந்த ஆன்மா மலநீக்கத்துக்காகத் திருவருள் நீரிற் படிகிறது. அதனால் தூய்மை அடைகிறது. தூய்மையான நிலையில் இறைவனை வேண்டிநிற்கும் வரங்களே மேற்காட்டியபடி பத்தொன்பதாவது பாடலில் அமைந்தவையாகும். திருப்பாவையிலும் ஆண்டாள் பெருமாட்டி வேண்டுகிறார்:

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணுங் குலத்தில் பிறந்துநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னோ
டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்."

கண்ணபிரானைப் போற்றிய திறனும் அவனுக்காட்பட்ட செயலும் திருப்பாவையில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. 'பாவை' என்பது பரம்பொருளைப் பாவையர் பாடிய பகுதி எனவும், 'பாவாய்' என விளித்துப் பாடிய பகுதி எனவும் கருத்துணர்த்தி நிற்கிறது. நாட்களில் வைகறைப் பொழுதும் வருடத்தில் மார்கழி மாதமும் மன அமைதிக்குரிய காலமாகும். இதனாலேயே 'வைகறை யாமந் துயிலெழுந்து' தத்தங் கடமைகளைச் செவ்வனே யாற்றினர் முன்னோர். இதே அமைதியை மார்கழி மாதத்திற் கண்டு நோன்பு அனுட்டித்துப் பாரினை உய்யக் கொள்கிறார்கள் பக்தர்கள். சக்தியின் தொழிற்பாட்டுக்குரிய காலமுமிதுவே. சக்தியின் வியாபரித்தலால் ஐந்தொழில்களும் நடைபெற ஆரம்பிக்கும் காலமிதுவே. இதனாலேயே 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை

தன் பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்' எனப் பாடினார் மணிவாசகர். சக்தி வெளிப்பட்டாலன்றி உலகுக்கு உய்வு கிடையாது. படைத்தலுக்கு ஆயத்த மாகும் போது இறைவன் சக்தியைச் சேருகிறான்: இதனை அடிப்படையாக வைத்தே பாவைப் பாடல்கள் எழுந்தன. எனவே ஆணவ இருளில் அல்லற்பட்டு நான் எனது என்ற பற்றில் மயங்கி நெறிதிறம்பிச் சென்றுகொண்டிருக்கின்ற எம்மனைவரையும் நெறி மாற்றி இருளகற்றித் துயிலுணர்த்தி ஞானமூட்டி வழி காட்டுவன இப்பாடல்களே. இவற்றை அவ்வக் காலங் களில் ஓதியுணர்ந்து உய்தியடைவோமாக.

"அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய்."

உ

# கல்வியின் நோக்கமும் சமுதாயத் தொண்டும்

நாளை அதிகாலை விரோதிகிருது வருடம் பிறக்கப் போகிறது. அகில உலகத்திலேயும் வாழுகின்ற தமிழ் மக்கள் இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். புதுவருடத்தை முன்னிட்டு இல்லங்கள் தோறும் புதுப் பொலிவும் மகிழ்ச்சியும் நிறைந்து விளங்கும். இத் தினத்திலே அதிகாலையில் ஆண்டவனுடைய ஆலயங்க ளுக்குச் சென்று வழிபட்டுப் பின்பு புதுக் கருமங்களை ஆரம்பிக்கும் மரபு மிகப் பழங்காலந்தொட்டு நடை முறையிலிருந்து வருகிறது. ஆனால் இந்த விழாவை வெறுஞ் சடங்காக மாத்திரம் கொண்டாடுவதிலும் பார்க்க வாழ்க்கை முறையிலும் பல புதுமைகளையும் நிறைவுகளையும் ஆக்கிக்கொள்வதற்கு நாம் சங்கற்பம் எடுக்கவேண்டும். அதுவே விழாவின் உண்மையான நோக்கமுமாகும். ஒவ்வொரு சமுதாயமும் தத்தமது மரபைப் பேணி இனத்தைப் பேணிப் பண்பாட்டைப் பேணி நடப்பதற்கு உதவி புரிவன விழாக்களே. ஆனால் இன்று நம் நாட்டில் விழாக்கள் மலிந்துவிட்டன. விழாக்களின் பயன் குன்றி வருகிறது. எனவே உண்மை யான கல்வியின் நோக்கத்தையும் சமுதாயத் தொண் டையும் உணர்ந்து இப் புதுவருடத்திலே நாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

புத்தாண்டு என்பது மக்களுக்குப் புத்துணர்ச்சியைத் தருவது. புது வருடத்தை முன்னிட்டு எல்லாவற்றையும் நாம் புதுமையாகச் செய்துகொள்கிறோம். எனவே கடந்த வருடத்தில் விட்ட தவறுகளைப் புதுவருடத்தில் திருத்திக் கொள்ளவேண்டும். கடந்த காலத்தில் நிகழ்ந்த துன்பங்களையும் வருத்தங்களையும் அது மறக்கச்செய்யும். நல்ல நினைப்பையே உள்ளத்தில் தோற்றுவிக்கும். கடந்த வருடத்தில் நாமாற்றிய பணிகளைப் புது வருடத்தில் மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டும்: சிந்தனையிலும் செயலிலும் புதுமை காண வேண்டும்; நடையிலே புதுமை, உடையிலே புதுமை, நாகரிகத்திலே புதுமை, வீட்டிலே புதுமை மாத்திரம் இருந்தால் அது புத்தாண்டு விழாவுக்குரிய நற்பயனை அளிக்காது.

தமிழர் வாழ்விலே பூரணை நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. ஏழாவது நூற்றாண்டிலே அவதரித்த ஞானசம்பந்தருடைய பூம்பாவைப் பதிகத்தில் இதனைச் சிறப்பாகக் காண்கிறோம். சித்திரை மாதத்திலே சித்திரை நட்சத்திரத்தோடு பூரணை சார்ந்து வருகிறது. சூரியன் முதல் ராசியாகிய மேடராசிக்கு வருகிறது. இதனாலேயே இம் மாதத்தை வருடத்தின் தொடக்கமாகக் கொள்கிறோம். இம் மாதத்தின் தொடக்கத்தைப் புதுவருட தினமாகவும் கொண்டாடுகிறோம்.

நமது நல்வாழ்வுக்கு வழிகாட்டுவது கல்வி. கல்லுதல் என்பது அகழுதல் என்ற பொருளில் அமைகிறது. உள்ளத்திலுள்ள மாசுகளை நீக்கித் தூய்மையாக்குவதற்குத் துணைபுரிவதே கல்வி.

“சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.”

என்றார் வள்ளுவர். தீயதன் தெறலையும் நல்லதன் நலனையும் பகுத்துணர வைப்பதற்குத் தூண்டுவது கல்வி. அதன் பயன் ஆண்டவனுடைய திருவடியில் நம்மைச் சேர்த்தலில் முடிகிறது. வள்ளுவப் பெருந்தகையும் இதனை விளக்கவே,



“கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.”

என்று பாடியருளினார். கல்வியின் பயன் கற்றலில் தொடங்கி நிற்றலில் முடியவேண்டும். இடையிலே கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற மூன்று படிகளும் அமைந்திருக்கின்றன. இந்தத் தெளிவுதான் சமய வாழ்வுக்கும் சமூகசேவைக்கும் எம்மைச் செலுத்துகிறது. சமுதாயத் தொண்டு என்பது ஆண்டவன் வழிபாட்டை ஒட்டி நிற்பதுதான். தெய்வ நம்பிக்கையில்லாத உள்ளத்தில் மனச்சாட்சி வேலை செய்யாது; நீதி உயிரற்றுப்போகும்; பண்பாடு புகைந்துவிடும். எனவே வழிபாட்டிற் சிறந்தது சமுதாய நலனைச் சிந்தித்துச் செயலாற்றுதலே. இரண்டுவகையிற் கல்வியை நாம் பெறுகிறோம். உலகத்தில் ஏற்படும் அனுபவத்தின் மூலமும் நூல்களின் வாயிலாகவும் பெறுவது ஒருவகை. உள்ளுணர்வின் மூலம் சிந்தித்து அறிவைத் தேடிக் காண்பது இரண்டாவதுவகை. இவ்விரண்டுஞ் சேர்ந்தால் பிறர் நலத்தையே சிந்தனை செய்யத் தூண்டும்; முடிவில் இறை நலத்திற்கு ஆளாக்கும்; தக்கது இன்னது என்றும் தகாதது இன்னது என்றும் பகுத்துணர வைக்கும். ‘தக்க இன்ன தகாதன இன்னதென் றொக்க உன்னல ராயின் உயர்ந்துள மக்களும் விலங்கே’ என்றார் கம்பர். தக்கனவற்றைச் சிந்திப்பவன், எல்லோரும் இன்புற்றிருக்கவே நினைப்பான்.

“அனைத்துயிரும் ஒன்றென் றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
பொய்வஞ்சம் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பா ராகில்
செய்தவம் வேறொன் றுண்டோ.”

என்றார் ஒரு பெரியவர். நீடிய பிணியால் வருந்துவோரைக் கண்டு உளம் நெகிழ்ந்தேன் என்றார் இராமலிங்க வள்ளலார். மனிதன் தோன்றிய காலந்

தொட்டே சமயமும் சமூகமும் இணைந்து பிணைந்து வந்திருக்கின்றன. சமயவாழ்வுதான் மனிதன் வாழ வேண்டிய வாழ்வு. அது உயிருக்கு ஒளியையும் பாதைக்குத் தீபத்தையும் உள்ளத்துக்குத் தூய்மையையும் அளிக்கும். தனக்குத் தானே நற்சான்று பகர்வது சமய அனுபவம். இதனால், பேசும் பேச்சும் நினைக்கும் எண்ணமும் ஆற்றும் செயலும் புனிதமடைகின்றன. மக்களுக்குப் பயனுள்ள பணியைச் செய்வதே சமயத்தின் கடமை என்றார் காந்தியடிகள். அவர்களின் கருத்துப்படி இந்துசமயம் என்பது சத்தியத்தைப் பின்பற்றிச் செல்வதற்கு அமைந்த ஒரு மார்க்கமாகும். புத்தரின் அறத்தையும் சைனரின் அகிம்சையையும் யேசுவின் தியாகத்தையும் முகமதுவின் புனிதத்தையும் அடக்கியிருப்பது இந்து மதம். கல்வியின் உண்மைப் பயன் பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதலிலுந் தங்கியுள்ளது. அன்பினாலே உலகை ஆட்சி செய்யலாம் என்பதை, புத்தாண்டுத் தினத்திலே நாம் சிந்தையிற் கொள்ளவேண்டும். பாப்பாவுக்கு வாழும் முறைமையை எடுத்துக் காட்டிய பாரதியாரும்,

"உயிர்க ளிடத்தி லன்பு வேண்டும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேண்டும்
வைர முடைய நெஞ்சு வேண்டும் — இது
வாழும் முறைமையடி பாப்பா."

என்று பாடினார். நம்முன்னோர்கள் பரந்த சொல்லும் பரந்த செயலும் பரந்த எண்ணமுமுடையவர்களாய் வாழ்ந்தார்கள். பிற்றைநிலை முனியாது கற்றல் வேண்டும் என்ற கொள்கை அன்றிருந்தது. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பினான். சங்ககாலத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட புலவர்களை வள்ளல்கள் ஆதரித்தார்கள். புலவர் பாடும் புகழையே பெரும் புகழாகக் கொண்டார்கள் மன்னர்கள். புலவர்களும் கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடினாரில்லை. வேண்டிய நேரங்களில் அறிவுரை நல்கியும் நீதியை எடுத்துரைத்தும் அரசர்க்கு அறிவுரை கொளுத்தினர் புலவர்கள். கல்வியென்பது நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளர்வதாகும். இன்று கற்றார் மத்தியிலே



எத்தனையோ ஊழல்களை நாம் காண்கிறோம். அதற்கு மாறாகக் கல்லாத பேர்களே மிக நல்லவர்கள் என்று சொல்லக்கூடிய நிலையிலும் பலர் வாழ்கின்றனர்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

கற்பன வெல்லாவற்றையும் காண்பன வெல்லாவற்றையும் கேட்பன வெல்லாவற்றையும் உண்மை அறிவுக்குரியன என்று நாம் கருதிவிடக் கூடாது. நல்லனவற்றையும் அல்லனவற்றையும் பிரித்துணர வைப்பதே உண்மையறிவாகும்.

இத்தகைய அறிவைக்கொண்டு நாம் ஆற்றவேண்டிய பணிகள் யாவை? முதலில் எமது குற்றத்தை நாம் உணர்ந்து திருத்திக்கொள்ளவேண்டும். அடுத்தபடியாகத் தன்னலமற்ற முறையில் சமுதாயத்துக்குப் பணிபுரிய வேண்டும். இந்தச் செம்மை வாழ்வுதான் இதுபோழ்து வேண்டற்பாலது. இளம்பெருவழுதி என்ற அரசன் சொல்வதைக் கவனிப்போம்:

"உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யாதே."

உலகம் அன்றுதொட்டு இன்றுவரை வாழ்ந்துகொண்டு வருகிறதென்றால் அதற்குக் காரணம் தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளர் ஒரு சிலராவது வாழ்வதாற்றான் என்பதை அவ்வரசன் எடுத்துப் பாடியதைப் புறநானூற்றிற் காண்கிறோம். இவற்றிலும் பார்க்கத் தமிழனுடைய இலட்சிய வாழ்வுக்கு வேறு என்ன தேவை?

இன்றைய இளைஞர்களே வருங்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டியவர்கள். அவர்களுக்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பாங்கு உண்டாக வேண்டும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உயர்ந்த நோக்கு ஏற்பட வேண்டும். 'நாமிருக்கும் நாடு நமது' என்ற அபிமானம் இடம்பெற வேண்டும்; எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கும் அருள் நெறி தோன்ற வேண்டும்.

காலத்துக்குக் காலம் நாயன்மார்களும் அடியார்களும் தோன்றிச் சமூகப் பணியாற்றினர். பல்லவர் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்கி மக்களைப் பட்டினியினின்றும் காத்தவர்கள் அப்பரும் சம்பந்தருமாவர். மக்களின் உடற் பிணியையும் உயிர்ப்பிணியையும் போக்கும் வைத்தியர்களாக அவர்கள் விளங்கினர். விடத்தினால் நலிந்தார்க்கும் நோயினால் மெலிந்தார்க்கும் அடியார்களால் விமோசனங் கிடைத்தது.

இவ்வாறு சமய குரவர்கள் அனைவரும் பொதுப்பணி செய்து உயிர்களின் நல்வாழ்வுக்காக இறைவன் அருளை வேண்டிப் பாடினர். திருமருகலிலே ஞானசம்பந்தப் பெருமான் வணிகப் பெண்ணின் துயர்கண்டு இறைவனை நோக்கிப் பாடினார்.

"சடையாய் எனுமால் சரணீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே."

'பெருமானே, இவள் இவ்வாறு புலம்பி அழுவது உனக்குச் சித்தமா? உமது திருவருளுக்கு இது தகுமா'? என்று கேட்டார். உலக சேமமே அடியார் கண்ட இன்பமாகும்.

சமுதாயத்தைப் பொறுத்தவரையில் பெருந்தொண்டாற்றிய மகளிர் பலரை நாம் பெரியபுராணத்திற் காண முடிகிறது. பெண்மையைப் போற்றிய நாகரிகம் தமிழ் நாகரிகம்; சேக்கிழார் தமிழ் நாகரிகத்தை



விளக்கவந்த சைவத் தமிழ்ப் புலவர். அவர் பெண்களுக்குப் பெருஞ்சிறப்பளித்துப் பாடியுள்ளார். காரைக்காலம்மையார் சமுதாயத்துக்கு வழங்கிய பக்திப் பனுவல்களும் மங்கையர்க்கரசியார் வீட்டையும் நாட்டையும் மூடியிருந்த கேட்டைப் போக்கிய செயற்றிறனும் திலகவதியாராற்றிய திருத்தொண்டுகளும் சைவத் தமிழுலகத்தால் மறக்க முடியாதவை. இத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்மக்களை இடைக்காலச் சமுதாயம் போதிய அளவிற் போற்றவில்லை. இதனால் பெண்மக்கள் இழிநிலையடைந்தமையோடு நாடும் இழிநிலையடைந்து விட்டது. இதனைப் போக்குவதற்குத் துடித்தவர் பாரதி: 'பெண்மை வாழ்க வென்று கூத்திடுவோமடா' என்று உரத்துக் குரல் கொடுத்தார். தமது கவிதைப் படைப்புக்களான புதுமைப்பெண், பெண்கள் விடுதலை, பாஞ்சாலி சபதம் என்பவற்றில் பெண்ணின் பெருமை பற்றி எடுத்துக் காட்டினார்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையந் தழைக்குமாம்
பூணு நல்லறந் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணு மச்சமு நாய்கட்கு வேண்டுமாம்
ஞானம் நல்லறம் வீரம் சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ."

சங்கத்துப் பழைமையும் பாரதியின் புதுமையும் ஒன்றாக மிளிரக்கூடிய பெண்சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் உலக நாடுகளெங்கணுஞ் சென்று புதுமைகளைக் கொணர்ந்து தாய்நாட்டிற் பரப்பவேண்டும். மெய்ஞ்ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் இணைக்க வேண்டும். அதனை நாட்டிலே நன்மைபயக்கும் வழிகளில் இடம் பெறச் செய்யவேண்டும். ஏழைகளின் இருதயங்களே எம்பெருமானின் திருக்கோவில்களாக விளங்குகின்றன: 'ஈசன் ஏழைக்கு ரொட்டி உருவில் வருகின்றான்' என்பது

மேலை நாட்டுப் பழமொழி. எனவே ஏழைகளைப் போற்றுதல் இறைவனைப் போற்றுதலுக்குச் சமனாகும். இவ்வாண்டுத் தொடக்கத்தில் ஏழைகள் பணியை இறை பணியாகக் கொள்வோமாக. நாம் நல்லவர்களானால் நாடு நல்லதாக விளங்கும். அவரவர் உள்ளத்தினுயர்விலேதான் உயர்ச்சியுந் தங்கியுள்ளது. அற்ப செயல் புரிந்து வெற்றிபெறுவதிலும் பார்க்கப் பெருஞ் செயலாற்றித் தோல்வி காணினுந் தவறில்லையன்றோ.

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது."

என்றார் வள்ளுவப் பெருந்தகை. சிறுவர்களாயினும் பெரியவர்களாயினும் பெருநோக்கு உடையவர்களாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும். கற்பன கற்று நிற்க வேண்டும். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரைப் போற்றவேண்டும். பழைமையின் அத்திவாரத்திலே புதுமையை எழுப்பவேண்டும். பெண்மக்கள், சமூகத்திற் பெரும்பணியாற்றிப் பேரிடம் வகிக்க வேண்டும். வாழ்க்கை வளம் எல்லோர்க்கும் சமமாக வாய்க்க வழிகாணவேண்டும். மற்றும் அறிவிலே தெளிவும் நெஞ்சிலே யுறுதியும் அகத்திலே அன்பும் குடிகொள்ளவேண்டும். நாளைவரும் நன்னாள்—நமக்கும் நாட்டுக்கும் பொன்னாள். வாழ்க்கை நெறியை ஆத்மீக அடிப்படையிலே வகுத்துக்கொள்கின்ற திருநாள் இது. இந்நாளினைத் தொட்டு இந் நாட்டு மக்களனைவரும் இனிய வாழ்வும் ஒற்றுமையுணர்ச்சியும், புதுமை மலர்ச்சியும் பெற்று வாழ்க வாழ்கவென்று மனமார வாழ்த்தி அமைகின்றேன்.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே."

[புத்தாண்டு வைபவத்தை முன்னிட்டு 13-4-71ல் மலேசியா வானொலியில் பேசிய பேச்சு]

# ஆறுமுகநாவலர் சிந்தனைத் திறன்

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை."

அறிஞர்களாற்றான் ஒரு நாடு பெருமையடைகிறது. சோக்கிறற்றீஸ் தோன்றியதால் கிரேக்க நாடு நினைவில் வருகிறது. ஆபிரகாம் லிங்கனால் அமெரிக்கா பெருமையடைகிறது. சுவாமி விவேகாநந்தரால் பாரத நாடு போற்றப்படுகிறது. அதேபோல் நாவலர் பெருமானால் யாழ்ப்பாணம் பெருமையடைகிறது. அவர் அவதரித்த காலம் யாழ்ப்பாண மக்கள் உண்மை அறிவிழந்து போலியில் மயங்கி அந்நியராட்சிக்கு அடிமைப்பட்டிருந்த ஒரு காலமாகும். இந்தச் சூழ்நிலையிலே சிந்தித்துச் செயலாற்றினார் நாவலர் பெருமான். அவரெண்ணம் விரிந்து தாய்நாட்டிற்கும் சேய்நாட்டுக்கு மிடையில் பேரிணைப்பையேற்படுத்தியது. சைவத்தையோ தமிழையோ தனித்தனி வளர்ப்பது இயலாததென்று கண்டு இணைத்து ஒன்றாய் வளர்க்க வழிகாட்டினார்; தானே வளர்த்துங் காட்டினார். இத்தகைய மகத்தான பணிபுரிந்த பெருமானுக்குச் சென்ற நூற்றாண்டிற் சைவ

உலகம் பாராட்டைத் தெரிவித்தது. அவருடைய நூற்றாண்டு விழாவையொட்டி ஈழத்தில் சிறப்பு மகாநாடுகள் நடைபெற்றன. அன்னாரின் உருவச்சிலை அழகுக் கோலத்துடன் திருவுலாச் செய்யப்பட்டு யாழ்ப்பாணத்து நல்லூரில் நிறுவப்பட்டது. சென்ற நூற்றாண்டில் அவர்களாற்றிய சேவையைச் சைவத் தமிழ் மக்கள் என்றுமே மறக்க முடியாது.

கருவிலே திருவுடையாராக அவதரித்த 'நாவலர்' அவர்களுடைய பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பது. இவர்களின் முன்னோர்கள் சைவப்பற்றும் சிவகாருண்யமும் உடையவர்கள். அவர்களில் ஒருவரான ஞானப்பிரகாசர் என்பவரே பசுக் கொலைக்கு அஞ்சி இரவோடிரவாக யாழ்ப்பாணத்தை விட்டு இந்தியாவுக்குச் சென்றவராவர். அங்கு சிதம்பரத்தின்கண்ணே எழுந்தருளியுள்ள தில்லையம்பலவரை வணங்கித் தமது மரபில் ஒரு சற்புத்திரர் தோன்றி இந்த நிட்டூர நிலையை நீக்கிச் சைவ மக்களுக்கு விமோசனமளிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். அவ் வழிபாட்டை யேற்றுக்கொண்ட இறைவனருளினாற்றான் ஆறுமுகம் 1822இல் நல்லை நகரிலே அவதரித்தார். இளமையிலேயே மேதாவிலாசமுடையவராயும் கூர்த்த மெய்ஞ்ஞானமுடையவராயும் விளங்கினார். தந்தையார் கந்தப்பிள்ளை சிறந்த அறிஞர்; கலைப்பிரியர். அவர் பாடிக் குறையிலே விட்டுச் சென்ற நாடகத்தை ஆறுமுகம் ஏழாம் வயதிலேயே பூர்த்தி செய்தார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆதிய மும்மொழிகளையும் ஐயந்திரிபறக் கற்றார்.

அன்று ஆங்கிலக் கல்வி கற்கும் வாய்ப்பு மிஷனரிமாருடைய கல்வி ஸ்தாபனங்களிலேயே கிடைத்தது. அங்கேயே சேர்ந்து ஆங்கிலக் கல்வியைக் கற்று வித்தகத் தன்மையைப் பெற்றதுமன்றித் தமிழ்ப்பண்டிதராகவும் அங்கு கல்வி கற்பிக்க அமர்த்தப்பட்டார். இதே காலத்தில் பார்சிவல் துரையினுடைய பாராட்டு அவருக்கு நிரம்பக் கிடைத்தது. விவிலிய நூலைத் தமிழிலே



மொழிபெயர்க்கும் பணியில் பெரும் புகழீட்டினார். இதனால் கிறிஸ்தவர்களும் இவருடைய வித்துவத்தைப் போற்றினார்கள். பார்சிவல் பாதிரியார் அவர்கள் தமக்குத் தமிழ் கற்பிக்கு மாசானாக நாவலர் அவர்களை யேற்றுக்கொண்டார்.

தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் வேதாகம புராணங்களையும் கசடறக் கற்ற சிறப்பினால் பிழையற எழுதவும் நன்றாகப் பேசவும் ஆற்றலுடையவரானார்: இவருடைய பேச்சாற்றலை வியந்த திருவாவடுதுறை மகா சந்நிதானமவர்கள் கற்றாரவைக்கண் 'நாவலர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார்கள்.

"ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தைபதி னாயிரத் தொருவர்"

என்று சொல்வது வழக்கம். வாக்கு வன்மை சாதாரணமாக எல்லோர்க்கும் கிடைக்கும்பேறு அல்ல; நாவன்மை மிக்க நாவலர் அவர்கள் சென்ற நூற்றாண்டில் 'பிரசங்கம்' என்ற நிகழ்ச்சியை ஆலயங்களிற் தொடக்கி வைத்தார். அன்று பாலர் முதல் விருத்தர் வரையிலும் பண்டிதர் முதல் பாமரர் வரையிலும் இவர் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைந்தனர். நூற்றுக்கணக்கான நூல்களை விழுந்து விழுந்து படித்தாலும் அவற்றிலுள்ள கருத்துக்கள் பலர் மனதிற் பதியமாட்டா. இக் குறைபாட்டை ஓரளவு சொற்பொழிவுகளால் நீக்கலாமென்பதை நாவலர் பெருமான் செய்துகாட்டினார். வேதாகம உண்மைகளையும் புராண சாரங்களையும் விளக்கி, சிவநெறியின் தொன்மையும் சிவ பரம்பொருளின் பேரருட்டிறனும் விளங்கச் சொன்மாரி பொழிந்தவர் இவர். இவருடைய சொற்பொழிவில் பக்தி, வீரம், சோகம், நகைச்சுவை, வியப்பு யாவும் ஒருங்கு கலந்து மிளிரும். இவருடைய விரோதிகளும் தம் பகை மறந்து கைகட்டி வாய்புதைத்து வாளாவிருந்து பிரசங்கங்களைக் கேட்டனரென்பதை நாமறிகிறோம்.

‘‘சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது.’’

என்றார் வள்ளுவர். சைவமென்னும் பயிரை வளர்க்கப் பிரசங்கமென்னும் மழையைப் பெய்விக்கவேண்டும் என்பதுதான் அவர் கண்ட புதுவழி. இதன்படி வெள்ளிக் கிழமைகள் தோறும் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் பிரசங்கம் செய்துவந்தார். இவரது பிரசங்கத்தால் நன்மையடைந்தோர் மிகப்பலர். ஆனால் சொல்லுதலெளிது; சொல்லியபடி நடப்பதுதான் மிக வரிது என்பர். நாவலரவர்களோவென்றால் தான் எதனை அனுட்டித்தாரோ அதனையே மற்றவர்களுக்குச் சொன்னார். மாமிச போசனமும் மதுபானமும் மனிதனை அரக்கனாக்குவது என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டி விளக்கினார். இதனைக் கேட்டு மனந்திரும்பிய பலர் அத்திய பழக்கத்தைக் கைவிட்டனர். வீணரோடு கூடித்திரிந்து தமது நேரத்தை அவப்பொழுதாகக் கழித்த பலர் இவர் சொற்பொழிவுகளைக் கேட்பதிலே காலத்தைப் பயனுடையதாக்கினர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் இவர் தொடர்ந்து பிரசங்கங்கள் செய்தார். தமிழகத்திலும் சைவப் பிரசங்கங்கள் பலவற்றை யாற்றியபோது சித்தாந்தத் தெளிவையும் செந்தமிழ் நடையையும் பக்திச் சிறப்பையும் ஒருங்கே கண்டு பலர் வியந்தனர். இவருடைய பேச்சில் இலக்கண வழுக்கள் மருந்துக்குமில்லை. சொற் பஞ்சமின்றி எவருக்கும் விளங்கப் பேசும் ஆற்றல் அக் காலத்தில் வேறெவரிடமும் காணமுடியாமலிருந்தது.

நெற்றிக் கண்ணைக் காட்டியபோதும் உன்பாடல் குற்றமே குற்றமென்று எடுத்துக் கூறிய நக்கீரர் பரம்பரையில் வந்தவர்தான் நமது நாவலர் பெருமான். குற்றங்கண்டவழி எவரையும் கண்டித்துப் பேசுந் தன்மை இவருக்குண்டு. ஆனால் கண்டிக்கப்பட்டோர் திரும்ப இவரை எதிர்த்துப் பேசியதே கிடையாது. ஏனெனில், அழகும் சாதுரியமும் அமைந்த அவரின் கண்டிக்கும் முறையில் அவர்கள் அடங்கியிருந்தனர். இதனால்



கேட்பவர் யாவரும் மதுவுண்டு மயங்கும் மதுகரமொப்ப மயங்கிவிடுவர். சைவத்தை இழித்தும் பழித்தும் பாதிரிமார் போதனை செய்தனர். அதனை ஏற்று அடிமை வாழ்வைப் பல தமிழ் மக்கள் மேற்கொண்டு சிறிய சலுகைகளை நோக்கிப் பெரியதோர் பண்பாட்டை இழந்து நின்றனர். இவர்களை ஆணித்தரமான முறையிற் கண்டித்தார் நாவலர். இதனாற் பாதிரிமார் வாயடைத்தது மல்லாமல் நெறிமாறிய தமிழரும் சைவத்துக்குத் திரும்பினர். இதே நேரத்தில் நாவலரைப் பலர் எதிர்த்ததுமுண்டு. எந்த எதிர்ப்பின் மத்தியிலேயும் ‘‘சிவனுண்டு பயமில்லை’’ யென்று வாழ்ந்தார் நாவலர்.

அடுத்து அவருடைய எழுத்துப்பணியைக் கவனிப்போம். கிறிஸ்தவ குருமார்கள் தமது மதத்தைப் போதிப்பதற்கும் பரப்புவதற்கும் எவ்வாறு பிரசுரங்களை வெளியிட்டார்களோ அவ்வாறே சைவத்தைப் பரப்புதல் நலமெனக் கண்டார் நாவலர். திருமுறைகளின் சாரத்தை யடக்கியும் சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கியும் பாலபாடம், சைவவினாவிடை முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். செய்யுள் நடையில் இருந்த பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராண மென்பவற்றை வசனநடைக்கு மாற்றினார்; அடியார் பெருமையையும் திருத்தொண்டின் மகிமையையும் விளக்கிப் பெரியபுராண சூசனம் என்ற நூலை ஆக்கினார். சிவாலய வழிபாட்டு முறைகள் இவர் நூல்களால் மிகத் தெளிவாக்கப்பட்டன. நன்னூற்காண்டிகையுரை, இலக்கணச் சுருக்கம் என்பனவும் உயர்தர வகுப்பு மாணவர்க்கேற்றமுறையில் வெளியிடப்பட்டன. ஏடுகள் பலவற்றையும் துருவி யாராய்ந்து திருக்கோவையார் முதலிய பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். நாவலர் பதிப்பு ஒன்றே பிழையில்லாத பதிப்பு என்ற பெயர் அன்றும் இன்றும் நிலவுகிறது. தமிழில் இனிய வசனநடையைத் தொடக்கிவைத்த பெருமையும் நாவலருக்கேயுண்டு.

" அன்னநடை பிடியினடை அழகுநடை
யல்லவென அகற்றி அந்நாட்
பன்னுதமிழ்ப் புலவரிடம் செய்யுணடை
பயின்றதமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
எனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் ஆறுமுக நாவலன்றன்
ஒழுக்கநடை போல வாழி "

என்று பாராட்டினார் யாழ்ப்பாணத்து நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர். இன்னும் ''வசனநடை கைவந்த வல்லாளர்'' எனவும் போற்றப்பட்டார். தமிழ் வசன நடைக்குப் புதுவடிவங் கொடுத்ததோ டமையாது தரிப்புக்குறிகளையுமிட்டுப் புதுமை செய்தார். முதன் முதல் இப்பணியிலீடுபட்டவர் இவரே. சொற்களையோ சொற்றொடர்களையோ வசனங்களையோ பிழையின்றி எழுதுவதிலும் பதிப்பிப்பதிலும் இவருக்கு நிகர் இவரே.

சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணி யாற்ற வேண்டுமானால் அச்சுக்கூடங்களை அமைத்து நூல்களை வெளியிடவேண்டுமென்றும் பாடசாலைகளைத் தாபித்து இலவசக் கல்வி யளிக்கப்பட வேண்டுமென்றும் அவருடைய சிந்தனையிற் பட்டது. இதற்கான நிதியைத் திரட்டுவதிலும் பெரும்பாடுபட்டார். அயரா உழைப்பின் பேரால் வண்ணார்பண்ணையிலும் சிதம்பரத்திலும் வித்தியாசாலைகளை அமைத்து அச்சுக்கூடங்களையும் நிறுவினார். இறைவனருளால் அவ்வப்போது இதற்காய பணவுதவி கிடைத்தது. 1850ஆம் ஆண்டு முதன்முதல் இலவசக் கல்வியைத் தொடக்கி அளித்த மகான் நாவலர் அவர்களே. இந்த நிறுவனங்களின்மூலம் வருடாவருடம் தமிழையும் சைவத்தையும் முறையாகப் போதிக்கக் கூடிய போதகாசிரியர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் தோன்றினர். இன்றும் அந்தக் கல்விப் பரம்பரையிலே வந்த ஒரு சிலரே இப்பணியி லுழைத்து வருகின்றன ரென்றால் அதில் மிகையொன்றுமில்லை. அவராக்கிய



நிறுவனங்கள் இன்றும் பெரும்பணியாற்றிவருவது கண்கூடு.

நாவலர்பெருமானை, சென்ற நூற்றாண்டிலே நம் நாட்டிலே யவதரித்த 'ஐந்தாம் குரவர்' என்று பலரும் போற்றுவர். இதனால் வருடாவருடம் மார்கழித் திங்களில் இவருடைய குருபூசை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. இலங்கையிலிருந்து வந்து மலாயா நாட்டிலும் சிங்கப்பூரிலும் பணியாற்றும் உங்கள் சைவசங்கமும் இவ் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருவதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். இந் நாட்டு இளஞ்சந்ததியினருக்கு நாவலர் எழுதிய சைவ வினாவிடை முதலிய நூல்கள் கற்பிக்கப்படவேண்டும். இன்று வெண்ணீறு பூசுவோர், விரதமனுட்டிப்போர், திருவிழா எடுப்போர், பிரசங்கம் செய்வோர், புராண படனமாற்றுவோர் யாவரும் நாவலர் ஐயா அவர்களின் வழியையே பின்பற்றிச் செல்கின்றனர். அவரே எமக்குக் குரு. அவர் நால்வர் வழியில் நின்றதுமன்றி நிற்கவும் எமக்கு வழிகாட்டினவர். அவருடைய சமயவாழ்வைப் பற்றி மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் கூறுகிறார்.

" கருள்விரவு தலைக்கழிக்கும்
கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவும் ஐந்தெழுத்தும்
பொருளாகக் கொண்டுவப்போன்
தெருள்விரவு சுத்தசைவ
சித்தாந்தப் பெருஞ்செல்வன்
அருள்விரவு பரவுபுகழ்
ஆறுமுக நாவலனே."

நமது நால்வர் பெருமக்களும் இதே வாழ்க்கையையே வாழ்ந்தார்கள்; சைவத்தை நிலைநாட்டினார்கள்; திருமுறைகளைத் தந்தார்கள்; சிவாலய தரிசனஞ் செய்தார்கள்; மறு சமயத்தின் தாக்குதலைத்

தடுத்தார்கள். அரசியல், சமுதாயம் என்பவற்றிற் புகுந்து ஆகும் நெறிக்கு வழிகாட்டினார்கள். இதே வரிசையில் பெரும்பணியாற்றியவர் நாவலர் ஐயா அவர்கள். பெரும் பஞ்சம் ஒன்று சென்ற நூற்றாண்டில் எமது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. அதனைப் போக்குவதற்குக் கஞ்சித்தொட்டித் தர்மம் ஒன்றை ஏற்படுத்தினார். இதனால் பலர் பட்டினி தீர்ந்து நலமடைந்தனர். நாட்டிலே கொடிய கொள்ளைநோய் தோன்றி மக்களுயிரை வதைத்தபோது உடனடியாக அதனை அரசியலாருக்கு அறிவித்து ஆவனசெய்து நாட்டுநலனைப் பேணி மக்களுக்கு வாழ்வு கொடுத்தார். தமிழ்ப்பெருந் தலைவராகச் சேர் பொன். இராமநாதனைச் சட்டசபைக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு மகத்தான சமூகப்பணிகளாற்றி சமுதாய நலனைக் கண்ணுங்கருத்துமாகப் பேணியவர் அவர். அவர்கள் வழியிலே நாமும் சிறிது சென்று சைவத்தையும் தமிழையும் பேணி நாட்டுமக்கள் உள்ளத்திலே தூயவாழ்வை நிறுவுதற்கு வழிகாண்போமாக.

"ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை அப்பனில்லைச்
சீருரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேருரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே."

உ

# ஆலயம் அவசியமா

"திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியு மில்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே."

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லா இறைவனுக்கு ஆயிரந் திருநாமஞ் சூடிப் போற்றிய நாம் ஆயிரந் திருக்கோயில்களையும் எழுப்பி வழிபட்டிருக்கிறோம்; சைவ சித்தாந்தத்தில் உருவ வழிபாடு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. உருவமற்ற எதனையும் நாம் உள்ளத்தால் நினைக்கமுடியாது. ஒன்றியிருந்து நினைப்பதற்கு ஏதோ ஓர் உருவம் உள்ளத்திற் பதியப்படவேண்டும். இந்த நோக்கத்துடனேயே பல்லாயிரக் கணக்கான திருக்கோயில்கள் நம் நாட்டில் எழுந்தன. 'எங்கும் நிறைந்த இறைவனை ஏன் ஒரு குறுகிய இடத்தில் வைத்துச் சிறைசெய்யவேண்டும்', என்று சிலர் கேட்கி

னார்கள். ஆண்டவன் எங்கும் நிறைந்திருந்தாலும் அவனருளை நாம் பெறுவதுபோன்ற உணர்வை எழுப்புகின்ற இடம் ஆலயந்தான். காற்று எங்கும் நிறைந்திருந்தாலும் வெப்பமும் புழுக்கமும் மிகுந்த சில நேரங்களில் அதனைப் போக்க விசிறிகொண்டு காற்றை வாங்கிக் கொள்கிறோம். இந்த விசிறிபோல் எமது மலவெப்பத்தை அகற்றி அருள் நிழலைத் தர ஆலயங்கள் அமைந்துள்ளன. சிவஞான போதம் பன்னிரண்டாஞ் சூத்திரம்,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழிஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே."

என்பதாகும். சிவனடியார்களையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு தொழவேண்டும் என்று காட்டியுள்ளார் மெய்கண்டார். கல்லானாலும் விக்கிரகங்கள் சிவனை நினைப்பூட்டும். சீவன்முத்தர்களுக்கும் உடம்பு விடும்வரை ஆலய வழிபாடு முக்கியமென்று வற்புறுத்தப் படுகிறது. பக்திநிலையை எழுப்புகிற தன்மை திருக்கோயில்களுக்கு உண்டு. இந்த நிலையே எம்மை ஆண்டவன் திருப்பாதங்களில் இணைக்கின்றது.

மூன்று இடங்களில் நாம் இறைவனைச் சிறப்பாகக் காணமுடியும். அடியார் வேடத்திலும், உலோகம் கருங்கல் ஆனவற்றாலான வடிவங்களிலும், மந்திர ஒலியிலும் நாம் உணரும் வாய்ப்பைப் பெறுகிறோம். 'கருங்கல்லிற் கடவுளைக் காணலாமா?' என்று இளைஞர்களிற் பலர் இன்று கேட்கிறார்கள். சடப்பொருளுக்கெல்லாம் விஞ்ஞானி சக்தி கொடுத்து இயங்கவைக்கிறானென்றால் ஏன் விக்கிரகங்களுக்கூடாக மந்திரங்களால் சக்தியை எழுப்பமுடியாது? நம்பிக்கையிலேதான் எங்கள் சமய வாழ்வு தங்கியிருக்கிறது. சமயாசாரியார்கள் விஞ்ஞானத்தையும் அறிந்தேயிருந்தார்கள். ஆனால் அதனையும் மெய்ஞ்ஞானக் கண்ணாலேயே கண்டார்கள். காணுகின்ற பொருள்களில் எல்லாம் கடவுளையே கண்டவர்கள் நமது



மெய்யடியார்கள்: சந்திரனைக் காணும்போது, குழந்தைக்கு விளையாட்டுப் பந்துபோலும், யானைக்குக் கவள உணவுபோலும், காதலனுக்குக் காதலியின் வதனம் போலும், விஞ்ஞானிக்கு வானத்து மண்டிலம்போலும் புறக் காட்சி மட்டும் புலப்பட, மெய்ஞ்ஞானியே அகக் கண்ணால் ஆண்டவனாகக் காண்கிறான்: ஞானிகளுக்குப் பார்க்குமிடமெங்கும் பரமனே தெரிவான். அதனால் கல்லிலேயும் கடவுளைக் கண்டு காட்டினார்கள்.

ஆலயம் என்பது தொழுபவர் நெஞ்சில் மாத்திரமல்ல, உண்மையான பெருமையும் புனிதமும்கொண்டு விளங்கவேண்டும். ஒரு காலத்தில் தென்பாண்டி நாட்டிலே அரசாட்சிசெய்த பராக்கிரம பாண்டியன் தான் கட்டியெழுப்பிய தென்காசி விசுவநாதர் கோயிற் கல்வெட்டிற் பின்வருமாறு எழுதினான்.

"ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங் குவந்துஅதனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே."

தான் கட்டி எழுப்பிய ஆலயத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அதனைத் திருத்துவிப்பவர் கால்கள் தன் தலைமேலன என்று வெளியிட்டான் அரசன்.

இனி ஆலயங்கள் தோன்றிய வரலாற்றைக் கவனிப்போம். ஆதியிலே மனிதன் பகுத்தறிவின்றிக் காட்டிலே திரிந்துகொண்டு இலை தழைகளை உடுத்துக் காய் கனிகளை உண்டு வாழ்ந்தான். தனக்குதவுவனவற்றை முதலில் வணங்கினான். காலஞ் செல்லச் செல்லக் கடவுளன்பு தானே உதித்தது. இதன் பயனாக ஆலயங்கள் எழுந்தன. ஆண்டவனும் அடியார்க் கெளியனாய்க் காட்சி கொடுத்தான். பூசலார் நாயனார் என்பவர் இறைவனுக்குத் தன்னுள்ளத்திலேயே கோயில் கட்டினார். அதற்குக் குடமுழுக்குச் செய்யவும் ஒரு நாட் குறித்து விட்டார். அதே நாளிற் கழற்சிங்கன் என்ற அரசனும்

தான் புறத்தே கட்டிய கோயிலில் சுவாமியைப் பிரதிட்டை செய்ய நிச்சயித்திருந்தான். ஆனால் எம் பெருமான் பூசலாரின் உள்ளக் கோயிலில் எழுந்தருள விரும்பிக் கழற்சிங்கனுக்குக் கனவிலே உணர்த்துகிறார்.

"நின்றவூர்ப் பூச லன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து
நாளைநாம் புகுவோம் நீஇங்கு
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில்கொண் டருளப் போந்தார்."

கழற்சிங்கன், உயிர் தங்குவதற்கு உடம்பும் ஐம் புலன்களும் அமைந்துள்ளவாறுபோல எங்கும் நிறைந்த பரம்பொருளுக்குப் புறத்தே ஒரு கோயில் கட்டி உருவகம் செய்தான்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே."

இந்தத் தத்துவ அடிப்படையில் தமிழகத்தில் எழுந்த கோயில்கள் எண்ணில்லாதன. சங்கமருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரத்தில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்"

என்று குறிப்பிடப்படுகின்றது. அப்பர் சுவாமிகளால் 7ஆம் நூற்றாண்டிற் பாடப்பட்ட திருத்தாண்டகத்தில்,



"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில்......"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் அநேக திருக்கோயில்கள் எழுந்தன. இவற்றில் மிகச் சிறந்த சிற்பக் கலைக்குத் தஞ்சையும் இராசேஸ்வரமும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. அங்கு அமைந்த தெய்வத் திருமேனிகள் நுண்மை வாய்ந்தவையாகும். தென்னாட்டி லுள்ள சிற்பச் செல்வத்தை வேறெங்கும் காண முடியாது. கல்லும் கவி சொல்லும் தன்மை இந்த ஆலயங்களிலேதான் உண்டு.

அடுத்தபடியாக நாயன்மார்கள் கண்ட திருக் கோயில்களையும் திருக்கோயில் மகிமைகளையும் கவனிப் போம்.

மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டுத் தொழுத கை தலைமேற்கொண்டு துளும்பு கண்ணீரில் மூழ்கியவாறு சென்றார். ஆட்கொண்ட பெருமானுடைய திருக்காட்சியைக் காண அவாவினார். 'தேடிற்றிலேன், சிவன் எவ்விடத்தான், யார் கண்டனர்' என்று கேட்டுக்கொண்டே சென்றார். பக்திவயப்பட்ட நிலையிலே திருக்கழுக்குன்றத்திலே அவருக்குக் காட்சி கிட்டியது. உள்ளத்திலே அமைதியை ஏற்படுத்திக் கொண்டு பாடினார்.

"மலங்கி னேன்கண்ணில் நீரை மாற்றி
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல் விளைவ தறிந்திலேன்

இலங்கு கின்றநின் சேவ டிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.''

இங்கேயும் ஒரு தலத்திலேயே இறைவன் காட்சி கொடுத்தமையையே எடுத்துக் காட்டினார். 'தில்லைக்கு வா' என்று எம்பெருமான் அருளியதும் ஆலயத்தின் முக்கியத்துவத்தை எமக்குக் காட்டுகிறது.

சிவானந்தத்தில் திளைத்தவர்களாக இருந்தபோதிலும் நாயன்மார்கள் ஒரே இடத்தில் இருந்தபடியே இறைவனை வணங்காமற் பல ஆலயங்களுக்கும் யாத்திரை செய்தனர். அவ்வத் தலங்கள்மீது பாடல்கள் பாடினர். நம்பியாரூரருக்கு முதலில் இறைவன் தனது இருப்பிடம் ஒரு கோயிலாகவே காட்டி மறைகிறார்:

"பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவ ரேநீர்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய தெவ்வூர்?''

என்று நம்பியாரூரர் தன்னைத் தடுத்தாண்டுகொண்ட மறையவரைக் கேட்டபோது அவரும், 'ஒருவரும் அறியீராகில் போதும் என்று திருவருட் டுறையே புக்கார் கண்டிலர் திகைத்து நின்றார்' என்று பெரியபுராணம் கூறுகிறது. சிறப்பாக ஆண்டவன் உறையும் இடம் ஆலயம் என்பதை இறைவனே காட்டியருளினார்.

ஞானசம்பந்தப் பெருமான் திருத்தோணிபுரக் கோபுரத்தைச் சுட்டிக்காட்டி, 'பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே' எனப் பாடித் தனக்குப் பால் தந்த பிரானைக் காட்டியருளியதும் ஆலயத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறதன்றோ. அதுவுமன்றி, தமிழ் நாட்டின் மூலைமுடுக்குகள்தோறும் சென்று நாளும் இன்னிசையால் அவர் தமிழ் பரப்பி மக்களின் உள்ளத்திலே சமயப் புத்துணர்ச்சியை யேற்படுத்தினார். அக்காலத்திலே ஆலயங்கள் பள்ளிகளாகவும் அன்னசாலைகளாகவும் சமூக உறவை உண்டாக்கும் பொதுத்தாபனங்க



ளாகவும் இயங்கின. திருவீழிமிழலையிலே ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் சென்றிருந்தபோது நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டிருந்தது: அதனை நீக்குவதற்காக இறைவனை வணங்கிப் படிக்காசு பெற்றனர். நாட்டின் பஞ்சத்தைப் போக்கினர். இவ்வாறு 7ஆம் நூற்றாண்டில் ஆலயங்கள் பெருஞ் சேவைசெய்யும் நிலையங்களாக விளங்கின. திருநாவுக்கரசர் தில்லைக்குச் சென்று வணங்கியபோது அம்பலவனின் திருக்குறிப்பைக் கண்டு எமக்குக் காட்டுகிறார்.

"ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு மான்றன் திருக்குறிப்பே.''

நாயன்மார்களுடைய வாழ்க்கையிலே ஆலயங்கள் முக்கிய இடம் பெற்றிருந்தமையாற் பதிகங்கள்தோறும் ஆலயப் பெருமையை அமைத்து அவர்கள் பாடினர். இறைவனுடைய திருக்காட்சியைக் கண்டு கும்பிடும்பேறு கிடைக்குமானால் 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே' என்றார் அப்பர். சுந்தரரும் 'மண்ணிலே வந்த பிறவியே வாலிதாம் இன்பமாம்' என்று நினைத்தமைக்குத் தில்லைத்தரிசனமே காரணமாகும்.

இன்று நம் நாட்டுக் கோவில்களில் திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இக் காலங்களில் விசேஷ பூசை நடப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அச் சந்தர்ப்பத்தில் இறைவனை வழிபடப் பக்தர்களை வரவழைக்கவும் சொற்பொழிவுகளைக் கேட்க வைக்கவும் திருமுறைகளை உணரவைக்கவும் திருவிழாக்கள் பயன்படவேண்டும். விசேட பூசைகள் அவ்வப்போது நடத்துவது ஒவ்வொரு கோயிலுக்கும் மிக அவசியம். அதனால் பூசிக்கப்படும் தேவதைக்குச் சைதன்யம் அதிகப்படும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. உத்ஸவம் என்றால் சுகத்தைக் கொடுப்பது என்பது பொருள். உத்ஸவ காலங்களில் அதில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. ஆலயங்கள்

எல்லாம் திருவிழாக்கள் காரணமாகச் சீரும் சிறப்பும் பெற வேண்டும்.

அழகான அமைப்புக்களோடு அமைந்த ஆயிரம் ஆயிரம் கோவில்கள் நம் நாட்டிற் காட்சியளித்தால் மட்டும் போதாது. அவை தொழுபவர் நெஞ்சில் உண்மையான தூய்மையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆலயத்தில் நிற்கின்ற நேரம் உயிருக்கு ஊதியம் தேடுகின்ற நேரமாகும். அங்கு மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபடவேண்டும். எம்மை இறைவனுக்கு ஒப்படைத்து நாம் சும்மா இருக்கும் நிலையினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் அன்பினால் இணைந்து பிணைந்து அழுது காமுற்று அரற்றித் தொழுது தூமலர் தூவித் துதித்து நிற்கும் பெருவாழ்வே பிறவா இன்பப் பேரின்பத்தை நல்குவதாகும்.

"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே."

உ

# கம்பர் கவிதை

"உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே."

உலகம் என்ற மங்கல மொழியை முன்வைத்துக் காவியம் பாடுதல் மரபு. அந்த மரபைத் திறம்பாது பேணித் தமிழில் இராமாயணம் என்ற காவியத்தைப் பாடிமுடித்தார் கம்பர். அறிஞர்கள் பலர் இக் காவியத்தைப் போற்றினர். 'கம்ப நாடன் கவிதையைப்போற் கற்றோர்க் கிதயங் களியாதே' என்பது குறிப்பிடத்தக்கது. புதுமைக் கவிதை தந்த பாரதியாரும்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை
உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை"

என்று போற்றினர். கம்பன் தந்த இராமாயணத்தையும் வள்ளுவன் வழங்கிய திருக்குறளையும் இளங்கோ பாடிய சிலப்பதிகாரத்தையும் தமிழர்கள் ஒவ்வொருவரும் கற்கவேண்டுமென்பதே பாரதியின் வேணவா. தமிழர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்விலே கடைப்

பிடிக்கவேண்டிய நீதி, அறம், சத்தியம், தியாகம், ஒழுக்கம் என்பவற்றை மேற்காட்டிய இலக்கியங்கள் மிகத் திறம்பட எடுத்துக் காட்டுகின்றன என்பது கண்கூடு.

வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணத்தைத் தழுவி எழுந்ததே கம்பராமாயணம். ஆனால் தமிழ்ப் பண்பாட்டையும் மரபையும் பேணியே சிறந்த காவியமாகத் தந்திருக்கிறார் கம்பர்: ஒரு கவிஞன் அல்லது அறிஞன் சிந்தித்து ஒரு சிந்தனையைப் படைக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்படுகிறது என்பதை நாம் முதலில் ஆராயவேண்டும். வெறும் புலமையினால் மட்டும் ஓர் இலக்கியம் தோன்றினால் அதை வியந்து போற்றமுடியாது. வெறும் பக்தியினாலும்பாசத்தினாலும் கவிதைகள் தோன்றினாலும் அதை வியந்து பாராட்ட முடியாது. சமுதாயத்தின் சென்றகாலநிலை, நிகழ்கால நிலை, எதிர்காலநிலை என்பவற்றைப் புரிந்துகொண்டு குறையை நிறைவாக்கிச் சமுதாய மலர்ச்சிக்கு வழி காட்டும் இலக்கியங்களைப் படைக்கவேண்டும். இந்த வகையிலே கம்பர் சிறப்பிடம் பெறுகிறார். சமுதாய ரீதியிலும் ஆட்சித்துறையிலும் குடும்ப வாழ்க்கையிலும் சிறந்த பல கருத்துக்களை இராமாயணம் நமக்குத் தருகிறது. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னெழுந்த இராமாயணத்தில் இவை குறிப்பிடப்பட்டிருந்தாலும் இன்றும் நமக்கு ஒப்பமுடிந்த கருத்துக்கள் பலவற்றை உதவுகின்றன. கருத்துவழி, வள்ளுவர் பெற்ற மாபெருங் கவிஞர் கம்பர். வள்ளுவர் வலியுறுத்திய தமிழ் நாகரிகத்தைப் பேணியே கம்பர் இராமாயணத்தைப் பாடியுள்ளார்.

முதலில் அவர் கவிதைகளில் இடம்பெற்ற ஆட்சித் துறையினைக் கவனிப்போம்.

"வையம் மன்னுயி ராகஅம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்
கைய மின்றி அறங்கட வாதருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ."



சங்ககாலத்தில் மன்னனை மக்களின் உயிராக வைத்துப் பாடினர் புலவர். 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று கூறுகிறது புறநானூறு. இக்கருத்தை 'வையம்..... வேண்டுமோ' என மாற்றிப் புதுமை செய்த பெருமை கம்பருக்குண்டு. மன்னன் ஒரு நாட்டுக்கு மாறி மாறி வருவான்; அரசாங்கமும் மாறி மாறி வருவதியல்பே. அதனால் மன்னனை உயிராகக் கொள்ளாது உடம்பாகக் காட்டுகிறார் கம்பர். மன்னுயிரை ஓம்பாவிட்டால் மன்னனுக்குச் செயலில்லை யென்பதைக் காட்டவே மற்றோரிடத்தில் 'உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்' என்றும் கூறப்பட்டுள்ளது. மக்கள் சக்தி மிக வலிமையானது என்பதை விளக்கவே 'புற்றுடைய காடெல்லாம் நாடாகிப்போம்' என்று பாடுகிறார். இராமன் காட்டுக்குப் போக ஆயத்தமானான். நாட்டு மக்கள் பொங்கி எழுந்து எதிர்ப்புக் காட்டினர். 'வருங் காலத்தில் நாடு காடாகும். அதற்கு மாறாகக் காடு நாடாகும்' என்று ஆர்ப்பரித்தனர். மக்கள் சக்தியினால் இவ்வாறு ஆக்கமுடியும் என்பதையே கம்பர் வலியுறுத்திக் காட்டுகிறார். நாட்டின் நல்லாட்சிக்கு வழிகாட்டுபவர்கள் அமைச்சர்களே. கோசலநாட்டு அமைச்சர்கள் எப்படிப்பட்டவர்கள்?

"தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையில் திறம்பல் செய்யாத் தேற்றத்தார் தெரியுங் காலம்
மும்மையு முணர வல்லார் ஒருமையே மொழியும் நீரார்."

உயிரை ஒரு பொருளாக ஓம்பாது மானத்தையே பேணுபவரென்பதையும் தலைவனுக்கு இதங்கூறி வழி மொழியாது இடித்துரைத்து நன்னெறி காட்டுபவர்களென்பதையும் சிறந்த தீர்க்கதரிசிகளென்பதையும் கற்க வேண்டியவற்றைத் துறைபோகக் கற்றவர்களென்பதையும் கோசல நாட்டு ஆட்சித்துறையில் வைத்து விளக்குகிறார் கம்பர். அதே நேரத்தில் இராவணனுடைய

அழிவுக்கும் அமைச்சர்களே காரணமாக அமைந்தனர் என்பதைக் காட்டவும் அவர் தவறவில்லை. சீதை அசோகவனத்திலே இராவணனை நோக்கி 'இராவணா! உனது நாட்டிலே உன்னை இடித்துரைக்கும் அமைச்சர்கள் இல்லை. நீ எண்ணியதையே அவர்களும் எண்ணுகிறார்கள். இதனால் உனக்கு அழிவேயன்றி ஆக்கம் வரப்போவதில்லை. இது நிச்சயம்' என்று கூறுகிறாள். அரசியல் துறையார் கம்பருடைய இந்தக் கருத்துக்களைச் சிந்திக்க வேண்டும். இராவணனைப் பார்ப்போம். 'வாரணம் பொருத மார்பன்; வரையினை யெடுத்த தோளன்; நாரத முனிவரோடு இசைவாது புரிந்தவன்; பெருந்தவம் புரிந்து வரம் பெற்றவன்; திருநீறு பூசிய மேனியன்.' ஆனால் இத்தனை பெருமையும் அவனுடைய ஒழுக்கக் கேடொன்றினால் அழிந்துவிடுகிறது. மாற்றான் மனைவியை இச்சித்த பெரும் பாதகச் செயலுக்கு அவன் ஆளாகிறான். சமுதாய ஒழுக்கத்தின்மீது மோதினால் அறம் அவனைச் சும்மாவிடுமா? அவனை வாழச்செய்த அறமே திரும்ப அவனை வீழச்செய்கிறது. நாம் எத்துணை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ்ந்தாலும் மற்றொருவருடைய வாழ்க்கைக்குட் புகுந்து கேடு விளைவிப்போமானால் அறம் எம்மையே கொன்றுவிடும். இதனையே இராவணனுடைய வாழ்க்கைமூலம் எடுத்துக் காட்டுகிறார் கம்பர்.

அடுத்து, சமுதாய ரீதியிலே கம்பருடைய கவிதைகள் உணர்த்தும் கருத்துக்களைக் கவனிப்போம். உலகமே ஒன்று என்று கருதுகிற உள்ளம் கம்பருடைய உள்ளம். திருக்குறள், புறநானூறு, திருமந்திரம் முதலிய நூல்கள் ஒருகுல உணர்ச்சியை வற்புறுத்தியிருந்த நேரத்திலும் சமுதாயத்தில் அவை நடைமுறையில் அனுட்டிக்கப்பட்டதாகக் காணவில்லை. இந்தக் குறையைக் கண்ட கம்பர், அதனை இராமன் வாயிலாக வெளிப்படுத்தி நிவிர்த்தி செய்தார். இராமன் அயோத்தியை ஆண்ட மாமன்னனின் திருமகன். இனத்தால் வேறுபட்ட குகனையும் குலத்தால் வேறுபட்ட விபீடணனையும் இடத்தால் வேறுபட்ட சுக்கிரீவனையும்



யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

தன் தம்பிகளாக ஏற்றுக்கொண்டமையை இனிய தமிழில் கம்பர் விளக்கிப் பாடியுள்ளார். இராமன் விபீஷணனைப் பார்த்து 'இன்றுமுதல் நீயும் என் சகோதரன். உன்னைச் சேர்த்து நாம் எழுவராகிவிட்டோம்' என்றார்.

"குகனொடும் ஐவர் ஆனேம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம் எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்
புகல்அருங் கானந் தந்து புதல்வாற் பொலிந்தான் நுந்தை."

இராமனுடைய பெரும் பண்பையெல்லாம் சீதை அசோக வனத்தில் அழுதுகொண்டிருக்கும்போது நினைக்கிறாள்.

கோசல நாட்டில் எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தியிருந்தனர். கள்வர்கள் இன்மையால் அங்கு காவலுமில்லை, வறியவர்கள் இல்லாமையால் அங்கே வள்ளல்களுமில்லை.

"கள்வா ரிலாமைப் பொருள் காவலு மில்லை யாரும்
கொள்வா ரிலாமைக் கொடுப் பார்களு மில்லை மன்னோ."

அண்ணன் தம்பியரிடத்திலே போட்டியும் பூசலும் ஏற்படுவதை இன்று நாம் காண்கிறோம். ஆனால் இராமாயணம் சகோதர ஒற்றுமையை மிகுவித்துக் காட்டுகிறது. அதன் மூலம் சமூக வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் புத்துயிர் அளிக்கிறது. ஆழிசூழ் உலகமெல்லாவற்றையும் பரதனுக்கு ஆட்சிசெயக் கொடுத்து இராமன் சடாமுடி தாங்கிக் காட்டுக்குச் செல்லவேண்டும் என்று கேட்கிறாள் கைகேயி. இதனை இராமனுக்கு நேரேயே கூறிவிட்டாள். இராமன் இதனைக் கேட்டவுடன் அளித்த பதில் யாது? பாருங்கள்.

"மன்னவன் பணியன் றாகில் நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ
என்னினி உறுதி அப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே போகின்றேன் விடையுங்
கொண்டேன்."

... நூலகம்

இராமன் மாத்திரமன்று: பரதன், இலக்குமணன் அத்தனைபேரும் சகோதர ஒற்றுமையில் மேம்பட்டவர்களே. அரக்கர்கள் மத்தியிலேயும் இதனைக் காண முடிகிறது. கும்பகர்ணன் போர்க்களத்திலே நின்று விபீடணனுக்குச் சொல்கிறான். 'தம்பியரின்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்'. அறத்துக்கு மாறாய் அண்ணன் நடக்கிறான் என்று அறிந்தும் சகோதர பாசத்தால், மாற்றான்பக்கம் சாராது தன்னுயிரையே அண்ணனுக்காக விட்டுவிடுகிறான் கும்பகர்ணன். இன்னும் குருபக்தி, நன்றிமறவாமை, ஈகை, பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல் முதலாய பண்புகளையும் இராமாயணத்திற் சிறப்பாகக் காணலாம்.

குடும்ப வாழ்க்கையில் வைத்துப் பெண்ணின் பெருமையை விளக்குகிறார். சீதையைச் சிறந்தவொரு குடும்பத் தலைவியாகவும் கற்புக் கடம்பூண்ட தெய்வமாகவும் சித்திரித்துக் காட்டுகிறார். இராமன் தான் காட்டுக்குப் போவதாகவும் திரும்பிவரும்வரை வருந்தாதிருக்கும்படியும் கூறினான் சீதைக்கு. உடனே சீதை கண்கலங்கினாள். ஏன்?

"நாயகன் வனம் நண்ணலுற் றானென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மிலள்
நீவ ருந்தலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுட விம்மினாள்."

கணவனைப் பிரிந்து எப்படி வருந்தாமலிருக்கமுடியும்? அப்படியிருக்க, 'வருந்தாதே' என்று இராமன் கூறிய வார்த்தை சீதைக்குப் பெருந்துன்பத்தை அளித்தது. பின்பு கணவனோடு காட்டுக்குச் சென்று அவனுக்காய பணிகளை யாற்றி, முனிவர்களைப் பேணி, விருந்தினர்களை ஓம்பிக் கடமையாற்றினாள். அசோகவனத்தில் இருக்கும்போதும் இக் கடமைகளை நினைந்து மனமுருகினாள். அனுமனைப் பார்த்துக் கூறுகின்ற தன்மை மிகச் சிறப்புடையது. கற்புள்ள மனைவியென்பாள்



ஒருபிறப்பிலன்று; எழுபிறப்பிலும் தமது கணவருடைய தொடர்பு நீடிக்கவேண்டுமென்று விரும்புவாள். இங்கே சீதையும் அந்த நிலையை அனுமனிடம் 'மீண்டு வந்து பிறந்து தன்மேனியைத் தீண்டலாவதோர் தீவினை தீர் வரம் வேண்டினாள் தொழுதென்று விளம்புவாய்' என்றும், 'இங்கு வந்திலனேயெனில் யாணர்நீர்க் கங்கை யாற்றங்கரை யடியேற்குத் தன் செங்கையாற் கடன் செய்கென்று செப்புவாய்' என்றும் எடுத்துக் கூறுகிறாள். மறுபிறவியிலும் கணவனையே சேரவேண்டுமென்றும் கணவனுடைய கையினால் தனக்கு ஈமக்கிரியைகள் செய்யப்படவேண்டுமென்றும் விரும்புகின்றாள் சீதையெனில் அவளின் கற்பின் திறனை என்னென்றியம்புவது! ஆண்கள் ஏகபத்தினி விரதத்தை மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்தையும் இராமாயணத்திற் காண்கிறோம்.

கற்பு நலஞ் சான்ற பெண்களால் தாம் பிறந்த குலம், புகுந்த குலம் யாவும் மேன்மையடையுமன்றோ. அனுமன், இராமபிரானைப் பார்த்து சீதையின் சீரிய பண்பினால் ஏற்பட்ட சிறப்புக்களை விளக்குகிறான்.

"உன்குலம் உன்ன தாக்கி உயர்புகழ்க் கொருத்தி யாய
தன்குலந் தன்ன தாக்கித் தன்னையித் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக் கீந்து வானவர் குலத்தை வாழ்வித்து
என்குல மெனக்குத் தந்தாள் என்பெருந் தெய்வ மையா."

என்று அனுமனால் தெய்வமாகப் போற்றப்பட்ட பெருமை சீதைக்கு உண்டு.

தன் பிள்ளையிலும் பார்க்க மாற்றான் பிள்ளையைப் போற்றுகின்ற தன்மை தாய்மார்களிடத்தில் அமைந்திருக்கவேண்டும். இதனைக் கோசலையிடத்தில் வைத்து அருமையாகக் காட்டுகிறார் கம்பர். 'பரதனே முடிசூடுவான்; நான் காட்டுக்குப் போவேன்; அது தந்தையின் கட்டளை' யென்று இராமன் கூறியபோது, கோசலையின் நிலையையும் பேச்சையும் கவனிப்போம்.

"முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனோர்
குறைவி லனெனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்."

பரதனைப் புகழ்ந்து பேசும் பண்பும் உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறுவதன் திறனும் கோசலையிடத்திலே நாம் காணக்கிடக்கின்றன. மண்டோதரியை எடுத்துக்கொண்டால், அவள் கற்பு நலமும் அழகு நலமும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவள் என்பதை நாம் காணலாம். மகன் இந்திரசித்து இறந்தபோது கலங்கிக் கண்ணீர் வடித்து இராவணனுக்கும் இம் முடிவு வருமோ என ஏங்கினாள். பின்பு இராவணன் இறந்தபோது போர்க்களத்தே சென்று அவன் மார்பில் வீழ்ந்து அலறி உடன்கட்டை யேறினாள். மண்டோதரியின் தெய்வக் கற்பு போற்றுதற்குரியது.

ஒரு நாட்டின் அரசியல், பண்பாடு என்பவற்றைப் பற்றிய உயர்ந்த நோக்கு கவிஞர்களிடத்தே அமைய வேண்டும். இதே வகையில் கம்பர் மகத்தான இலக்கியப் பணியையே யாற்றியுள்ளார். நாட்டிலே ஒரு குல உணர்ச்சி, பொருள் வாய்ப்பு, ஒழுக்கம், அறந்தழுவிய அரசியல், சகோதர ஒற்றுமை, நிறைகாக்குங் காப்பு, கற்பின் திண்மை ஆதியன இடம்பெறவேண்டும் என்பதையே தனது காவியம் வாயிலாக வலியுறுத்தியுள்ளார். இவற்றைப் படித்துச் சுவைத்துப் பயன் பெறுவோமாக.

"மறையவர் வாழி வேத மநுநெறி வாழி நன்னூல்
முறைசெயும் அரசர் திங்கள் மும்மழை வாழி மெய்ம்மை
இறையவன் இராமன் வாழி இக்கதை கேட்போர் வாழி
அறைபுகழ்ச் சடையன் வாழி அரும்புகழ் அனுமன் வாழி."

௮

## மங்கையர்க்குத் தனியரசி

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் டிருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மாற் போற்ற லாமே."

சைவ உலகம் போற்றும் ஒரு அம்மையாரையும் ஒரு அரசியாரையும் ஒரு தமக்கையாரையும் பெரிய புராணத்திற் காண்கிறோம். சேக்கிழார் பெருமான் மங்கையர்க்கரசியாரைக் குறிப்பிடும்போது 'தெய்வப் பாவை' என்று போற்றுவது குறிப்பிடத்தக்கது. ஏழாவது நூற்றாண்டிலே அரசியார் ஆற்றிய சேவை பெண்ணினத்துக்கே பெருமை கொடுப்பதாக அமைந்துள்ளது. 'தெய்வம்' என்ற பெருநிலைக்குரிய தகுதியை எல்லோரும் அடைந்துவிடமுடியாது. சாதாரண ஒரு இல்லறப் பெண்ணுக்குப் பல கடமைகள் உண்டு. கணவனைப் பேணல், மக்களைப் பேணல், விருந்தினரைப்

பேணல், கற்பின்வழி நிற்றல் ஆதியன இக் கடமைகளாகும். இவற்றிலும் வழுவாது மேலும் இறையன்பைப் போற்றி, சிவநெறி பரப்பி நாட்டை நல்வழிப்படுத்தி வாழுகின்ற வாழ்வு தெய்வீக வாழ்வாகும். தெய்வீக வாழ்வில் தேசநலம் நிறைந்தோங்கி மிளிரும்.

நின்றசீர் நெடுமாறன் என்று போற்றப்படுகின்ற பாண்டிய மன்னனின் மனைவியார் மங்கையர்க்கரசியார். ஏழாவது நூற்றாண்டிலே சமண மதம் தமிழ்நாட்டிலே வலுப்பெற்றிருந்தது. பாண்டிநாடு சமண இருளில் மூழ்கியிருந்தது. மன்னவனும் அம்மதச் சார்புடையவனானான். ஆனால் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரோ அந்நெறி தவறெனக் கண்டு சைவத்தையே போற்றி வாழ்ந்தார். பாண்டிநாட்டை மூடியிருந்த அஞ்ஞான இருளைப் போக்கி மெய்ஞ்ஞான ஒளியைப் பரப்பிய பெருமை அரசியாருக்குரியதாகையால் சேக்கிழாரால் 'தெய்வம்' என்று போற்றப்பட்டார். 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்றார் வள்ளுவர். அரசியார் ஆற்றிய சேவையினால் பாண்டிய குலத்துக்கே நேரவிருந்த பழி போக்கடிக்கப்பட்டது. வெண்ணீற்றினொளி பரப்பப்பட்டது. நாட்டு மக்களும் மன்னனும் ஒருசேரச் சமணத்தைத் தழுவி வாழ அரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மாத்திரம் சைவத்திலிருந்தனர். சமணத்தால் நெருக்குண்ட சைவசமயத்தின் பரிதாபகரமான நிலையைக் கண்டு அவ்விருவர் உள்ளங்களும் பதைத்தன. இந்நிலையில் அரசியாரின் தலைமையிலேயும் ஆதரவிலேயுந்தான் அமைச்சர் ஆகவேண்டியதைச் சைவத்துக்காகச் செய்தார் என்றால் அதில் மிகையொன்றுமில்லை. அரசனுக்கு அரசியல் அறிவு இருந்திருக்கலாம். ஆனால் அரசியாருக்கு அறிவுடன் ஞானமும் மேம்பட்டிருந்தது. இதனால் அரசியார் பக்கமே முடிவில் வெற்றியீட்டியது.

மன்னன் மதம்மாறி வாழ்ந்தபோதிலும், அரசியாருடைய அன்புள்ளம் கணவனாரின் உய்தி வழிக்கு வழிகோலுவதாகவே அமைந்திருந்தது. மதுரை ஆலவாய்ப்



பெருமானை அவர் தினந்தோறும் வழிபட்டே வந்தார். ஓரளவுக்கு மன்னனுக்கும் மறைத்தே சைவ ஒழுக்கத்தை மேற்கொண்டார். எனினும் சில சமயங்களில் அரசனறியச் சொல்லியும் அவன் அனுமதி பெற்றும் சென்றார் என்பதையும் மற்றொரு சந்தர்ப்பத்தில் வைத்துச் சேக்கிழார்பெருமான் காட்டுகிறார்.

" அம்புய மலராள் போல்வார் ஆலவாய் அமர்ந்தார் தம்மைக்
கும்பிட வேண்டும் என்று கொற்றவன் தனக்குங் கூறித்
தம்பரி சனங்கள் சூழத் தனித்திடை யோடுஞ் சென்று
நம்பரை வணங்கித் தாமும் நல்வா வேற்று நின்றார். "

பாண்டி நாட்டுக்கு எழுந்தருளி வந்த ஞானசம்பந்தப் பெருமானை அமைச்சனாரும் அரசியாருஞ் சென்று தொழுது நின்றனர். அரசியார், ஞானபோனகருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கிக் கண்ணீர் சொரிந்து, பவளவாய் குழறிநின்று 'யானும் என்பதியும் செய்த தவம் என்கொல்' என்று பணிவுடன் பகர்ந்து நின்றார். உடனே ஆளுடைய பிள்ளையார் எவ்வளவு அழகாக அரசியாரின் தொண்டின் பெருமையை எடுத்துக் காட்டுகிறார் பாருங்கள்;

"யாழின் மென்மொழி யார்மொழிந் தெதிர்கழல் வணங்கக்
காழி வாழவந் தருளிய கவுணியர் பிரானும்
சூழு மாகிய பரசம யத்திடைத் தொண்டு
வாழு நீர்மையீர் உமைக்காண வந்தனம் " என்றார்.

மிக நெருக்கடியான ஒரு சூழ்நிலையிலே இடர்ப்பாடுகளின் மத்தியிலே தொண்டு செய்து வாழும் முறையினைப் போற்றியுள்ளார் சம்பந்தர்; அதுவுமன்றி மதுரை ஆலவாய்க் கோயிலைக் கண்டபோதே அம்மையாரின் திருத்தொண்டின் சிறப்பையே வைத்துப் பாடினார். "மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை" என்னும் ஆலவாய்த் திருப்பதிகத்தில் இதனைக் காண முடியும்.

இவர் சைவத்தை மேற்கொண்டிருந்தபோதிலும் கணவனாருடைய வெறுப்புக் காளாகவில்லை. இந்த நிலையைச் சாதாரணமாக எல்லாப் பெண்களும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது. ஏதோ ஒரு வகையில் குடும்பத்தில் மனக்கசப்பு ஏற்பட்டே தீரும். உலகியலில் இதனை நாம் காண்கிறோம். ஆனால் அம்மையாருக்கு மதிப்புக்கொடுத்து அவருடைய நல்லுரைகளையும் அரசன் ஓரளவுக்குச் செவியிலேற்றான் என்பதைப் பெரியபுராணத்திற் காண்கிறோம். பிள்ளையார் இருந்த மடத்துக்குச் சமணர் தீ வைத்துவிட்டனர். பொல்லாச் சமணர் செய்த இந்தத் தீங்கை நினைத்தவுடன் மன்னனின் ஆதரவே மக்களின் தீச்செயலுக்கோ அன்றி நற்செயலுக்கோ காரணம் என்பதை ஞானச் சிறுவர் உணர்ந்தார். திருப்பதிகம் ஒன்று பாடி "பையவே சென்று பாண்டியர்க் காகவே" என்று ஆணை பிறப்பித்தார். உடனே பாண்டியனை வெப்புநோய் வாட்டத் தொடங்கியது. முன்னெப்போதும் அனுபவித்தறியாத விதத்தில் இந்நோய் வருத்தும் நிலைமையை உணர்ந்து மீளமாட்டாது மன்னவன் சமணக் குருமாரை நாடினான். அவர்கள் செய்த எம் மருந்தும் வெப்புநோயைக் குறைத்த பாடில்லை. மேலும் மேலும் நோய் கூடிக்கொண்டிருந்த போது பாண்டிமாதேவி கலங்கி மொழிகிறார்:

"………… ………… புகலியில் வந்து நம்மை
ஆண்டுகொண் டவர்பால் கங்குல் அமணர்தாம் செய்த தீங்கு
மூண்டவா றினைய தாகி முடிந்ததோ என்று கூற."

அமணர்களின் தீச்செயலே இவ் வெப்புநோய்க்குக் காரணமென்பதை அச்சமின்றி எடுத்துரைத்தார் அம்மையார். ஞானசம்பந்தர் பெருமையை அரசனுக்குக் கூறி அவரை அழைத்து வந்தால் நோயைப் போக்க முடியும் என்றும் எடுத்துரைத்தார். முன்பு ஒரு சமயத்தில் அரசன் சமணர்களின் போதனைக்குள் முற்றாக மயங்கிவிட்டானென்பதை யுணர்ந்த அரசியார் சமணர்களும் ஞானசம்பந்தப்பெருமானும் வாதிட்டு யார்



வெற்றிபெறுகிறார்களோ அவர் பக்கம் சேருதலே முறை என்பதையும் விளக்கிக் கூறினார். அரசனின் சமணப் பற்றை உணர்ந்த பாண்டிமாதேவி,

"…………………………………………
பின்னிலை இதுவே யாகில் நீடிய தெய்வத் தன்மை
அன்னவர் வாது செய்தால் வென்றவர் பக்கஞ் சேர்ந்து
துன்னுவ தறுதி யாகும் சுழிவுறேல் மன்ன என்றார்."

"தாய்போற் கழறலும் தழீஇக் கோடலும்
ஆய்மனைக் கிழத்திக்கு உரிய வாகும்."

என்றபடி வேண்டிய நேரங்களில் கணவனுக்கு உறுதியுரைப்பதில் மனைவி தவறக்கூடாது. கொண்ட கொழுநனை நன்னெறிப் படுத்தலும் இல்லாளின் முக்கிய கடனாகும். மங்கையர்க்கரசியார் சைவத்தை யுணர்ந்தவர்; கணவனாருக்கு உணர வைத்தவர்; சிவனடியாரைச் சிவனென மதித்துப் போற்றியவர். இவருடைய தூய உள்ளத்தையும் உயர்ந்த சைவப்பற்றையும் உன்னிய ஞானசம்பந்தர் அவர்மேற் பரிவுகொண்டார்; அவர்தம் மங்கல வாழ்வில் அக்கறை காட்டினார். இதனாலேயே 'பையவே சென்று பாண்டியர்க் காகவே' என்று பாடி தீப்பிணியினால் மன்னன் உடனடியாக மாளாதவகை செய்தார். 'பையவே' என்று அவர் பாடியதன் காரணமென்ன? சேக்கிழார் விடைதருகிறார்.

"பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையா ரன்பி னாலும்
அரசன்பால் அபராதம் உறுத லாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னாத லாலும்
தீப்பிணியைப் பையவே செல்க" என்றார்.

ஞானபோனகருடைய வாக்கின்படி தீப்பிணி பையவே சென்று சுரநோயாக மாறி மன்னவனை வருத்தியது. மானியின் அழைப்பின்பேரில் எழுந்தருளினார் ஞானச்சிறுவர். இவரைக் கண்ட மாத்திரத்திலே சுரநோய் சிறிது தணிந்தமையை உணர்ந்து 'நீருறையும் பதி யாது?' எனக் கேட்டான் மன்னன். உடனே சிவஞானச் செம்மலார் தம்பதியைப் போற்றிப் பன்னிரு திருப்பெயர் வரக்கூடிய பதிகமொன்றால் எடுத்திசைத்தார். கண்ட அமணக் குண்டர்கள் பொறாமையாற் பொங்கி எழுந்து இழிவுரை கூறி ஆரவாரித்தனர். அவர்களின் அடாத செயலைக் கண்ட மானியார் மனங் கலங்கிய தன்மையை நோக்கி ''பாலனிங்கிவ னென்று நீ பரிவெய்திடேல்'' என்று பாடி அவர் அச்சத்தையகற்றினார். அதுகாலை, பாண்டியன் ஞானசம்பந்தரையும் சமணர்களையும் நோக்கி 'இவ்வமயம் என்னைப்பற்றியுள்ள இச் சுரநோயைப் போக்கிக் காப்பவர் எவரோ அவர் பக்கம் நான் சேருவேன்' என்றான். இதுகேட்ட சமணர்கள் தென்னவனின் இடப்பாகத்தை மந்திர சக்தியால் மாற்றிவிட முனைந்தனர். ஞானக் குழந்தையார் மன்னவனின் வலப்புறத்தை மாற்றுவான் வேண்டி ஆலவாய் அண்ணலைத் தியானித்து அருட்டிருநீற்றை யெடுத்து ''இதுவே மந்திரமும் மருந்துமாயது'' என்ற கருத்தையுன்னி ''மந்திரமாவது நீறு'' என்று தொடங்கிப் பாடினார். வெண்ணீற்றை மன்னவனின் வலப்புறத்தில் தடவினார். உடனே வலப்பாகம் வெப்பொழிந்து குளிர்ந்தது. ஆனால் இடப்பாக நோய் அதிகரித்தது கண்ட மன்னன் சமணரை முனிந்து தூர விலகச் செய்து சம்பந்தரையே அழைத்தான். மறைக்குல முனிவரால் இடப்பக்க நோயும் எளிதில் நீங்கியது. மன்னவன் மகிழ்ந்து பிள்ளையாரை வணங்க மங்கையர்க்கரசியார் உள்ளம் உவகையுற்றுப் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றது போன்று மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார். மன்னவன் வெண்ணீறணிந்து நிற்கப்



பாண்டிய நாட்டுப் பெருங்குடி மக்களும் வெண்ணீறணிந்து காட்சியளித்தனர். சமண இருள் நாட்டினின்றும் முற்றாக அகன்று சைவப்பெருநெறி தழைத்தோங்கியது.

இவ்வாறு தெய்வத் திருநீற்றினொளியைப் பாண்டி நாட்டில் விளங்கவைத்த பெருமையில் பாண்டிமாதேவிக்குச் சிறப்பிடம் உண்டு. இவரைச் ''சைவங் காத்த தாய்'' என்று அன்றும் இன்றும் என்றும் நாம் போற்றுதற்குரியோம். ஆளுடைய பிள்ளையார் மூன்றாவதாண்டில் உமையம்மையாரளித்த சிவஞான அமுதத்தைப் பருகி ஞானசம்பந்தம் பெற்றமையையும் சிவநெறி வளர்க்கும் திறனையும் கேட்டறிந்த மங்கையர்க்கரசியார் மகிழ்ச்சியடைந்து மனம் நெகிழ்ந்தார் என்பதைத் துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் நமக்கு அறியப்படுத்துகிறார்:

''இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின்—நிலைவிளம்ப
கோங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தா ளார்சொல் எனக்கு.''

ஞானக் குழந்தையாரின் செயற்கரிய சீரிய சிவப்பணியைக் கேட்டவுடனே பாண்டிமாதேவியார் தம்மிரு தனங்களிலுமிருந்து பாலமுதம் பெருக நின்றனரென்றால் அவர்தம் அருட் பெருமை தெற்றெனப் புலப்படுவதாகும். இவரைப் போற்றுமிடத்தில் 'வளவர் திருக்குலக்கொழுந்து' என்று சேக்கிழாரும் 'வளவர்கோன் பாவை' என்று ஞானசம்பந்தரும் பாடியிருக்குந் திறன் சிந்தித்தற்குரியது. சோழர் குலத் தோன்றல்கள் மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறியறியாதவர்கள். சிவமணம் கமழச் சிவாலயத் திருப்பணிகளைச் செய்தவர்கள். திருமுறைகளைத் தொகுப்பித்தவர்கள். அத்தகைய சைவப் பெருங்குடியில் அவதரித்தவர் அரசியார். சைவப் பணிசெய்தல் என்பது அவருடைய குலத்துக்குச் சிறப்பாயமைந்த பெரும்

பண்பு. அந்த நெறியில் திறம்பாது பாண்டிநாட்டிலும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. ஞானசம்பந்தர் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளி அரசியாருக்கும் அமைச்சருக்கும் வாழ்த்துரை வழங்கியபோதும் இக் குறிப்பையே முன்வைக்கிறார் :

"செம்பியர் பெருமான் குலமக ளார்க்கும்
திருந்திய சிந்தையி னமக்கும்
நம்பெரு மான்தன் திருவருள் பெருகும்
நன்மைதான் வாலிதே யென்ன........"

ஞானசம்பந்தருடைய தேவாரப் பதிகங்களில் இடம் பெற்ற பெருமை மங்கையர்க்கரசியாருக்கே யுண்டு. இதனாலன்றோ சேக்கிழார் பெருமானும் இவர் சிவப் பணியை நோக்கிச் சிறப்புப் புராணஞ் செய்து போற்றியுள்ளார்.

"பூசுரர்சூ ளாமணியாம் புகலி வேந்தர்
போனகஞா னம்பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல்பெறுந் தவத்தி னாரைச்
செப்புவதியா மென்னறிந்து தென்னர் கோமான்
மாசில்புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை
ஆசினெறி யவரோடும் கூட ஈசர்
அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார்."

உ

# வள்ளுவர் காட்டிய வழி

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

தமிழினத்தின் பெருமையை உலகுக்கறிவித்த ஒப்பற்ற இலக்கியம் திருக்குறள். தமிழன் பெற்ற செல்வத்துட் செல்வம் திருக்குறட் செல்வம். கற்றதனாலாய பயனை எவ்வாறு பெறுதல்வேண்டும் என்றும் பண்பான வாழ்வை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் திருக்குறள் அறிவுறுத்துகிறது. குடும்ப நலம் பேணும் இல்லறத்தானாக முதலிலும், துறவு நலம் விழையும் முனிவனாக அடுத்தும், நாட்டு நலம் பேணும் அரசனாக இடையிலும், காதல் நலம் பேணும் இளங்காளையாக முடிவிலும் காட்சி தருகிறார் வள்ளுவர். எந்நிலையில் நிற்பவர்க்கும் வாழ்வாங்கு வாழ வழி வகுத்துத் தந்தவர் அவர்: மனிதன் எப்படியும் வாழலாம் என்ற நினைப்பை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்று திட்டமிட்டுக் கொடுத்தவர் அவர்.

வள்ளுவருக்கு முன்பு நூல் எழுதியவர்கள் அவ்வக் காலங்களில் நடைமுறையில் இருந்த வாழ்க்கை முறையை அப்படியே சித்திரித்துப் பாடல்களை ஆக்கி வைத்தார்கள். ஆனால் வள்ளுவர், எப்படி வாழ வேண்டும் என்று எடுத்துக்காட்டி எழுதிவைத்தார். சமுதாயத்திற் தான்கண்ட குறைகளையும் நிறைகளையும் நோக்கிச் செப்பஞ் செய்து சிந்தித்து எழுதினார். இவர் காலத்தில் தமிழ்நாட்டில் நிறையக் கருத்துப் பூசல்கள் இருந்தன. சமணர்கள், பௌத்தர்கள், மாயாவாதிகள் என்போர் தமிழ் நாட்டில் இடம்பெற்றுத் தமது கொள்கைக்குள் தமிழர்களை இழுக்க முயன்றார்கள். பல்வேறுபட்ட கருத்துக்களையும் தமிழர் தம்செவியில் ஏற்கவேண்டியிருந்தது. ஆனால் தம்நாட்டிற்கும் பாரம்பரியத்துக்கும் ஏற்றவையா இவையென்பதை யறிந்து தெரிந்துகொள்வதே அறிவு என்பதை,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்று பாடினார். அதாவது கருத்தைச் சொல்பவர்கள் யார் என்பதை ஆராயாமல் அவர் சொன்ன கருத்து என்ன என்பதை ஆராய்தலே நலம் என்பது வள்ளுவர் கருத்து. சமய ரீதியிலே நாம் எடுத்துப் பார்த்தாலும் எல்லாமதத்தினர்க்கும் எல்லா இனத்தினர்க்கும் எல்லா இடத்தினர்க்கும் ஏற்ற முறையில் பொதுக் கடவுள் வணக்கத்தையே அவர் வலியுறுத்தினார். கடவுள் வாழ்த்துப் பாடிய அவர் முதலிலே கடவுள் ஒருவர் உண்டு என்பதை எடுத்துக் காட்டுமிடத்தில் எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையது போல் உலகம் ஆதிபகவனை முதலாகவுடையது எனக் கூறி, அடுத்த பாடலிலே அவரை வாழ்த்தி வழிபடுதலே கற்றதனாலாய பயன் என்பதையும் எடுத்துக்காட்டினார். அத்தோடு மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் ஆண்டவனை வழிபடும் முறைமையினையும் விளக்கி அருளினார். "மலர்மிசை யேகினான்" என்பதனால் உள்ளத்து வழிபாட்டையும் "பொருள்சேர் புகழ்புரிந்தார்"



என்பதனால் வாக்கு வழிபாட்டையும் "தாளை வணங்காத் தலை" என்பதனால் காய வழிபாட்டையும் விளக்கினார். இறுதியில் வழிபாட்டின் பயன் பிறவி நீங்கி ஆண்டவன் திருவடியை யடைதலே யென்பதை அழகாகத் தெளிவுபடுத்தினார். இது எம்மதத்துக்குஞ் சம்மதமான வணக்கமுறையே யென்பதை நாம் மறுக்க முடியாது. தொல்காப்பியம், பரிபாடல் முதலிய நூல்கள் கூறுவதுபோல் தனித்தனிக் கடவுளர்களைக் கூறாது வேறுபாடற்ற ஒரேகடவுட்பற்று நாட்டிலே நிலவ வேண்டும் என்பதையே விரும்பினார். அதுவுமன்றி, வெறுஞ் சடங்குகள், வேள்விகளில் காலங் கழித்த லினும் பார்க்கத் தூய்மையான நினைப்பினாலேயே வழிபாடாற்றல் சிறந்தது என்பதையும் அறிவுறுத்திச் சிவகாருண்யத்தையும் போற்றினார்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று."

உயிர்களைப் பலியிட்டு ஆயிரமாயிரம் வேள்விகளைச் செய்து சமய வழிபாடாற்றிய வேதகால முறைமைக்கு இழுக்குத் தெரிவிக்கிறார் வள்ளுவர். கள்ளுண்ணல், புலாலுண்ணல், பரத்தையிற் சேறல் ஆதியன தமிழர் வாழ்வில் இடம் பெற்றமை குறித்துக் கடுமையாகச் சாடி அதனை எதிர்த்துள்ளார்.

அடுத்து, கல்வி, ஒழுக்கம், வள்ளன்மை, வாய்மை, அறம் என்பவை பற்றி வள்ளுவர் காட்டிய வழிகளைக் கவனிப்போம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

கற்றலின் பயன் நிற்றல் என்பதைக் கூறி, கல்வியின் இன்றியமையாமையை மேலும் விளக்குகிறபோது கற்றிலனாயினுங் கேட்க என்கிறார். நீ நேரடியாகப் படித்துச் செய்திகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமற் போனாலும் 'உன்னை வாழ்வித்துச் செழுமைப்

படுத்தி உருவாக்குகின்றதும் உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதுமான செய்திகளையும் சிந்தனைகளையும் கற்ற பெரியோர் வாயிலாகக் கேட்டாவது தெரிந்துகொள்’ என்கிறார். இதனால் அகவாழ்வில் புத்தம் புதிய மாறுதலும் ஏற்பட்டு; ஒழுக்கப்பண்புகளும் வளரும். கேள்வியினால் பெரும் பயனீட்டிய நாடு எமது நாடு. இந்தத் திறனை மேலும் வளர்க்க வேண்டும் என்கிறார். நாட்டிலே வேற்றுமை யுணர்ச்சி தலைதூக்காமல் இருக்க வேண்டுமானால் கல்வி அறிவு மேம்படவேண்டும். கல்வி அறிவு என்பது மொழியின் மூலமாக மாத்திரம் பெறும் அறிவு அன்று. அது மொழியைக் கடந்து நிற்க வேண்டும். மொழியின் எல்லைக் கோட்டுக்குள் நிற்பதானால் இன்று படித்தோரிற் படிக்காதவர்களும் விளங்குகிறார்கள். மனித குலத்தை நேசிக்கும் உணர்வும் வாழ்விக்கும் எண்ணமும் சேராவிட்டால் அக் கல்வியை அறிவுக்குரியதெனச் சொல்லிவிட முடியாது.

“அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.” என்றார்.

எனவே கல்வி வேறு அறிவுடைமை வேறு என்று கருதி இரண்டு அதிகாரத்தில் அதனைக் கூறினார். கல்வியென்பது அறிவைப் பெறுதற்குத் துணைசெய்யும் ஒரு கருவி. அது மனிதனை அறிவுலகத்துக்கு அழைத்துச் செல்லும். அந்த அறிவு வழி நின்று ஆவன செய்தலே பயனுடைத்து. வள்ளுவர் இதனை அழகாகச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

கல்வி, அறிவு, சிந்தனையினால் ஒழுக்கம் பேணப்படும். அதனை உயிரினும் மேலாகப் பேணவேண்டும். ஏனெனில் அதுவே மனித வாழ்வுக்கு விழுப்பந் தருகிறது. ஒழுக்கமில்லாத ஒருவன் குலம் பேசி நலம் பேசிப் பெருமையடைய முடியாது. ஒழுக்கமுடையாரையே உயர்ந்தவர்கள் என்று உலகம் போற்றும் என்ற கருத்துக்களை வலியுறுத்தி,

“ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.” என்றார்.



வள்ளன்மை பற்றிப் பேசும்போதும் சிறந்த கருத்தொன்றை வெளியிடுகிறார். உள்ளூர்ப் பழுத்த பயன் மரம்போலவும் ஊருணி நீர் நிறைந்திருப்பது போலவும் வள்ளல்கள் அமைவதனால் அது கொடுப்பவர்க்கே பெருமை தருகிறது. ஏற்போர் பயனடைவதுபோல் ஈவோரும் பயனடைகின்றனர். நடுக்காட்டில் அமைந்து சூரிய வெளிச்சம் படாது இலைதழைகளால் மூடப்பட்டிருக்கும் நீர்க் குட்டை போன்று தேங்கி நிற்கும் செல்வத்தால் யாருக்குப் பயன்? முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி; மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன். பொன்னும் மணியும் இன்ன பிறவும் வாரி வழங்கினார்கள் வள்ளல்கள் என்றெல்லாம் சங்கத் தமிழ் பேசியது. வள்ளுவர் என்ன சொன்னார்:

“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.”

ஈந்துவக்கும் இன்பமே உண்மையான இன்பம். அதனால் பேரறிவாளன் திரு ஊருணிநீர் நிறைந்தது போல் அமைய வேண்டும். ஏற்போர் கூட்டம் நாட்டிலே அதிகமாக இருக்குமானால் அங்கே பசிப்பிணி அதிகமென்பதே கருத்து. அந்த நிலைக்கு நாடு ஆளாகக் கூடாது. நாடு முழுவதிலும் செல்வம் பரவவேண்டும். பசிப்பிணி யகலவேண்டும். ஏழைகள், வள்ளல்கள் என்ற வேறுபாடு ஒழியவேண்டும். எல்லாரும் வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்ற எண்ணமே வள்ளுவர் உள்ளக் கிடக்கையாகும். பழந்தாங்கி நிற்கும் பயன் மரங்கள் எல்லாம் தமது கனிகளை இன்னார் இனியார் என்று நோக்காது எல்லார்க்கும் உதிர்த்துக்கொடுக்கின்றன. நட்டவனுக்கோ, வேலியிட்டவனுக்கோ, நீர்ப் பாய்ச்சியவனுக்கோ என்று பாராமல் கனிந்த கனிகளைச் சமுதாயத்துக்கு நல்குகின்றன. அதுபோல் பணம் படைத்தவனும் தன் செல்வத்தைச் சமநோக்கோடு சமுதாயத்துக்கு நல்கவேண்டும் என்பதே அவர் கருத்து.

வாய்மையைப் பற்றிக் கூறுகின்றபோதும் உள்ளதை உள்ளபடி சொல்லுவது மாத்திரம் வாய்மை யென்று சொல்லிவிட முடியாது. அது சில சமயம் பொய்ம்மையாகவும் அமையலாம் என்பதை எடுத்துக்காட்டி,

"வாய்மை யெனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்."

என்று பாடினார். அடுத்தவனுக்குத் தீமை தருவதாக இருந்தால் உள்ளதை உள்ளபடி சொன்னாலும் அது வாய்மையாகாது. எனவே, செயலை நோக்கிச் சொல்லின் தன்மை அமைகிறது என்பது, அவர் கருத்து. அறத்தை மிக வலியுறுத்திக் கூறியவர்களில் வள்ளுவருக்கு நிகர் வள்ளுவரேதான்.

"அறத்தினூஉங்கு ஆக்கமு மில்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு."

என்று கூறி எமது நெஞ்சில் அறப்பண்பை நிறுத்துகிறார். வேதகாலந் தொட்டு விஞ்ஞானகாலம்வரையுள்ள அறம் அறத்துப் பாலில் உண்டு.

இனி, அவர் காட்டிய அரசியல்வழியைச் சுருக்கமாகக் கவனிப்போம். அரசன் என்பான் கடமையை மேலாக மதிக்க வேண்டுமே தவிர உரிமையை மேலாக மதிக்கக் கூடாது என்பதைச் சிறப்பாக விளக்கினார். ஏனெனில் கடமை என்றைக்கும் மாறாதவை. ஆனால் உரிமையோ மாறி மாறி வருபவை. இதனை அரசியலில் உணர்த்தி முறை செய்து காப்பாற்றும் மன்னவன் 'மக்கட்கு இறை யென்று வைக்கப்படும்' என்பதனால் காட்டினார். அரசனை இறைவனுக்குச் சரியாகப் போற்றவேண்டுமானால் அவன் முறை செய்து உலகைக் காப்பவனாக விளங்க வேண்டும். கடமைக்கு அரசனேயன்றி உரிமைக்கு அரசனன்று என்பது வள்ளுவர் செய்த சீர்திருத்தம். இன்னும் அரசன் சொலல் வல்லனாய் சோர்விலனாய் அஞ்சாமை உடையவனாய் கல்வி அறிவு ஊக்கம் யாவும் பெற்றவனாய் விளங்க வேண்டும் என்பதையும் பல்



குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் நாட்டில் இருக்கக் கூடாதென்பதையும் தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் நாட்டில் இடம்பெறவேண்டும் என்பதையும் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

நல்லமைச்சர் சொற்கேட்டு ஒழுகும் அரசனாலேயே நல்லாட்சி நாட்டில் நடாத்தமுடியும் என்பதனையும் தர்மத்தைப் போற்றி நாட்டு மக்களின் அல்லல் அகற்றி அரசாட்சி புரிந்தால் அது நீடு நிலைக்கும் என்பதையும் எடுத்துக் கூறினார்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

எனவே, நாட்டு மக்களின் அவலக்கண்ணீர் அரசனுடைய ஆட்சியையே நிர்மூலமாக்கிவிடும் என்பதையும் பகைவர் மேல் மிக வலிமையோடு போர் செய்தல் ஆண்மையேயாயினும் மாற்றானுக்குத் தாழ்வு வந்தவிடத்து அவன் மீது இரக்கங்கொண்டு அன்பு பாராட்டுதலே ஆண்மைக்கு அணி என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

"பேராண்மை யென்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு."

இறுதியாக வள்ளுவர் காட்டிய வழியில் நின்று பெண்மைச் சிறப்புக்களைக் கவனிப்போம். வாசுகியை வாழ்க்கைத் துணையியாகப் பெற்ற வள்ளுவர் தான் பாடிய திருக்குறளில் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று கூறியதில் வியப்பில்லை. வாழ்க்கைத் துணை நலத்தில் பெண்ணின் பெருமையையும் கடமையையும் சிறப்பாகக் காட்டியுள்ளார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்துக் கற்பைக் காப்பது சங்ககாலத்தில் ஒரு மரபாக வளர்ந்திருக்கிறது. திருவள்ளுவர் இதனை எதிர்த்து "சிறை காக்கும் காப்பு எவன்செய்யும்?" என்று கேட்கிறார். குடும்ப மகளிரிடம் தெய்வம் தொழுகின்ற உணர்ச்சி எவ்வளவுக்கு ஓங்கியிருக்கிறதோ அவ்

வளவிற்குக் குடும்பப் பொறுப்புக்களில் அக்கறையும் பொறுப்பும் மிகுந்து விளங்கவேண்டும் என்பதை வலி யுறுத்துவதற்காகவே,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

எனப் பாடினர். மனைத்தக்க மாண்புடைமையும் தற்காத்துத் தற்கொண்டாற் பேணலும் பெண்ணின் கடமைகள் என்பதைக் காட்டி அத்தகைய பெண் வீட்டிலே இருந்தால் அவ்வீட்டில் இல்லது என்? என்பதைத் தெளிவுறுத்தினர்; கற்புள்ள மனைவியின்பால் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் ஐம்புல இன்ப நுகர்ச்சியையும் அடையமுடியும் என்பதைக் காமத்துப்பாலிலே சிறப்பாக விளக்கினர்.

எனவே, வள்ளுவர் காட்டிய வழியை நாம் ஆராய்ந் தால் அங்கே நீதியும், அறமும், ஒழுக்கமும் கூடிய ஒரு சமுதாயமே நாட்டிலே விளங்கவேண்டும் என்பதையே அவர் விரும்பியுள்ளமை புலப்படும். எந்த எந்த நெறி யில் நின்று மக்கட் சமுதாயம் வாழ விரும்பினலும் அந்த அந்த வாழ்க்கை நெறிகளை மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். 2000 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த அவர் கருத்துக்கள் இன்றும் என்றும் உலகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவையே என்பதில் மிகையொன்றுமில்லை. அவர் வழிநின்று நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்போமாக.

**"அறம்பொருள் இன்பம்வீ டென்னும் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை — மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதையவன் வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்."**

உ

# சம்பந்தர் செந்தமிழ்

" அருநெறியமறை வல்லமுனி யகன் பொய்கை யலர்மேய
பெருநெறியபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே."

**வே**த நெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் பூத பரம்பரை பொலியவும் இவ்வுலகில் அவ தரித்தவர் திருஞானசம்பந்தர். அவர் அவதாரத்தால் அசைவில் செழுந்தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறையை வென்றது. சைவமும் தமிழும் தழைக்கப் பாடியவர் சம்பந்தர். இவருடைய முதற்பதிகம் 'தோடு' என்ற சொல்லோடு தொடங்குகிறது. 'தமிழ்' என்ற சொல்லிலே முதலில் அமைந்த 'த்' என்ற மெய்யும் பிரணவரூபமாகிய ஓங்காரமும் சேர்ந்து ஒலிக்கும் முத லெழுத்தைக் கொண்டு 'தோடு' என்று குறிப்பிடு கின்றார் முதலில். பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணத்தின் இறுதிப் பாடல் 'உலகெலாம்' என்று பூரணமடைகிறது. எனவே, திருமுறைகளின் தொடக்கமும் முடிவும் 'ஓம்' என்ற பிரணவத்தை உணர்த்தி நிற்பது புலனாகிறது. இச் சந்தர்ப்பத்தைப் பெரியபுராணத்தில் விளக்கியபோது சேக்கிழார் பெருமான்,

"எல்லையிலா மறைமுதல்மெய் யுடன்எடுத்த எழுதுமறை
மல்லல்நெடுந் தமிழால்இம் மாநிலத்தோர்க் குரைசிறப்ப"

என்று குறிப்பிடுகிறார். அவர் பாடிய பஞ்சாக்கரப் பதிகம், திருநீற்றுப் பதிகம், திருப்பாசுரம், கோளறு பதிகம் என்பவற்றை ஓதி உலகத்தார் இம்மையிலும் மறுமையிலும் உய்தியடைய வைத்தார் என்பதை 'மாநிலத்தோர்க் குரைசிறப்ப' என்பதனால் விளக்கினார்.

ஆசாரியப் பெருமக்களின் முதல்வராகிய இவருடைய பாடல்கள் முதலாம் இரண்டாம் மூன்றாந் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் அமைந்த பாடல்கள் இயற்கைச் சிறப்பும் இலக்கிய இன்பமும் சமய உண்மைகளும் பொதிந்தவையாக, கொஞ்சு தமிழ்ப்பாணியாக அமைந்துள்ளன. இவற்றை ஓதுவார் அடையும் பயனை முதற்பதிகத்து இறுதிப்பாடலிலேயே பெருமான் குறித்துக் காட்டியுள்ளார். அதனையே முதலிற் காட்டியுள்ளோம்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒரு புதிய திருப்பம் இவராற்றான் ஆரம்பிக்கப்பட்டது. சங்ககாலம், சங்கம் மருவிய காலமாகிய முதல் ஐந்து நூற்றாண்டுகளிலும் காதல், போர், கொடை, அறம் என்பனவே இலக்கியங்களில் மிகுத்துப் பேசப்பட்டன. ஆனால் பல்லவர் காலத்தில்தான் பக்தியிலக்கியம் தோன்றி ஞான உணர்வை யூட்டி இறைவன் புகழைப் பாடும் மரபு வளர்க்கப்பட்டது. இதனை மிகுதியும் வளர்த்தவர் திருஞானசம்பந்தப் பெருமானேயாவார். 'நாளும் இன்னிசையாற் றமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியமையும் இதனாலேயே என்க. இவர் தனது பெயரோடு 'தமிழ்' என்ற அடையைப் புணர்த்தி தமிழ் ஞானசம்பந்தன் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழை வெறும் இலக்கியத்தமிழாக இல்லாமல் ஞானத் தமிழாக மாற்றியவர் இவர். சேக்கிழார் பெருமா னருளிய பெரியபுராணத்தை



அரங்கேற்றியபோது பாராட்டுரை வழங்கிய அறிஞர்கள் 'தோடு செய்த திருநெறிய செந்தமிழோடொக்கும்' என்று போற்றினர் என்பதும் உணர்தற்குரியது.

அம்மையின் அமுதஞானம் ஊட்டப்பட்டவர் இவர். அதன் பேறாக உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஆகிய இரண்டையும் பெற்றார். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் என்பது அபரஞானம். அதுவே உவமையிலாக் கலைஞானம் என்பதுமாகும். மற்றது பரமஞானம். பவமதனை யற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் என்பது அதுவே. இதுவே உணர்வரிய மெய்ஞ்ஞானமாகும். இத்தகைய ஞான உணர்வுகள் பெற்றவரானபடியால் அவர் பாடல்கள் கற்போர்க்கு ஞான உணர்வை யூட்டக் கூடியவை. பெருமானுடைய பாடல்களை ஓதியுணர்ந்த பட்டினத்தார், சேக்கிழார், அருணகிரிநாதர், தாயுமானார், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் இவரையே குருவாகக் கொண்டு வழிபட்டனர். இவருடைய திருநெறிய தமிழில் திளைத்த இராமலிங்க அடிகள்,

"தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதுளனை நானறியேன் நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே."

என்று உருகிப் பாடினார்.

தொல்காப்பியர், இளங்கோவடிகள், திருவள்ளுவர் போன்றோர் பெருநூல்களை ஆக்கியபோதும் மக்களை இயக்கி அப்பணியில் ஈடுபட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் ஞானசம்பந்தப் பெருமான் மக்களை இயக்கியே அவர்களுடே வாழ்ந்தே தமது அருட்பாடல்களை ஆக்கியுள்ளார். தமிழ்நாட்டுத் தலங்கள்தோறும் சென்று மூலை முடுக்குகளெல்லாம் தெய்வீகமும் செந்

தமிழும் கலந்தோட வழிகாட்டியவர் இவர். ஏறக் குறைய இருநூறு தலங்களை இவர் தரிசித்துப் பதிகம் பாடியுள்ளார். இயற்கை எழிலை இறையெழிலாகக் காட்டிய குழந்தைக் கவி இவர்.

“சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதாளம்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே.”

குழந்தைகளுக்கு அன்னம், கிளி, யானை, தும்பி என்றால் அலாதியான பிரியம். அவற்றோடு பேசுவது போன்ற உணர்வு தோன்றும். இங்கே கிளிக்குக் கொடுப்பன வெல்லாவற்றையும் கொடுத்து அதன் வாயிலே யிருந்து இறைவனுடைய நாமத்தைக் கேட்க ஆசைப் படுகிறார் ஞானச்சிறுவர். அதன் உள்ளீடாக இறை யுணர்வை எழுப்புகிறார். இறைவனின் நாமத்தை ஒரு தரஞ் சொன்னாலே கோடி பயன் உண்டு. இங்கே கிளி யிடமும் ஒருமுறையாவது பேசும்படி கேட்கிறார்.

ஞானச் சிறுவன் திருவையாற்றுத் தலத்திலே கண்ட காட்சியைக் கவனிப்போம்.. அங்குள்ள வீதிகளிலே தேவப்பெண்கள் வலம் வந்து நடனமாடுகின்றனர். அவர்கள் நடனத்திற்கு ஏற்ற முழவுச்சத்தம் அமைந் திருக்கிறது. முழவின் அதிர்ச்சி இடிமுழக்கம் போல் ஒலிக்கிறது. இதனைக்கேட்ட குரங்குகள் எல்லாம் மழை வருமோ என்று அஞ்சுகின்றன. மரங்களிலே ஏறி நுனிக் கொம்பரிலே இருந்து வானத்தை நோக்கு கின்றன. அங்கே மழை வரும் அறிகுறிகள் இல்லாமை யால் அச்சம் நீங்குகின்றன. இங்கே மந்திகளின் அச்சம் நீங்குவதுபோல் ஆன்மாக்களின் அவலமும் திருவை யாற்றுப் பெருமானைச் சரணடைந்த அளவில் நீங்கு கிறது என்பதை அழகாகக் காட்டுகிறார்.



“புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வா னமருங் கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவை யாறே.”

மற்றோரிடத்தில் திருக்கேதாரத் தலத்தின் இயற்கை எழிலை ‘வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரிக் கெண்டை பாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே’ என்று பாடினார். நீலமொட்டு அலருவதுபோல் அன்பர் களின் உள்ளங்களை மலர்விக்கும் ஆலயம் திருக்கேதார மாகும். திருவீழிமிழலையில் இன்னொரு இறையுணர்வை எழுப்புகிறார்.

“ஆறாடு சடைமுடியன் அனலாடும்
மலர்க்கையன் இமயப் பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங் கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுஉண்டு சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலை யாமே.”

கருநிறமுள்ள வண்டுகள் எல்லாம் திருவீழிமிழலைத் தலத்திலுள்ள செங்கழுநீரில் படிகின்றன. சிவந்த மலர்த்தாதுகள் வண்டுகளில் ஒட்டிக்கொள்கின்றன. அத்துடன் மலரிலுள்ள மதுவை நன்றாகப் பருகிவிட்டுக் களிப்புற்ற நிலையில் காட்சிதருகின்றன. வண்டுகளின் புதிய வடிவமும் புதிய மகிழ்ச்சியும் அவை பாடும் செவ்வழிப் பண்ணும் சேர்ந்து ஆண்டவன் திருவடிக் காளாய அன்பர்கள் ஞாபகத்தை ஊட்டுகின்றன.

வண்டுகள் கருமை மாறிச் செம்மையுற்றுப் புத்துணர்வு பெற்றதுபோல் உயிர்கள் பாசங்கெட்டுச் சிவத்துவம் பெற்றன என்பதையும் உணரவைக்கிருர்.

பாடல் யாப்பு முறை வரலாற்றிலேயும் ஒரு புதிய திருப்பத்தை யேற்படுத்தியவர் ஞானசம்பந்தர் என்ருல் அதில் மிகையொன்றுமில்லை. சங்ககாலத்தில் அகவலும் வஞ்சியும் கலியும் யாப்பாக அமைய, சங்கம் மருவிய காலத்திலே வெண்பா யாப்பினுல் பாடல்கள் அமைந்தன. ஆனுல் பல்லவர் காலத்தில் இதனைச் சிறிது மாற்றி விருத்தப் பாடல்கள் தோன்றின: சம்பந்தப் பெருமான் தனித்தனிப் பாடல்வகை பலவற்றை எடுத்தாண்டார். மாலைமாற்று, யமகம், ஈரடி, ஈரடிமேல் வைப்பு, மடக்கு முதலிய வகைகளில் அவர் பதிகங்கள் அமைந்து விளங்கின. இவற்றைத் தொகுத்து 'மூல இலக்கியம்' என்று கூறுகிருர் சேக்கிழார்.

"நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகுமி ராகஞ்
சால்பினிற் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கிய மாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினுர் ஞானசம் பந்தர்."

பெண்களைப் போற்றுவதிலும் பெருமைகண்ட நாடு தமிழ்நாடு. அது தமிழருடைய சிறப்பான நாகரிகமுங் கூட. சமண பௌத்த நாகரிகம் இடைக்காலத்தில் தோன்றியதனுல் தமிழ்ப் பண்பாட்டிற்குச் சிறிது இழிவு ஏற்பட்டது. இதனை நீக்குவதற்கு ஞானசம்பந்தப் பெருமானும் அப்பர் சுவாமிகளும் அரும்பாடுபட்டனர்: தமது பாடல்களில் அம்மையப்பனைச் சமநிலையில் வைத்துப் போற்றியும் பெண்ணடியார்களின் தொண்டுகளை மதித்தும் பாடியுள்ளார். திருஆலவாய்த் திருத்தலத்துக்கு எழுந்தருளி வந்த ஞானசம்பந்தர்,



"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவ ........"

எனப் பாடி அரசியாரின் தொண்டுகளைப் பாராட்டியுள்ளார். காரைக்காலம்மையார் தலையாலே நடந்த பதியாகிய திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சி விலகிச் சென்ருர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெருமானுடைய அருள்விரஞ் செறிந்த பாடல்களுக்கும் பல சான்றுகள் உள. பாண்டியன் அரண்மனையிலே, பெருங் கூட்டமான சமணகுருமார்கள் மத்தியிலே, 'ஈனர்கட் கெளியே னல்லேன் திருஆலவாய் அரன் நிற்கவே' என்று பாடினுர். 'நாளுங் கோளும் நலமாயில்லை' என்று உரைத்த நாவுக்கரசரின் பரிவுணர்ச்சியை நினைந்து அடியார்களுக்கு நாளுங் கோளும் நலிவு செய்யா என்ற நம்பிக்கையை எடுத்துக் காட்டிக் கோளறு பதிகத்தைப் பாடியருளினுர்.

தந்தையார் வேள்வி செய்வதற்காகப் பொருள் கேட்டு நின்றபோது அதனைப் பெற்றுக்கொடுப்பான் பொருட்டு எம்பெருமானைப் பாடினுர். பொருள் பெறச் சிறிது சுணங்கியபோது ஈகையின் சிறப்பை விளக்கி,

"இதுவோ நமை யாளுமாறு ஈவதொன் றெமக் கில்லையேல்
அதுவோ நினதின்னருள் ஆவடு துறையரனே"

எனப் பாடினுர்: இறையருள் நிரம்பிவழிந்த தன்மையிலே எழுந்த வாசகங்கள் இவை.

ஏழாவது நூற்ருண்டிலே ஒரு பொறுப்பு வாய்ந்த தமிழ்ப் பெருந்தலைவராகவும், முதற்பெருங் குரவராகவும் இவர் விளங்கினுர். பாண்டி நாட்டிற்கு வந்து தங்கியிருந்தபோது இவர் இருந்த மடத்திற்குச் சமணர்கள் தீ வைத்தனர். இதனை யுணர்ந்த பெருமான் மக்களின்

திய செயலுக்கு மன்னனே காரணமென்பதை யுணர்ந்து 'பையவே சென்று பாண்டியர்க் காகவே' என்று பாடினார்; 'பையவே' எனப் பாடிய திறனை அருமையாகச் சேக்கிழார் எடுத்துக் காட்டி, பெருமானின் பொறுப்புணர்ச்சியை விளக்கினார். தந்தையார் ஒழுங்கு படுத்தியிருந்த திருமண வைபவத்தை முன்னிட்டுத் தனது உள்ளப்பாங்கை எடுத்துக் காட்டுகிறார்.

''கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே.''

அடுத்து, முதற்பெருங் குரவராக இவரைப் போற்றுவதற்குக் காரணம் என்னையெனில் பதிகங்கள் தோறும் 8ஆம், 9ஆம், 10ஆம் பாடல்களில், அமைத்துக் காட்டிய திருநெறியே யாகும். இராவணன் செயலைக் காட்டி அவன் பெற்ற மன்னிப்பையும், பிரம விட்டுணுக்கள் தேடிக் காணாச் சோதி அடியவர்க்குக் காட்சி கொடுக்கும் திறனையும், புத்தரும், சமணரும் காட்டிய நெறியில் மயங்காது சைவத்தைச்சார்ந்து தெளிவடைய வேண்டும் என்பதையும் மிகச் சிறப்பாக விளக்கியருளினார். இவ்வாறு இவர் பாடியருளிய முதல் மூன்று திருமுறைகளிலும் இன்று 384 பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் 4181 பாடல்கள் அடங்கியுள்ளன. இவை யாவும் சிவமணமும் தமிழ்மணமும் கலந்து மிளிர்வன; ஞானக் கருவூலமாக அமைந்து எம்மனைவரையும் ஞான வழியிற் செலுத்துவன. நாளும் அவற்றை ஓதிப் பயனடைவோமாக.

''நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.''

உ

# திருவாசகம்

''பழுதி லாதசொல் மணியினைப் பக்திசெய்து அன்பு
முழுது மாகிய வடத்தினால் முறைதொடுத்து அலங்கல்
அழுது சாத்தும்மெய் அன்பருக்கு அகமகிழ்ந்து ஐயர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார்.''

இறைவன் திருவருளில் நம்பிக்கை வைத்து அதன் வழி யியங்கியவர்களே நம் நாட்டு ஞானியர்கள். இவர்கள் தம்செயலற்று வாழ்ந்தவர்கள். இவர்கள் மொழிகள் யாவும் இறைவன் மொழிகளே. இறையன்பை ஈட்டிக் கொண்டு அந்த உள்ளொளியிலே அவன் அருள் பெற்றுப் பாடினார்களென்றால், அவை யாவும் இறை வார்த்தைகளே என்பதில் ஐயமில்லை. இந்த வகையில் நால்வர் பெருமக்களும் எமக்கு நல்வழிகாட்டிகள் ஆகிறார்கள். மணிவாசகப்பெருமான் பாடியருளிய ஞானப் பனுவல் தான் திருவாசகம். தமிழ் மொழியில் எழுந்த பக்தி இலக்கியங்களுக்குள் திருவாசகத்திற்குச் சிறப்பிடம் உண்டு. ஓதுவாரது என்பு நைந்துருகவும் உள்ளம் நெக்கு நெக்கேங்கவும் ஆக்குந் திறன் திருவாசகப் பாடல்களுக்கு உண்டு. இதனை அழுது அழுது ஆண்டவன் அடிகளிற் சாத்தினார் மணிவாசகர். 'நினையேன் அழுதால் உன்னைப்

210950

பெறலாமே' என்று போற்றினர். அவர் அடைந்த பக்திப் பரவச நிலையைத் திருவாசகத்தை உள்ளன்போடு ஓதுவார் அனைவரும் உணர முடியும்.

மணிமொழிகளை வழங்கிய அடிகளுக்கு மாணிக்க வாசகர் என்ற நாமத்தை இறைவனே சூட்டியருளினர்: இது இறைவனுற் கொடுக்கப்பட்ட தீட்சாநாமம். இறைவரே இவர் பாடல்களை விரும்பித் தமது திருக் கரத்தால் எழுதித் 'திருச்சிற்றம்பலமுடையார்' என்று கைச்சாத்துமிட்டனரென்றால் இதன் பெருமைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை. இவ்வாறு பெரும் புலவராகிய மணிவாசகரின் பாடல்களை எம்பெருமான் எழுதியமை குறித்துச் சிவப்பிரகாச சுவாமிகள் கற்பனை செய்து மணிவாசகரை நோக்கிக் கூறுவதுபோற் பாடுகிறர்.

"தன்னை நீ புகழ்ந்து உரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனல்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியா என்பணி வோனே."

திருவாசகத்தைக் கேட்டு முடித்த பெருமான் கோவையும் பாடுக எனப் பணித்தருளினர். திருவாசகப் பாடல்கள் மாணிக்கமணி போன்றவை என்பதோடு அமையாமல் தேன் போன்றவை என்பதையும் பெரி யார்கள் அனுபவத்திற் கண்டனர். 'மணிமொழியார் நூலை விரும்பித் தம்மோடு வைத்துக்கொண்டது கடை யூழி வரும் தனிமை கழிப்பதற்காக' என்று நயமாகப் பாடினர் சுந்தரம்பிள்ளை.

மூவர் தேவாரங்களை வேதசாரமென்றும் திருவா சகத்தை உபநிடத சாரமென்றும் போற்றுவர். திரு வருளின் பெருமையை முதல் ஏழு திருமுறைகளிலும் குருவருளின் பெருமையை 8 ஆம் திருமுறையாகிய திருவாசகத்திலும் நாம் காண முடிகிறது. மணிவாச கப் பெருமான் திருவடித்துணைகொண்டு, திருவடியில் அன்பு வைத்து, திருவடிக்கு வணக்கம் செலுத்தி,



திருவடியைக் கண்டு திருவடியிலே இரண்டறக் கலந்தவ ராவர். இந்த ஐந்து நிலைகளையும் திருவாசகத்தில் ஆங்காங்கு காணமுடியும். மானுடப்பிறவி எடுத்ததன் பயன் உயிருக்கு உண்மைப் பற்றுக்கோடாய ஆண்ட வனை உணர்தலே யாகும். உடம்பானது உயிரைப் பற்றி நிற்க, உயிரானது இறைவனைப் பற்றி நிற்க வேண்டும். இந்த உணர்வைத்தான் திருவடியைத் துணை யாகக் கொண்டவர்கள் அடைவார்கள்.

"உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே."

மனிதப் பிறவியின் மகத்துவத்தை மிக அழகாக இப்பாடலில் விளக்கியுள்ளார். திருவடியில் இடையறுத அன்பை வைத்தவர் 'திருச்சதகம்' என்ற பகுதியில் இதனையே வேண்டி நிற்கின்றார். 'இடையறு அன்புனக் கென் ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்' என்பது அவர் கேட்ட வரமாகும். 'நின் வார்கழற் கன் பெனக்கு நிரந்தரமா யருள்வாய்' என்று மற்றோரிடத் திலும் வேண்டுகிறர். திருவடி வணக்கம் பற்றி எடுத்துப் பாடிய இடங்கள் பலவுள. தன் நெஞ்சுக்கே அறிவுறுத் துவது போலவும் வணக்கமுறை இதுவென்று உலகுக்கு அறிவுறுத்துவது போலவும் பல இடங்களிற் பாடி யுள்ளார்.

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே."

இந்தப் பாட்டில் நெஞ்சுக் கறிவுறுத்துவதுபோல் எமக்கு அறிவுறுத்துகிருர். மற்ருெரு பாடலில் காயத்தின் வணக்கம், உள்ளத்தின் வணக்கம், வாக்கின் வணக்கம் மூன்றையும் எடுத்துக் காட்டுகிருர். 'மெய்தா னரும்பி விதிர்விதிர்த்தும்', 'கைதான் தலை வைத்தும், கண்ணீர் ததும்பி'யும் நிற்கும் நிலையே காய வழிபாடாகும்; 'உள்ளம் பொய்தான் தவிர்தல்' உள்ள வழிபாடாகும். 'போற்றி சயசய போற்றி' என்பது வாக்கின் வழிபாடாகும். இவ்வாறு பல பாடல்களில் திருவடி வணக்கத்தைத் திருவாசகம் காட்டுகிறது. அடுத்து, திருவடிக்காட்சியில் திளைத்த அடிகள் 'கண்ணுல் யானும் கண்டேன்' என்றும், 'அந்தணனுகி ஆண்டுகொண் டருளி' யென்றும், 'காட்டிஞய் கழுக்குன்றிலே' என்றும் தனது அனுபவத்தை விளக்கினுர். இந்த அனுபவமே பெருகித் தில்லையிற் பேரின்ப விளைவைக் கொடுத்தது.

'தேனூறும் வாசகங்கள் அறுநூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனே' என்று சைவ எல்லப்ப நாவலர் போற்றுகிருர். திருவாசகத்தில் அமைந்துள்ள சொற்களும் சொற்ருெடர்களும் தேனுகச் சுவைக்கக் கூடியனவன்றிப் பக்திச் சுவையையும் மிகுவித்து உள்ளத்தை உருகவைப்பன. அவ்வாறு உருகிய அடியார் ஒருவர்,

"திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கல் மனமுங் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே."

என மொழிந்தார். ஓசைச் சிறப்பும் சந்தச் சிறப்பும் அமையக்கூடியதாகவும் சில பாடல்கள் அமைந்துள்ளன. சிறப்பாக 'அம்மானை', 'சாழல்', 'திருவுந்தியார்', 'திருப் படையாட்சி', 'அச்சோப்பதிகம்' முதலியன சந்த மிசைத்துப் பாடி இன்பம் அடையக்கூடிய நிலையில் அமைந்துள்ளன. பக்திச்சுவை எவ்வளவுக்கெவ்வளவு



அமைந்துள்ளதோ அதேயளவில் இலக்கியச் சுவையும் மிகுந்து விளங்குகிறது. ஒவ்வொரு பாடல்களின் உயிரோட்டமும் பக்தி நெறியிலேயே திளைக்கவைக்கிறதெனினும் ஒரு சில பாடல்களை இந்த வகையிற் சிறப்பாக நோக்கலாம்.

"கையாற் ருெழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் றலைமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்
றையா வென்றன் வாயா லரற்றி
யழல்சேர் மெழுகொப்ப
வையாற் றரசே யாசைப் பட்டேன்
கண்டா யம்மானே."

என்னும் பாடலில் இறைவன் திருவடிகளை உள்ளம் பொருந்தத் தழுவி சென்னிமேற் சூடி பெருமான் பெருமானென்று அரற்றி தீயைச்சேர்ந்த மெழுகுபோல் உருகும் நிலையை எடுத்துக்காட்டியுள்ளார். தழுவுதலாகிய உள்ளத்தின் தொழிலையும் சூடுதலாகிய காயத்தின் தொழிலையும் அரற்றுதலாகிய வாயின் தொழிலையும் இங்கு இணைத்துப் பக்திச் சுவையை விளக்கியுள்ளார்.

அடுத்தபடியாக இலக்கியச் சுவை நிறைந்த ஒரு பாடலைக் கவனிப்போம்:

"உன்னை யுகப்பன் குயிலே யுன்றுணைத் தோழியு மாவன்
பொன்னை யழித்தநன் மேனிப் புகழிற் றிகழு மழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்புயங் கன்வரக் கூவாய்."

இதில் குயிலை அழைத்து இறைவன் புகழையும் அவன் குதிரைமீது வந்து புரிந்த திருவிளையாடல்களையும் எடுத்துக் கூறி அப்படியான பெருமான் என்னிடம் வரும்படி நீ கூவுவாயாக. அப்படிக் கூவினுல் உன்னை நான் விரும்புவதுமன்றி உனது தோழியாகவும் அமை

வேன் என்று பாடுகிறார். இன்னும் திருவம்மானையில் தலைவி தோழிக்குக் கூறுவதுபோல் அமைந்த பகுதியும் திருவெம்பாவையில் பெண்கள் ஒருவரையொருவர் துயி லெழுப்புவதாக அமைந்த பகுதியும் இலக்கியச் சிறப்பு மிக்கன.

திருவாசகத்தில் அமைந்த சில உவமைச் சிறப்புக் களைக் கவனிப்போம். 'ஆனைவெம்போரில் குறுந்தூ றெனப் புலனால் அலைப்புண்டு' என்பதும், 'சிறைபெரு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும் திருப்பெருந் துறை யுறை சிவனே' என்பதும், 'ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்கு' என்பதும், 'பள்ளந் தாழுறு புனலிற் கீழ்மேலாகப் பதைத்துருகு மவர் நிற்க' என்பதும் அவர் எடுத்தாண்ட உவமைகளிற் சிலவாகும். இவை ஏனைய நூல்களில் எடுத்தாளப்பட்டவையல்ல. அடிக ளுடைய உள்ளக்கருத்திலே புதிதாக அனுபவத்தோடு ஒட்டி எழுந்தவையாகும்.

இன்னும் திருவாசகம் முழுவதிலும் பல விஞ்ஞான நுட்பமுடைய கருத்துக்களைப் பரக்கக் காணலாம். திருப் பெருந்துறையில் தனக்குக் காட்சி கொடுத்த இறைவனை எமக்கு அறிமுகஞ் செய்யுமிடத்தில் 'சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே' என்று பாடுகிறார். நுண்ணணு, பரமாணு என்பவற்றைப் பற்றிய விளக்கத்தை இதிற் காணலாம். 'கல்லாய் மனிதராய்ப் பேயாய்' என்று சொல்லுமிடத்தில் கல்லை இடையில் அமைத்தது ஏன் என்று ஆராயப் புகுங்கால் அதில் உள்ள உயிர்ச்சத்தை யும் விஞ்ஞானிகள் கருத்துப்படி விளக்கியுள்ளார் என்பது புலப்படுகிறது. இவ்வகையான பல சிறப்புக்களை யும் நோக்கி, திருவாசகத்தைத் தமிழர்கள் மட்டுமல்ல, சைவர்கள் மட்டுமல்ல, வேற்று இனத்தவரும் வேற்று மொழியினரும் போற்றியுள்ளனர். போப்ஐயர் அவர்கள் தனது பிறந்ததின விழா ஞாபகமாகத் திரு வாசக மொழிபெயர்ப்பை ஆக்கி வெளியிட்டார் என்பதை அறிகிறோம். கத்தோலிக்க அன்பர் ஒருவர்



திருவாசகத்தில் அடைக்கலப் பத்தைப் பாராயணம் பண்ணுவதிலே தனது இறுதிக் காலத்தைச் செலவு செய்தார் என்பது அறியக்கிடக்கிறது. அது தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை எத்தனையோ உள்ளங்களை உருக்கிச் சிவநெறியிற் சேர்த்திருக்கிறது என்பதற்குச் சான்றுகள் பல உண்டு.

திருவாசகம் என்றால் தூய சொல் என்பது பொரு ளாகும். இது தோன்றிய இடம் ஒரு தூய உள்ளமாகத் தான் இருக்க வேண்டும். அதுவே மணிவாசகரின் உள்ளக் கமலம். அக் கமலத்திலிருந்து ஊறிய தேன் சொட்டுக்களே திருவாசகப் பாக்கள். இதனாற்றான் அது தேனாகச் சுவைக்கிறது. 'ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது' என்று இராமலிங்க சுவாமிகள் குறிப்பிடுகிறார். இதனைத் தேனாகக் காண் பதற்கும் சுவைப்பதற்கும் வாய்ப்பாகத் திருவாசகம் முழுவதிலுமே தேன் என்ற சொல் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் எடுத்தாளப் படுகிறது. இறைவனைத் தேனாகக் கண்டார் மணிவாசகர்; தேனாகச் சுவைத்தார். அந்தத் தேன் அவருடைய உயிருக்குத் தித்தித்தது. அந்தத் தித்திப்பு நிலையில் திருவாசகத்தைப் பாடினார். அதுவே தேனாகி விட்டது. அது ஏனைய உயிர்களுக்குத் தித்திக்கும் நிலையை அருளுகிறது. 'தேசனே தேனார் அமுதே சிவபுரனே' என்று சிவபுராணத்திலேயே இறைவனைத் தேனாகக் காட்டினார். இன்னும் அப்பகுதி யில் 'சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று' எனப் பாடுகிறார். காட்சி அனுபவத்தா லேற்பட்ட தேனூற்று வாசகத் தேனை உலகுக்கு அருளியதில் வியப் பில்லையே. மற்றோரிடத்தில் 'தேனை ஆநெய்யை கரும் பினின் தேறலை சிவனே' என்று போற்றுகிறார். பல சுவைகளை ஒருசேரக் காட்டியபோதிலும் தேனைத்தான் முதலில் எடுத்தாளுகிறார். இப்படியாக இன்னும் பல இடங்களில் இவ்வொழுங்கைக் காணலாம். 'தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை' என்பதும், 'தேனே அமுதே கரும்பின் தெளிவே' என்பதும், 'தேனாய் இன்னமுதமு

மாய்த் தித்திக்கும் சிவபெருமான்' என்பதும் ஆங்காங்கு அமைந்தவையாகும்.

அடிகள் தில்லைக் கூத்தில் உள்ளங்கலந்த தன்மையைத் திருவாசகம் வெளிப்படுத்துகிறது. திருவாசகத்தின் உயிரோட்டம் முழுவதும் தில்லைக்கூத்தினின்றெழும் ஞானத் திருவடியிற் செறிந்து காணப்படுகிறது. அவரடைந்த பரவசநிலையை,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே யீசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர்கைம் மாறே."

தனது அடிமைத் திறத்திற்குப் பங்கமேற்படாத முறையில் 'அவனே தந்தான்' என்றும் 'அவனே கொண்டான்' என்றும் கூறி எல்லாம் அவன் செயலே யென்பதை நிரூபிக்கிறார். அதுவுமன்றித் தான் பெற்ற ஆனந்தப் பெருக்கையும், இறைவன் தன்னிடமிருந்து எதனையும் பெறப்போவதில்லை யென்பதையும் காட்டி இறுதியில் அச்சோ கூறி முடிக்கிறார்.

'அறிவாற் சிவனாகிய மணிவாசகர்' அருளிய திருவாசகத்தைப் பாராயண நூலாகவும் வழிபாட்டு நூலாகவுங் கொண்டு போற்றுவோமாக.

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே."

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

உ

# சேக்கிழார் காட்டிய பெண்மைச் சிறப்புக்கள்

"எண்ணி லாகம மியம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து."

பெண்மைக்குப் பெருமை கொடுத்த நாடு பாரத நாடு. அதேபோல் பெண்மைக்குப் பெரும் பங்கு கொடுத்த சமயம் சைவசமயம். தெய்வநிலை, தொண்டு நிலை என்பவற்றில் இப்பங்கு இருந்துகொண்டே வந்திருக்கிறது. நம் நாட்டுச் சமயம் ஒழுக்கத்தினின்றும் வேறுபடாததுமன்றி இணைபிரியாததுமாகும். அன்றாட வாழ்க்கையிலும் நிகழ்ச்சிகளிலும் சமய உணர்வு உயிர் நாடியாகவே யுள்ளது. இதனைச் சிறப்பாகப் பெரிய புராணத்தில் எடுத்துக்காட்டுகிறார் சேக்கிழார். அரன் பூசை, அடியார் பூசை, விருந்தெதிர்தல், திருத்தொண்டு புரிதல், சிவசின்னம் பேணல், தற்காத்தல், தற்கொண்டாற் பேணல், கற்புநெறி வழாஅமை என்பவற்றை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். குடும்ப வாழ்வில் இருந்துகொண்டே சைவப் பெருமங்கையர் இத்தனை

பணிகளையும் செய்தனர். இல்லறத்தை முற்பட நின்று நடத்துவோர் இல்லக்கிழத்தியராக இருப்பதால் சமய உணர்வு நல்கும் பொறுப்பும் அவர்களுக்கே யுரியது. இப்படியாக வாழ்ந்த பல பெண்களுடைய வாழ்க்கைச் சிறப்புக்களை நினைப்பூட்டிக் கொள்வது வெறும் மகிழ்ச்சிக் காகவன்று; அந்த நினைவினூற் திருத்தொண்டில் நமக்கு ஊக்கமும் ஆண்டன் நினைப்பும் ஏற்படுத்துவதற்காகவே யாகும்.

பெரியபுராணம் என்பது பெரியவர்களின் புராணம். பெரியவர்கள் யார்? 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்றார் வள்ளுவர். 'பேசவொண்ணுப் பெருமையர்' என்று கூறுகிறார் சேக்கிழார். அத்தகைய சிவனடியார்களின் வாழ்க்கைக்குப் பற்றுக்கோடாக அமைந்தவர்கள் பெண்மணிகள் என்பதை நாம் மறக்க முடியாது. இவர்கள் வீட்டில் இருந்தபடியே பெருந் தொண்டு புரிந்துள்ளனர். அடக்கமாக அவர்கள் வாழ்ந்து பெருந் தொண்டு புரிந்து கணவன்மாரையும் அவ்வவ் வழிக்கண் செலுத்தி நின்ற தன்மையை நோக்கி "மனையறத்தின் வேரனையார்" என்றார் இவர். சங்கம் மருவிய காலத்திலும் பல்லவர் காலத்திலும் வாழ்ந்த பல பெண்மக்களின் சிறப்பைப் பெரிய புராணத்திற் காணலாம். இவர்களைப் பெரிய புராணத்திற் போற்றியபோது 'திருவினும் பெரியாள்' என்றும், 'விதிமணக்குல மடந்தை' யென்றும், 'தூண்டுதவ விளக்கு' என்றும், 'நற்பெருந்தெய்வம்' என்றும், 'மங்கையர்க்குத் தனியரசி' என்றும் பாடுகிறார் சேக்கிழார்.

முதலில், வீட்டிலே கணவன்மாருக்குப் பின்னணியாக நின்று பெருந் தொண்டும், தியாகமும் புரிந்த பல பெண்மணிகளைக் கவனிப்போம். 'திருநீலகண்டம்' என்ற சொல்லையே தனது மந்திர வாக்காகக் கொண்டு ஒழுகி அடியார்களுக்குத் திருவோடு செய்தளித்து வாழ்ந்தவர் திருநீலகண்டர். இவருடைய புறவொழுக்கங் காரணமாகக் கருத்துவேற்றுமை மனைவியாருக்கிருந்தது.



சிவனடியார் ஒருவருக்கு இத்தகைய மாசு ஏற்படக்கூடாதென்பது அவருடைய மனைவியாரின் எண்ணம். ஒரு நாள் கணவனூர் தீண்டப்போன சமயத்தில் 'எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்' என்று சத்தியம் செய்தார். கணவனூர் சிறந்த சிவதொண்டராகையால் திருநீலகண்டம் என்ற வாக்கை உன்னி அன்றுமுதல் தனது மனைவியையோ அன்றிப் பிற பெண்களையோ சாரவில்லை. இந்தச் சம்பவங்கள் அண்டை அயலாருக்குத் தெரியாவண்ணம் வாழ்க்கை நடாத்தினூர் அவர் மனைவியார்.

"கற்புறு மனைவி யாரும் கணவனூர்க் கான வெல்லாம்
பொற்புறு மெய்யு றுமல் பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்கண் இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி யின்மை அயலறி யாமை வாழ்ந்தார்."

கணவனூருடைய கடமைகளிலும், குடும்பக் கடமைகளிலும் தவறு நேராமலும் வேண்டிய வேண்டியாங்கு செய்து வேறு வேறு வாழ்ந்தமையைத்தானும் அயலார் அறியாவண்ணம் பேணிக் காத்து வாழ்ந்தவர் திருநீலகண்டர் மனைவியார்.

இயற்பகையாரின் மனைவியார் கணவனது பெருமைக்குப் பெருங்காரணமாக அமைந்தவர். கணவனது சொல்திறம்பாமல் சிவபக்தி அடியார்பக்தி என்பவற்றில் மேம்பட்டு வாழ்ந்தமையால் பெரிய தியாகச் செயலைச் செய்ய முன்வந்தார். வந்த அடியவர்க்குத் தன்னைக் கொடுக்க இசைந்துவிட்டார் கணவனூர் என்பதனைக் கேட்டவுடனே,

"இன்றுநீர் எனக்கு அருள்செய்த திதுவேல்
என்னுயிர்க் கொரு நாத! நீ ருளைத்த
தொன்றை யான்செய்யு மத்தனை யல்லால்
உரிமை வேறுளதோ எனக்கு"

என்று கூறிய மாண்பை நாம் உன்னி உன்னி மகிழலாம். சிவனடியார், அம்மையாரைக் கூட்டிச் சென்றபோது வழியிலே இடைமறித்து சுற்றத்தவர்

எல்லாரும் எதிர்த்தார்கள். அஞ்சினவர்போல மறை முனிவர் காட்சியளித்தார். ஆனால் அம்மையின் திரத்தை அவ்விடத்தே காணலாம்.

"மறைமுனி அஞ்சி னன்போல் மாதினைப் பார்க்க மாதும்
இறைவனே அஞ்ச வேண்டாம் இயற்பகை வெல்லும்"

என்றார்.

கணவனுடைய நியமத்துக்கு மாசு நேரிடாதபடி தன்னையே தியாகம் செய்யச் சித்தமானார் இவ்வம்மையாரென்றால் 'திருவினும் பெரியாள்' என்று சேக்கிழார் கூறுவதில் வியப்பில்லையே. மகேஸ்வர பூசையில் தலை நின்ற இளையான்குடிமாறரின் மனைவியாரையும் நாம் போற்றற்குரியோம். வறுமையின் உச்சநிலையிலும் மன வளம் குன்றா மாண்பினர் இவர். சிவனடியார்கட்கெல்லாம் அமுது செய்வித்த திறத்தைச் சேக்கிழார் சிறப்பாகக் காட்டுகிறார்:

"கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தள வொப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய
அளித்துளார்."

ஆனால், பொருள்வளம் சுருங்கி இருந்த நேரத்தில் ஒருநாள் சிவனடியார் ஒருவர் மாரிக்காலத்து நள்ளிரவிலே கொட்டும் மழையிடையே இவர்கள் வீட்டுக்கு வந்தார். பசித்திருந்த நிலையை உணர்த்தி நின்றார். தமது திருத்தொண்டாகிய மகேஸ்வர பூசைக்கு முட்டு நேரிடாது அன்று பகல் விதைத்த நெல் முளைகளை வாரி அக்கினியில் வறுத்து அமுதாக்கிப் படைக்கிறார். இத்தகைய சிறந்த தொண்டைச் செய்தமையால் இறைவன் அவர்கட்குக் காட்சி கொடுத்து 'அன்பனே அன்பர் பூசை செய்த நீ அணங்கினோடும் எம்பெரும் உலகமெய்து' என்றருளினார். முதற்குலமான அந்தணர் குலத்திற் பிறந்தும் வேளாளர் குலத்திற் பிறந்த அப்பர்



பெருமானைத் தொண்டர் எனக் கொண்டொழுகிய மாண்பு அப்பூதியடிகள் குடும்பத்திற்குரியது. பிணமான மகனையே மறைத்துவைத்துவிட்டுக் கணவனும் மனைவியும் ஒரே உள்ளப் பாங்கோடு திருநாவுக்கரசரை அமுது செய்விக்க முன்வருகிறார்கள். அப்பூதியடிகளின் மனைவியார்,

"புகழ்ந்தகோ மயத்தி னீராற் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தஅக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற மன்னு வித்தார்."

என்பதை அழகாகக் காட்டுகிறார் சேக்கிழார்.

இனி, கணவன்மாருக்கு முன்னணியில் நின்று பெருந் தொண்டாற்றிய இரு பெண்மணிகள்பற்றிக் கவனிப்போம். இப்படியாக முன்னணியில் வரவேண்டிய நிலை சூழ்நிலை காரணமாக ஏற்பட்டது. காரைக்காலம்மையார் சாதாரண பெண்ணாகச் சமையலறையிலே காட்சி தந்து தெய்வீகப் பெண்ணாக அம்பலத்திலே பேய்க் கணங்களில் ஒன்றாக விளங்குகிறார். இளமையிலே பொரு விடையார் திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறு காதலுடையவர். மனையறத்தின் பண்பு வழாமற் கருமமாற்றியவர். நம்பன் அடியார்க்கு நல்ல திருவமுது அளித்தவர். செம் பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் தகுதி நோக்கிச் சிவனடியார்க்கு நல்கியவர். ஆனால் மாம்பழம் காரணமாக அம்மையாரின் தெய்வீகத்தைக் கணவன் உணர்ந்து பிரிந்தான். பிரிந்தவன் தான் வழிபடுமோர் தெய்வமாக உள்ளத்திலே வைத்து அம்மையைப் பூசித்தான். புதுக்குடித்தனத்தில் தான் பெற்ற குழந்தைக்குப் புனிதவதி என நாமஞ் சூட்டினான். அம்மையாரைத் திரும்பக் காணக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது, 'மானுடம் இவர்தாமல்லர் நற்பெருந் தெய்வம்' எனப் போற்றினான். ஏனையோரும் போற்றுதற்கு அம்மையார் தகுதியுடையவர் என்பதைச் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் காரைக்காலம்மையார் ஆன்மநாயக

ஞனை இறைவனையே தன் ஒப்பற்ற தலைவனுகக் கொண்டார். இறைவனைப் பாடித் திரிகின்ற பேறும் பேய் வடிவும் வேண்டிநின்ருர். ஆலயங்கள்தோறும் சென்று அற்புதப் பாக்களைப் பாடினர். 'திருவிரட்டை மணி மாலை', 'அற்புதத் திருவந்தாதி', 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்' என்னும் பாடற்தொகுதிகளை நமக்குத் தந்தார். அருள் என்பதைப் பற்றிச் சந்தானகுரவர் கட்கும், சமயகுரவர்கட்கும் முன்பு பாடிவைத்தவரிவரே. இவரை இறைவனே 'அம்மையே' என அழைத்தனர் என்ருல் அவர் பெருமையை யார்தான் விரித்துரைக்க வல்லார்.

'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்' எனச் சேக்கிழாராற் போற்றப்பட்ட அரசியாரின் பெருமைகளைக் கவனிப்போம். பாண்டியன் சமயச்சார்பு மிக்கவனுய்ச் சிவநெறியை மறந்தவனுய் வாழ்ந்தமை அரசியாருக்குப் பெருந் துன்பமளித்தது. சிவநெறி வழுவாத சோழர் குலத்தில் அவதரித்தவர் அவர்: குலப்பற்று, மதப்பற்று, நாட்டுப்பற்று மூன்றுமுடையவர். இதனுலேயே சேக்கிழார் இவருக்குத் தனிப்புராணம் செய்தருளினுர். 'தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை' என்பதால் குலப்பற்றும், 'இருந்தமிழ் நாடு உற்ற இடர் நீக்கி' என்பதனுல் நாட்டுப்பற்றும், 'பொங்கொளி வெண்திருநீறு பரப்பினுர்' என்பதால் மதப்பற்றும் புலனுகின்றன. திருஞானசம்பந்தரும், திருவாலவாய்ப் பதிகத்தில் 'சிவன் திருநீற்றினை வளர்க்கும் பந்தணை விரலால் பாண்டிமா தேவி' என்று பாடியருளினுர். மிக நெருக்கடியான நிலையிலே ஏழாவது நூற்ருண்டிலே அரசியார் செய்த பணி எமது உள்ளத்தைத் தூண்டுகிறது. ஞானசம்பந்தரும் இதனை விளக்குகிருர். 'சூழுமாகிய பரசமயத்திடைத் தொண்டு வாழும் நீர்மையீர் உமைக் காண வந்தனம்' என்று கூறுவதிலிருந்து இவர்களாற்றிய தொண்டு புலப்படும். அரசியாரின் உறுதுணையே அமைச்சரை நற்பணியாற்றத் தூண்டியது. சமணர்கள் என்ன தீங்கு செய்வார்களோவென்று குலச்சிறையார் அஞ்சி நின்ற நேரத்தில் 'ஞானசம்பந்தர் தம்பால் நன்மை



யல்லாது செய்யும் ஊனம் வந்தடையில் நாமும் உயிர் துறந்தொழிவ' தென்ருர் அரசியார். கணவருக்கே சிவநெறியின் பெருமையை நேருக்கு நேர் நின்று விளக்குகிருர். வெப்பு நோய்க்குக் காரணம் சமணர்கள் வைத்த தீயே என்பதை அச்சமின்றி அரசனுக் குரைக்கிருர். இவ்வாறு தம்மைப் பேணி, கணவனைப் பேணி, மதத்தைப் பேணி, குலத்தைப் பேணி, தமது நாட்டையே பேணுகின்ற தவச்செல்வியாக ஆசிரியர் விளக்குகின்றபடியால்தான் 'எங்கள் தெய்வம்' என்றும், 'தெய்வப் பாவை' என்றும் சேக்கிழார் போற்றினுர்.

அடுத்தபடியாக, கன்னிப்பெண்ணுகவேயிருந்து சிவ தொண்டு புரிந்து திருநாவுக்கரசரைச் சைவ உலகுக்குத் தந்து பெரும் பணியாற்றியவர் திலகவதியார். விவாகம் செய்யாத நிலையிலே மணஞ்செய விருந்த மணவாளர் போர்க்களத்தி லிறந்துவிட்டார். உடன் உயிர்துறக்கத் துணிந்த அம்மையார் தம்பியின் வேண்டுதலால் மனமாற்றமடைந்தார். 'தம்பியார் உளராகவேண்டும்' எனத்தயவு வைத்தார். தந்தையாராகிய புகழனுருடைய கால் வழியற்றுப்போகாமற் காத்தவர் திலகவதியாரே: சமணத்திலே சேர்ந்து தருமசேனர் என்ற பட்டமும் பெற்று வாழ்ந்த மருள்நீக்கியாரின் நிலை இவருக்குப் பெருங்கவலை கொடுத்தது. அக்காலத்தில் இக்கவலையைக் கூறியாறுவதற்கு எவ்வித மார்க்கமும் இருக்கவில்லை. ஆண்டவன் சந்நிதியொன்றுதான் அடியார்க்கு அபயம் கொடுக்குமிடம். திருவதிகை வீரட்டானத்துப் பெருமானைத் தினந்தோறும் அதிகாலை சென்று வணங்கித் திருப்பணிகள் புரிந்து வந்தார். ஒருநாள் இறைவனை நோக்கி 'அடியேன் பின் வந்தவனை மீண்டு வினைப் பரசமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தார். அவர் விண்ணப்பத்தை இறைவனேற்று மருள்நீக்கியாருக்குச் சூலையைக் கொடுத்துச் சைவத்துக்குத் திருப்பினுர். திலகவதியார் அவரைத் திருநீறு அணிவித்துத் திருப்பதிகம் பாடுவித்துத் திருநாவுக்கரசராக்கி வைத்தார். எனவே சைவ உலகுக்கு

இவ்வப்பரைத் தந்த பெருமை திலகவதியாரையே சார்ந்தது. இதனால்தான் 'தூண்டு தவ விளக்கு' என்று சேக்கிழார் போற்றுகிறார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் இரு மனைவியர்களான பரவையார், சங்கிலியார், சிறுத்தொண்டரின் மனைவி திருவெங்காட்டு நங்கையார், திருமருகல்தாமன் என்பவனின் மகளாகிய வணிகப்பெண் ஆகியோரெல்லாம் சிவநெறியிற் தழைத்து வாழ்ந்தவர்கள்; கற்பு மேம்பாடுடையவர்கள். இவர்களின் பெருமையைப் பெரிய புராணத்திற் சிறப்பாகக் காணலாம். பக்தியும், ஞானமும் பெண்களுக்கு இயல்பாயமைந்தவை. அதனை அவர்கள் தாமுணர்ந்து சமுதாயத்திற்கும் உணரவைக்க வேண்டும். அம்பிகையின் அருள் உருவாய் விளங்கும் மங்கையர் அறம் வளர்க்க வேண்டியவர்கள். அன்பும், அருளும், அறமுந்தான் தம்மை உயர்த்துவன. இந்நிலையில் நின்று வீட்டையும், நாட்டையும் பேணுவது மகளிர் கடனாகும்.

"வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது."

௨

# மணிவாசகத்தில் ஞானமார்க்கம்

"நானார்என் உள்ளமார் ஞானங்களார் என்னையாரறிவார்
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ."

ஞானமார்க்கமெனினும், சன்மார்க்கமெனினும் ஒக்கும். சகல கலைகளையும் புராணம், வேதம், சாத்திரங்களையும் பயின்று ஞானம் நாடி, நேயம், ஞாதுரு நழுவாமல் நின்றால் பரசிவத்தைக் காட்டும். இவ்வாறு அபரஞானம், பரஞானம் இரண்டும் கைவரப் பெற்று சன்மார்க்கமெனும் மேலாம் நன்னெறியில் நின்றவர் மணிவாசகர். மெய்யடியார்கள் யாவரும் கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கியவர்கள். அவர்கள் இறைவனோடு கொண்டுள்ள தொடர்பைப் பல பாங்குகளில் வைத்துக் காட்டுகின்றன அருள் நூல்கள். கையுழவாரப் படையுடனும் நாயகன் சேவடி தைவரு சிந்தையுடனும் செஞ்சொல்மேய செவ்வாயுடனும் இறைவனைப் பரவியவர் அப்பர் சுவாமிகள். இவர், தாசன் என்ற பாங்கிலே நின்று இறைவனை அடைந்தவர். மற்றும் ஞானசம்பந்தப்

பெருமான் சற்புத்திர மார்க்கத்திலேயும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் யோக மார்க்கத்திலேயும் சென்று பிறவாப் பெருநிலை யெய்தியவர்கள். ஆனால் மாணிக்கவாசக சுவாமிகளோ குருசிஷ்ய தொடர்பிலே நின்று 'யாரடியாரென்னில் உத்தரகோச மங்கைக்கரசின் சீரடியார் அடியா'னென்று தன்னையே விளம்பரஞ் செய்து உரிமைக் குரலெழுப்பி அழுது அழுது இறைவனைப் பரவி உய்தியடைந்தவர்.

உலகத்திலே அறிவுடைப் பொருள்களை நோக்கும் போது இறைவன் அவற்றை ஆளும் இயல்புடைமையால் ஆண்டானாகின்றான். அவையனைத்தும் அடிமைகளாகின்றன. மணிவாசகப் பெருமானுடைய ஆண்டானடிமைத் தொடர்பைக் கவனித்தால் இறைவனே குருமணியாக அதாவது ஞானாசிரியனாக எழுந்தருளி ஆட்கொண்டமை யாவருமறிவர். 'தானென்னை யாட்கொண்டதெல்லாருந் தாமறிவர்' என வருந் திருவாசக அடி இதனை உணர்த்துகிறது.

> 'நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
> இமைப்பொழுதுமென்னெஞ்சில்நீங்காதான் தாள்வாழ்க
> கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க''

எனப் பாடி, ஞானமுணர்த்தப்பட்டமையைப் புலப்பட வைக்கின்றார். குருமூர்த்தியினால் திருநீறும் அணிவிக்கப்பட்டுப் பரிச தீட்சையும் பெற்றவர் இவர். இதனைக் குறித்தே 'பேசப்பட்டேன் நின்னடியாரில் திருநீறே பூசப்பட்டேன்' எனப் பெருமிதங் கொள்கின்றார். 'அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரனாகி அருளிய பெருமையை' என்பதாலும் 'இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும் அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி எந்தரமும் ஆட்கொண்டு' என்பதாலும் குருதரிசனத்தை விளக்குகின்றார்.



> "ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
> பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
> ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
> தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ."

திருவாதவூரடிகள் புராணத்தில் இந் நிகழ்ச்சிகளைக் குறிக்குங் கதையினைக் கவனிப்போம். அரிமர்த்தன பாண்டியன் கட்டளைப்படி குதிரைகள் வாங்கும் பொருட்டு ஏவலாளர்கள் சூழத் திருப்பெருந்துறை சென்றார் முதலமைச்சராகிய திருவாதவூரடிகள். அப்பதியின் கண்ணே அமைந்த பூஞ்சோலை யொன்றிலே அடியார்கள் புடைசூழ எம்பெருமான் ஞானகுரு வடிவில் எழுந்தருளி அடிகளுடைய பந்தமறும் எல்லையைப் பார்த்திருந்தார். அதேநேரத்தில் அடிகளும் அத்திசையே வந்து அங்கெழுந்த சிவாகம ஒலியைக் கேட்டு ''இவ்வொலி யாது? அறிந்து சொல்லுங்கள்'' என்றார். அவர்களும் அங்கு சென்று கண்டு அறிந்து சிவயோகியார் ஒருவர் சிவனடியார் சூழ எழுந்தருளியுள்ளார் என்பதைக் கூறக் கேட்டவுடனே பரமானந்த மடைந்து அச்சபையை யடைந்தார். அகத்தால் வணங்கியும் புறத்தால் வணங்காதார் போல அதிகாரத் தொனியுடன் ''கையில் இருக்கும் புத்தகம் யாது'' எனக் கேட்டார். உடனே தேசிகர் ''பொய்ம்மையில்லாச் சிவஞான போதம்'' என்றார். அடிகளும் ''சிவமேது? ஞானமேது? போதமேது?'' என வினவினார். ''சிவபரம் பொருள் ஒன்றே; அதனைத் தேர்தலே ஞானம்; தேர்ந்ததை அனுபூதியில் வைத்து நிச்சயித்தலே போதம்'' என்றார் குருமூர்த்தி. இதனைக் கேட்டவுடனே தன்னையறியாத ஆனந்த பரவசமுற்றுக் குருமூர்த்தியைத் தொழுதுநின்றார்'

தீவிரதர சத்திநிபாதத்தில் நிற்போர்க்கே இந்நிலை வாய்க்கப்பெறும். அமைச்சராக வந்தவர் சிவனடியாகிவிட்டார். சிவானந்தத்தில் திளைத்த திருவாதவூரடிகள் இந்த அனுபவத்தைத் திருவாசகத்திற் காட்டுகிறார்.

“நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொரு ளடியேனை
அடித்த டித்துஅக் காரமுன் தீற்றிய
அற்புத மறியேனே.”

‘மண்ணுலகில் மெய்யடியான் போலப் பாசாங்கு செய்து பொய்ம்மையே மேற்கொண்டு நான் எனது என்ற பற்றுமொழி பிதற்றிப் பழவினை வழியிலே மிகுதியாகக் கூறித் திரிகின்ற என்னைத் திசைதிருப்பி, அடித்து நிறுத்திச் சர்க்கரை அமுதை ஊட்டுவித்த அற்புதத்தை அறியமாட்டேன்’ என்பது இதன் பொருளாகும். திருவருளையே சர்க்கரை அமுதாகக் காட்டுகிறார்: திருப்பெருந்துறையிற் கிடைக்கப்பெற்ற குருதரிசனம் இவரைச் சிவன்முத்தராக்கியது. கொண்டுவந்த பொருளையோ அங்குவந்த நோக்கத்தையோ மறந்து விட்டார். இவர் நிலையினை ‘கொன்புனை பித்தர் பாலர் பிசாசர்தங் கொள்கையாளர்’ என்று கூறுகிறது திருவாதவூரடிகள் புராணம்.

ஞானம் என்பது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நான்கையும் அடக்கியதாகும். கேட்டல் என்பது ஞானத்திற் சரியை, சிந்தித்தல் என்பது ஞானத்திற் கிரியை, தெளிதல் என்பது ஞானத்தில் யோகம், நிட்டை கூடல் என்பது ஞானத்தில் ஞானம். எனவே, ஞானநெறியில் முற்றுகத் தலைப்பட்டவரே அடிகள். இவர் வழியாக ஞானமார்க்கத்தை நாமுணர வேண்டும். உயிர்கள் பாசத் தொடர்புடையவை. பாச நீக்கம் பெறவேண்டுமாயின் குருவருள் வேண்டும். குருவின் உபதேசமே ஆன்ம நோய்க்கு மருந்து. ஆன்ம



போதத்தால் ஆண்டவனை அறிய முடியாது. மெய்யுணர்வே இதற்குத் தேவை. ஆன்மபோத அறிவு கருவி கரணங்களோடு கூடி யறியு மறிவு. பின்னையது அவனருளே கண்ணுகக் காணுமறிவு. பதிஞானமேற்பட்டால் உள்ளமென்ற ஒன்றின்றி உள்ளமே இறைவனுக நிறையும். அப்படி நிறையும்பொழுது ஊன்கெட்டு, உயிர் கெட்டு, உணர்வுகெட்டு, உள்ளமும் போய் நான்கெட்ட நிலை ஏற்படும். இதனைப் பெருமானே திருவாசகத்தில் மொழிந்திருக்கிறுர்.

சிவஞானபோதம் எட்டாவது சூத்திரத்தில் இறைவன் குருவடிவாக வந்து உணர்த்துகின்ற தன்மையும் அதனுல் உயிர் தெளிவடைகின்ற நிலையும் கூறப்பட்டுள்ளன.

“ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதற் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையில் அரன்கழல் செலுமே.”

அவன் ஓர் அரசனின் மகன். வேட்டைக்குச் சென்றபோது இளமையிலேயே வேடர் கைப்பட்டுவிட்டான். வேடர்களோ ஐவர். இவனே ஒருவன். தான் வேடனே என்ற நினைப்புடன் வளர்ந்தான். வேடன் என்ற உணர்வோடிருக்கிறவனுக்கு வேந்தனென்ற உணர்வைக் கொடுப்பதற்கு இன்னொருவன் தானே வரவேண்டும். இதற்காக அரசனொருநாள் எழுந்து கானகஞ்சென்று நீ என் மகனென்று அறிவுறுத்தினுன். அவனுந் தன்னையறிந்து அரசனும் நிலையை யடைந்தான். இந்த நிலையே ஆன்மாவுக்குக் குருவருள் கூட்டிவைக்கும் நிலையாகும். உயிர்கள் ஐம்புல வேடர்கள் வயப்பட்டுச் சுழலுகின்றன. உண்மையான துணைவன் யாரென அறியும் ஆராய்ச்சி ஞானம் அவற்றுக்கில்லை. இத்தகைய உயிர்களை ஆளுதற்கு இறைவன் அருட்குருவாக எழுந்தருளுவன்.

"மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்."

இருளை மாற்றுவது இரவி. மருளை மாற்றுபவர் குரு. ''இன்றெனக் கருளி இருள் கடிந்து'' எனப் பாடுகிறார் அடிகள். மணியென்று சொல்லுகின்ற பொழுது அறியாமையிருட்கண் ஒளிகாட்டி நிற்கும் மாணிக்கமென்பது நுண்பொருள். 'ஈறிலாதநீ எளியையாகி வந்து ஒளிசெய் மானுடமாக நோக்கியும்' என்னும் அடிகள் இதனை வலியுறுத்துகின்றன. மானுட வடிவிலே எழுந்தருளினாலும் அங்கே தெய்வ ஒளி கலந்திருந்ததென்பதை 'ஒளிசெய் மானுடம்' என்றார். அத்தோடு நிற்கவில்லை. நோக்கியும் என்று பின்னும் மொழிகிறார். இதனால் அவருக்குக் கிடைத்த நயன தீட்சை பெறப்படுகிறது. குருமணியால் அடிகளுக்குக் காட்டப்பட்ட நெறி மணி நெறி என்றால் அவர் அருளிய வாசகம் மணிநெறியினின்று மெழுந்த மணிவாசகமாகும். 'வாக்கு உன் மணி வார்த்தைக் காக்கி' என்பதும் இதனை வலியுறுத்துகிறது. மணிவார்த்தை இயம்பினவர் மணிவாசகர் என இறைவனால் அழைக்கப்பட்டார். தீவிரதர சத்திநிபாத நிலை கண்டு இறைவன் குருவாக எழுந்தருளி இப்பெரு நிலையை யருளுவன் என்பதும் அப்பெரு நிலையில் உயிர் அடைகின்ற மேன்மையும் சைவசித்தாந்தத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி யாட்கொள்ளப்பட்டபின் மாணிக்கவாசக சுவாமிகளடைந்த உயர்நிலையை இனிக் கவனிப்போம். பெருமான் ஆட்கொண்ட விதத்தைச் சிறந்த முறையில் திருச்சதகப் பாடலொன்றில் விளக்குகிறார்:



"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே."

உதவியற்றவனாய்ப் பிறவிப்பெருங்கடலுள் வீழ்ந்து துன்பமாகிய பெரிய அலைகளால் அலைக்கப்பட்டு, பற்றுக்கோடொன்றுமில்லாமல் மகளிர் மோகக் காற்றாற் தடுமாறி காமமாகிய பெரிய சுறுமீன் வாயிற் சிக்கி ஐந்தெழுத்தின் புணையைப் பிடித்துக் கிடக்கின்ற நிலையில் முத்திக்கரை காட்டப்பட்டது என்ற தன் அனுபவத்தை உலகியலி லிணைத்துப் பாடியுள்ளார். இறைவனே தன்னை யெனக்கு அறிவித்தான். பின்பு என்னையாட்கொண்டானெனப் பல இடங்களிற் குருவினது அருட்பாங்கையும் பாசத்தை நீக்கி ஞானத்தை யருளுகின்ற திறத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார். சற்குருவை அடையவேண்டும் எனத் தேடியலைந்தவர் அடிகள். அவர் உள்ளத்திலிருந்த அந்த அவாவை நிரப்புவதற்காகவே இறைவன் அடியார் புடைசூழக் குருந்தமர நீழலில் எழுந்தருளினான். அருணகிரிநாதர் 'குருவாய் வருவாய் குகனே' என்று முருகனிடங் கேட்டுக்கொண்டது போல் பக்குவமுள்ள உயிர்கள் ஒவ்வொன்றும் இறைவனை வேண்டி நிற்கும்போதுதான் அந்த நல் வாய்ப்பைப் பெறுகின்றன. நல்வாய்ப்பைப் பெற்ற உயிர்கள் தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெற வேண்டும் என்று இவ்வுலகுக்கே உபகாரிகளாக வாழ விழைகின்றனர். நமது நாயன்மார்கள் எல்லோரும் இத்தகைய அருளுயிர்கள் வயப்பட்டவர்கள். அவர்கள் பெரிய உபகாரிகள். அவ்வுபகாரப் பொருள்கள்தான் பன்னிரு திருமுறைகளாக மலர்ந்தன; மணிவாசகப்

பெருமான் எமக்கு விட்டுச் சென்ற பரிசில் எட்டாவது திருமுறையாகும். தலைமுறை தலைமுறையாக ஏழேழு பிறவிக்கும் நம்மை இறைவனிடம் இழுத்துச்செல்லும் தெய்வசக்தி வாய்ந்த ஞானப்பனுவல் திருவாசகம். திருப்பெருந்துறையிலே இருந்து அது மலரத் தொடங்கியது. பக்தர்கள் உள்ளங்களிலே என்றும் மலர்ந்து தெய்வமணங் கமழ்ந்து நம்மை அருட்சார்படையச் செய்வது அந்நூலென்பதில் மிகையொன்றுமில்லை.

''நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனுயின் றமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுரு முயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.''

ட

## பட்டினத்தார் பாடல்

"நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலைஉள தோஅக மும்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேஇறை வாகச்சி யேகம்பனே."

இறைவனோ டிசைந்த இன்பமும் இன்பத்தோ டிசைந்த வாழ்வுங் கொண்டவர் பட்டினத்தார். இவருடைய பத்தி வைராக்கிய அனுபவத்தை விளக்குவனவாகப் பல பாடல்கள் பதினோராந் திருமுறையில் அமைந்துள்ளன. எளிமையும் இனிமையும் பொருளாழமுங் கொண்டவை அவை. வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களும் அப்பாடல்களில் நிரம்ப உண்டு. பட்டினத்தார் என்ற நாமத்தில் இருவர் இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். ஒருவர் தனிப்பாடல்களையும் சில பிரபந்தங்களையும் இயற்றியவர். மற்றவர் பதினோராந் திருமுறையில் உள்ள சில நூல்களைப் பாடியவர். அதாவது 'கோயில் நான்மணிமாலை', 'திருக்கழுமல மும்மணிக்கோவை', 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை', 'திருவேகம்பமுடையார் திருவந்தாதி', 'திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது' முதலிய ஐந்து நூல்கள் பதினோராந் திருமுறையி

னுள்ள பட்டினத்தார் பாடல்களாக அமைந்துள்ளன. பட்டினத்தார் எனப்பட்ட இவ்விருவரது பாடல்களையும் நயந்து இன்புறுவதே எமது கடனாகும்.

காவிரிப்பூம்பட்டினத்தைப் பிறப்பிடமாகக்கொண்டு வாழ்ந்துவந்தவரான திருவெண்காடர் என்பவர் எல்லா வகைச் செல்வங்களுடன் வாழ்ந்து வந்தபோதிலும் அவற்றை வெறுத்து ஒதுக்கித் துறவை மேற்கொண்டார். உலகப்பற்றை மிகுவிக்கும் பாசபந்தத்தில் அழுந்தி விடாமல் இறைவனே இவருக்குத் திருக்கருணை செய்தருளினார். மருதவாணன் என்னும் நாமத்துடன் இறைவனே இவருக்கு மகனாக வாய்க்கப்பெற்று வளர்ந்து வருங்காலத்தில் வணிகத்துறையில் செல்வமெல்லாம் பொங்கி வழிந்தது. சில ஆண்டுகளின்பின் மருதவாணன் தன் தாயார் சிவகலையிடம் ஒரு பெட்டியைக் கொடுத்துத் தந்தையிடம் சேர்ப்பிக்குமாறு பணித்துவிட்டு மறைந்து விட்டார். திருவெண்காடர் பெட்டியைத் திறந்து பார்த்தபோது காதற்ற ஊசியொன்றும் நூற்றுண்டு ஒன்றும் காணப்பட்டன. உற்றுணர்ந்து நோக்கிய திருவெண்காடர் உடனேயே துறவை மேற்கொண்டார். பத்தியானது மந்த தரம், மந்தம், தீவிரம், தீவிர தரம் என்ற நான்கு நிலைகளில் அமைகிறது. வாழைத் தண்டில் தீப்பிடிப்பது போன்றது மந்த தரம். பச்சை விறகில் தீப்பிடிப்பது போன்றது மந்தம். உலர்ந்த விறகில் தீப்பிடிப்பது போன்றது தீவிரம். கரியில் தீப் பிடிப்பது போன்றது தீவிர தரம். இந்தத் தீவிரதர பக்தி நிலையை உடையவரே பட்டினத்தார். நூல் நுழையாத காதற்ற ஊசியினால் எதுவித பயனுமில்லை. அதுவும் கடைவழிக்கு வராது என்பதையறிந்தவுடன் முற்றத்துறந்தார் பட்டினத்தார். 'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் யாருந் துறக்கை அரிது அரிது' என்று பாடினார்கள் பெரியோர்கள். வீட்டிலிருந்து கௌபீனத்தோடு வெளிக் கிளம்பிய இவர் தலயாத்திரையையும் பாடற்றொண்டையும் முதற்பணியாகக் கொண்டார். முற்றத் துறந்த



நிலையிலும் பெற்ற தாயின் அந்திமக் கிரியைகளை முடித்துக்கொண்டு, திருவிடைமருதூர், திருவெண்காடு, சீர்காழி, சிதம்பரம், காஞ்சிபுரம், காளத்தி, திருவாலங்காடு முதலிய திருத்தலங்களைத் தரிசித்து முடித்து இறுதியில் திருவொற்றியூரிற் சிவலிங்கத் திருவுருவாயினார் என்பர்.

“ஆடியுத் திராட மவிர்பூம் புகார்த்திருவெண்
காடரொற்றித் தியாகர் கவின்பதியில் — நீடுமணி
விற்கோலி யன்னுட் டினைஞர்கோ லந்தரித்துச்
சிற்கோல மான தினம்.”

பிற்காலத்துப் பட்டினத்தார் பாடல்களிற் சில நேரே நமது நெஞ்சுக்கே அறிவுறுத்துவனபோல் அமைந்துள்ளன.

“ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருஉயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.”

மனித வாழ்வைப் புனிதப்படுத்துவது ஆண்டவன் நினைப்பும் அறச் செயல்களும் நடுநீங்கா நிலையுமே யாகும். இதனைத் தமக்கே உபதேசமாகக் கூறுவது போல் உலகுக்குக் கூறுகிறார்.

மனிதப்பிறவியின் மகத்துவத்தை யுணர்ந்து இறை வழிபாடுகளில் தலைநிற்கவேண்டும். அவமான செயல்களில் வாணாளை வீணாக்கினால் பிறவியே மாசுடையதாகிக் கழிந்துவிடும் என்பதை அறிவுறுத்துகிறார்.

“கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க ஈசன் இருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீர்இந்த மானிடமே.”

மெய்யடியார்கள் வழியிலே நின்று மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் இறைவனை வழிபட்டு உய்தி

யடைய வழிகாட்டி இறுதியில் மண் உண்டு போகும் நிலை வருமென்பதையும் கூறித் தெருட்டுகிறார். உயர்ந்த அன்பு நெறியிலே நின்று இறைவாழ்க்கையில் ஈடுபட்ட போதிலும் தனக்கு முன்பு வாழ்ந்த பெரியோர்களை வியந்து பேசுகிறார்.

“வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடந்து அப்பவல் லேனல்லன் நானினிச்சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே.”

சிறுத்தொண்டரையும், திருநீலகண்டரையும், கண்ணப்பரையும் எடுத்துக்காட்டி அவரன்பை மெச்சி ஆண்டவன் திருவடிக்காளாக அவாவுறுகிறார்.

இவர் பாடல்களிலே சைவசித்தாந்தக் கருத்துக்களும் மிகுந்து விளங்குவதைக் காணலாம். வினைக்கேற்றபடி அவரவர் வாழ்வை அமைத்துக்கொடுப்பவன் இறைவனே என்பதை விளக்கி இருவினைப் பாசங்களையும் எடுத்துக்காட்டிப் பாடியுள்ள பாடல் இது:

“ஊட்டுவிப் பானும் உறங்குவிப் பானும்இங் கொன்றோடொன்று
மூட்டுவிப் பானும் முயங்குவிப் பானும் முயன்றவினை
காட்டுவிப் பானும் இருவினைப் பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப் பானும் ஒருவனுண் டேதில்லை யம்பலத்தே.”

உவமைச் சிறப்பு மிக்க பாடல்கள் பலவற்றையும் இவர் பாடியுள்ளார். இறையருள் இல்லையெனில் எவ்வுயிரும் இவ்வுலகில் வாழமுடியாது என்பதை ‘நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினால் தன்னாலு மாடிச் சலித்திடுமோ’ என்னும் உவமையால் விளக்கியுள்ளார். அறவழிகளில் பொருளை ஈயாதவர்களுக்குக் காய்க்காத மரத்தையும், நீரின்றி வரண்ட குளத்தையும், கற் பசுவையும் உவமையாகக் காட்டிய திறனும் போற்றற்குரியது.



அருள் வீரமும் வைராக்கியமும் மிக்கவர் இவர் என்பதற்கும் பல பாடல்கள் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. ‘நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்’ என்று அப்பர் சுவாமிகள் பாடிய வழியிலேயும், ‘எங்கெழிலென் ஞாயிறு’ என்று மணிவாசகர் பாடிய வழியிலேயும் இவர் பாடல்கள் சில அமைந்துள்ளன:

“உடைகோ வணமுண்டு உறங்கப்
புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண்
ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம
முண்டிந்த மேதினியில்
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு
சாய்ந்தென்ன வான்பிறைக்கே.”

திருவொற்றியூர்ப் பெருமானிடம் அளவிறந்த பக்தி கொண்டவர் பட்டினத்தார். மனிதன் தனது இறுதிக் காலத்தைச் சிந்தியாமற் காலத்தை அவமே கழிக்கின்றான். இதனைப் பட்டினத்தார் நமக்குஅறிவுறுத்துவது போல் திருவொற்றியூர்ப் பெருமானிடம் வரங் கேட்கிறார். கோழையடைத்து, கண்கள் சுழன்று சொருகி உணர்விழந்து, காயம் பொய்பட்டு அழியும்போது அடிமையாகிய அடியேன் ஒரு வரம் வேண்டி நிற்கின்றேன் என்று தொடங்கிக் கேட்கிறார்:

“ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக் [யான்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே.”

சாந்துணைப் போதும் திருநீற்றினையும் திருவைந்தெழுத்தையும் போற்றுந் திறனையும் தொழுத கையோடேயே தேக ஒழிவும் ஏற்படவேண்டும் என விரும்புந் தன்மையையும் இவரிடத்திற் காண முடிகிறது.

இனி, பதினொராந் திருமுறைக்கு வருவோம். பொல்லாப்பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியாற் தொகுக்கப்பட்டவையே திருமுறைகள். இவை உள்ளத்தின் கோணலை நீக்கி எம்மைப் பேரின்ப மடைய வழிகாட்டுவன. இவற்றில் பதினொராந் திருமுறையிலே பல மெய்யடியார்களுடைய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நக்கீரர் முதலியோர் இறைவழி நின்று ஞானநூல்களை நல்கியவர்கள். 'அயரா அன்பின் அரன்கழல் செலுமே' என்பது சிவஞான போதம் பதினொராஞ் சூத்திரம். பதினொராந் திருமுறை இதற்கு இலக்கியமாக அமைந்துள்ளது. பட்டினத்தார் தாம் பாடிய 'கோயில் நான்மணிமாலை' யில் ஓர் இடத்தில் உலகியல் வாழ்வையும் அருளியல் வாழ்வையும் படம் பிடித்துக் காட்டுகிறார். செந்நெறியிற் சென்று இறைவனைச் சார்வதற்குரிய உபாயத்தைப் பக்குவமாகக் கூறியுள்ளார். இறைவன் நாமத்தைக் கொண்டு நாவைத் திருத்தவேண்டும் என்றும் மணமலர் கொய்து மாலையமைத்து எம்பெருமானுக்குச் சாத்தவேண்டுமென்றும் பாடிச் செந்நெறிக்கு வழிகாட்டுகிறார். உலகியலில் ஈடுபட்டவர்கள் இளம் பெண்களைப் பார்த்து,

"நெறிதரு குழலை அறலென் பர்கள்
நிழலெழு மதியம் நுதலென் பர்கள்"

ஆனால் இறைவனை நோக்கி,

"மறிமழு வுடைய கரனென் கிலர்
மறலியை முனியும் அரனென் கிலர்."

இது என்ன பாவம்! இவர்களெல்லாரும் நரகத்தை யடையப்போகிறார்களே! என்று இரங்குகிறார். இறைவன் திருவடித் தாமரையைச் சென்று சார்தற்குப் பூசை இன்றியமையாதது. பூசை செய்வதற்குரிய நறுமலர்கள் கிடைக்கவில்லையென்று ஏங்குதல் வேண்டாம்.



பச்சிலையோ தண்ணீரோ கிடையாதா? அன்றேல் உள்ளந்தான் போதாதா? 'திருக்கழுமல மும்மணிக் கோவை'யில் இப்பாடலைப் பார்ப்போம்.

"போதும் பெறாவிடிற் பச்சிலை யுண்டு புனல்உண்டுஎங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன் றேஇணை யாகச்செப்பும்
சூதும் பெறாமுலை பங்கர்தென் றோணி புரேசர்வண்டின்
தாதும் பெறாத அடித்தா மரைசென்று சார்வதற்கே."

திருஞானசம்பந்தப் பெருமான் பாடலொன்றை யொட்டி இவர் பாடலிலும் ஒன்று அமைந்துள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் திருச்சாய்க்காடு என்ற தலத்தின்மேற் பாடப்பட்ட ஒரு பாடலைப் பார்ப்போம்.

"மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலும்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெம் தலைவன்தாள் சார்ந்தாரே."

இக்கருத்தையே விளக்குவதுபோல் பாடினார் பட்டினத்தார். மருதப்பிரான் அடியார்களின் திருவடியைத் தொழுபவர்கள் பசி, பிணி, காமம், நரகம் என்பவற்றை அடையமாட்டார்கள் என்பது அவர் கருத்து:

"வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனன்அம்புக்கு
இளையார் தனங்கண் டிரங்கிநில் லார்இப் பிறப்பினில்வந்து
அளையார் நரகினுக் கென்கட வார்பொன் அலர்ந்தகொன்றைத்
தளையார் இடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே."

திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் அமைந்துள்ள கருத்துக்கள் காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதிக் கருத்துகளைக்கொண்டு விளங்குகின்றன. 'திருவொற்றியூர் ஒருபா ஒருபஃ'தில் பத்துப் பாடல்களுண்டு. இவற்றில் இறைவனுடைய இயல்புகளையும் திருவுருவங்களையும், அவன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் திறனையும், விடையேறுதல், மான்மறி

யேந்துதல், மூவிலைச் சூலம் ஏந்துதல் என்பவற்றின் தத்துவங்களையும் மிக விளக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார். எட்டாவது பாடலிலே அருள் யாத்திரை செய்யும் உயிரின் இயல்பை உருவகப்படுத்திக் காட்டியுள்ளார். 'கோயில் நான்மணிமாலை'யிலும் உடம்பைக் கப்பலாக உருவகஞ் செய்து அந்தக் கலம் கவிழா முன்னம் இறைவன் திருவடிக்கரையை அடையவேண்டும் என்று வேண்டுகிறார். இப்பாடலில் 'திருவடி நெடுங் கரை சேர்த்துமா செய்யே' என்று முடிக்கிறார். எமது வேண்டுதலும் இதுவேதான்.

"கல்லாப் பிழையுங் கருதாப் பிழையும்
கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின்
ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையுந்
தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி
ஏகம்பனே."

௨

# காரைக்காலம்மையார் சிவானுபவம்

"நம்பன் திருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டு
மும்பர் மிசைத்தலை யால்நடந் தேற உமைநகலுஞ்
செம்பொன் னுருவன்'என் னம்மை' எனப்பெற் றவள்
செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலின் மேய குலதனமே."

நாயன்மார்களுக்கு முன்பு பக்தி இலக்கியத்தைச் சைவ உலகுக்கு வழங்கிய பெருமை காரைக்காலம்மையாருக்கு உண்டு. 'அருளே உலகெலாம் ஆள்விப்பது' என்று திருவருளை முதன்முதலாக வியந்து போற்றியவரும் இவரே; திருத்தொண்டத்தொகையிலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'பேயார்க்கும் அடியேன்' என்று இவரைக் குறிப்பிடுகிறார். அம்மையாரும் தமது பாடல்களிலே 'காரைக்காற் பேய்' என்றே தம்மைக் குறிப்பிடுகிறார்.

அம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார் என்பது. மானமிகு தருமத்தின் வழிநின்ற வணிகக் குடும்பத்தில் தனதத்தனுக்கு மகளாக அவதரித்தவர். பொருட்

செல்வமும் அருட்செல்வமும் வாய்க்கப்பெற்ற குடும்பம் அது. எனவே குழந்தைப் பருவத்திலேயே சிவ நினைவு மிக்கவராய்க் குதலைப் பேச்சிலும் சிற்றில் விளையாட்டிலும் அவற்றையே மேற்கொண்டார். 'வளரும் பிள்ளையை மண் விளையாட்டிலே தெரியும்' என்பார்கள். புனிதவதி எப்படி வளர்ந்தார் பாருங்கள்.

"வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை யணையவரு வனபயின்று
தொண்டர்வரின் தொழுதுதா தியர்போற்றத் துணைமுலைகள்
கொண்டநுசுப் பொதுங்குபதக் கொள்கையினிற் குறுகினார்."

வண்டலாட்டயரும் விளையாட்டுக்களி லெல்லாம் இறைவனுடைய திருவார்த்தைகளே பயிலப்பட்டன. சிவனடியார்கள் யாரேனும் தம் மனைக்கு வரின் அவர்களைத் தொழுது போற்றி உபசாரங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு வளர்ந்து திருமணப் பருவமடைந்தார். நிதிபதி என்னும் வணிகப் பெருமகனின் மகன் பரமதத்தன் என்பவன் மணவாளனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். வணிகச் சுற்றம் போற்ற விவாகம் நடந்தேறியது. பெற்றோரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட புது மனையில் இல்லறம் நடாத்தினார்கள்.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்றபடி இல்லறம் நல்லறமாக நடைபெற்றது.

எம்பெருமான் அம்மையாரின் பக்தி நிலையை உலகுக்குக் காட்டுவான் பொருட்டுத் திருத்தொண்டர் வடிவத்திலே ஒருநாள் அவர் மனைக்கு எழுந்தருளினார். முன்னமே கணவரால் அனுப்பப்பட்ட இரு மாங்கனிகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. கறியமுது கைகூடவில்லை. திருவமுது கைகூடிவிட்டது. நாதன்தன் அடியாரை உடனேயே பசி தீர்க்கவேண்டும் என்று அவர் விரும்பி மாங்கனிகளில் ஒன்றைப் படைத்து அமுதுடன் கூட்டி அவர் பசியாற்றினார். சிவனடியாரும் அம்மையாருடைய செயலைப் போற்றிப் போயினார்.



பரமதத்தன் இல்லத்துக்கு வந்ததும் கற்புடைய மடவார்தங் கடப்பாட்டில் உணவூட்டியபின் மாம்பழத்தையும் படைத்தருளினார். உண்டவனுக்கு மறுபழத்தையும் உண்ணவேண்டு மென்ற விருப்பு ஏற்பட்டமையால் அதனையுங் கொண்டுவரும்படி மனைவியாரைப் பணித்தான். உடனே அம்மையாரும் கொண்டுவருபவர்போல் அவ்விடம் விட்டகன்றார். இவ்வாறு அவர் சென்றதன் காரணத்தை ஆராய்தல் வேண்டும். இல்லாளன் 'வைக்க' என்றனுப்பிய கனிகளைத் தன்னெண்ணங் கொண்டு எடுத்துக் கொடுத்தமை தவறாகுமோ என்ற எண்ணம் ஒருபுறமும் அடியவர்க்குக் கொடுத்தமையால் எதுவித ஏதமும் ஏற்படுவதற் கில்லையென்ற துணிபும் அவருள்ளத்தில் இருந்திருக்கக்கூடும். எனவே சிவனெறி நிற்கும் திறமுடையராகிய அவர் கணவனார் கட்டளையையேற்று எடுக்கப்போகிறவர்போல் போயினார்.

"அம்மருங்கு நின்றயர்வார் அருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே அவரருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று."

முன்பு மதுரக்கனியை உண்டான் பரமதத்தன். ஆனால், இனி அவனுக்கு அதிமதுரக்கனி கிடைக்கப் போகிறது. அது நாவுக்கு மாத்திரம் சுவைப்பது அன்று. இதன்மூலம் அவனுயிரும் உள்ளமும் தூண்டப்பட்டு அம்மையாரைத் தெய்வமாகக் காணப்போகிறான். அதற்குக் காரணம் இந்த அதிமதுரக் கனிதான் என்பதில் மிகையொன்றுமில்லை.

"இது நான் முற்றரு மாங்கனியன்று மூவுலகிற்பெறற் கரிதால் பெற்றது வேறெங்கு?" என்று கேட்கிறான். கற்பெனுந் திண்மையுடைய அம்மையார் திருவருள் வசத்தால் பெற்றேன் என்று உள்ளதை உள்ளபடி சொல்வதா? அன்றேல் மறைப்பதா எனத் திகைத்து முடிவில் 'செய்தபடி சொல்லுவதே கடன்' என்ற முடிவுக்கு வருகிறார். முதலில் அவர் திகைத்தமைக்குக்

காரணம் ஒருவர் தமக்குக் கிடைத்த சிவனருட் செயலை வெளியிற் சொல்லத் தகாது என்பதாலேயே. ஆனால் கற்பு நெறியால் கணவனுரை காவாமையும் மெய்வழியன்று. எனவேதான் தான் பெற்ற திருவருட் செயலைக் கணவனுக்குக் கூறினார்;

“ அவ்வுரைகேட் டலும்மடவார்
அருளுடையார் அளித்தருளும்
செவ்வியபே ரருள்விளம்புந்
திறமன்றுஎன் றுரைசெய்யார்
கைவருகற் புடைநெறியால்
கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல்
விடமாட்டார் விதிர்ப்புறுவார்.”

இப்பாடலில் அவரடைந்த நிலையினை எடுத்துக் காட்டுகிறார் சேக்கிழார். பரமதத்தன் இதனைக் கேட்டுத் தெளியாத நிலையில் இன்னொரு மாங்கனியையும் இவ்வாறு பெற்றுத்தரும்படி கேட்கிறான். அவ்வாறே பெற்றுக்கொடுத்தபோது அதிசயித்தான் பரமதத்தன். கிடைத்த கனி மறைந்ததும் அச்சங்கொண்டு திகைத்து அம்மையாரை அணங்கென உன்னி அகன்றிட நினைத்தான். வாணிபங் காரணமாக அயலூர் போவதாகக் கூறிவிட்டுப் போய்விட்டான்.

அம்மையார் இதனை அயலறியா முறையில் மறைத்து வாழ்ந்துவந்தார். பெற்றாரும் உற்றாரும் உசாவினர். அதிக காலங் கடந்து சென்றமையால் அம்மையையே அவனிடத்துக் கொண்டு சென்றனர். கண்ட பரமதத்தன் தனது புதிய மனையாளுடனும் மகவு புனிதவதியுடனும் அம்மையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். இந்த இடந்தான் அம்மையின் தெய்வீகச் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. அவருடைய சிவானுபவம், அவர் பிறந்தது தொட்டு இதுவரை வளர்ந்துகொண்டே வந்தது. ஆனால் இந்த இடத்தில் உலகமே



அதனை உணரப்போகிற நிலை ஏற்படுகிறது. மனைவியின் பாதங்களில் விழுந்து வணங்கிய பரமதத்தனை நின்றவர்கள் நோக்கிக் காரணங் கேட்டனர்:

“மற்றவர் தம்மை நோக்கி மானுடம் இவர்தா மல்லர்
நற்பெருந் தெய்வ மாதல் நானறிந் தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டே னாத லாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்
என்றான்.”

கனிகண்ட அளவில் வணிகன், அம்மையார் பாலுள்ள தொடர்பை நீக்கிவிட்டானெனினும் அம்மையார் அதனை உணர்ந்துகொள்ளாது வாழ்ந்துவந்தார். இப்பொழுது அந்நிலை மாறி ஆண்டவனுக்குத் தன்னை முற்றாக ஒப்புக்கொடுக்கிறார். உலகியல் வாழ்க்கையிலிருந்து முற்றாக நீங்கி அருளியல் வாழ்க்கைக்குட் செல்கிறார். அதுகாறும் இருநெறிக்கண்ணும் தவறாது வாழ்ந்தவர் இனி முற்றாக ஒரு நெறியையே வேண்டிநிற்கிறார்.

“ ஈங்கிவன் குறித்த கொள்கை இதுஇனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் றாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு மென்று பரமனைப் பரவி னின்றார்.”

இதுகாறும் கணவன் என்று மதித்தவர் இப்பொழுது சாதாரண ஒருவனாகவே மதித்து ‘ இவன் ’ என்கிறார். அழகுக் கோலத்தோடு கூடிய உடலின் சுமையை நீக்க வேண்டுமென்றே எம்பெருமானிடம் கோருகிறார். இவ்வுலக நிலை மாயை உருவானது. அவ்வுலக நிலை சிவமே பற்றியது. அதற்குச் சிவன்தாள் போற்றும் சிவகணங்களில் ஒன்றாகிய பேய்வடிவே போதுமானது என்பது அவர் கருத்து. உலகம் அஞ்சி யோடவேண்டுமானாற் பேய் வடிவே கொள்ளல் தக்கது: அதுவுமன்றிக் காற்றைப்போற் கடிதிற் செல்லக்கூடிய தன்மையும் அதற்கேயுண்டு. எனவே அவ்வடிவையே வேண்டினார். வேண்டிய

வேண்டியாங்கு பெற்றார். இவ்வடிவை 'வானமும் நிலனும் எல்லாம் வணங்கும் பேய் வடிவம்' என்று போற்றுகிறார் சேக்கிழார். 'பெருமை சேர் வடிவு' என்று எம்பெருமான் உமையம்மையாருக்கு எடுத்துரைத்தார். அம்மையார் பேய்வடிவு பெற்ற நிலையில் சிவனறிவொன்றை மாத்திரங் கொண்டு விளங்கினார். அவ்வுருவுடன் வடதிசைத் தேசமெல்லாம் மனத்தினுங் கடிது சென்றார். அற்புதத் திருவந்தாதியை அருளினார். உற்பவித்தெழுந்த ஞானத் தொருமையில் இது வெளிப்பட்டது. அதாவது காண்பவன், காட்சி, காட்சிப் பொருள் என்ற மூன்றும் ஒன்றாய தன்மையில் எழுந்த ஞான உணர்வினால் அடிமைத்திறத்தைப் போற்றிப் பாடினார்.

"வானந்தா னென்பாரு மென்க;மற் றும்பர்கோன்
தானத்தா னென்பாருந் தாமென்க — ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தானென்பன் யான்."

இங்கே பெருமிதத்தோடு பேசுகிறார் அம்மையார். ஆண்டவன் தன்னகத்திலே வீற்றிருக்கிறான் என்கிறார். நாவுக்கரசு சுவாமிகளும் 'என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்' என்று பாடியருளினார். மற்றொரு பாட்டில் 'ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன் ஒன்றே என்னுள்ளத்தி னுள்ளடைந்தேன்' எனப் பாடினார். இவர் பாடிய 'திருவிரட்டை மணிமாலை'யில் இறைவனது திருவருட் சிறப்புக்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். 'அந்தாதியை நயந்து பாடினார், மாலையை எடுத்துப் பாடினார்' என்று போற்றுகிறார் சேக்கிழார். அம்மையார் பேய்வடிவிற் செல்லும் நிலையைக் கண்டவர்கள் அஞ்சி ஓடினார்கள். ஆனால் அம்மையாரோ,

"அண்டர்நா யகனார் என்னை அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கு யான் எவ்வுரு வாயென்."

எனக் கூறினார்.

வடதிசை சென்று திருக்கயிலையை அடைந்தவுடன் அன்பினால் உந்தப்பட்டுக் கடிதிற் சென்றார்;



"தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மேல் ஏறும் போது மகிழ்ச்சியால் அன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல் ஒருபா கத்துச்
சிலைநுதல் இமய வல்லி திருக்கண்ணோக் குற்ற தன்றே."

இந்த அற்புதத்தை உமையம்மையார் முதலில் நோக்கிப் பின் எம்பெருமானைப் பார்த்து 'தலையினால் நடந்திங்கேறும் எற்பின் யாக்கை அன்பென்னே!' எனக் கேட்டார். எம்பெருமான் அருளுகிறார்;

"வருமிவள் நம்மைப் பேணும்
அம்மைகாண் உமையே மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப்
பெற்றன ளென்று பின்னை
அருகுவந் தணைய நோக்கி
'அம்மையே' என்னுஞ் செம்மை
ஒருமொழி உலக மெல்லாம்
உய்யவே அருளிச் செய்தார்."

அம்மையில்லாத இறைவன் இவரை 'அம்மை' யென்றான். தன்னையே பேணித் துதித்துப் பாராட்டி அன்பு செலுத்தியபடியால் அங்கே தாயன்பையே காண்கிறார் பெருமான். இதற்கிடையில் அருகுவந்தணைந்த காரைக்காற் பேயாரை நோக்கி 'அம்மையே' என அழைத்தான். இவ் வழைப்பைச் செம்மொழி என்றார் சேக்கிழார். இம்மொழி வழிபாட்டினாலேயே உலகம் உய்யும் எனக் காட்டப்பட்டுள்ளது. 'அம்மையே' என்றழைத்த ஓசையைக் கேட்டு 'அப்பா!' என்றார். 'நம்பால் இங்கு வேண்டுவது என்?' என்றார் எம்பெருமான். இறவாத இன்ப அன்பைக் கேட்டார். பிறவாமையைக் கேட்டார். பிறந்தால் மறவாதிருக்க வரங்கேட்டார். ஆடுகின்ற திருவடிக்கீழ் இருந்து பாடுகின்ற வரமுங் கேட்டார். எல்லாம் பெற்றார். இறுதியில் ஆண்டவன் திருவாணைப்படி திருவாலங்காட்டை யடைந்தார். அங்கு தலையால் நடந்து சென்றார். 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்'

இங்கே யருளப்பட்டது. 'பதிகம்' என்ற அமைப்பில் வரும் பாடல்களுக்குள் காலத்தால் முந்தியது இது வாகையால் 'மூத்த திருப்பதிகம்' எனப்பட்டது: இவை பண்முறையினால் இரண்டு திருப்பதிகங்களாகக் காணப்படுகின்றன.

'கொங்கை திரங்கி நரம்பெழுந்து' எனத் தொடங்கி 'ஆடும் எங்கள் அப்பனிடந் திருவாலங் காடே' என்று முடிக்கின்றார் முதற்பாடலை. இப் பகுதியில் இறைவனுடைய திருக்கூத்தையே வியந்து போற்றுகின்றார்: பேய்க்கணங்களின் மத்தியிலே ஐயன் ஆடுகின்றான். அதனை அம்மை காண்கின்றார். தாங்கண்ட காட்சியை உலகுக்கு வழங்குகின்றார். இவ்வாறு பாடிக்கொண்டு தலையாலே நடந்து சென்ற இடமே திருவாலங்காடு. இதனை மிதிக்க அஞ்சி திருஞானசம்பந்தர் விலகிச் சென்றார் என்பதை யறிகிறோம். எனவே பேசற்கரிய திருவருட் பெற்றி வாய்ந்தவர் காரைக்காலம்மையார். அவர் அருளிய ஞானப்பாடல்களே அவரடைந்திருந்த சிவானுபவத்தை வெள்ளிடைமலைபோல் விளக்கி நிற்கின்றன. அவராற் பாடப்பெற்ற மொத்தத் திருப்பாடல்கள் நூற்றி நாற்பத்து மூன்றாகும், இவற்றை அரும்பெரும் மந்திரமாக ஓதி நலம்பெறுவோமாக.

"மடுத்தபுனல் வேணியினார்
'அம்மை' என மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக்
குலவியதாண் டவத்தில்அவர்
எடுத்தருளும் சேவடிக்கீழ்
என்றும்இருக் ,கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவல்
ஆரளவா யினதம்மா."

உ

# திருக்கோவையார்

"ஆரணங் காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே."

எட்டாந் திருமுறையில் அடங்கிய இரு பெருநூல்கள் திருவாசகமும் திருக்கோவையாருமாகும். "பாவை பாடிய வாயாற் கோவையும் பாடுக" என்று தில்லைச் சிற்றம்பலவன் பணித்தமையால் மணிவாசகப் பெருமான் இக்கோவையைப் பாடியருளினார். அறிவனூற் பொருளும் உலகநூல் வழக்கும் செறிய இந்நூல் பாடப் பட்டது. குமரகுருபர சுவாமிகள் இதனைக் 'காமஞ் சான்ற ஞானப் பனுவல்' என்று பாராட்டுகின்றார். சங்க காலத்தில் காதல் என்பது மக்களுள் ஒருவனுக்கும் ஒருத்திக்கு மிடையில் ஏற்பட்ட அன்புணர்ச்சியாக மாத்திரம் விளங்கியது. ஆனால், நாயன்மார்காலத்தில் இது ஆண்டவன் மேல் வைக்கும் காதலாக மாறி விட்டது. திருக்கோவையாரில் காதலுணர்வு என்பது தெய்வீக ஒளியோடு வீசுகிறது. சிற்றின்பத்தினூடே பேரின்பத்தை உணரவைக்கின்றார் மணிவாசகர்.

“பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயாங்கே
முற்ற வரும்பரி சுந்திபற
முளையாது பந்தமென் றுந்திபற.”

என்பது திருவுந்தியார். திருக்கோவையாரில் சிற்றின்பச் சுவையும் பேரின்பப் பயனும் கலந்து விளங்குகிறது: எல்லையற்ற அகண்ட வெளியில் திருநடனம் புரியும் இறைவனே எமது நாயகன், அவனை அடைய விருக்கும் ஆன்மாக்கள் அனைத்தும் நாயகிமார்.

ஆன்மாவாகிய தலைவி தனது ஆன்மநாயகனை அடையச் செய்துகொள்ளும் பிரயத்தனங்களையே சைவ சித்தாந்தம் விரித்துரைக்கின்றது. இவற்றின் உட்பொருளை அமைத்துப் பழைய அகத்தமிழ் இலக்கண முறையைத் தழுவி எழுந்ததே திருக்கோவையார். ‘திரு’ என்பது பேரின்பத்தையும் ‘கோவை’ என்பது நானூறு துறைகளால் கோக்கப்படுவது என்ற கருத்தையும் உணர்த்துகிறது. ‘ஆர்’ என்பது சிறப்பு விகுதியாகும். ஏனைய கோவைகளிலும் பார்க்க வேறுபட்டது இந்நூல் என்பதை விளக்கவே ‘திரு’ என்ற அடையையும் ‘ஆர்’ என்ற விகுதியையும் புணர்த்திக் கூறினர். துன்பத்தைப் போக்கி இன்பத்தைப் பெறுவதற்கு வழிகாட்டுவது அன்பு. அன்பு வாழ்வைக் கூறுவதே அகத்துறைகள். ஆண்டவனைக் காண்பதற்கு அகம் வேண்டும். அவன் எழுத்தின் வடிவாய் நின்று நாதாந்தமாய் நடிப்பவன் அவனே எம் தலைவன்.

“ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித் — தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.”

என்று உரைக்கிறார் ஔவையார்.

வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையின் முடிவு வீடுபேறு ஒன்றே. அம்பலக் கூத்தனின் அடியிணைகளை அடைய



நிற்கும் ஆன்மகோடிகளை யெல்லாம் தில்லை அழைக்கிறது. தில்லைச்சிற்றம்பலவனைத் தெளிவாக விளக்குகிறது திருக்கோவையார். இதனால் இந்நூலுக்குத் ‘திருச்சிற்றம்பலக்கோவை’ எனவும் பெயர் வழங்குகிறது.

திருவாசகமும் திருக்கோவையாரும் இருபெருந் தேனாற்றுக்கள். திருவாசகம் பக்திச் சுவை சொட்டும் திருநூல். திருக்கோவையார் செந்தமிழ்ச் சுவை சொட்டும் பெருநூல். திருவாசகத்தைத் தேனாகச் சுவைத்தால் திருக்கோவையாரை அமுதமாகச் சுவைக்கலாம். இறைவனுடைய பிரிவினால் ஏற்பட்ட துன்பப் புலம்பல்களின் தொகுதியே திருவாசகம். இத் திருவாசகத்தின் இறுதிப் பகுதி அடிகளுடைய உள்ளத்தில் ஏற்பட்ட அமைதி நிலையைக் காட்டுகிறது. இந்த அமைதி நிலையிலிருந்து எழுந்ததே திருக்கோவையார். அதிலமைந்துள்ள இருபத்தைந்து பிரிவினு மடங்கிய நானூறு பாடல்களும் இடைவிடாது ஓடிச் செல்லும் நீரருவி போன்று பல கால்வாய்களின் மூலம் பாய்ந்து எம் பெருமானுடைய திருவருட் கடலிற் சேர்கிறது.

கைப்பான மருந்தைச் சர்க்கரையிற் பொதிந்து கொடுத்துச் சுகமளிப்பதுபோல சமயதத்துவ உண்மைப் பொருளைச் சிற்றின்பங் கூறும் அகப்பொருட் டுறைகளில் அடக்கி உலகுக்கு இனிய முறையில் நல்குகிறார் மணிவாசகர். தில்லையிலே காட்சிதந்து சிவமாக்கி ஆட்கொண்ட அத்தனையே திருக்கோவையாரில் தலைவனுக்குகிறார். முதலிலே வரும் ‘காட்சி’ என்ற துறை தில்லைத் தரிசனத்திலிருந்து கிடைத்த அனுபவத்தையே தருகிறது. இது திருப்பெருந்துறைக் காட்சியை அடிப்படையாகக் கொண்டெழுந்தது. முதற்பாடல் ‘திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர் தில்லை’ என்று தொடங்குகிறது. நான்கு திணையும் ஐவகை ஒழுக்கமும் இப் பாடலிலே குறிக்கப்பட்டுள்ளன.

நூலமைப்பில் இது நாடகமுறையில் அமைந்தது. இங்கே களவித் தலைவன், பாட்டுடைத் தலைவன் என இருவர் பேசப்படுகின்றனர். தில்லையம்பலவனே பாட்டுடைத் தலைவனாவான். அவன் புகழை மணிவாசகப் பெருமான் பலபடியாகப் போற்றுகிறார். 'நோக்கரிய நோக்காய் நுணுக்கரிய நுண்ணுணர்வாய் அறிவினுக் கறிவாய் அப் பாலுக் கப்பாலாய்' விளங்கும் இறைவனை ஞானக் கண்ணினாற் காணவைக்கிறார் இவர். சங்கநூற் பயிற்சியும் பொருளிலக்கண அறிவும் உடையார்க்கன்றி இத் தகைய சிறந்த கோவை நூலை இயற்ற முடியாது. அடிகள் இவற்றையெல்லாம் ஐயந்திரிபறக் கற்றுணர்ந் தவர் என்பதை இந்நூல் தெளிவாகக் காட்டுகிறது.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்குஎன் கொலாம்புகுந் தெய்தியதே."

இங்கே தலைவனுடைய தோள்மெலிவை நோக்கிய பாங்கன் வினவுகின்ற தன்மையைக் காண்கிறோம். மதுரையிலே சங்கமிருந்து ஆய்ந்த தமிழ்த்துறை நூல்களுக்குள் புகுந்துவிட்டதனாலோ இசை நுகர்வினாலோ இவ்வாறு தோள்மெலிவு ஏற்பட்டது எனக் கேட்கிறான். இதனால் அடிகளுக்கு இருந்த சங்கத்தமிழ் ஈடுபாடும் இசை விருப்பும் புலனாகிறது. பசுகரணங் கெட்டு சிவகரண நிலையில் நின்று பாடியமையால் இறைவனைத் தலைவனாகவும் தலைவியாகவும் இடத்திற்கேற்ப அமைத்துப் பாடியுள்ளார். தில்லைப் பெருமான் திருவடிகளிலே இரண்டறக் கலக்க அவாவி நிற்கும் தன் தன்மையைத் தலைவனின் முயற்சியிலே வைத்து விளக்குகிறார்.

"நேயத்த தாய்நென்னல் என்னைப் புணர்ந்துநெஞ் சகம்நெகப்போய்
ஆயத்த தாய்அமிழ் தாய்அணங் காய்அரன் அம்பலம்போல்
தேயத்த தாய்என்றன் சிந்தைய தாய்தெரி யிற்பெரிதும்
மாயத்த தாய்இதோ வந்து நின்றதென் மன்னுயிரே."



'நேற்று உள்ள நெகிழ்ச்சியோடு என்னைச் சேர்ந்து பின்பு என்மனம் உடையும்படி தனது தோழியர் கூட்டத்தைச் சென்றடைந்தது. என்னோடு கூடியிருக்கும்போது அமிர்தத்தை ஒத்து இன்பம் செய்தும் பிரிந்திருக்கும் போது தீண்டிவருத்தும் தெய்வத்தை ஒத்துத் துன்பம் செய்தும் விளங்குமிது பேரானந்தம் தருவதில் இறைவனுடைய தில்லையம்பலம் போன்ற ஒளியை உடையது. புறக்காட்சி கொடுக்காத நேரத்தில் என் சிந்தையிலே வீற்றிருந்து அகக்காட்சி தருகிறது. இத் தன்மையான இந்த உயிர் எனக்கு இப்பொழுது காட்சி கொடுக்கின்ற தன்மை பெரிதும் மாயத்தை உடையதாக இருக்கிறது.' சிற்றின்பக் கருத்துணர்வார் அவ் வழி நின்று காணும் பொருள் இதுவாகும். இனி, பேரின்பக் கருத்திலே வைத்துக் கவனிப்போம். மணிவாசகர் திருப்பெருந்துறையிலே தனக்குக் கிடைத்த காட்சியையும் பிரிவையும் அதனால் தனது சிந்தையிலே ஏற்பட்ட குழப்பத்தையும் விளக்குகிறார். குதிரை வாங்கும் பொருட்டுத் திருப்பெருந்துறை சென்ற அடிகளுக்கு ஏதோ நல்வினை வசத்தால் இறைவனுடைய காட்சி கிடைத்தது. அந்த ஆனந்த நிலையிலே அழுந்திக் கொண்டிருக்கும் போது சிறிது நேரத்திலே இறைவனுடைய பிரிவும் உணர்த்தப்பட்டது. அந்த நிலையில் நின்று அழுதார் அலறினார் மயங்கினார். எம்பெருமானாகிய தலைவனைத் தேடிப் பலபல தலங்களுக்கும் ஓடினார். இந்த நிலையைத்தான் மேற்காட்டிய பாடல் அகப் பொருட்டுறையில் வைத்துக் காட்டுகிறது. திருவாசகத்திலும் ஓர் இடத்தில் இதனைக் குறிப்பிடுகிறார்.

" கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்."

பொதுசன நூலகம்

பூமியை இடந்து சென்ற திருமால் எம்பெருமான் திருவடியைக் காணாது திரும்பிவந்து தன் செயலின்றி இரந்து நிற்ப இறைவன் தன்னொரு அடியை மாத்திரம் காட்டிநின்றான். மற்றைத் திருவடியைக் காண்பதற்குத் தில்லை முன்றிலில் மாயவன் வரங்கிடந்தான். இச்சம்பவத்தை எடுத்துக் காட்டித் தனக்குக் கிடைத்த பேற்றினை வியக்கின்றார். தலைவி தோழிக்குக் கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது. பாங்கற் கூட்டம் பெற்றபின்பு தோழியிற் கூட்டத்திற்காக இரந்து பின்னிற்கிறான் என்பதை விளக்குவதற்கு மாயவன் மேல் வைத்துக் கூறுகிறாள் தலைவி.

"புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடுஎந் தாய்என் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கள்தந் தான்ஒன் றுகாட்டமற் றாங்கது வுங்காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பலம் முன்றிலம் மாயவனே."

ஏனைய கோவை நூல்கள் போலல்லாது இது பேரின்பந் தழுவிய நூலாக விளங்குவதாலேயே திருக்கோவையார் என்னும் பெயர் ஏற்பட்டது. ஒவ்வொரு பாடலிலும் இறை நினைப்பையே எழுப்புகிறார். ஒரு இடத்தில் தலைவியின் கண்களை வியந்து பாங்கனுக்குக் கூறுகிறான் தலைவன். அழகான தெய்வீக நினைப்பு அங்கே சொட்டிக் கொண்டிருக்கிறது. கண்ணுக்கு வெண்மை, செம்மை, கருமை, அகலம், நீளம் ஆகிய ஐந்து இலட்சணங்களும் அமைந்திருக்க வேண்டும். இங்கே தலைவியின் கண்கள் ஈசனிடத்தில் தான்வைத்த அன்புபோல் அகன்றவை என்றும், அவன் களைந்தெடுத்து நீக்கிய பாசத்தைப் போல் கருமையானவை யென்றும், பெருமானுடைய திருத்தோள்களைப் போலச் செம்மை நிறமுடையன வென்றும், அவன் அணிந்திருக்கும் வெண்ணீறுபோல் வெண்மையுடையன வென்றும், அவன் புகழ்



வார்த்தையி லடங்காது நீட்சியாயிருப்பது போல் நீண்டவை என்றும் விளக்குகிறார். எத்துணை அற்புதமான வர்ணனை! தலைவியின் கண்ணிலே வைத்து எம்மைப் பேரின்பத்திலே திளைக்கவைக்கிறார் மணிவாசகர்.

"ஈசற்கு யான்வைத்த அன்பி னகன்றுஅவன் வாங்கியவென்
பாசத்திற் காரென்று அவன்தில்லையினொளிபோன்றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுந் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த் தையிற்பெரு நீளம் பெருங்கண்களே."

இறைவன் சர்வலோகங்களுக்கும் நாயகன் என்ற கருத்தைத் திருக்கோவையாரின் இறுதிப் பாடலில் வைத்து வலியுறுத்துகிறார். 'காரணி கற்பகம், கற்றவர் நற்றுணை' என்றெல்லாம் போற்றி 'ஊருணி' என்று எடுத்துக்காட்டி யாவர்க்கும் ஊதியமே என்று முடிக்கிறார். தலைவி தன் அன்பின் முதிர்ச்சியிலே தலைவனை ஊருணியாகக் காண்கிறாள். சீவன்முத்தர்களான ஆன்மாக்கள் இத்தகைய தெளிவு நிலையை யுடையவர்கள். தமக்கென்று சொந்தம் பேசாது உலகம் முழுமைக்கும் ஆண்டவனைச் சொந்தமாக்க விழைவார்கள். ஒவ்வொரு ஆன்மாக்களும் ஆண்டவன் தாளில் தலைப்படுவதே முடிந்த முடிவாகும். இந்த உண்மையைத் திருக்கோவையார் இறுதிப்பாடல் திறம்பட விளக்குகிறது. திருவாசகத்தில் 'எனைநா னென்ப தறியேன் பகலிர வாவது அறியேன்' எனத் தனது அனுபவத்தைத் தன்னை அறியாமலேயே வெளிப்படுத்தினார். ஆனால், திருக்கோவையாரில் மற்றவர்களின் அறிவுக்கே விருந்தளிக்கிறார். திருவாசகத்தின் மூலம் மக்களின் அறிவைப் பெருக்கித் திருக்கோவையாரின் மூலம் ஞானத்தினை விரிக்கிறார். 'அருவி வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்தன்று அழுங்கப் பிடித்தெடுத்து வாங்கு மவற்கன்றி அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே' என்று தலைவி தோழிக்குக் கூறுகிறாள். அன்றொருநாள் நாம் புனலிடை நீராடிக் கொண்டிருக்கும் போது தவறிச் சுழியிடை அகப்பட்டோமல்லவா? அந்தச் சமயத்தில்

எம்மைப் பிடித்து எடுத்துக் கரையேற்றியவருக்கு என்னதான் நன்றியுரைப்பேனோ தெரியவில்லை என்று தான் உடன்படும் நிலையைத் தெளியவைக்கிறான். இதிலமைந்த அறிவு விருந்தைக் கவனிப்போம். பெரிய பிறவிக் கடலிலே விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்த தன்னை அவன் கருணைக் கையாற் பற்றி எடுத்து முத்திக் கரையைக் காட்டினானே! அத்தன்மையனுக்கு என்ன கைம்மாறு தான் புரிய வல்லேம் என்று பிரலாபிக்குந் தன்மை இங்கே புலப்படுகிறது. கற்றறிந்தோர்க்கு நல்விருந்தளிப்பது திருக்கோவையார் என்றால் அதில் மிகையொன்றுமில்லை. அகப்பொருளுக்குத் தூய்மையளித்தவர் மணிவாசகர். இதனை உலகியற் கண் கொண்டு நோக்காது தெய்வீகக் கண்கொண்டு நோக்கி ஆங்கமைந்துள்ள அருட் சிறப்பினை நுகர்வோமாக.

"ஆனந்த வெள்ளத்து அழுந்துமோர்
ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத்
தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ
லோன்அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது
முற்றாதிவ் வணிநலமே."

உ

# நால்வர் காட்டிய நெறிகள்

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே."

உலகில் உள்ள ஒவ்வொருவரும் நலமாக வாழ வேண்டுமானால் ஒழுங்கும் கட்டுப்பாடும் மிகவும் இன்றியமையாது வேண்டப்படும். இவற்றைப் புறத்திலே மாத்திரம் பெற்றால் போதாது. அகத்திலேயும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதனைச் சமயம் ஒன்றினாலேயே ஏற்படுத்திக்கொள்ள முடியும். சமய குரவர்கள் நால்வரும் இந்த ஒழுங்கான வாழ்வையே மேற்கொண்டு புனிதமடைந்தார்கள். தமக்கு முன்னிருந்த நாயன்மார்களைப் போற்றியும், சிவசின்னங்களுக்கு மதிப்புக் கொடுத்தும், அன்புநெறியை உலகிற் பரப்பியும், திருத்தொண்டு புரிந்தும் வாழ்ந்து காட்டினர்.

சைவசமயத்துக்கு முதல்நூலாய் விளங்குவன வேத சிவாகமங்களாகும். சைவசமயத்து உண்மைகளை வேதம் குறிப்பாகவும் ஆகமம் சிறப்பாகவும் எடுத்துக் கூறும். சிவாகமத்தையே சைவம் என்று கூறுதலும் உண்டு.

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅம லன்தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்"

என்று சிவஞான சித்தியார் விளக்குகிறது. வேதாகமங்களில் அறம் முதலிய நான்கும் பொதுவாகக் கூறப்பட்டு வீடுபேறே சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. இதனை அடைவதற்குரிய நான்கு படிகளாக அமைவனவே சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. இந்த நால்வகைச் சாதனங்களில் ஞானமே முத்திக்கு நேர்ச் சாதனமாக அமைந்தது. ஏனைய மூன்றும் ஞானத்தை அடைவதற்குரிய சோபானங்களாகும்.

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமுதல் காய்கனிதான் ஆகும் பராபரமே."

சரியை முதலான நான்கு நிலைகளையும் சிறப்பாக நால்வர் பெருமக்களும் எமக்குக் காட்டியுள்ளனர். திருநாவுக்கரசு நாயனார் சரியை நெறியைக் காட்டியருளினாரெனினும் ஏனைய மூன்று நெறிகளிலும் அவர் நிற்கவில்லையென்று எண்ணுதல் தவறு. அதேபோன்றுதான் ஏனைய மூவரது வாழ்க்கை நெறிகளையும் நோக்க வேண்டும்: அவர்கள் ஒவ்வொருவரும் நான்கு நெறிகளிலும் நின்று ஞானத்தால் சிவனடியைச் சேர்ந்தவர்களே. ஆனால் ஒவ்வொரு படிகளை ஒவ்வொருவரும் சிறப்பாகக் காட்டியுள்ளனர் என்பதை மாத்திரம் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சரியை என்பது புறத்தொழில் மாத்திரையானே இறைவனுடைய உருவத் திருமேனியை நோக்கி வழிபடுதலாகும். சலசுத்தி செய்தல், விபூதி தாரணம், சிவமூலமந்திரம் ஓதல் ஆதியன சரியையிற் சரியை ஆகும். திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், நந்தவன முண்டாக்கல், திருமாலைகள் கட்டல், திருவேடத்தாருக்கு அடிமைத் தொழில் செய்தல் ஆதியன சரியையிற்



கிரியையாகும். எழுகோடி மந்திர வடிவங்களைத் தன் னிதயத்திலே தியானித்தல் சரியையில் யோகமாகும். இந்திரியங்களை அடக்கி ஆளுதல் சரியையில் ஞானமாகும்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே."

என்னும் பாடல் சரியை நெறியை விளக்குகிறது. நாவுக்கரசு சுவாமிகள் உழவாரப் படையருத் திருக்கரத்துடன் ஆலயங்கள் தோறும் சென்று தொண்டு புரிந்து இந்த நெறியைக் காட்டியருளினார். பூக் கைக்கொண்டு அரன் பொன்னடி போற்ற வேண்டும் என்றும் நாக்கைக்கொண்டு அரன் நாமம் நவிலவேண்டும் என்றும் தொழுது தூமலர் தூவித் துதிக்கவேண்டுமென்றும் பல இடங்களிற் பாடி வழிகாட்டுகிறார். இந்த நெறியிலே சிறப்பாக நின்று 'துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்துஉன் அடைக்கலங் கண்டாய்' என்று சரணாகதி அடைகிறார் எம்பெருமானிடம். இதனையே 'தாசமார்க்கம்' என்று சொல்வர். இதனையொட்டியே 'அப்பன் என்னைப் பாடினான்' என இறைவனருளியதாக ஒரு கதையுமுண்டு. அவருடைய திருப்பதிகங்களில் கிரியை, யோக, ஞான நெறிகளை எடுத்துக்காட்டும் பாடல்களும் உண்டு 'காயமே கோயிலாக' என்ற பாடலில் கிரியையும் 'உயிராவணமிருந்து' என்னும் பாடலில் யோகமும் 'ஞானத்தால் தொழுவார்' என்ற பாடலில் ஞானமும் சிறப்பித்துக் கூறப்படுவதை நாம் காணலாம். சரியை வழிநிற்பார் புறத்தடைகளிலிருந்து நீங்குவர்

என்பர். இதில் சிறப்பாகச் சிவனடியார் பணியும் ஏனைய பணிகளும் அமைந்துள்ளன. இந்நெறி நிற்பார்க்கு ஈசனுலகு கிடைக்கும் என்பர்.

புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் இறைவனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே கிரியை எனப்படும். இதனைச் சற்புத்திர மார்க்கம் என்றும் சொல்வர். புட்பம், திருமஞ்சனம் முதலிய உபகரணங்கள் கொண்டு பஞ்ச சுத்தி செய்து தோத்திரம், பிரதட்சணம், நமஸ்காரம் முதலியன பண்ணிச் சூரிய பூசையுடன் சிவபூசையை முடித்தல் இதில் அடங்கும். இம்மார்க்கத்தில் நிற்போர் சிவம் ஒன்றேயாகிய தியானப் பொருள் ஒன்றையே அறிந்து நிற்பர். இந்த மார்க்கத்தைச் சிறப்பாகக் காட்டியவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராவர்.

"கற்றுங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே."

இப்பாடலிலே கிரியை நெறியாகிய வேள்வி செய்தலைச் சிறப்பாகக் காட்டி இந்த நெறியில் நிற்பாரைப் பாவம் பற்று எனப் பாடினார். இந்நெறிநிற்பார் ஈசனருகில் இருக்கும் பெரும் பேற்றினை யடைவர். இவர்கள் இவ்வுலகில் இந்திரிய மயக்கத் தடையினின்றும் நீங்குவர்.

யோகம் என்பது அகத் தொழிலால் இறைவனுடைய அருவத் திருமேனியை வழிபடலாகும். பிரணவத்தை உச்சரித்து வாயுவை உள்வாங்கி மேலெழுப்பி இயமம், நியமம், இருப்பு, உயர்நிலை, மன ஒடுக்கம், தாரணை, தியானம், சமாதி என்னும் அட்டாங்க யோகங்களில் இருத்தலாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் யோக நெறியைச் சிறப்பாகக் காட்டியருளினார்.



தன்னையா ளுடைய பிரான் சரணாரவிந்தமலர்
சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்

பாடிய சுந்தரர் பண்ணும் பயில் யோகம் பரம்பரையில் விரும்பினார் என்று கூறப்பட்டுள்ளது. இதனைச் சக மார்க்கம் என்று சொல்வர். எம்பெருமானோடு தோழமைத் தொடர்பு கொண்ட அடிகள்,

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் நான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி"

என்று தனது தோழமைத் தொடர்பை விளக்குகிறார்.

"எங்கேனும் இருந்துன் னடியேன் உனைநினைந்தால்
அங்கேவந் தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கேஎன் வினையை அறுத்திட் டெனையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே."

என்பது சுந்தரர் தேவாரம். புலனொடுக்கமும் பிராணன், அபானன் என்ற வாயுக்களை அடக்கலும் தியானத்தில் மூழ்கலும் யோக நெறியின் பாற்படுவன. இந் நெறி நிற்பார் ஈசனுருவை யடைவர். இதனால் அந்தக்கரணத் தடைகள் நீங்கும். யோகம் என்பதன் பொருள் கூடுதல் அல்லது ஒன்றுதல் என்பதே. ஆன்மா இறைவனோடு ஒன்றுதலையே இது காட்டுகிறது. உலகத்திலே பழகிவிட்ட மனம் முதலியவற்றை அவற்றின் மேற் செல்லாதவாறு அடக்கி இறைவனோடு ஒன்றச் செய்தல் இலகுவன்று. அதற்குப் பயிற்சி வேண்டும். தாயுமான சுவாமிகள் 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது' என்று பாடினார். இந் நெறிக்கு இடைவிடாத சாதனையே வேண்டற்பாலது.

ஞானம் என்பது புறத்தொழில், அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத் தொழிலால் இறைவனின் அகண்டாகார தன்மையைத் தியானித்தலாகும். அருவம், உருவம், அருவுருவம், கடந்த நிலையை மனதில் தியானிப்பதும் உணர்வதுமே இவ் வழிபாட்டில் அடங்கும்.

இந்த ஞானநெறியில் நிற்போர் நைட்டிகர் என்றும் சாதகர் என்றும் இருவகைப்படுவர். நைட்டிகர் சந்ததம் நிட்டையிலே இருப்பர். சாதகர் நான், எனது என்னும் செருக்கற்று இருப்பர். ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்டல், கேட்பித்தல், ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் ஞான பூசையாகும்; நூல்களில் இருந்து பெறும் அறிவு அபரஞானம் என்றும் அவனருளே கண்ணாகக் கண்டு தெளியும் அறிவு பரஞானம் என்றும் சொல்லப்படும். இந்நிலை நிற்போர் சிவனுடனும் பெற்றியை அடைவர். மணிவாசகப் பெருமான் இந்நிலையை மிகச் சிறப்பாகத் திருவாசகத்திற் காட்டியருளினார்.

"வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்பான் என்றுன்னை அறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயி னானே."

குருமூர்த்தியாக இறைவன் எழுந்தருளி ஞானமுணர்த்திய தன்மையை இப் பாடலில் தெளிவுறுத்துகிறார். சன்மார்க்கம் என்பது மேலாம் நன்னெறியாகும். அதுவே சிவனுடனும் பெற்றியை அதாவது சாயுச்சிய பதவியை அடைவிக்கும். இறைவனே குருவாகிவந்து ஞானத்தை அருளியமையை மாணிக்கவாசகர் வரலாற்றில் மட்டும் காண்கிறோம். ஏனையோர்க்கும் சிவமாந் தன்மையடைந்த பெரியோர்களைத் திருமேனியாகக் கொண்டு இறைவன் ஞானத்தை அருளுகிறான். இத்தகைய ஞானாசாரியார்களை நாம் சிவமாகவே காண வேண்டும். ஞான நெறியினால் அறியாமை நீங்கிச் சிவத்துவம் அடையலாம்.



நமது சமயாசிரியர்கள் தமக்கு முன்னிருந்த நாயன்மார்களைக் குருவாகப் போற்றி வழிபட்டார்கள். திருஞானசம்பந்தர் திருக்காளத்திமலைக்குச் சென்றபோது கண்ணப்பநாயனாரின் திருவுருவத்தைக் கண்டு கும்பிட்ட பயனைக் காண்பார்போல் வேடர்பெருமானை வீழ்ந்து வணங்கினார். திருவாலங்காட்டையடைந்தபோது காரைக்காலம்மையார் தலையால் நடந்த பதி என்பதை யறிந்து மிதிக்க அஞ்சினார். அப்பர் சுவாமிகள் உழவாரத் தொண்டு செய்த தலமாகிய திருவதிகையை மிதிக்க அஞ்சி சுந்தரர் புறத்தே சித்தவடமடத்தில் தங்கி எம்பெருமானுடைய திருவடி தீட்சையும் பெற்றார். மணிவாசகப் பெருமான் கண்ணப்பநாயனாரின் அன்பினைப் போற்றிப் பாடினார்.

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி."

நால்வர் பெருமக்களும் சிவசின்னங்களுக்கும் திருவைந்தெழுத்துக்கும் பெருமதிப்புக் கொடுத்து எம்மையும் அவற்றை யுணரவைத்தனர். திருவாளன் திருநீற்றைத் திலகவதியார் கொடுக்கப் பெருவாழ்வு வந்ததென வாங்கியணிந்த நாவரசர் திருவெண்ணீறணியாத ஊரைக் காடெனக் கூறுகிறார். ஞானசம்பந்தப்பெருமான் திருநீற்றினைப் போற்றி 'திருநீறு செம்மை திடமே' எனப் பாடினார். பாண்டியனுக்குற்ற வெப்பு நோயைத் திருநீற்றுப் பதிகத்தால் மாற்றியருளினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்' எனப் பாடியருளினார். மாணிக்கவாசகப் பெருமான் 'திருநீறிட்ட அன்பரோடு' என்றும், 'திருநீறணிகிலாதவரைக் கண்டால் அம்மநான் அஞ்சுமாறே' என்றும் பாடியருளினார். திருவைந்தெழுத்துக் குறித்து நாயன்மார்கள் நமச்சிவாயப் பதிகங்கள் பாடியுள்ளனர். 'படைக்கலமாக நாமத்தெழுத்தைஞ்சு என் நாவிற் கொண்டேன்' என்றார்

நாவரசர். 'நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே' என்றார் சுந்தரர். 'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்' என்றார் மணிவாசகர். இவ்வாறு திருநீற்றின் மகிமையையும் திருவைந்தெழுத்தின் பெருமையையும் எமக்கு எடுத்துக் காட்டினர்.

நால்வர் பெருமக்களும் உலக நிலையாமையை எடுத்துக் காட்டி எம்மைத் தெருட்டியுள்ளனர்.

"கடலை வாழ்வுகொண் டென்செய்தீர் காணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே."

என்று நாவுக்கரசரும்,

"நீநாளும் நல்நெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்"

என்று ஞானசம்பந்தரும்,

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்"
என்று சுந்தரரும் அறிவுறுத்தியுள்ளனர். எனவே,

"இன்றுநன்று நாளைநன்று என்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே."

என்று பாடிச் சிவ வழிக்கு எம்மைச் செலுத்தத் தலைப்பட்டனர். 'நாலுபேர் சொன்னபடி நட' என்பார்கள். அவர்கள் காட்டிய வழியிலே நாம் வாழ்வோமானால் 'அல்லல் என்செயும் அருவினை என்செயும்' என்று வினவக்கூடிய பெருநிலைக் காளாகிவிடுவோம்.

"பெருகலாந் தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே."

௨

# பண்ணும் பரதமும்

"பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்நான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய்எழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே."

உலகில் மொழி தோன்றுவதற்கு முன்பே இசைதான் தோன்றியதென்பர். மக்கள் தங்கருத்துக்களை இன்னிசையால் வெளிப்படுத்தி மற்றையோருக்கு உணர்த்தினர். எல்லா உயிரினங்களையும் இன்பத்தில் ஈடுபடுத்துவது இசை. ஆண்டவனோடு ஆன்மகோடிகளை ஒன்றுபடுத்துவதும் அதுவே. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளிக் கருணையையும் பத்தியையும் ஊட்டவல்ல இசையை முத்தமிழில் நடுநாயகமாக அமைத்துள்ளார்கள். இயற்றமிழை இயக்குவதும் நாடகத் தமிழுக்கு இன்றியமையாததும் அதுவே. இசையோடு பண்ணும் நாடகத்தோடு பரதமும் இணைந்தவை.

"பாவோ டணைதல் இசைஎன்றார் பண்என்றார்
மேவார் பெருந்தான மெட்டானும் — பாவாய்
எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணிப்
படுத்தமையால் பண்என்று பார்."

என்பதால்

இசையும் பண்ணும் பாவோடு அணையும் என்றும் எடுத்தல் முதலிய எட்டும் பண்ணிப் படுத்தலால் பண்ணென்றும் விளக்கம் காட்டினார்கள். இசை இயற்கையானது; பண் செயற்கையானது. இசை எவ்வுயிர்க்கும் உண்டு. ஆனால் 'பண்' சங்கீத ஞானமுடையோர்க்கு மாத்திரம் தெரிவது. இசையிலே பண்ணெல்லாம் அடங்கும். இவையனைத்துந் தெய்வீகத்தன்மை வாய்ந்தவை. ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குபவன் இறைவன். அவனை யடைவதற்குப் பண்ணும் பரதமும் வாயிலாகும். எங்கள் நாயன்மார்கள் பண்ணோடிசைபாடி எம்பெருமானைப் போற்றினர்.

மிகப் பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திற் பண்ணைப்பற்றிய விரிவான குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. நிலத்தை ஐந்தாகப் பிரித்து அவ்வந் நிலத்துக்குரிய ஐவகைப் பண்ணும் அந்நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பண்ணும் குறிப்பிட்ட நேரங்களிலேயே பாடப்பட வேண்டும் என்ற நியமமும் இருந்ததாக அறிகிறோம். குறிஞ்சிப்பண்ணை யாமத்திலும், பாலைப்பண்ணை நண்பகலிலும், சாதாரிப் பண்ணை மாலையிலும், விளரிப்பண்ணைக் காலையிலும், மருதப் பண்ணை வைகறையிலும் பாடி வந்தனர்.

சாதாரிப்பண் முல்லைக்கும் விளரிப்பண் நெய்தலுக்கும் உரியதாகும். '*நள்ளி' என்ற வள்ளலின் அரண்மனையிலே பண்ணை மாறிப் பாடிய குற்றத்தை மற்றொரு புலவர் சுட்டிக்காட்டி அரசனது கொடையின் மிகுதிப் பாட்டிலே திளைத்தமையால் பாணர்கள் பண்ணையே மாறிப் பாடிவிட்டனர் எனக் கூறி அவ்வரசனின் வள்ளன்மையைப் போற்றுகிறார். இச்செய்தியைச் சங்க இலக்கியத்திலே காண்கிறோம்.

"நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவுஎமர் மறந்தனர் ..."



எனக் கூறப்பட்டுள்ளது. மலைபடுகடாம் என்ற நூலில் 'நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடி' என்றும் 'நல்யாழ் மருதம் பண்ணி' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறு இசையினதும் பண்ணினதும் வரலாறு மிகத் தொன்மையானது. பாணரும் கூத்தரும் இல்லாத சங்க இலக்கியங்களே இல்லையெனலாம். குழல், சிறியாழ், பேரியாழ், முழவு, தண்ணுமை முதலிய கருவிகள் பற்றிச் சங்கநூல்கள் குறிப்பிடுகின்றன. பாணருங் கூத்தரும் ஆற்றிடைக்காட்சி உறழத்தோன்றி பெற்ற பெருவளம் பெறார்க்கறிவுறீஇ நிற்றல்பற்றி விளக்குவதே ஆற்றுப்படைகளாகும். பண்ணின் இனிமை பற்றி அகநானூற்றில் ஒரு பாடலைக் கவனிப்போம். கான வேடுவன் ஒருவன் தேன்குடித்து மயங்கிய நிலையில் முன்றிலில் ஒரு மரத்தின் கிழ் துயில் கொள்கிறான்; அம்முன்றிலிலே தினையும் காய்கிறது. கொடிச்சி காவல் செய்கிறாள். யானை ஒன்று தினையைத் தின்பதற்கு வருகிறது. சத்தம் செய்து அதனைத் துரத்திவிட்டால் கணவன் நித்திரைக்குப் பங்கமேற்பட்டுவிடுமல்லவா? இதனை யுன்னிய கொடிச்சி தமது நிலத்துக்கே யுரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடுகிறாள். அதனைக் கேட்ட யானை அசையாது நிற்கின்றது; தினையைத் தின்னவுமில்லை; இடம் பெயரவும் இல்லை; அப்படியே தூங்கிவிட்டது;

"ஒலிஇயல் வார்மயிர் உளரினங் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாகுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன்"

என்பது அகநானூறு.

முத்தமிழ்க் காப்பியம் என்று கூறப்படும் சிலப்பதிகாரத்தில் இசை பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக உண்டு. இசையாசிரியன், தண்ணுமையாசிரியன், குழலாசிரியன், யாழாசிரியன் என்போர்பற்றி அடியார்க்கு நல்லார் சிறந்த உரை விளக்கந் தந்துள்ளார். கானல் வரி ஆய்ச்சியர் குரவை என்பவற்றிற் சிறந்த இசை அமைப்பைக் காணலாம்.

“ திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.”

பண்ணமைத்து இசைபாடி ஆண்டவன் புகழைப்பாடிப் பரவ வழிகாட்டிய காரைக்காலம்மையாரை அடுத்து இசைக்கும் பண்ணுக்கும் உயர்வு கொடுத்த பெருமை நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் சாரும். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரும் தமிழோடிசை பாடிய நாவுக்கரசரும் சொற்றமிழ் பாடிய சுந்தரரும் பண்ணொன்ற இசைபாடி ஆண்டவனைப் பரவினர். தனித்து, சமயம் என்று மாத்திரம் வளர்க்காமல் தமிழின் கூறுபாடுகளை அறிந்து வகுத்து அதனையும் வளர்த்தவர்கள் இவர்கள். திருநீலகண்ட யாழ்ப்பாணர், சம்பந்தருடைய பாடல்களுக்கு யாழ் வாசித்த சிறப்பை

“பாலையி ரேழு கோத்த பண்ணினிற் கருவி வீக்கி
காலமா தரித்த பண்ணிற் கைபல முறையு மாராய்ந்து
ஏலவார் குழலாள் பாகர் பாணிகள் யாழி லிட்டார்”

என்று பெரியபுராணங் கூறுகிறது.

யாழின் இலக்கணமும் யாழிசையின் தன்மையும் திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய யாழிசையிலும் அவர் மனைவியாராகிய மதங்கசூளாமணியாருடைய யாழ்த் திறத்திலேயும் கூறப்பட்டுள்ளன.

“ ஆனவிசை யாராய்வுற் றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியா ருடன்பாடி வாசிக்க
ஞானபோ னகர்மகிழ்ந்தார் நான்மறையோ ரதிசயித்தார்”



யாழுங் குழலும் இன்னிசை தருவன. நமது நாடு யாழுடன் தொடர்புபட்ட நாடு. யாழ்நூல் ஆக்கித் தந்த விபுலானந்த அடிகளை இசைத்தமிழுலகம் மறக்கவே முடியாது. நல்லியாழ் பயின்ற நயனுடைய நெஞ்சினர் வாழும் நாடு எம் நாடு. “ யாழிலெழும் ஓசையுடன் இருவர் மிடற்றொலி ஒன்றி” எனத் திருஞானசம்பந்தர் புராணங் கூறுகிறது. பழந்தமிழ்க் குலமாகிய பாணர்குலம் இசையால் வாழ்ந்தது. சிறிய யாழை வாசிப்போர் சிறுபாணர் என்றும் பெரிய யாழை வாசிப்போர் பெரும்பாணர் என்றும் அழைக்கப் பட்டனர்: மிடற்றுப்பாடல் பாடுவோர் இசைப்பாணர் எனப்படுவர். திருப்பாணாழ்வார் என்பவர் திருவரங்கக் கோயிலுக்குள் புகாமல் ஆற்றின் கரையிலிருந்து யாழ் வாசித்துப் பாடினார் என்பர். ஆனால் 7ஆம் நூற்றாண்டில் நீலகண்டப் பெரும்பாணர் சம்பந்தப் பெருமானுடன் சென்று ஆலயங்கள் தோறும் யாழ்வாசித்தார்.

சேக்கிழார் பெருமான் ஆனய நாயனார் புராணத்திலே இசையின் பெருமையை மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். குழற் கருவியின் இலக்கணமும் குழலிசையின் இலக்கணமும் அங்கு இடம்பெற்றுள்ளது. குழலோசையினால் அண்டத்திலே நிறைந்த அனைத்துயிர்களும் மகிழ்ச்சியடைந்து மனமுருகித் தம் முன்னைப் பகை மறந்து வந்து அணைகின்றன.

“ நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவம் மயில்மீது மருண்டுவிழும்
சலியாத நிலையரியும் தடங்கரியும் உடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்.”

மூவர் தேவாரங்களுக்கும் அமைக்கப்பட்ட பண்கள் பல வகையின. 103 பண்களில் நம்பியாண்டார் நம்பிக்குக் கிடைத்தவை 13 பண்களேயாகும். அவற்றுள் நட்டபாடை, கொல்லி, இந்தளம், தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, காந்தாரம், சாதாரி, செவ்வழி என்பன பலர் வாயிலும்

பயின்றுவருவன. மாணிக்கவாசக சுவாமிகளும், ஊசல், கோத்தும்பி, பூவல்லி, பாவை, அம்மானை, தெள்ளேணம் முதலிய திருவாசகப் பகுதிகளை இசையமைத்துத் தாள அறுதியோடு பாடற்குரியதாய் ஆக்கியுள்ளார்.

வைணவ அடியாராகிய நம்மாழ்வார் பண்ணிசைத்துப் பாடுவதில் வல்லவராக இருந்தார். பழைய இலக்கணத்திற்கேற்ற தாள அமைப்பை அவர் பாடலில் நிரம்பக் காணலாம். இப் பாடல்களையெல்லாம் தேவகானம் என்று பாராட்டுவார்கள். தக்கராகம், காந்தாரம், நட்டபாடை, இந்தளம் முதலிய பண்கள் திருவாய்மொழியிலும் காணப்படுகின்றன. தேவாரத்தில் காணப்படாத செருந்தி, முதிர்ந்தவிந்தளம், வியந்தம், நாட்டம் முதலியன இங்கே காணப்படுகின்றன.

தேவாரப் பண்களை முறைப்படி ஓதுகின்ற ஓதுவார்கள் சிலராவது இன்று இருப்பதற்குக் காரணமாய் அமைந்தவர்கள் சோழர்களே. தஞ்சைக் கோயிலைக் கட்டிய இராசராச சோழன் நாள்தோறும் திருப்பதிகம் பாடுவதற்கென்று நாற்பத்தியொன்பது ஓதுவார் மூர்த்திகளை நியமித்து நில தானமும் வழங்கினான். பண் ஓதுவாருக்கென்று இருந்து பாட ஒரு மண்டபத்தை இராசேந்திர சோழன் கட்டுவித்தான். குலோத்துங்க சோழன் இசையின் விருப்பினால் 'ஏழிசைவல்லபி' என்ற விருதுபெற்ற பெண்ணை மணந்தான். பதினைந்தாம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் சந்தப் பாடல்களைப் பாடிப் பக்தி இலக்கியவரலாற்றில் ஒரு பெரிய எழுச்சியை ஏற்படுத்தினார்.

அடுத்தபடியாக, பரதக் கலையைப்பற்றிக் கவனிப்போம். 'பரதம்' என்று சொல்லும்போது 'ப' பாவத்தையும் 'ர' ராகத்தையும் 'த' தாளத்தையும் உணர்த்துகிறது. மனிதன் முதன்முதல் தனது எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு உபயோகித்ததே 'சைகை'. எமது வாழ்வையே ஒரு நாட்டியம் என்று கூறி



விடலாம். நாம் பேசும்போதே அபிநயமுங் கலந்துதான் வருகிறது. நம் நாட்டில் பரதநாட்டியத்துக்குத் தெய்வீகத்தன்மை அளித்திருக்கிறோம். இந்திராதி தேவர்கள் எல்லாரும் ஒன்பது ரசனைகளுக்கும் பொருந்திய ஒரு கலையைச் சிருட்டிக்கும்படி பிரமனை வேண்டினார்களாம். உடனே இருக்கு வேதத்திலிருந்து பொருளையும் சாம வேதத்திலிருந்து பண்ணையும் யசுர் வேதத்திலிருந்து அபிநயபாவங்களையும் அதர்வண வேதத்திலிருந்து நவரசங்களையும் எடுத்து நாட்டியக் கலையாக்கிப் பிரமா பரத முனிவருக்கு உபதேசித்தார். அதனை அவர் நூறு பிள்ளைகளுக்கு உபதேசித்து பரமசிவன்முன் நடன அரங்கேற்றமும் வைக்கப்பட்டது என்பர். தில்லையம்பலத்தில் ஆடுந் தெய்வமே நமது தெய்வம். இதனாலேயே கோயில்களில் நாட்டியக்கலைக்குச் சிறந்த இடம் கொடுக்கப்பட்டது. பரதமுனிவருடைய நாட்டிய சரித்திரமும் நந்திகேசருடைய அபிநய தர்ப்பணமும் சிறந்த நாட்டிய நூல்களாகும். நாட்டியம் என்பது கதையை விளக்குவது. நிருத்தியம் என்பது குணப்பண்புகளை அபிநயிப்பது. நிருத்தம் என்பது தாள லயத்தை முதன்மையாகக்கொண்டு ஆடப்படுவது. நடனத்தில் கண், முகக்குறி, கைக்குறி என்பன முக்கியமாகும். சங்க காலத்தில் கூத்தர்கள் என்ற ஒரு வகுப்பினர் இருந்தனர். அவர்கள் கூத்தாடிப் பரிசில் பெற்றனர். நாயன்மார்கள் காலத்திலும் பரதம் என்பது கூத்து என்றே குறிக்கப்பட்டது. 'ஆடுகின்றிலை கூத்து' என்றும் 'தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி' என்றும் வரும் பாடல்களை நோக்கலாம். சுந்தரமூர்த்தி நாயனாருடைய மனைவியாராகிய பரவையார் உருத்திரகணிகையார் மரபிற்றோன்றி ஆடற்பணியைத் திருவாரூரில் ஆற்றிவந்ததாக அறிகிறோம். பாட்டுங் கூத்தும் ஒருங்கே நிகழ்வது மரபாகும். 'பாடவேண்டும் நான் போற்றி நின்னையே பாடியாடி நைந்துருகி நெக்கு நெக்காடவேண்டும் நான் போற்றி' என்றார் மணிவாசகர். திருநாவுக்கரசுநாயனார் திருப்பூம்புகலூரிலே உழவாரத்தொண்டு செய்துகொண்டிருந்த காலத்தில் எம்பெருமான் திருவிளையாடலால் ஒரு சோதனை நடை

பெற்றது: தேவலோக நடனப் பெண்கள் அவர்முன் காட்சியளித்து அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள முற்பட்டனர். அழகான நடனத்தை அற்புதமாக அவர்முன் ஆடினர்.

"கற்பகப்பூந் தளிரடிபோங் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழி பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடினர்."

ஆண்டவனை உள்ளத்திலே இருத்தி வைத்திருப்பவர்க்கு அனைத்தும் அக்காட்சியாகவே புலப்படுமல்லவா? நடனக்கலையின் நுட்பம் மேற்காட்டிய பாடலிலே சிறப்பாக அமைந்து காணப்படுகிறது.

எனவே, பண்ணும் பரதமும் எம்நாட்டுச் சைவசமய வளர்ச்சியிலே முக்கிய இடம்பெற்றுள்ளன. கலையைக் கடவுளாகக் கண்டவர்கள் நாங்கள். 'எட்டெட்டிருங் கலையும் ஆனான் கண்டாய்' என்று எம்பெருமானையே போற்றுகிறார் நாவரசர். கலைத்தெய்வத்தைக் கலைமகளாகப் போற்றுகிறோம். அவள் ஆயகலைகள் அறுபத்திநான்கினையும் ஏய உணர்விப்பாள். அவள் பதமிறைஞ்சிப் பண்ணையும் பரதத்தையும் வாயிலாகக்கொண்டு ஆண்டவன் திருவடியை அடைய முயற்சிப்போமாக.

"பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்(கு)
ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்
தாடும் நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
விட வேண்டும்நான் போற்றி விடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே."

௳

# யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள்

"என்னைஎனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடிபென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணு எங்கள் குருநாதன்
நன்மைதீமை யறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்."

நமது நாட்டிலே நமது கண்முன்னே சீவன்முத்தராக வாழ்ந்து 1964ஆம் ஆண்டு இறைபதமடைந்த யோகர் சுவாமிகளை நினைவுகூருவது பெருந் தவப்பேறாகும். யோகர் சுவாமிகளின் குருபூசைக் குழு மலேசியா நாட்டிலே இயங்குவது குறித்து எனது பாராட்டைத் தெரிவிக்கிறேன். சுவாமிகள் ஒரு நடமாடுந் தெய்வமாக நம்நாட்டிற் காட்சியளித்தவர். வாழ்வின் முற்பகுதியை அரசாங்க உத்தியோகத்திற் கழித்தபோதிலும் ஓய்வு நேரத்தைத் தியானத்திலும் மௌனத்திலும் செலவு செய்தார். இவருடைய குரு செல்லப்பா சுவாமிகள் என்பவர். நல்லூர்த் தேர் மண்டபத்தில் தம் குருவின்

மேற்பார்வையில் சுவாமிகள் நாற்பது நாள் தவமிருந்தார். இதன் பின்னர் இருப்பை மரத்தடியில் திட்டையிலிருந்தார். தம்மைத் தரிசிக்க வருவோருக்கு உபதேசம் செய்வதும் அவருடைய ஐயங்களைத் தாமாகவே உணர்ந்து தீர்த்து வைப்பதும் அவர் கடமையாக இருந்தது. அத்துடன் 'சிவதொண்டன்' என்னும் மாத இதழ்மூலம் மக்களுடைய கருத்துக்களுக்கு நல்விருந்தளித்தார். சுவாமிகள் அடிக்கடி கூறும் மந்திரங்களை நாம் சிந்தையில் இருத்தவேண்டும்: 'சும்மா இரு', 'எப்பவோ முடிந்த காரியம்', 'நாம் அறியோம்', 'முழுவதும் உண்மை', 'ஒரு பொல்லாப்புமில்லை' — இவற்றின் உண்மைகள் நினைந்து நினைந்து இன்புறுதற்குரியவை.

இவருக்கு இளம் பிராயத்தில் கிறீஸ்தவ பாடசாலையிலே கல்விகற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால், நாவலர் பெருமானைப்போன்று அந்தச் சூழலிலேதான் சமய விழிப்புணர்ச்சி பெறக்கூடிய மனப்பாங்கும் ஏற்பட்டது. பெற்றோரை இளவயதில் இழந்தவரானபடியால் வாழ்க்கையைப் பற்றிய அல்லல்களும் துன்ப அனுபவமும் சேர்ந்து இன்பவழிக்கு அவரை இழுத்துச் சென்றது. அவர் தமக்குமுன் வரும் துன்பம் மீதூரப் பெற்றவர்களை ஆதரித்து அறிவுகூறி இன்பவழியைக் காட்டிவைத்தார்: அறியாதவனுக்கு அறிவைக் கொடுத்தும் இருட்டறையில் இருந்தவனுக்கு ஒளியைக் காட்டியும் நற்பணி புரிந்தார். இவரை நோக்கிப் பலதரப்பட்ட மக்கள் படையெடுத்தனர்: பிரபுக்கள், மந்திரிகள், பட்டதாரிகள், பண்டிதர்கள், பாமரர்கள் எல்லோரும் இவரிடஞ் சென்று அருட்பார்வைக்கும் நல்வாக்குக்கும் தவம் கிடந்தனர். தவறு செய்தவர்கள்கூட அவர் முன்னிலையில் தம் தவறுகளைக் கூறி மனச்சாந்தி அடைந்தனர். வழிபடுவோர் கூட்டத்திற்கு அவர் காட்டிய வழிபாட்டு நெறி மிக இலகுவானதாகும். உங்கள் மனதில் ஆண்டவன் எப்படிக் காட்சியளிக்கிறானோ அந்த நிலையிலேயே வழிபடுங்கள் எனக் கூறினார்.



இவருடைய இளமைக்காலம் ஆத்மீகத் துறைக்குப் பல வழிகளையும் ஆக்கிக் கொடுத்தது. நீர்ப்பாசன இலாகாவில் கடமைபுரிந்த இவர் கடமையின் இடையிலே தோத்திரங்களையும் சாத்திரங்களையும் நன்றாகப் பயின்று வந்தார்: அவர் உள்ளத்தை ஈர்த்த சிறந்த நூல் பெரியபுராணம். இதற்கு மேலாக, செல்லப்பா சுவாமிகளின் ஞானத் தொடர்பு வாழ்வை முழுமையடையச் செய்துவிட்டது. செல்லப்பா சுவாமிகள் தமது சீடரை நாடோறும் பரீட்சித்து அவர் பக்குவ நிலையைக் கண்டு ஞானத்தை உணர்த்தத் தொடங்கினார். ஆண்டி வேடத்தில் நல்லூர் வீதியில் காட்சியளித்த அவர், யோகர் சுவாமிகளுக்கு ஞானம் உணர்த்தும் குருவாக அமைந்தமை திருவருட்செயலே. இந்த நிலையை நற்சிந்தனையிலே சுவாமிகள் பாடியுள்ளார்:

"நல்லூர் வெளியிலே பொதுநடம் புரிகிறான்
நங்கள் குருநாதன் எங்கும் பிரகாசன்
எல்லாரை யுந்தன் னிடத்திலே காண்பவன்
இயமநிய மங்களில் எள்ளளவு மோபிசகான்

பொல்லாப்பிங் கில்லையென்று போதனை செய்வான்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக் காண்பவன்
செல்லப்ப னென்னுந் திருப்பெய ருடையான்
சிங்கார நடையொடு சிரிப்பினை யுடையான்."

"ஆரறி வாரென அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்காரமாய்க் கிடப்பான்
பேரறி வாளனெனப் பிறரேவரு மோவறியார்
பித்தனென் றுலகோர் பேசுவா ரேசுவார்."

தனது குருவினிடமிருந்து தான் பெற்ற அனுபவத்தைத் தன்னை வந்து அடைபவர்களுக்கு வழங்க வேண்டும் என்று முன்வந்தார். அவரிடம் தரிசனத்துக்குச் சென்றவர்கள் அனலிலே காய்ச்சப்பெற்ற பொன்போலப் புத்தொளி பெற்றே வீட்டுக்குத் திரும்பு

வார்கள். இறைவனையும் இறைவனை வழிபடும் அடியவர்களையும் வழிபடவேண்டும் என்பதையே திரும்பத் திரும்பக் கூறுவார். ஆண்டவன் எம்மைவிட்டு அகலாமல் இருக்கிறான் என்றும் அதே நேரத்தில் நாம் ஆண்டவனைப் புறக்கணித்து அகலச் செல்ல உலக பாசம் எம்மை இழுக்கிறது என்றும் சொல்வார்.

"பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரிய பேறிழந் தாரே."

என்பது திருமந்திரம். எனவே, மானிடப் பிறவி மகத்துவமடையவேண்டுமானால் சிவத்தியானமும் சிவத் தொண்டும் முக்கியமாகும். மாணிக்கவாசக சுவாமிகள் குருந்தமர நீழலில் குரு உபதேசம் பெற்று ஞானநெறியை உலகுக்குக் காட்டியதுபோல் யோகர் சுவாமிகளும் தான் பெற்ற அனுபவ இன்பத்தை உலகுக்கு வழங்கினார். சிவபுராணம் பாடிப் பரவுதலும், தன்னடியவர்களைப் பாடவைப்பதும் அவருடைய நிரந்தர கடமையாக இருந்தது. நேரங் கிடைக்கும்போதெல்லாம் வேதாகம உண்மைகளை உணரக்கூடியவர்களுக்கு விளக்குவார். ஒரு முறை மகாத்மா காந்தியடிகளை இரு ஐரோப்பியர்கள் தரிசித்துவிட்டு யோகர் சுவாமிகளையுந் தரிசிக்க வந்தார்கள். அவர்களுடைய நல்வாக்குக்காகக் காத்து நின்றார்கள். "காந்தியடிகள் என்ன சொன்னார்" என்று கேட்டார் சுவாமிகள். "ஒன்றே குலம், ஒன்றே கடவுள்" என்றார் எனச் சொன்னார்கள். "ஆம், இதனை விட நான் வேறு எதனைக் கூறுவது" என்றார் யோகர் சுவாமிகள். இவர்களின் ஞான பக்குவத்தை நோக்கியே இலங்கைத் தேசாதிபதி சோல்பரிப் பிரபுவின் மகன் பிரதம சிஷ்யராகி இவர்வழி நின்று மட்டக்களப்பைச் சேர்ந்த செங்கலடியில் கடமையாற்றி வருகிறார். "வேலையே வணக்கம்" என்று அடிக்கடி அவர் கூறுவர்.



மதம், இனம், மொழி என்ற பேதம் நோக்காது தன்னிடம் யார் யார் வருகை தந்த நேரத்திலும் அவ்வவர் மனக்கருத்தை அறிந்து ஆவன கூறிவிடுவார். ஒருசமயம் ஸ்ரீ ரிக்கிரிபண்டா திசநாயக்கா என்ற பேருடைய புத்தசமயப் பிரமுகர் ஒருவர் முதல்முறை இவரைச் சந்திக்கச் சென்றார். சுவாமிகள் கையில் தும்புத்தடி கொண்டு கூட்டிக்கொண்டு நின்றார்; வந்தவரைக் கண்டவுடன் திசநாயக்கா வாருங்கள் என்று அழைத்தார். அடுத்து "நீ உன்னை நினைத்துக்கொள். ஆண்டவனின் இராச்சியம் உனக்குள்ளேயே இருக்கு. சும்மா இரு" என்றார். மனிதனின் எண்ணங்களை ஊடுருவி அறிவதில் இவர் பேராற்றல் படைத்தவர். அவருடைய உபதேசங்கள் கேட்பாரது உள்ளங்களைப் பிணித்துவிடும். எத்தனையோ சித்துக்கள் கைவரப் பெற்றவராக இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் அவர் வெளிக்காட்டவில்லை. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சுவாமிகள் பின்னிப் பிணைந்துவிட்டார். நோய் நொடிகளுக்கு எல்லாம் அவர் ஏற்ற மருந்து சொல்லிக் கொடுப்பார். வைத்தியர்களால் மாற்ற முடியாத கொடிய வியாதிகளையெல்லாம் இவர் மாற்றியுள்ளார். உடல்நோய், உளநோய், உயிர்நோய் யாவையும் மாற்றிவிடும் பெரு வைத்தியர் இவர்.

சுவாமிகளின் தெய்வத் தோற்றம் பார்த்தாரைப் பரவசப்படுத்தும். வால்நரை முடியும், அருளொழுகும் கண்களும், சிரித்தமுகச் செவ்வியும் கண்டார் நெஞ்சைக் கவரக்கூடியன. எத்தனையோ முனிவர்கள், இருடிகள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நாம் கண்கண்ட ஒரு பெரும் முனிவர்தான் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள். கல்லைப் பிசைந்து கனியாக்கி என்று பாடினார் மாணிக்கவாசக சுவாமிகள். அதே போன்று இரும்பு தரும் நெஞ்சங்களை, பதவிமோகம் பிடித்த உள்ளங்களை, பணம்படைத்த இறுமாப்புடன் வாழ்ந்தோர் இதயங்களை ஈர்த்து ஈர்த்து உருக வைத்தவர் இந்த முனிவர். மக்கள் எல்லோரும்

சிந்தையிற் கடவுளும் செயலில் தூய்மையும் கொண்டு ஒழுக வழிகாட்டினார். இன்று அவர்களின் சிஷ்யர்கள் பலர் நம்நாட்டிற் சமயம் வளர்க்கும் பெரும்பணியைப் புரிந்து வருகிறார்கள்.

சுவாமிகள் அருளிச்செய்த 'நற்சிந்தனை'ச் செய்யுள்கள் அற்புதமானவை. படிப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்துபவை.

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ இன்புற்றிட நாமெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே."

என்றார் தாயுமான சுவாமிகள். எங்கள் யோகர் சுவாமிகளும் 'நற்சிந்தனை'ப் பாடல்களின்மூலம் எம்மை ஆண்டவன் திருவருள்பெற அழைக்கிறார்:

"வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே."

நல்லூர்ப்பதியில் குருதரிசனம் பெற்றவராகையால் அப்பதியைக் குறித்து அதிகமான 'நற்சிந்தனை'ப் பாடல்கள் பாடியுள்ளார். பாடல்கள் முழுவதிலும் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் நிறைந்து மிளிர்கின்றன. சுவாமிகளின் உள்ளம் திருவாசகத்தில் திளைத்திருந்தமையை அவர் பாடல்கள் சிறப்பாகக் காட்டுகின்றன.

"பொறிவழியே போய்ப்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீபோ என்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறிபொழில்சூழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே."



இது கண்டபத்து என்ற பகுதி; குருதரிசனங் குறித்துப் பாடியதாகும். மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையிலே பாடிய கண்டபத்தை இது ஞாபகமூட்டுகிறது.

நாயன்மார்கள் எல்லோரும் நிலையிலாப் பொருளை எடுத்துக்காட்டி அவ்வழி நாட்டம் செலுத்தாது நிலையான பொருளாகிய பரம்பொருளை நாடவேண்டுமென்றே வழிகாட்டினர். 'நீநாளும் நல்நெஞ்சே நினைகண்டாய்' என்றும், 'புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்' என்றும் பாடிப் பாடி அறிவுறுத்தினார்கள். அந்த வழியிலே சுவாமிகளின் அறிவுறுத்தலைப் பார்ப்போம்.

"சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உளுற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான்
ஆதலின்
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
......................................"

இலகுவான முறையில் எம்மை உணரவைக்கும் திறனை இங்குகாணலாம். குருவாசகங்களாக அவரருளிய ஞான மொழிகளை எமது சிந்தையில் இருத்தவேண்டும். "எதை நீ பாவனை செய்கின்றாயோ அது நீ யாவாய்" என்பதும், "எப்பவோ முடிந்த காரியம்" என்பதும், "ஒரு பொல்லாப்புமில்லை" என்பதும் என்றும் சிந்திக்கச் சிந்திக்கத் தெவிட்டாத பொன்மொழிகளாகும்.

யாழ்ப்பாணமும் ஈழநாடும் செய்த தவப் பயனாகத் தோன்றிய அவர்களின் எண்ணங்களும் அருள் வாக்குகளும் என்றும் எம் இதயத்தை விட்டு நீங்கா. அவர்

களின் ஞாபகமாக விளங்குகின்ற 'சிவ தொண்டன்' சஞ்சிகையைப் போற்றி ஆதரிப்பது சைவமக்களாகிய எமது பெருங்கடனாகும்.

"வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும்
மாதவ! மனம் மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
ஓம் சிவாய நமஎன வேண்டுமே
ஈண்டெ னக்கொரு சொல்லால் உணர்த்திய
என்கு ருபர புங்கவ சிங்கமே."

[யோகர் சுவாமிகளின் குருபூசைத்தினத்தை முன்னிட்டு 23-4-71 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கோலாலம்பூர், ஸ்கொட் ரோட், கந்தசாமி கோவில் மண்டபத்திற் பேசப்பட்டது.]

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி
9086 C.C

உ

# சேக்கிழாரின் செந்தமிழ்ப் புலமை

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

சிவநெறியும் செந்தமிழ் நெறியும் தழைக்கத் திரு அவதாரஞ் செய்தவர் சேக்கிழார் பெருமான். பன்னிரண்டாம் நூற்றாண்டு தமிழகத்தின் பொற்காலமாகும். தமிழிலக்கியத்திற் காவிய வளர்ச்சி ஏற்பட்ட காலமும் இதுவாகும். 'சீவகசிந்தாமணி', 'பெரிய புராணம்', 'இராமாயணம்', 'கந்தபுராணம்' ஆதிய காவியங்களெல்லாம் இக்காலத்திலேயே தோன்றின. இவற்றில் 'பெரியபுராண'த்தை இயற்றியவரே சேக்கிழார் சுவாமிகள். பெரியபுராணத்துக்கு அவர் கொடுத்த பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது; "பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்கு கின்ற செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்" என்று பாடுகிறார். இந்நூல் சைவ சமயத் தொடர்பான நூலாக விருப்பினும் இலக்கண அமைதி தவறாமல் சொல்நயம், பொருள்நயம், கவிநயம் யாவும் அமையப்பெற்று இனிய செந்தமிழ் நடையில் திகழ்கின்றது. உணர்வினில் வல்லோர் அணிபெறச்

செய்வன செய்யுள் என்ற அமைப்பு பெரியபுராணத்துக்கு முற்றிலும் பொருந்துவதாகும். எத்தனையோ பாடல்களைப் படிக்கும்போது இரும்புக் கடலையைக் கடிப்பது போன்று உடல்நோவையும் உளநோவையும் உண்டாக்கி விடுகின்றன. ஆனால், 'பெரியபுராண'மோ கதலிபாகமாய்ப் படிக்கப்படிக்கத் தெய்வமணங் கமழ்கிறது.

மூவர் திருமுறைகளையும் சித்தாந்த உண்மைகளையும் சங்க இலக்கியங்களையும் திருக்குறளையும் நன்கு கற்றுத் தெளிந்தவர் சேக்கிழார் பெருமான். 'உலகெலாம்' என்ற திருவாக்கை அருள்வாக்காகக் கொண்டு இயற்றிய படியால் நூல் முழுவதும் அருள் ஓட்டமே செறிந்துள்ளது. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு தனிச் சிறப்பைக் கூறி, தமிழைப் பக்தி மொழி என்று பாராட்டுவர் மொழிவல்லார். சேக்கிழார் பெருமானின் கைப்பட்ட தமிழ் பக்திச் சுவை நனிசொட்டும் தேன் தமிழ்மொழியாகச் சிறப்புப் பெறுகிறது. 'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' என்று தமிழ் மொழியைப் போற்றுகிறார் இவர். 'எடுக்கும் மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய் நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட' என்று பாடி விநாயக வணக்கம் செலுத்துகிறார். அவர் 'பெரியபுராணம்' இயற்றியதன் உட்கிடக்கையும் வாழ்க்கையின் உட்கிடக்கையும் சிவ பக்தியும் அடியார் பக்தியுமேயாகும். இவற்றை வெளிப்படுத்துந் திறனும் கருத்தாழமும் கனிந்த சொல்லடுக்கும் கற்றோர்க்கு நல்விருந்தளிப்பன.

காவியத்துக்கு அணியாக விளங்குவது நாடு நகர வர்ணனைகளாகும். சோழநாட்டின் வயல்களில் நெற் கதிர்களெல்லாம் சுருள் விரித்து அலர்ந்து நிற்கின்றன. அதனைத் தெய்வக் கண்ணோட்டத்தோடு வர்ணிக்கிறார்.

"சாலிநீள் வயலி னோங்கித் தந்நிக ரின்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினும் வளர்த்த வாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு சுருள்விரித் தானுக் கன்பர்
ஆலின சிந்தை போல அலர்ந்தன கதிர்க ளெல்லாம்."



சிவனடியார்களுடைய உள்ளம் ஆண்டவனை நினைந்து அலர்ந்திருப்பதுபோல நெற் கதிர்களெல்லாம் சூல் முதிர்ந்து பசலைகொண்டு இலைச் சுருளிலிருந்தும் வெளிப்பட்டு அலர்ந்து காணப்படுகின்றன. அடியார்களுடைய உள்ளங்கள் தூய வெண்மையான உண்மையான ஞானத்தையுடையனவாய் திருவருள்வளம் மிக்கனவாய் சிவோகம் பாவனையினாலே குவிதலின்றி அலர்ந்திருப்பனவாய் விளங்கும். அதேபோல் கதிர்களுந் தூய வெண்மை நிறமுடையனவாய் பதடியற்ற உண்மைப் பயன் கொண்டனவாய் சாறு உடையனவாய் சுருண்டு இருந்த நிலையினின்றும் வெளிப்பட்டு விரிந்து காணப்படுகின்றன. இங்கே நெற்பயிர் விளைவை, சிவனடியார் சிந்தையோடு அருமையாகப் பொருத்திக் காட்டுகிறார். சோழ நாட்டை அணிசெய்வது காவிரியாறு. இதனைப் பொன்னியென்றும் போற்றுவர். இதன் இருமருங்கும் சிவாலயங்கள் நிறைந்து காணப்படுகின்றன. நறை மலர்களைச் சுமந்துகொண்டு பொன்னி ஓடிவருகிறது. வழியிலிடைப்பட்ட சிவாலயங்களில் அம் மலரிட்டு நீரும் தெளித்து வருங்காட்சி சிவனடியாரையே நினைக்க வைக்கிறது:

"வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்(து)
எம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால்."

காவிரியாறு மலரையும் நீரையும் சொரிந்து சிவாலயங்களைச் சூழ்ந்து வருவதுபோலச் சிவனடியார்களும் சலம்பூவொடு தூவி ஆலயங்களை வழிபட்டு வருங் காட்சியை நினைவுகொண்டு காட்டுகிறார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திரு அவதாரம் செய்த இடம் சீர்காழி. வேள்வி செய்யும் அந்தணர் குலத்திலே அவதரித்தவர் அவர். அத்தகைய வேள்விச் சிறப்பை அவர் நாட்டு இயற்கைக் காட்சிகளே காட்டி நிற்கின்றன.

"பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரம்நீள் இலைக்கடையால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களும்ஆ குதிவேட்கும் தகையவென மணந்துளதால்."

இங்கே இயற்கையானதொரு மருதநிலக் காட்சியைத் தெய்வீக உள்ளத்தோடு நின்று காட்டுகிறார். சீர்காழி நாட்டு வயல்களிலுள்ள மாமரங்களே வேள்வி செய்கின்றன. வயலிலே தடாகம்; தடாகத்திலே தாமரை மலர்கள். அது அக்கினி குண்டம்போற் காட்சியளிக்கின்றன. வயல் வரம்புகளிலுள்ள மாமரங்களில் உள்ள பழங்கள் கனிந்து வெடித்து அதன் சாறு கீழே விழுகிறது. அவை மாவிலைகளின் மூலமாகத் தாமரைப் பூவினுள் சொரியப்படுகிறது. இக் காட்சி அந்தணர் செய்யும் வேள்வியினை நினைவூட்டுகிறது. தாமரைப் பூவாகிய அக்கினி குண்டமும் பழச் சாறாகிய நெய்யும் மாவிலையாகிய அகப்பையும் மரங்களாகிய வேள்வி செய்வோனும் சேக்கிழார் அகக் காட்சியிற் பட்டுப் பாடலாக வெளிவந்துள்ளது.

திருநீறு, திருவைந்தெழுத்து என்பவற்றுக்குச் சிறந்த இடங்கொடுத்துப் பாடியுள்ள பல இடங்களைக் காணலாம். சிவனடியார்களைப், 'பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' என்று விளக்கும்போதும் நீற்றையே எடுத்துக் காட்டுகிறார். சுந்தரமூர்த்திநாயனார் பரவையாரைக் கண்டு பிரிந்த பின்பு மாலைக்காலம் வருகிறது. சந்திரன் வானத்தில் தோன்றுகிறான். நிலாவொளி எங்கும் பரவுகிறது.

"தோற்றும் மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையுந் தந்துபோய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா."

நிலாவின்னொளியை நீற்றி னொளியோடு ஒப்பிடுகிறார். 'நல்லோர் மனம்போல் அவரணிந்த சேமம் நிலவு



திருநீறு' என்றும் பாடப்படுகிறது. தில்லைத் தலத்தைச் சூழ்ந்து செல்லும் அகழிகளில் உள்ள தாமரை மலர்களில் தேன் குடிக்கும் வண்டுகள் பக்கத்தேயுள்ள தாழையிற் பாய்ந்து தாழம்பூவிற் படிகின்றன. இதனால் வெண் தாது ஒட்டிக்கொள்கிறது; இந்த உருவில் நின்று ரீங்காரஞ் செய்கின்றன. "துன்று நீறுபுனை மேனியவாகித் தூய நீறுபுனை தொண்டர்களென்னச் சென்று சென்றுமுரல் கின்றன கண்டு சிந்தை யன்பொடு திளைத்தெதிர் சென்றார்" சுந்தரர். தில்லைக்குச் சென்ற அவர் கண்டுகளித்த திறனை இவ்வாறு காட்டுகிறார்.

செந்தமிழ்ச் சுவை சொட்டச் சொட்டத் திருவைந்தெழுத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டுமிடங்கள் மிகப் பல. மாலைக் காலத்தின் பின் வானம் இருண்டுகொண்டு வருகிறது. தெய்வீக உள்ளத்திலிருந்து செஞ்சொற் கவிதை எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பாருங்கள்;

"பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கடம் வல்வினை யும்மரன்
அஞ்செ ழுத்து முணரா வறிவிலோர்
நெஞ்சு மென்ன விருண்டது நீண்டவான்."

எண்ணங்களை மறைத்துவைக்கும் ஆற்றல் மிக்கவர்களாதலின் பெண்களின் உள்ளத்தை இருண்டது என்றார். மைவிழியார் உள்ளமும் வஞ்சமாக்களின் வலிய வினையும் எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தை எண்ணாத அறிவிலாரது நெஞ்சமும் போல நீண்டவானம் இருண்டு காணப்பட்டது. 'அகவிருள் கெடுப்பது நமசிவாய' என்று பெரியோர்கள் அருளியிருப்பதால் அதனை உணராதவர் உள்ளம் இருண்டு இருக்கும் என்பதில் வியப்பில்லை. திருவைந்தெழுத்தின் சிறப்பை மற்றொரு இடத்திலும் காண்போம். அப்பர் சுவாமிகளைச் சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலிலே விட்டபோது அவர் 'சொற்றுணை வேதியன்' என்று தொடங்கி நமசிவாயப் பதிகம் பாடிக் கரையேறினார். அந்நிகழ்ச்சியைப் 'பெரியபுராண' ஆசிரியர் நயம்படக் காட்டுகிறார்.

210950

"இருவினைப் பாசமும் மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
வருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ."

ஆணவமாகிய கல்லோடு இருவினையாகிய கயிற்றையும் பிணித்தபடி ஆன்மாக்கள் பிறவியாகிய கடலுக்குள்ளே விழுகிறார்கள். அங்கிருந்து கரையேறத் துணை நிற்பது திருவைந்தெழுத்தேயாகும். பெரிய பிறவிக் கடலில் விழுவோரையே ஏற்றுவது அது. அத்தகைய ஐந்தெழுத்து ஒரு சிறிய கடலில் ஒரு சிறிய கல்லாற் பிணிக்கப்பட்ட ஒரு அரசை ஏற்றுவதில் வியப்பொன்றுமில்லையே என்று கூறுவதன்மூலம் திருவைந்தெழுத்தின் பெருமையை உணரவைக்கிறார்.

சைவ சித்தாந்தப் பயிற்சி மிக்கவராகிய இவர் பாசம், பழி, வினை, புண்ணியம் என்பவற்றைப் பல இடங்களில் உவமையாக்கிக் காட்டியுள்ளார். புண்ணியந் திரண்டுள்ளது போல்வது எனத் திருக்கயிலை மலையையும் புண்ணியக் கண்ணிரண்டு என அப்பரையும் சம்பந்தரையும் காட்டியுள்ளார். இளையான் குடிமாறர் குறும்பயிர் தடவிப் பிடுங்கிக் கறியமுதாக்குவதற்குக் கொடுக்கிறார். நள்ளிரவில் கொட்டும் மழையில் 'கும்மிருட்டில் கையால் தடவித் தடவிப் பிடுங்குகிறாரென்பதை விளக்கும் பொருட்டு,

"குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"

என்று கூறப்பட்டுள்ளது. பாசப் பழிமுதல் என்பது சகல மலத்திற்கும் வேராகி நிற்கும் மூலமலமாகும். எனவே, வித்து மேல் விளையாமற் செய்த இச் செயலால் பிறவியே வேரோடு அறுந்துவிடுகிறது என்பதை உணர முடிகிறது.

திண்ணனாராகிய கண்ணப்ப நாயனாரது இறைப்பித்து நிலையை நாணன் உணர்ந்து காடனுக்குக் கூறுகிறான்; வேடுவ குலத்தினருடைய பேச்சு வழக்கோடு



ஒன்றிநின்று அவர் நிலையில் வைத்து அருமையாகக் கூறுகிறார். இதுதான் உண்மைக் கவிஞரது இயல்பாகும்.

"அங்கிவன் மலையிற் றேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான்."

திருக்காளத்தி மலையிலே தோன்றிய சிவலிங்கத்தைக் கண்டவுடனே முற்பிறப்புத் தொடர்ச்சியினால் அதனைப் பிரியமாட்டாதவராகிக் கட்டியணைத்துக்கொண்டு நின்றார் திண்ணனார். வங்கு என்பது மரப்பொந்து. மரப் பொந்தை விட்டு நீங்காத உடும்பைப்போலத் திண்ணனார் திருக்காளத்திநாதரைப் பிரியாமல் நின்றார். உடும்பையும் மரப்பொந்தையும் வேடர் நன்கு அறிவார்கள். நாணன் வாயிலிருந்து வெளிப்படும்போது அவர்கள் கண்டு பயின்றவற்றையே எடுத்தாண்டிருப்பது வியக்கத்தக்கதே. அதாவது நாணன் இப்படித்தான் கூறுவான் என உணர்ந்து அப்படியே கூறுகிறார். ஒரு காவியத்துக்கு அணிகள் மிகச் சிறப்புடையன. 'பெரிய புராணம்' முழுவதிலும் அவர் காட்டிச் செல்லும் அணிகளின் மூலம் காணுகின்ற பொருள்கள் அனைத்திலும் கடவுள் நினைப்பையே எழுப்புகிறார். இரு வேறுபட்ட தன்மைக்கு ஒரே உவமையிற் காட்டி விளக்குந் தன்மையிலும் சேக்கிழார்க்கு ஒப்பாவார் எவருமிலர்.

"மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுள் கறுப்பு வைத்து
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தி நாதன்."

மையாகிய நீல நிறத்தினைத் தனக்குள் வைத்து அதனைச் சுற்றி விளக்கத்தினைச் செய்து ஒளிரும் விளக்குப் போல மனத்திலே கறுப்பாகிய வஞ்ச எண்ணத்தை வைத்து வெளியே விளக்கம் செய்யும் நீற்றைப் புனைந்து தவவேட முடையவன்போல் வந்தான் முத்திநாதன். விளக்கின் விளக்கத்திற்கு நெய் காரணமாவதுபோல் அவனுடைய தவ வேடத்திற்கு மனதிலுள்ள வஞ்சக் கறுப்பே காரணமாகும். விளக்கும் இருளும் என்ற இரு

வேறுபட்ட தன்மைக்கு இது அரிய உவமையாகும். இதே போன்று சண்டேசுர புராணத்திலும் எச்சதத்தனைக் குறிப்பிடும் இடத்தில் 'அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்' எனக் கூறப்பட்டுள்ளது. கிடைத்தற்கரிய நாகரத்தினம் போன்ற சண்டேசுர நாயனாரைத் தந்தவனும் சிவபூசைக்கு இடையூறான பெரும் பாதகச் செயலைச் செய்தவனும் எச்சதத்தனே. எனவே, அவனை நாகபாம்புக்கு நிகராக்கிப் பாடியுள்ளார்.

பெரியபுராணம் முழுவதிலும் இத்தகைய சுவைச் சிறப்பைக் காணலாம். இவர் காலத்தில் அரசியற்றிய அநபாயனும் அவன் மகன் இராசராசனும் சைவநூற் புலமையும் சிவதொண்டும் மிக்கவர்களாய் தமிழ்ப் பற்றுடையோர்களாய் வாழ்ந்து மக்களையும் அந்நெறிப் படுத்தினர். சீவகசிந்தாமணியை நயந்துகொண்டிருந்த மன்னனுக்கு நிலையான ஒரு மெய்யுணர்வை யூட்டும் பொருட்டுத் திருத்தொண்டர் புராணத்தைப் பாடினார் சேக்கிழார். முதலமைச்சராக இருந்தமையால் செவி வழிச் செய்தியையும் கல்வெட்டுச் சான்றுகளையும் திரட்டிக்கொண்டு திருத்தொண்டத் தொகையையும் திருத்தொண்டர் திருவந்தாதியையும் ஆதாரமாகக் கொண்டு இந்நூலைப் பாடினார். காவியமாக அமைவதற்கு ஏற்ற சுவைகளையும் இலக்கிய வளங்களையும் நிரம்பப் புகுத்தியுள்ளார். இலக்கியம் என்று கற்பார்க்கு இந்நூல் பயில்தொறும் இன்பம் பயப்பதாயும் சமயம் என்று நோக்குவார்க்குப் படிக்குந்தொறும் பல தத்துவங்களை உணர்த்துவதாயும் விளங்குகிறது. சோழர் காலத்து எழுந்த அருட்பெருங் காவியம் 'பெரிய புராணம்' என்பதில் மிகையொன்றுமில்லை.

"என்று மின்பம் பெருகு மியல்பினோ
டொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்."

உ

# சைவ சித்தாந்தம்

"சைவம் சிவத்துடன் சம்பந்த மாவது
சைவம் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவம் சிவந்தன்னைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தஞ் சாயுச் சியமே."

சைவ சித்தாந்தம் பற்றி இன்று நாம் விரிவாக அறிவதற்குக் கருவியாக உள்ள நூல்கள் மெய்கண்ட சாத்திரங்களாகும். இவை 13ஆம், 14ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டவை. இவற்றுக்கு முன்பு தோன்றிய திருமுறைகளில் சைவ சித்தாந்தம் பற்றிய குறிப்புக்கள் பலவுள்ளன. திருமூலருடைய 'திருமந்திரம்' மிகச் சிறப்பாகச் சைவ சித்தாந்தத்தை எடுத்துக்காட்டுகிறது. மணிமேகலை, திருமந்திரம் முதலிய நூல்களில் சைவம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. சைவம் என்பது சிவத்துடன் சம்பந்தமாவது என்று திருமூலர் குறிப்பிடுகிறார். சைவசித்தாந்தம் என்பது உயிர்கள் சிவத்துடன் சம்பந்தப்பட்டு அடையும் பெரு நெறியை விளக்குவதாகும்.

சித்தாந்தம் என்றால் சைவர்களாற் கொள்ளப்பட்ட முடிந்த முடிவுகள் என்று பொருள் கொள்கிறார்கள். அது

பொருத்தமானதன்று. ''சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேற்சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ'' என்ற இடத்திற் கூறியதுபோல் சமய அதீத மான நிலையென்று பொருள் கொள்ளுதல் வேண்டும். இறைவன் அருள்கொண்டு ஞானிகள் கண்ட முடிவுக ளாகிய ஞானத் தொகுதியே சைவசித்தாந்தம் என்று கூறப்படும். இவை அக்காலத்திலும் இக்காலத்திலும் எக் காலத்திலும் மாறாதவை. மொகஞ்சோதரோ நாகரிகம் நிலைபெற்றிருந்த காலத்தில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் மக்கள் வாழ்க்கையிற் கலந்திருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. வைதிக நெறியிற் பற்பல துறைகள் உள்ளன. அவை எல்லாவற்றிலும் மேலானது சைவத் துறை. 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க' என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். சைவத் துறையில் நிற்பவர்கள் அகச் சமயிகள் எனப்படுவர். அவர்கள் அனைவரது கொள்கைகளுக்கும் மேலானதாய் விளங்குவது சைவ சித்தாந்தம். இதன் பெருமையைக் குறித்துக் குமரகுருபர அடிகள் அழகாகப் பாடியுள்ளார்:

''பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னும் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன் பலவே
அவற்றுள் இலைகொண் டுவந்தனர் பலரே இலைஒரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிர்ஒரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டு வந்தனர் பலரே
அவ்வாறு உறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்
நன்னிலை பெறுதற்கு அன்னியன் ஆயினும்



அன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புனல் அமுது ஆர்ந்தனன் அதனால்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவர் அமுதே.''

வேதம் என்பதை ஒரு மரம் என்று வைத்துக் கொண்டால் அதில் முற்றிய இலை, தளிர், அரும்பு, பூ, பிஞ்சு, காய் எல்லாம் வைதிகத்துறைகளாகும். அம் மரத்தின் உச்சியிற் பழுத்த வேதாந்தம் எனப்பட்டதே சிவாகமம். அதுவே கனி. அதிலும் கோதும், விதையும் உண்டு. அவற்றை நீக்கிக் கனியைப் பிழிந்து வடித் தெடுத்த சாரமே சைவசித்தாந்தம். இந்தச் சாரத்தைப் பருகித் திளைப்போர் மிகச் சிலரேயென்று பாடுகிறார் குமரகுருபரர். வாழ்க்கையோடு இணைந்த நெறியே சித்தாந்தம். ஆனால் வேதாந்தம் என்பது சிறிது அனுபவத்திற்கு அப்பாற்பட்டதாகும். அதனாற்றான் 'என்ன வரட்டு வேதாந்தம் பேசுகிறார்கள்' என்று சிலர் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் சித்தாந்தம் எம்மைக் காட்டுக்கழைக்கவுமில்லை; காவி யுடுக்கச் சொல்லவுமில்லை. வாழ்வாங்கு வாழ்ந்தாற் போதுமென்றே அது கூறுகிறது. ஆண்டவனை அடைவ தற்கு எத்தனையோ கரடுமுரடான பாதைகள் உண்டு. ஆனால் மிக அழுத்தமான பாதை சைவசித்தாந்தமே என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

வேதாந்தம் என்று கூறியவுடனே ஆதிசங்கரருடைய நினைவுதான் எமது ஞாபகத்துக்கு வரும். சங்கரருடைய வேதாந்தம் அத்வைதம் எனப்படும். உபநிடதப்பழைமை அங்கேயுண்டு. இதனையே ஏகான்மவாதம் என்றும் சொல்லப்படும். 'உபநிடதம்', 'பிரமசூத்திரம்', 'பகவத் கீதை' என்பவற்றை அடிப்படை நூல்களாகக் கொண் டதே வேதாந்தம். ஆனால் சங்கரருக்கும், இராமானுஜ ருக்கும், மத்துவருக்கும் கொள்கை வேறுபாடுகள் உண்டு. பொதுவாகப் பார்க்குமிடத்து வேதாந்தத்தில் இப்படி யாகப் பல வேறுபட்ட கொள்கைகள் நிலவுகின்றன. ஆனால் சைவ சித்தாந்தம் என்பது சந்தான குரவர்க

ளாலும் சமய குரவர்களாலும் மாறுபடாத ஒரே நெறியிலே காட்டப்பட்டுள்ளது. பதி, பசு, பாசம் மூன்றும் உள் பொருள்கள் என்றும் அவை அநாதியாகவே உள்ளன என்றும் சைவசித்தாந்தம் பேசுகிறது. அவற்றுள் அறிவுடைப் பொருள் கடவுள் ஒருவரே. அறிவிக்க அறிபவை எண்ணில்லாத ஆன்மாக்கள். அறியாமையை யுடையவை பாசங்கள். இந்த அறியாமையிலிருந்து நீங்கி அறிவையடைவதே ஆனந்தம் என்ற கொள்கை எக்காலத்தும் மாறாதது.

"என்னை யறிவென்றான் என்னறிவி லானந்தம்
தன்னைச் சிவம்என்றான் சந்ததமும் — தன்னையென்னைப்
பாரா மறைப்பதுவே பாசமென்றான் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம்."

என்பது பிற்காலத் தெழுந்த பாடலாகும். உயிர்கள் தாமே அறியும் தகுதியில்லாதவை; சிற்றறிவுடையவை. சூரிய ஒளிகொண்டு காணும் கண்களைப்போல இறையொளி உணர்த்த உணருபவை. படிகம்போன்று சார்ந்ததன் வண்ணமாய் அமைந்தவை.

பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். இவற்றுள் ஆணவம் தான் ஒன்றேயாய் அனேக சக்திகளை யுடையதாய் இருப்பது. உயிர்களின் அறிவினை விளங்கவொட்டாது தடுப்பது இதுவே. மாயை என்பது உலகம் தன்னிடம் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் காரணமாய் இருப்பது. ஆணவத்தால் கட்டுண்டு இயக்கமற்றிருக்கும் உயிர்களை இயங்கத் துணைசெய்து அவற்றை உயர்த்துவது மாயையே. மாயையின் காரியமே தனு, கரண, புவன, போகம் என்பன; தத்துவங்களின் துணை கொண்டே உயிர்கள் சிற்றறிவு விளக்கம் பெறுகின்றன. இதனாலேயே மாயையை 'விளக்கு' என்று உமாபதிசிவம் பாடினார்.

"விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து."



கன்மம் என்பது உயிர்கள் செய்யும் வினைகளின் தொகுப்பாகும். இது நல்வினை தீவினை வடிவாய் இன்ப துன்பங்களுக்கும் பிறப்பு இறப்புகளுக்கும் காரணமாயிருப்பதாம். உயிர்கள் முற்பிறவியில் நல்வினை தீவினை வாயிலாகத் தேடிவைத்தது சஞ்சிதம் என்றும், அதனை இப் பிறவியிலே அனுபவிப்பது பிராரத்துவ வினையென்றும், அனுபவிக்கும்போது உண்டாக்கிக் கொள்வது ஆகாமிய வினையென்றும் சொல்லப்படும். எத்துணை மேம்பட்ட பக்திநிலை கைவரப் பெற்றாலும் செய்த வினையை அனுபவிக்கவே வேண்டும் என்றே சைவ சித்தாந்தம் கூறுகிறது. பட்டினத்தார் கழுமரத்தில் ஏறுகின்ற நிலையை முன்னிட்டுப் பாடுகிறார்:

"என்செய லாவது யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே."

ஆனால், இறைவன் தன்னடியவர் அடையும் துன்பத்தைத் தானே துணைநின்று எடுத்துச் சுமப்பான் என்பதையும் முடிவில் அவை யாவும் இன்பமாகவே முடியும் என்பதையும் நாமுணர்ந்துகொள்ளவேண்டும். வினைகள் செய்வதனாலேயே நாம் மீண்டும் மீண்டும் பிறக்கிறோம். இறைவன் எமக்கு அரிய மானிடப் பிறவியைத் தந்ததன் நோக்கம் இனிப் பிறவாப் பெரும் பேற்றை யடைய வேண்டும் என்பதற்காகவே.

மானிடப் பிறப்பின் நோக்கத்தை யறிந்து அந் நோக்கம் நிறைவேறும் முறையில் வாழ்வதே சைவ சித்தாந்தமாகும். பக்குவமுள்ள உயிர்களை இறைவன் குருவடிவாக வந்து ஆட்கொள்வான். அரச புத்திரன் ஒருவன் வேடர் கூட்டத்துடன் வாழ்ந்துவருகிறான். தான் யார் என்பது அரசகுமாரனுக்குத் தெரியாது. ஆனால் பக்குவம் வந்தவுடனே அரசன் வந்து தனது குமாரனை வேடரிடமிருந்து மீட்டுப் போகிறான். அதாவது ஐம்புலன்களாகிய வேடரிடமிருந்து உயிரை மீட்டுக்

கொள்வது இவ்வாறேயாகும். இந்நிலையிலிருந்து உயிர் உயர்கிறது. ஆண்டவன் திருவடிக்காளாகி நிற்பதே உய்வு நிலையென்று உணர்கிறது.

சைவ சித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறியில் 'நீ உனக்காகவே இறைவனை வணங்குகிறாய்' என்பதையே காட்டுகிறது. சோற்றை எமக்காகவே உண்கிறோம் அல்லாமல் சோற்றுக்காக உண்பதில்லை. அதேபோல் வழிபாட்டையும் எமக்காகவே செய்து கொள்கிறோம். வழிபாட்டை மேற்கொள்ளாத மக்களுடைய தன்மையைப் பேய்க்கு நிகராக்குகிறார் சுந்தரர். 'நாயேன் பல நாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன்' என்பது தேவாரம். தாயுமானவரும் செகத்தாரை யெல்லாம் கூவியழைத்துப் பேரின்ப வெள்ளத்தை அனுபவிக்கும்படி வேண்டுகிறார். 'அகண்டாகார சிவபோகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நாம் இனி எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே' என்பது அவர் பாடல். ஆன்மாக்களின் துன்பந் தொலைந்து இன்பம் பெருக வேண்டும் என்ற விருப்போடேயே ஞானிகள் வழிகாட்டினார்கள். 'சிவஞானபோதம்' பத்தாம் சூத்திரம் பாச நீக்கத்தையும் பதினொராம் சூத்திரம் சிவப்பேற்றையும் எடுத்துக் கூறுகிறது. பாசம் முற்றிலும் நீங்கப்பெறுவதே ஆன்ம சுத்தியாகும். இதனையே மோட்சம், வீடு, முத்தி என்றெல்லாம் சொல்கிறோம். ஏகனாகி இறைபணி நின்றால் மும்மலங்களும் நீங்கிவிடும்.

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே."

என்பது பத்தாம் சூத்திரம். பதினொராம் சூத்திரம் சிவப்பேற்றை உணர்த்துகிறது.



"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே."

பொருள்களைக் காணுந் தன்மையுடைய கண்ணுக்கு உயிரானது பொருளைக் காட்டுவதுமன்றித் தானும் உடன்சென்று காணுவதுபோல அறியும் தன்மையுடைய உயிருக்கு இறைவன் அறிவிப்பதுமன்றி உடன் நின்று அறிந்தும் வருகிறான். இவ்வுபகாரத்தை உயிர் உணர்ந்து அவன் திருவடியில் அன்பு செலுத்துகிறது. அதனால் மாறாத சிவானுபவம் விளைகிறது. இந்த அனுபவத்தைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லையிலே பெற்றார்:

"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

உடம்பு நீங்கியபின் அனுபவிப்பதான முத்தி யின்பத்தை உடம்பு உள்ளபொழுதே அனுபவிப்பவர்கள் தாம் 'சீவன் முத்தர்கள்' என்று சொல்லப்படுவர். இவர்கள் வழுக்கியும் மீளப் பிறவாமைப் பொருட்டு குருலிங்க சங்கமங்களை நினைந்து வழிபடுதலாகிய தன்மையையே பன்னிரண்டாம் சூத்திரம் கூறி முடிக்கிறது. இதுவரை சைவசித்தாந்தம் கூறும் அருள்வாழ்வு நெறியை ஒருவாறு கண்டோம். டக்டர் போப் அவர்கள் சைவ சித்தாந்தம்பற்றிக் கூறுமிடத்து அது தனிப்பெருங் கடவுட் கொள்கையென்றும் விரிந்த செல்வாக்குடையதென்றும் இந்திய நாட்டுச் சமயக் கொள்கைகளில் தலைசிறந்ததென்றும் குறிப்பிடுகிறார். சமயத்தைப் பொறுத்துச் சண்டைக்கு இடமில்லை.

'அவனே நான்' என்று கூறுகிறது வேதாந்தம். 'நானும் அவனும்' என்று கூறுகிறது சித்தாந்தம். சித்தாந்தம் என்பது பழச்சாற்றைப்போல் குழந்தைகள் கூடப் பருகக்கூடியதாய் அமைந்தது. ஆனால், வேதாந்தம் கனி போன்றது. கோதுகள், விதைகள் இருப்பதால் அவற்றை நீக்கி உண்ணத் தெரியவேண்டும். அதனை மாயாவாதம் என்று நோக்கக்கூடாது. வேதாந்தத் தெளிவு சைவசித்தாந்தம் என்பதைச் சிந்திக்கவேண்டும். இந்தச் சமயப் பூசல்களினின்று இளைஞர்கள் விடுதலை பெற நல்ல காவலரன் பெறவேண்டும். வாழ்க்கையைப் பற்றிய உயர்ந்த வினாக்கள் எழுப்பப்படவேண்டும். மனிதகுலத்தின் முடிவை உணர்த்தும் சித்தாந்த நூல்களைக் கற்றுத் தெளியவேண்டும். ஆங்கிலங் கற்ற மேதைகள் மேனாடு சென்று சைவ சித்தாந்த நெறியைப் பரப்பவேண்டும்.

"இந்தனத்தில் அங்கி எரியுறுநீர் தேனிரதம்
கந்தமலர்ப் போதுவான் காலொளிகண் — சந்ததமும்
அத்துவித மாவதுபோல் ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கும் முறை."

உ

# சுந்தரர் செந்தமிழ்

"பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே."

அவனருளே கண்ணாகக் கொண்டு அவனைக் கண்டவர்கள் நாயன்மார்கள். அந்த அனுபவத்தையே திருமுறைகள் எடுத்துக் காட்டுகின்றன. பன்னிருதிருமுறைகளில் ஏழாவது திருமுறையே சுந்தரர் செந்தமிழாகும். 'சொற்றமிழ் பாடு' என்று இறைவனே சுந்தரரைக் கேட்டுப் பாடுவித்தார் என்பதைப் 'பெரியபுராண'த்தால் அறிகிறோம். திருமணப்பந்தலிலே வைத்துத் தடுத்தாட்கொண்ட பெருமான் திருவெண்ணெய் நல்லூரிலே திருவருட்டுறை என்னும் கோயிலுள்ளே சென்று மறைந்தருளியவுடன், அதிசயித்து நின்றார் நம்பியாரூரர். உடனே எம்பெருமான் அசரீரியாக 'முன்பு நீ எனக்குத் தொண்டன்; நம் ஏவலாலே மண்மீது பிறந்தாய்; துன்புறுவாழ்க்கை நின்னைத் தொடராமல் தடுத்தாட்கொண்டோம்' என மொழிந்தருளினார். இவ்வோசையைக் கேட்ட நம்பியாரூரர் ஈன்ற ஆன்

அழைப்புக் கேட்ட கன்றுபோற் கதறி நின்று கைகளைத் தலையின்மேற் குவித்து வணங்கி நின்றார். பின்னும் அசரீரியாக மொழிகின்றார் எம்பெருமான்.

“மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்.”

இவ்வருள் மொழியைச் செவிமடுத்த நம்பியாரூரர் ‘கோதிலா அமுதே இன்றுன் குணப் பெருங் கடலை நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்’ எனக் கேட்டபொழுது ‘பித்தன் என்றே பாடுக’ என்றார் எம்பெருமான். அவர் வாக்கை அருள் வாக்காகக் கொண்டு ‘பித்தா பிறைசூடீ’ எனத் தொடங்கிப் பாடியருளினார். முதற் பாடலாகிய இப் பாடலிலேயே ‘எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத் துன்னை வைத்தாய்’ எனப் பாடி இறைவனுக்கும் தனக்குமிடையே யமைந்த யோக மார்க்கத்தை விளங்க வைத்துள்ளார். திருவெண்ணெய் நல்லூரிலிருந்து புறப்பட்டுத் தில்லைக்குச் சென்று வழிபாடுகள் நடத்தி வருங்கால் ‘திருவாரூருக்கு வா’, என்று அழைத்து ‘தோழனாக என்னை உனக்குத் தந்தேன்’ எனவும் அருளினார் எம்பெருமான். சுந்தரர் இறைவனோடு கொண்டுள்ள இந்தத் தோழமைத் தொடர்பு பேச்சு உரிமைக்கு மிக வாய்ப்பான தொடர்பாகும். சம்பந்தப்பெருமான் இறைவனோடு புத்திரன் என்ற முறையில் தொடர்பு கொண்டவராகையால் தகப்பன் பிள்ளைக்கு உணர்ந்து செய்யும் முறையிலே யாவும் கிடைத்தன. வாதாட இடமில்லை, முறையுமில்லை. அப்பர் சுவாமிகள் அடியார் என்ற முறையிலே தாழ்மையான வேண்டுகோள்களையே விடுத்தார். மணிவாசகப் பெருமான் சீஷன் என்ற பாங்கிலே பிரிவாற்றாமையால் அலறியும் உழறியும் வேண்டுகோளை விடுத்து இரங்குகின்றார். ஆனால் சுந்தரரோ தோழன் என்ற முறை



யிலே எம்பெருமானோடு தொடர்பு கொண்ட தன்மையினால் எப் பொருள்களையும் வலியுறுத்திக் கேட்டுப் பெற்றுமிருக்கிற தன்மையைக் காணலாம்.

ஒருவருடைய பெருமையையும் குணத்தையும் அவரவர்களுடைய நண்பர்களைக்கொண்டு சொல்லிவிடலாம் என்பது ஒரு பெரிய உண்மை. சிவபெருமான் சுந்தரரிடத்துத் தோழமை கொள்ள வந்தாரென்றால் சுந்தரரின் பெருமைக்கு வேறு சான்றே தேவையில்லை. சுந்தரரின் செந்தமிழ்ப் புலமை எம்பெருமானை ஈர்த்துவிட்டது என்பதை அருணகிரிநாதர் விளக்குகின்றார்.

“கற்ற தமிழ்ப்புல வனுக்கு மேமகிழ்
வுற்றொரு பொற்கொடி களிக்க வேபோ
கற்பனை நெற்பல அளித்த காரண னருள்பாலா.”

என்பது திருப்புகழ். இவருடைய செந்தமிழை நயந்ததனாலேயே எம்பெருமான் பரவையாரிடமும் ஒரு முறைக்கு இருமுறை தூதுசென்றார் எனவும் அறிகிறோம். பிழை பொறுத்தருளும் பெற்றி வாய்ந்த எம்பெருமானைத் தோழமையாகக் கொண்ட சுந்தரர் வியந்து பாடுகின்றார்.

“..........அடியேற் கெளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாத னைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே.”

என்பது தேவாரம்; திருவாரூர்ப் பெருமானே அடி எடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத் தொகையும் பாடியருளினார் சுந்தரர். இதுவே ‘பெரியபுராண’த் தோன்றுவதற்கு முதல் நூலாக அமைந்தது. இதனைக் குறித்துச் சுந்தரருக்குப் ‘பெரியபுராண’த்தில் பல இடங்களில் நன்றி செலுத்துகின்றார் சேக்கிழார். ‘தம்பிரான் தோழரவர் தாமொழிந்த தமிழ் முறையே எம்பெரு

மான் தமர்கள் திருத்தொண்டேத்த லுறுகின்றேன்' என்றும் 'ஈச னடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்து தேசம் உய்யத் திருத் தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன் வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வழுத்துவாம்' என்றும் பாடியுள்ளார்.

சுந்தரர் செந்தமிழில் மற்றைய புலவர்களுக் கெல்லாம் ஒரு புதுவழி காட்டப்படுகிறது. பொருள் வேண்டிப் புரவலர்களையும் வள்ளல்களையும் பாடினர் சங்கச் சான்றோர். ஆனால் பொருளையும் அருளையும் வேண்டி எம்பெருமானைப் பாடும்படி வழிகாட்டுகிறார் சுந்தரர். 'மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக் கிவனென்று கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்று நொந்து கொள்கிறார். காரணம் பல்லவர் காலத்து மன்னர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கவில்லை. அதனாலேயே ஒரு புதிய வழியைத் திறந்து காட்டுகிறார்.

'புலவர்களே ; உண்ண உணவும் உடுக்கக் கூறையும் துன்பநீக்கமும் இம்மைக் கருளுவான்; மறுமைக்குச் சிவ லோகப் பெரும் பேற்றையும் நல்குவான்.' எனவே அவனையே பாடுங்கள் என்பது நாயனார் அறிவுரையாகும். ஒரு மணத்தைத் தடுத்து வைத்த பெருமான் சுந்தர ருக்கு இரு மணத்தைப் பொருத்தி வைக்கிறான். பரவை யாரை மணம் முடித்து இல்லற தர்மத்தை இனிது நடத்திக்கொண்டு வரும் நாட்களிலே நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டமையால் குண்டையூர்க்கிழார் அளித்த நெல்லை வீட்டிலே சேர்ப்பிக்கும்படி இறைவனையே வேண்டிப் பாடுகிறார்.

"நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவை யட்டித் தரப்பணியே."



இப்பாடலிலிருந்து ஒரு உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தம்பொருட்டு எம்பெருமானை ஏவுகின்ற சுந்தரர், இறைவனோடு தனக்குள்ள அன்புப் பிணைப்பையும் எடுத்துக் காட்ட மறக்கவில்லை. பாட லின் முதலடியிலேயே அதனை விளக்குகிறார். நீளநினைந்து நித்தலுங் கைதொழுபவன் தான் என்ற தகுதிப் பாட்டை எடுத்துக்காட்டி நாமும் அத்தகுதிப்பாடு உடையோமானால் இறைவனை ஏவல் கொள்ளலாம் என்பதையே எடுத்துக்காட்டுகிறார்.

வாழ்க்கை வாழ்வதற்கே யென்றும் அதற்கு வழி வகுத்துத் தரவேண்டிய பொறுப்பு எம்பெருமானைச் சார்ந்ததே என்றும் எடுத்துக்காட்டி யருளிய பல பாடல்களைக் காணலாம். திருநாகைக்காரோணம் என்ற தலத்திலே எழுந்தருளிய பெருமானைப் பார்த்துக் கேட்கிறார். 'முத்தாரம், மணிவயிரம், கத்தூரி, கமழ் சாந்து தந்தருளவேண்டும். கந்தம் முதலாம் ஆடையாபரணம் பண்டாரத்தே யெனக்குப் பணித் தருள வேண்டும். பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும். கறிவிரவு நெய்ச்சோறு முப்போதும் வேண்டும்.' இம்மைப் போகங் குறித்து எவற்றை வேண்டினாலும் வேண்டத் தருபவன் அவனே என்பதை இவ்வாறு பல இடங்களிற் காட்டியுள்ளார்.

அடிகளுடைய வாழ்க்கையை மேலெழுந்தபடி நோக்கினால் சிற்றின்பச் சுவைக்காகவே பல இடங் களில் ஆண்டவனை வேண்டிப் பாடினார் என்பது எம் முள்ளத்திற் படுகிறது. ஆனால் எந்த நிகழ்ச்சியிலும் பேரின்ப விளைவையே எதிர்பார்த்தார் என்பதை நாமுணர வேண்டும்.

"எடுதரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்"

என்று அருணந்திசிவம் குறிப்பிடுவதுபோன்ற வாழ்க்கை நிலையை மேற்கொண்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 'மற்றுப் பற்று எனக்கு இன்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன்' எனப் பாடித் தனது உள்ளத்தினுயர்வை நாம் காணவைக்கிறார். இறை நினைவற்ற நாட்களை 'ஓவுநாள் உணர் வழியுநாள் உயிர் போகுநாள் உயர் பாடைமேல் காவுநாள்' எனக் கூறிப் பழிக்கிறார்.

முன்னோர்க்கு மதிப்புக் கொடுத்துப் பாடிய சிறப்பு சுந்தரர் செந்தமிழில் நிரம்பக் காணலாம். ஏயர்கோன் கலிக்காம நாயனார் பகைத்து நின்ற போதும் பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையோராய் விளங்கினார். விறன்மிண்டர் கூற்றுக்கு மதிப்புக் கொடுத்து அடியார் பெருமையைப் பாடியருளினார். சேரமான் பெருமான் நாயனாரோடு என்பும் ஒன்றி உயிரும் ஒன்றி நட்புப் பூண்டார். 'நேசமுடைய அடியவர்கள் வருந்தாமை யருந்த நிறைமறையோருறைவீழி மிழலைதனினித்தல் காசருளிச் செய்தீர்' என்று பாடி அடியார்கள் அற்புதங்களைப் போற்றினார். அடியார்கள் செயல் உலகுக்குக் குற்றம்போல் தோன்றினும் எம்பெருமான் குணமெனக் கருதும் கொள்கையுடையவன் என்பதைத் திருப்புன்கூர்ப் பதிகத்திலே எடுத்துப் பாடினார்.

"நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே."

இங்கே குறிக்கப்பட்ட மெய்யடியார்கள் எண்மரும் திருவருள் வயப்பட்டவர்கள். ஆணவமுனைப்பால் செய்யாது அருள் முனைப்பால் செய்த சில கருமங்கள்



உலகோர் பார்வைக்குக் குற்றம்போலத் தோன்றுவன. ஆனால் அவை சிவபெருமானாற் குணமெனக் கொள்ளப்பட்டு நற்புண்ணியப் பயனை அளிப்பனவாக அமைந்துவிட்டன. குணமுங் குற்றமும் செய்வோர் கருத்து முறையால் அலசி யாராயப்பட வேண்டியதேயன்றிச் செயல்முறையால் ஆராயப்பட வேண்டியதன்று. இதனை வள்ளுவப் பண்பாட்டுணர்வோடு எடுத்துக் காட்டுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். தமிழன் பண்பாட்டை எடுத்து விளக்கும் முறையில் 'நீதியில் வழுவேன் நமர் பிறர் அறியேன்' எனவும் பாடியுள்ளார்.

அருமைப் பாடல் ஒன்றிலே 'நயத்திற்குச் சுந்தரனார்' என்று போற்றியுள்ளார் ஒரு பெரியார்; தோழமைத் தொடர்பின் மூலம் பேச்சுரிமை இருந்தமையால் கற்பனை நயம், நகைச்சுவை யாவும் அங்கே மிளிர்கின்றன. தம்பிரான் தோழர் என்ற சிறப்புத் திருநாமம் பெற்ற இவர் தனக்கு அருள் செய்யாமல் இருந்த சிவபெருமானுடைய நிலையை நினைந்து வருந்துகிறார். குற்றம் செய்யினுங் குணமெனக் கருதும் கொள்கையாளர் இவ்வாறிருத்தல் தகுமா என வாதிடுகிறார். 'பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்' எனக் கூறிக் கண்களை மறைப்பித்தமைக்கு மனமுடைகிறார்.

"வல்ல தெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தி னாலும் வாய்தி றந்தொன்
றில்லை யென்னீர் உண்டும் என்னீர்
எம்மை யாள்வான் இருப்ப தென்னீர்"

எனக் கேட்கிறார். இங்கே நயமான பேச்சுரிமை தொனிக்கிறது. திருமுருகன் பூண்டியிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் கள்வர்கள் பொருள்களை வழிமறித்துக் கவர்ந்து சென்றனர். கள்வர்கள்மேற் குறை காணாமற் சிவபெருமானிடத்திலேயே குறை காண்கிறார் சுந்தரர். 'உமது எல்லையில் அடியார்க்குத் துன்பம் நேரிடலாமா? காக்குந் தெய்வம் நீயிருக்கக் கள்வர் தொல்லை

நேரிட்டதேன்? எல்லை காப்ப தொன்றில்லையாகில் நீர் எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானிரே' என்று கூறி நியாயங் கேட்கிறார். தடுத்தாட்கொண்ட பெருமான் தன்னை என்னவாயினும் செய்ய உரிமையுடையவர்தான். ஆனால் அந்த உரிமையைவைத்துக்கொண்டு குருடாக்கித் துன்புறுத்தல் தகாது என்பதை நயம்படப் பாடுகிறார்.

"விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்த தில்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே."

இவ்வாறெல்லாம் நயம்படப் பாடிய அடிகள் உலகத்து உயிர்களின் வாழ்வு நிலையற்றது என்பதை எடுத்துக் காட்டவும் மறக்கவில்லை. 'நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார் நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில் சொல்லாய்க் கழிகின்ற தறிந்தடியேன் தொடர்ந்தேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே' என வேண்டுகிறார். திரைத்து நரைத்து மூப்பு வரும் வரையும் காத்திராது இளமையிலேயே இறைவழிபாடாற்ற வேண்டும் என இளைஞர்களுக்கு அறிவுறுத்துகிறார். இவ்வாறாகப் பல கோணங்களில் வைத்துச் சுந்தரர் செந்தமிழை ஆராய்ந்தால் அவர் ஒரு 'திருநெறி இயக்கத் தலைவர்' என்பது புலப்படும்.

"மண்ணுலகிற் பிறந்துநும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல்தொண்ட னேன்இன்று கண்
[டொழிந்தேன்
விண்ணுலகத் தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தா னொடித்தான்மலை யுத்தமனே."

உ

# சிவபணியின் சிறப்பு

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்குஒரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதுஒரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே."

மக்கள் வாழ்க்கையிலே சிலபல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ ஏற்பட்டுச் சமய உணர்வையும் கடவுள் நம்பிக்கையையும் எழுப்பிவிடுகின்றன. மனிதனின் செருக்கும் பெருமிதமும் நாடோறும் தேய்ந்து மாய்ந்து போகக்கூடியதாகப் பிணிகளும் துன்பங்களும் அடிக்கடி நலிவுறுத்துகின்றன. இச்சூழ்நிலையிலேயே மனிதனுக்குத் தனது சிறுமையினையும் ஆண்டவனுடைய பெருமையினையும் உணர நேரிடுகிறது. சிந்தனையுள்ள மக்கள் ஒவ்வொருவருக்குஞ் சமயப்பற்று ஏதோ ஒரு காலத்தில் ஏற்பட்டே தீரும். ஏனெனில், உண்மைச் சமயந்தான் மக்கள் வாழ்க்கைத்துறைகள் ஒவ்வொன்றிலும் ஊடுருவிச் சென்று அவனை உயர்த்துவதாகும். ஆனால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சமய உணர்வு இயல்பாக நம்மிடத்தில் அமைந்துகிடக்கிறது. இந்த இயல்பைச் சிலர் மறைக்கிறார்கள். இன்னுஞ்

சிலர் வளர்க்காமல் இருக்கிறார்கள். வேறு சிலர் வளர்க்கிறார்கள். மறைப்பவனை நாத்திகனென்றும் வளர்ப்பவனை ஆத்திகனென்றும் பேசிக்கொள்கிறோம். எவரிடத்திலேனும் கடவுணர்வு இல்லையென்று சொல்லுவதற்கில்லை. மறைந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். உதாரணத்துக்கு ஒரு சிறிய கதையை அவதானிப்போம்.

விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் கடவுளில்லை யென்று மாணவர்க்குப் போதித்து வந்தார். அவருடைய போதனையில் மாணவர்கள் ஈடுபட்டு ஒரு நாள் ஒரு பெரிய விழாவுக்கு ஏற்பாடு செய்து 'கடவுள் இல்லை' என்ற விடயம் பற்றிச் சொற்பெருக்காற்றும்படி விஞ்ஞான ஆசிரியரை வேண்டிநின்றனர். தேகநலமின்மையால் நீண்டநேரம் பேசமுடியாமைக்குத் தயங்கி நின்றபோதும் ஒருவாறு கூட்டத்திற் பேச ஒப்புக் கொண்டார் ஆசிரியர். உடல்நலக் குறைவோடு பேசத் தொடங்கி ஒருமணி நேரம் உற்சாகமாகப் பேசி முடித்தார். முடியுந்தருணத்தில் கைக்கடிகாரத்தைப் பார்த்து அதிசயித்து 'அட கடவுளே, இவ்வளவு நேரமும் பேசிவிட்டேனே' என்று சொல்லிப் பேச்சை முடித்தார். பேச எடுத்துக்கொண்ட விடயம் 'கடவுள் இல்லை' என்பது. பேச்சின் முடிவில் கடவுளை அழைத்தபடி இருந்தார் விஞ்ஞான ஆசிரியர். இதிலிருந்து நாமுணருவது இறைநினைப்பு என்றுமே எம்மோடு கலந்துள்ளது என்றே. ஆனால் மறைக்கப் பார்க்கிறோம். இந்த மறைப்பை நீக்க வேண்டுமென்றே ஞானச்செல்வர்கள் அருட்பணியாற்றினர்.

சிவபணி என்பதைச் சிவனுக்கு ஆற்றும் பணி யென்று பொருள் கொள்ளாது சிவனை நினைந்து உலகுக்கு ஆற்றும் பணியென்று பொருள் கொள்ளல் வேண்டும். ஆண்டவன் உயிரைத் தங்கம் ஆக்கிவிடுகின்றான். ஆண்டவன் தங்கம்; உயிர் செம்பு; ஆனால் ரசவாத வித்தையினால் செம்பு தங்கம் ஆக்கப்படுகிறது.



ஞானமாகிய நெருப்பிலிட்டு அருளாகிய குளிகையைத் தேய்த்து இவ்வித்தையைச் செய்கிறான் எம்பெருமான். இதனால் பக்தர்கள் எல்லோரும் மாற்றுத் தங்கம் ஆகிவிடுகின்றனர். பிறவியின் பயன் ஆண்டவனை வழிபடல் என்றால் அவ்வழிபாட்டின் பயன் யார்மாட்டும் அன்பு செலுத்தல் என்பதை உணர்விற் கொள்ள வேண்டும்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே."

என்றும்

"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

என்றும் பாடியருளினார் தாயுமான சுவாமிகள். பணி செய்து வாழ்ந்தாற் போதும், கடவுள் நம்பிக்கை அவசியமில்லை யென்று கூறுவாரும் உண்டு. ஆனால் ரசம் பூசாத கண்ணாடி பிம்பம் காட்டாதது போலத் தெய்வ நம்பிக்கை இல்லாத உள்ளத்தில் மனச்சாட்சி வேலை செய்யாது. அங்கே நீதியும் பண்பாடும் உயிரற்றுப் போய்விடும். பண்பாடு என்பது ஆண்டவன் வழிபாட்டை ஒட்டிநிற்பதுதான் என்பதை நினைவிலிருத்த வேண்டும். பண்பாட்டின் சிறப்பு பிறர் நலம் பேணுவதிலேயே பெரிதும் தங்கியுள்ளது. சமயம் எதுவாக இருந்தாலும் அது பிறர் நலம் பேணுவதையே முக்கியமாகப் போதிக்கிறது. வள்ளுவர் போன்ற பெருமக்களும் தங்கள் நூல்களில் இதனையே பல இடங்களில் வற்புறுத்திக் காட்டினார்கள். உலகம் போற்றும் உத்தமர்களின் வாழ்க்கையினை எடுத்து ஆராய்ந்தாலும் பொதுநலப் பணியே அவர்களிடம் மிகுந்து இருந்தமையைக் காணலாம்.

சைவம் என்பது சிவத்துடன் சம்பந்தமுடையது. சிவம் என்பதற்கு அன்பு என்று பொருள் படைக்கிறார் திருமூலர். 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவி

லார்' என்பது அவர் வாக்கு. எனவே சிவபணி என்பது அன்பை அடிப்படையாகக் கொண்ட பணி என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்டவன்மேல் அன்பு வைத்துச் செய்வதும், அடியார்மேல் அன்புவைத்துச் செய்வதும், ஏழைகளின் மேல் அன்பு வைத்துச் செய்வதும், ஏனைய உயிர்கள் மேல் அன்பு வைத்துச் செய்வதும் சிவபணியேயாகும். இவற்றில் முதலாவது பிரிவை எடுத்துக்கொள்வோம்.

"பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னும் அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே."

மணிவாசகப் பெருமான் இறைவனிடம் நிரந்தர அன்புநெறியைத் தனக்கருள வேண்டிப் பாடுகிறார். காரணம் அன்பருள்ளத்தில் ஆண்டவன் கள்வனைப் போற் புகுந்து நின்று ஆட்சி செய்கிறான். ஏன்? மலரிட்டு வழிபாடு செய்யும் அடியவர்களாகிய அவர்கள் தாம் வேண்டியவற்றை இறைவன் நல்குவான் என்ற நம்பிக்கையோடுதான் வழிபாட்டை யாற்றுகின்றனர். வணங்கி நிற்பதும் வரம் வேண்டி நிற்பதும் அன்பின் செயல்களே யன்றி வேறில்லை.

" அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவேயென் னறிவி லூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடி நாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரி யெனவேயிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தே னியான்



இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
இடைவிட்டு நின்ற துண்டோ
என்றுநீ அன்றுநான் உன்னடிமை யல்லவோ
யாதேனு மறியா வெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவா ரியே."

தாயுமான சுவாமிகளுடைய இப்பாடலிலே அன்புப் பிணைப்பு ஒன்றையே காண்கிறோம். இந்தப் பிணைப்பினால்தான் ஆயிரமாயிரம் ஆலயங்களை எழுப்பியும் அறச் சாலைகளை ஏற்படுத்தியும் சிவபணி புரிந்தனர் நம்நாட்டு மன்னர்கள். 'திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனங்கே' என்ற நம்பிக்கையை எழுப்பி வைத்தவர்கள் நம் முன்னோர்கள். இரண்டாவது வகை, அடியார்மேல் அன்பு செலுத்தலாகும். 'நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்றார் மெய்கண்டதேவர். அடியார் பக்தியை மிகுத்துக் கூறுவதே 'பெரியபுராணம்'. அடியவர்க்கு ஓடு அளித்ததால் அம்பலவர் தாள் நிழற்கீழ் அடையும் பேறு பெற்றவர் திருநீலகண்டர். இன்னும் அன்ன வஸ்திரம் முதலியன வெல்லாம் அளித்து அடியாரை ஓம்பிய வரலாறுகள் பலவற்றைப் படித்திருக்கிறோம்.

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்."

திருஞானசம்பந்தப் பெருமா னருளிய பூம்பாவைப் பதிகத்தின் உட்கருத்தை இப்பாடலாக வைத்து அருளினார் சேக்கிழார் பெருமான்.

சமய உணர்ச்சி கொண்டு சமூகத் தொண்டு செய்த லும் சிறந்த சிவபணியேயாகும். அப்பர் சுவாமிகள் கையிலே உழவாரப்படை கொண்டு பாதையி லுள்ள கல்லையும் முள்ளையும் புல்லையும் அகற்றிப் பணி யாற்றினர். 'தொண்டலால் துணையுமில்லை' என்றும், 'தோலலால் உடையுமில்லை' யென்றும், 'பிச்சைய தேற்றான் பிரியா தறஞ் செய்ய' என்றும் அப்பர் சுவாமிகள் பாடினர். 'நடமாடும் கோயிலுக்கு ஆற்றும் பணி படமாடும் பரமற்கு ஆகும்' என்பது ஆன்றோர் வாக்கு. சிவபணியென்பது இத்தகைய பெருண்மை களை விளக்குகிறது. சிவனடியார்களெல்லாரும் இத் தகைய தொண்டுகளைப் புரிந்தார்கள் என்று பெருமை பேசுவதிற் பயனில்லை. தொண்டில் நமக்கு ஊக்கம் தருவதற்கே அந்த நினைவை நாம் எழுப்புகிறோம்: அந்நியநாட்டுச் சமயங்களின் வளர்ச்சிக்கு அவ்வச் சமயத் தொண்டர்களாற்றும் பணிகளே காரணமாகும். சேரிகளுக்குச் சென்று ஏழைகளின் துயர் தீர்த்தல், மருத்துவசாலைகளில் நோயாளிகளுக்கு அன்பு காட்டல், மறியற்சாலைக்குச் சென்று புத்திபுகட்டல், கோவில் களுக்குச் சென்று உபதேசங்கள் செய்தல் ஆகியவற்றால் ஏனைய சமயங்கள் மேலோங்க வழி யுண்டாகிறது. சைவ சமயக் கோவிற் பூசகர்கள் மக்களுக்கு உபதே சிக்கும் பணியையும் மேற்கொள்ள வேண்டும். மக்கள் யாரிடத்தே மதிப்புக் கொள்கிறார்களோ அவர்களின் உபதேசத்தையே விரும்பிக் கேட்பர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவரையாவது சமயத் தொண்டுக் கென அர்ப்பணிக்க வேண்டும். இத்தகைய செயல் களால்தான் சைவம் ஓங்கும். சைவர்கள் ஒவ்வொரு வரும் கொல்லாமை, இன்னா செய்யாமை ஆகிய அறங்களைப் பேணிக் காக்கவேண்டும்.

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
என்புதோல் போர்த்த உடம்பு."

என்றார் வள்ளுவர். எனவே உயிர் நின்ற உடம்பு உடையோர்களாய் இருக்கவேண்டுமானால் அன்பினொளி பாய்ச்சப்படவேண்டும்.



சிவபணியிலீடுபடுதற்குப் பெண்மக்களே சாலச் சிறந்தவர்கள். அவர்கள் அன்பின் வடிவாய் அமைந் தவர்கள். சிவபெருமான் அடியார்களை ஆட்கொள்ள வருங் காலத்தும் அம்மையப்பனாய கோலத்துடனேயே வருகின்றான். இருநாழி நெற்கொண்டு எண்ணான்கு அறமும் வளர்த்தவள் காமாட்சி. இறைவன் உமை யொடு இணைந்தே எச் செயலையும் செய்கிறான் என்று நூல்கள் கூறுகின்றன.

"சிவமெனும் பொருளும் ஆதிசக்தியோடு சேரின்
எத்தொழிலும் வல்லதாம்
அவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிது
அரிதெனா மறை இசைக்குமால்"

என்று 'சௌந்தரிய லகரி' குறிப்பிடுகிறது. அவள் உருவாம் மகளிர் அறம் வளர்க்கவேண்டியவர்கள்.

"மங்கைய ராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா — அவர்
பங்கயக் கைநலம் பார்த்தல வோஇந்தப்
பாரி லறங்கள் வளருதம்மா."

என்றார் கவிமணி. வீட்டிலே நன்னெறி விளங்குமானால் நாட்டிலே அது தானாகவே மிளிரும். சிவச்சார்பற்ற மக்களையும் அச்சார்புக்குத் திருப்பக்கூடிய சக்தி மகளிர்க்கேயுண்டு. 'பெரியபுராணம்' இதனையே எடுத்துக்காட்டுகிறது. புறச்சமயம் புக்க மருணீக்கி யாரை, இறையருள் துணைகொண்டு தடுத்து நிறுத்திச் சைவச் சார்படையச் செய்த திலகவதியாரையும் சமணர்கள் துர்ப் போதனைக்குள் மயங்கியிருந்த பாண்டியனை, ஞானக்குழந்தையின் துணைகொண்டு சைவத்துக்குத் திருப்பி யருளிய மங்கையர்க்கரசியாரை யும் சைவ உலகம் மறக்கமுடியாது. அன்புக்கு முன்னே அறிவு அடங்கிவிடும். நாட்டையாளும் மன்னனின் அறிவு, வீட்டையாளும் அரசியின் அன்புக்குமுன்

அடங்கிவிட்டது. எனவே அன்பு நெறியே சிவபணிக்கு அச்சாணி போன்றதென்பது குறிப்பிடத்தக்கது. இடையறு அன்பை வேண்டிநின்ற மணிவாசகரும் இறவாத அன்பை வேண்டிநின்ற காரைக்காலம்மையாரும் அருளிய பக்திப் பனுவல்களில் அன்பின் மிகுதிப்பாடே தொனிக்கிறது. அகில உலோகங்களையும் அன்பினுற் பிணிக்கலாமேயன்றி ஆணையினுற் பிணிக்க முடியாது. இதனை யுணர்ந்தோரே மெய்யடியார்கள். அவர்கள் வாழ்ந்துகாட்டிய நெறி முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக் காட்டும் பெருநெறி. சிவபணி என்பது அந்நெறியுடையார்க்கே உரியது. சிவ தொண்டுகளைப் பற்றிச் சொல்லுவது எளிது; செய்வது அரிது. பல்லாண்டு காலமாகப் பெரியோர்கள் பல சீர்திருத்தங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறுர்கள். அவைகளிற் பல நடைமுறைக்கு வரவில்லை. எண்ணம் சொல்லானதேயன்றிச் சொல் செயலாகவில்லை. ஆனுல் செயலாக்குவதற்குப் பல தொண்டர்கள் முன்வரவேண்டும். தன்னல மறுப்பும் தியாக சிந்தையுமுடையோரே இதற்குத் தகுதியுடையவர். இவர்களாலேயே உலகம் நன்னெறிப்பட வாய்ப்புண்டாகும்.

"அன்பு சிவமென் றறியார் இரண்டென்பர்
அன்பு சிவமென் றறிவார்க் கிரண்டில்லை
அன்பு சிவமென் றறிவால் அறிந்தபின்
அன்பே சிவமாய் அறிந்துகொண் டேனே."

உ

# வாக்குக்கருணகிரி

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே."

முருகப் பெருமானின் கருணை வெள்ளத்தில் முற்றுகத் தோய்ந்தவர் அருணகிரிநாதர். அவருடைய வாக்கும் நோக்கும் முருகனையே குறித்து நின்றது. தமிழ்ப் புலவனுகிய முருகன் அருணகிரியையும் சிறந்த கவிஞராக்கி விட்டதில் வியப்பில்லையே. இலக்கிய வரலாற்றிலே அருணகிரி ஒரு புது அத்தியாயத்தைத் திறந்து வைத்தார். அதாவது அவராலேயே சந்தப் பாட்டுப் பாடும் மரபு தொடக்கப்பட்டது. பதினைந்தாம் நூற்ருண்டில் இவர் பாடிய 'திருப்புகழ்', 'அனுபூதி', 'வேல்வகுப்பு' ஆதியன சிறந்த சந்தப்பாடல்களாலானவையாகும். அவற்றைப் பாடுவோரும் கேட்போரும் பக்திப்பரவசத்தில் மூழ்குவர். இறையன்பில் ஈடுபடுவதற்கு வாக்கு முக்கியமானது. அருணகிரியின் வாக்குகள் எம்மையும் முருகனையும் இணைத்துவிடுகின்றன. இதனுலேயே "வாக்குக்கருணகிரி" எனப் போற்றப்பட்டார்.

“ வாக்கிற் கருணகிரி வாதவூ ரர்கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்.”

ஒரு முறை தேவர்க ளெல்லாரும் ஒன்று கூடி வித்தியா தாம்பூலத்தை யாருக்குக் கொடுக்கலா மென்று சிந்தித்து இந்திரனிடம் போயினர். ஆனால், தாம் தகுதியற்றவர்கள் என்று இந்திரன் முதலாக நாமகள் ஈறாகப் பலரும் மறுத்துவிட்டனர். முடிவில் முருகனே இதற்குத் தகுதியுடையவன் என்று கண்டு வித்தியா தாம்பூலம் பெருமானுக்கே வழங்கப்பட்டது. பெருமான் சகலகலை வல்லுனன். தந்தைக்கே உப தேசித்தமையால் ‘குமரகுரு’ என்று பட்டம்பெற்றவன். திரிகரண சுத்தியோடு வழிபட்ட தன்னடியவர்க்குச் சகல கலைகளையும் உணர்த்தி நிற்பவன். அருணை முனிவருக்கு ‘நாத’ என்று நாமஞ் சூட்டியவன் இவன். மௌன உபதேசஞ் செய்தமையைக் குறித்து ‘கோனன்று உபதேசித்த தொன்றுண்டு கூறவற்றோ’ எனப் பாடுகிறார் அருணகிரி. சம்சார பந்தத்தினின்று நீங்கி உயிரும் உடலுந் தூய்மை யடைந்தமைக் கடையாளமாகச் சேவற்பொறியும் மயிற் பொறியும் அருணகிரியார்க்குப் பொறிக்கப்பட்டன. ‘சரவணபவ’ என்னும் சடாட்சர மந்திரமும் உபதேசிக் கப்பட்டது. முதலிலே பக்குவ நிலையிலே நிற்கச்செய்து பின்பு தன்னைப் பாடவைத்தான் பெருமான். ‘எங்ஙனம் பாடுவேன், என்ன சொல்லிப் பாடுவேன்’ என்று ஏங்கி இரங்கி நின்ற அடிகளுக்கு இப்படிப் பாடு என்று ‘முத்தைத் தரு’ என்னும் முதலடி எடுத்துக் கொடுத் தான் முருகன்.

தெருக்கடியிற்றான் ஞானம் பிறக்கிறது; இப்படி யான ஒரு சந்தர்ப்பத்திலேதான் கண்ணபிரான் கீதையை அர்ச்சுனனுக்கு உபதேசித்தார். வாழ் வெனும் மையலிலே மயங்கித் தடுமாறி அல்லற்பட்டு



இனி உயிர்விடுவதே முடிவெனக்கொண்டு அருணாசலத் தில் தற்கொலை புரிய எத்தனித்தார் அருணகிரி. அந்த நிலையில் ஞானவாய்ப்பு ஒன்று கூடி முருகனால் தடுத்து நிறுத்தப்பட்டார். முதலிலே வாசக தீட்சை செய்யப் பட்டது. அதனையே பற்றுக்கோடாகக் கொண்டு பக்தி உணர்விலே தலைப்பட்டார். குறிப்பிட்ட கால முடி விலே இந்தச் சடாச்சர நாம ஜெபமே அருணகிரியின் பக்தியை உச்ச வரம்பிற்குக் கொண்டு வந்தது; அருள் பெற்று சந்தப் பாக்களை அற்புதமான முறையில் அள்ளி அள்ளிச் சொரிந்தார். பெருமானின் தண்டை ஒலி சிலம்பொலி இவற்றிலிருந்து இசை நுணுக்கங்களையும் சந்தச்சிறப்புக்களையும் இலக்கண அமைதியையும்அறிந்து கொண்டார். இன்று கிடைக்கும் திருப்புகழ்ப் பாடல் கள் ஆயிரத்து முந்நூற்றேழு. ஆனால் இவற்றில் இடம் பெற்ற சந்தங்கள் ஆயிரத்தெட்டு. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் மொத்தம் பதினாறாயிரம் என்பர். திருஞானசம்பந்தரைப் போலப் பாடுகின்ற வரம் தனக்குக் கிடைக்கவேண்டும் என்று முருகனிடம் கேட்டுப் பெற்றார்.

“ புவியதனிற் பிரபு வான
புகலியில்வித் தகர் போல
அமிர்தகவித் தொடை பாட
அடிமை தனக்கு அருள்வாயே.”

என்றும்,

“ ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய் ”

என்றும் முருகனை வேண்டிநின்றார். இந்த அருள் ஞானம் கொண்டு பாடிய மேன்மையினாற்றான்

“ ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார் ”

எனத் தாயுமான சுவாமிகள் போற்றுகிறார். ஓரிடத் திலே ஞான முதிர்ச்சியிலே நின்று முருகனிடம் மெய்ப் பொருள் எதுவெனக் கேட்கிறார்.

"வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டஇடம்
தானோ பொருளா வதுசண் முகனே."

ஆனால், சண்முகப்பெருமான் அவருக்குச் செய்த மெய்ப் பொருள் உபதேசம், 'சும்மா இரு சொல்லற' என்பதுதான். சும்மா இருத்தலினால் நான் என்ற அகந்தையும் நீங்கி சொல்லற இருப்பதனால் சுட்டறிவு நீங்கி மெய்ப்பொருளை அறியும் வாய்ப்பைப் பெற்று பக்தி நிலையில் தலைப்படலாம். அவனை நினைந்து உருகி அவன் புகழ் பேசி நிற்க உலக விடயங்களில் உவர்ப்புத் தோன்றும். எல்லாம் அவன் செயல் என்று இருப் போர்க்குப் புண்ணிய பாவம் தொடரமாட்டா. அதனால் பிறவி வராது. இந்த நிலையை அருணகிரி எட்டிப் பிடித்து உள்ளத்தைத் திடப்படுத்திக்கொண்டார். அந்தத் திடசித்தத்தோடு அலங்காரத்தில்

"பங்கே ருகன்எனைப் பட்டோலையில்இடப் பண்டுதலை
தங்காலில் இட்ட தறிந்திலனோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோன் அறியில் இனிநான் முகனுக்கு இருவிலங்கே."

எனப் பாடுகிறார்.

ஆன்மாக்களின் பாவ புண்ணியங்களுக்கேற்பப் பிறவியை வகுத்துக் கொடுப்பவன் பிரமன். அவன் முருகனடியாரை மாத்திரம் தனது பட்டோலையில் எழுதமுடியாது. அப்படி எழுதுவானானால் முன்பு விலங் கிட்ட பெருமான் பின்னும் இரட்டை விலங்கு பூட்டி விடுவானல்லவா? இவ்வாறு தன் உள்ளநிறைவை எடுத்துக்காட்டுகிறார்.

தமிழ்மொழிப்பற்று மிகுந்தவர் அருணகிரி. தமிழ்ப் பாடல்களைப் பலஇடங்களில் போற்றிக் கற்றபுலவர்கள் போல் தனக்கும் அப்பேறு கிடைக்கவேண்டும் என விரும்புகிறார். இதனால் முன்னோர் பாடற் பணியை



ஞாபகமூட்டிக்கொண்டார். 'கற்ற தமிழ்ப் புலவனுக்குமே அருள் உற்றொரு பொற்கொடி களிக்கவே, கற்பனை நெற்பல அளித்த காரணன் அதிபாலா' என்ற பாடலிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஞாபகப்படுத்துகிறார். தமிழ்ப்பிரியத்தினால் முத்தமிழால் வைதாரையும் முருகன் வாழவைப்பான் என்ற கருத்தை எமக்குத் தருகிறார். தமிழைக் கேட்பதிலே ஆர்வம் கொண்ட பெருமான் அதனைப் பேச்சென்றும் ஏச்சென்றும் கொள்ளாது ஏற்றருள்வான் என்பது அவர் நம்பிக்கை. இதனால்,

"செந்தமிழ் நாளுமோதி உய்ந்திட ஞானமூறும்
செங்கனி வாயிலோர்சொ லருள்வாயே"

எனவும்,

"திகழ்தமிழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடியைப் பற்றித் தொழுதுற்றுச்
செனன மறுக்கைக்குப் பாமுத்திக் கருள்தாராய்"

எனவும் பாடினார். தான் எங்கே நினைந்தாலும் முருகப் பெருமான் அங்கே தன்முன்வந்து எதிர் நிற்பானென்று பாடியமை எம்முள்ளத்தைத் தொடுகிறது. அவனை வழிபடுவார்க்கு அறிவுமறிதத்துவமும் அபரிமித வித்தைகளும் அறியென இமைப்பொழுதில் உணர்த்துவான் என நம்பிக்கை யூட்டுகிறார்.

அருணகிரிநாதரிடம் நாம் காணும் ஒரு பெருஞ் சிறப்பு ஏக தேவ வழிபாடே. அதுவே முத்திக்கு முதற் படி என்பதை யாவருமுணர்வர்.

"கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார் யாங்களும் இன்ப வாழ்வும்
தற்பொறி யாக நல்கும் தலைவநின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோம் கண்டாய் பூரணா னந்த வாழ்வே."

என்றார் தாயுமானவர்.

அருணகிரியும் தனது பாடல்களிலே எந்த இடத்திலும் முருகனையே முடிவான வணக்கக் கடவுளாகப் போற்றியுள்ளார். சிவனார் மைந்தா, உமைபாலா, மாலோன் மருகா, தனியானை சகோதரனே என்றெல்லாம் பாடுவதை நாம் கவனிப்பின் ஏகதேவ வழிபாடு புலப்படும்.

இனி, திருப்புகழின் சிறப்பினைக் கவனிப்போம்: பாலும் தேனுங் கலந்தாற்போலச் சந்த இசையும் தண்டமிழ் நயமும் கலந்தமையையும் பக்தர்கள் அற்புதமென்று போற்றுவதையும் ஒரு பாடலில் எடுத்துக் காட்டுகிறார்.

"பக்தர்கள் அற்புதம் என வோதும்
சித்ராக வித்துவ சத்த மிகுத்த
திருப்புக ழைச்சிறி தடியேனும்
செப்பென வைத்துல கிற்பரவத்
தெரிசித்த அனுக்கிரகம் மறவேனே."

பல புலவர்களும் 'திருப்புகழை'ப் புகழ்ந்து பாடினார்கள்.

"உதிருங் கனியை கரும்பாகில்
உடைத்துக் கலந்து தேனைவடித்து
வூற்றி அமுதி னுடன்கூட்டி
ஒக்கக் குழைத்த ருசிபிறந்து
மதுரங் கனிந்த திருப்புகழ்ப் பாமாலை."

என்று ஒருவர் போற்றுகிறார். இதில் வேதாகம புராண இதிகாச நுண் பொருள்கள் அடங்கியுள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் செறிந்திருக்கும் பாடல்களும் பலவுண்டு. முருகனடியார் ஒருவர் இருப்பிடம் உனக்கு எதுவென்று முருகனை வினவுவது போலவும் அதற்கு முருகப் பெருமான் விடையளிப்பது போலவும் காட்டித் திருப்புகழ்ப் பெருமையைக் கூறுகின்ற பாடல் பின்வருவதாகும்.



"பொருப்பது பொடிப்பட விடுத்திடு கைவேலா
இருப்பிடம் உனக்கெது எனக்கரு ளியம்பாய்
உருக்கநல் விழுக்குலம் ஒழுக்கமிலை ரேனும்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினி லிருப்பாய்."

ஆறுபடை வீட்டையும் 'திருப்புகழி'லே மிகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். படை வீடுகள் என்று சொல்லும்போது திருச்செந்தூர் மாத்திரந்தான் 'கந்தபுராண'த்திற் குறிப்பிடப்பட்ட படைவீடாகும். ஏனைய திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை, குன்றுதோறாடல் ஆகிய ஐந்துபடை வீடுகளையும் சேர்த்து ஆறுபடை வீடாக முருகன் எழுந்தருளி யருள்புரியும் இடங்களைக் கூறுவர். ஆறுமுகமுடையான் ஆறு படைவீட்டினைக் கொண்டான். அவனுக்கு ஆறு நாள் நோன்பு. அவை ஆறு பகைகளையும் நீக்கும். காம குரோத லோப மோக மத மாற்சரியம் என்பன எம்மை வாட்டும் ஆறு பகைகளாகும். இவை யாவும் அகப்பகைகள். அகப்பகைகளை ஓட்டும் சக்தி ஞானவேலுக்கு உண்டு. ஆறு பகையையும் போக்க ஆறுபடைவீட்டில் எழுந்தருளியுள்ளான். எமது சித்தத்தைச் சிவமாக்க ஆறு ஆதாரங்களையும் தாண்ட வேண்டும். ஆறு ஆதாரங்கள் போல ஆறுபடை வீட்டிலும் வழிபட்டுத் தாண்டிச் சிவகதியடைய முடியும். மக்களாய்ப் பிறந்தோர் கல்வி, செல்வம், முத்தி, பகை வெல்லல், காலனை வெல்லல், உடல் நலம் ஆகிய ஆறு செல்வங்களையும் அடையவேண்டியது குறிக்கோளாகும். ஆறெழுத்து நாமமும் ஆறுபடை வீடுமுடையானை வணங்கி அறுவகைப் பேற்றையும் பெறமுடியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பரங்குன்றம் | — | ச | — | செல்வம் |
| திருவேரகம் | — | ர | — | கல்வி |
| குன்றுதோருடல் | — | வ | — | முத்தி |
| திருச்செந்தூர் | — | ண | — | பகைவெல்லல் |
| திருவாவினன்குடி | — | ப | — | காலனை வெல்லல் |
| பழமுதிர்சோலை | — | வ | — | உடல்நலந்தருவது |

'திருப்புகழில்' குறிப்பிட்ட தலங்களில் ஈழத்துக் கதிர்காமமும் சிறப்புடையதாகும். - பெருமான் அசுரர் களை அடக்கி வாகை சூடுவதற் கமர்ந்த இடம் கதிர் காமம் என்று குறிப்பிடுகிறார்கள். அருணகிரியும் பல பாடல்களிலே கதிர்காமச் சிறப்பை விளக்கியுள்ளார்.

''இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.''

முருகனை அலங்கரித்துப் பக்திச்சுவை சொட்டப் பாடிய பனுவல் 'கந்தரலங்கார'மாகும். இதில் அமைந் துள்ள நூறு பாடல்களையும் முருக பக்தர்கள் மனனஞ் செய்து கொடிய வினையிலிருந்து நீங்கிக் கொள்கிறார்கள். 'குமரேசரிரு தாளுஞ் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும் தோளுங் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடின்' 'நாளென்செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த கோள் என்செயும் கொடுங் கூற் றென் செயும்' என்ற வாக்கு எமது வாயில் எந்நேரமும் ஒலிக்கவேண்டும். நாளும் நாளும் நாத்தழும்பேற முருகன் புகழ்பாட வேண்டும். பாடினோர்க்குக் குருவாகத் தோன்றிக் குமரன் அருள் வழங்குவான்.

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

9086 C.C

210950 பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
... பகுதி

சிவத்தமிழ்ச் செல்வி, செஞ்சொற் செம்மணி, சித்தாந்த ஞானாகரம், சைவப்புலவர்
**பண்டிதை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்**

# மலேசியா - சிங்கப்பூர் சொற்பொழிவுகளின் அட்டவணை

| திகதி ஏப்ரல் | வாரம் | நேரம் | இடம் | ஊர் | விடயம் | ஆதரவு வழங்குவோர் |
|---|---|---|---|---|---|---|
| 7 | பு | 7-00 மாலை | கந்தசாமி கோவில் கலாமண்டபம் | குவாலாலம்பூர் | வரவேற்புரை கணபதி கடாட்சம் | சைவ அபிமானிகள் |
| 8 | வி | 8-00 ,, | ஸ்ரீமார்த்தாண்டவ கோவில் | மாறுன் | முருக வழிபாடு | சிலங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் |
| 9 | வெ | 7-00 ,, | கோவில் மண்டபம் | குவாந்தன் | திருநாவுக்கரசர் திருவுள்ளம் | குவாந்தன் இந்துக்கள் |
| 10 | ச | 5-00 ,, | துர்க்கை அம்பாள் கோவில் | குவாலா திறங்கானு | கோவில் என்பது தில்லையே | இந்துசங்கம் |
| 11 | ஞா | 6-00 ,, | இந்துசபை மண்டபம் | கோட்டாபாரு | மக்கட் பிறப்பின் மாண்பு | இந்துசபை |
| 12 | தி | 2-00 ,, | 'அங்காசபுரி' தொலைக்காட்சி நிலையம் | குவாலாலம்பூர் | பேட்டி | — |
| 12 | தி | 6-30 ,, | கந்தசாமி கோவில் | ,, | திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் | சிலங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் |
| 13 | செ | 10-00 காலை | ஆகாயவாணி | ,, | புத்தாண்டு வைபவம் கல்வியின் நோக்கமும் சமுதாயத்தொண்டும் | |
| 13 | செ | 5-00 மாலை | கலாமண்டபம் | ,, | ஆறுமுகநாவலர் சிந்தனைத் திறன் | சிலங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் |
| 13 | செ | 7-30 ,, | ,, | ,, | ஆலயம் அவசியமா? * | |
| 14 | பு | 6-00 ,, | ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் | ,, | கம்பர் கவிதை * | மகாமாரியம்மன் கோவில் |
| 15 | வி | 6-45 ,, | தண்டாயுதபாணி கோவில் | ஈப்போ | மங்கையர்க்குத் தனியரசி | தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (ஈப்போ கிளை) |
| 16 | வெ | 7-00 ,, | Y. M. H. A. மண்டபம் | தைப்பிங் | வள்ளுவர் காட்டிய வழி | இந்து இளைஞர் சங்கம் |
| 17 | ச | 6-30 ,, | ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் | குலிம் | சம்பந்தர் செந்தமிழ் | ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரமம்—கெடா |
| 18 | ஞா | 6-30 ,, | ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் | சுங்கை பட்டாணி | திருவாசகம் | ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரமம்—கெடா |
| 19 | தி | 6-30 ,, | ஸ்ரீ மகாமாரியம்மன் தேவாலயம் | அலோர் ஸ்டார் | சேக்கிழார் காட்டிய பெண்மைச் சிறப்புக்கள் | தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (கெடா உப கிளை) |
| 20 | செ | 7-00 ,, | ஸ்ரீ இராமகிருஷ்ண மண்டபம் | பினாங்கு | மணிவாசகத்தில் ஞானமார்க்கம் | பினாங் இராம கிருஷ்ண சபை |
| 21 | பு | 6-30 ,, | ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் | பெற்றாலிங் ஜெயா | பட்டினத்தார்பாடல் | பெற்றாலிங் ஜெயா இந்து சபை |
| 22 | வி | 6-30 ,, | நகரத்தார் மண்டபம் | செந்தூல் | காரைக்காலம்மை யார் சிவானுபவம் | நகரத்தார் |
| 23 | வெ | 6-00 ,, | ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் | கிள்ளான் | திருக்கோவையார் | ஸ்ரீ சுப்பிரமணிய கோவிற் சபை |
| 24 | ச | 3-30 ,, | விவேகானந்த ஆச்சிரம மண்டபம் | குவாலாலம்பூர் | நால்வர் காட்டிய நெறிகள் | அருள்நெறிக் கூட்டம் |
| 24 | ச | 7-00 ,, | சங்கீத அபிவிருத்திச் சபா | ,, | பண்ணும் பரதமும் | சங்கீத அபிவிருத்திச் சபா |
| 25 | ஞா | 10-00 காலை | கலாமண்டபம் | ,, | (குரு பூசை) யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் | யோகர் சுவாமிகள் குருபூசைக் குழு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | தி | 2-00 | ,, | 'அங்காசபுரி' தொலைக்காட்சி நிலையம் | குவாலாலம்பூர் | பேட்டி | — |
| 12 | தி | 6-30 | ,, | கந்தசாமி கோவில் | ,, | திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் | சிலங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் |
| 13 | செ | 10-00 | காலை | ஆகாயவாணி | ,, | புத்தாண்டு வைபவம் கல்வியின் நோக்கமும் சமுதாயத்தொண்டும் | |
| 13 | செ | 5-00 | மாலை | கலாமண்டபம் | ,, | ஆறுமுகநாவலர் சிந்தனைத் திறன் | சிலங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் |
| 13 | செ | 7-30 | ,, | ,, | ,, | ஆலயம் அவசியமா? * | |
| 14 | பு | 6-00 | ,, | ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் | ,, | கம்பர் கவிதை * | மகாமாரியம்மன் கோவில் |
| 15 | வி | 6-45 | ,, | தண்டாயுதபாணி கோவில் | சுப்போ | மங்கையர்க்குத் தனியரசி | தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (சுப்போ கிளை) |
| 16 | வெ | 7-00 | ,, | Y. M. H. A. மண்டபம் | தைப்பிங் | வள்ளுவர் காட்டிய வழி | இந்து இளைஞர் சங்கம் |
| 17 | ச | 6-30 | ,, | ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் | குலிம் | சம்பந்தர் செந்தமிழ் | ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரமம்—கெடா |
| 18 | ஞா | 6-30 | ,, | ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் | சுங்கை பட்டாணி | திருவாசகம் | ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரமம்—கெடா |
| 19 | தி | 6-30 | ,, | ஸ்ரீ மகாமாரியம்மன் தேவாலயம் | அலோர் ஸ்டார் | சேக்கிழார் காட்டிய பெண்மைச் சிறப்புக்கள் | தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (கெடா உப கிளை) |
| 20 | செ | 7-00 | ,, | ஸ்ரீ இராமகிருஷ்ண மண்டபம் | பினாங்கு | மணிவாசகத்தில் ஞானமார்க்கம் | பினாங் இராம கிருஷ்ண சபை |
| 21 | பு | 6-30 | ,, | ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் | பெற்றுலிங் ஜெயா | பட்டினத்தார் பாடல் | பெற்றுலிங் ஜெயா இந்து சபை |
| 22 | வி | 6-30 | ,, | நகரத்தார் மண்டபம் | செந்தூல் | காரைக்காலம்மை யார் சிவானுபவம் | நகரத்தார் |
| 23 | வெ | 6-00 | ,, | ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் | கிள்ளான் | திருக்கோவையார் | ஸ்ரீ சுப்பிரமணிய கோவிற் சபை |
| 24 | ச | 3-30 | ,, | விவேகானந்த ஆச்சிரம மண்டபம் | குவாலாலம்பூர் | நால்வர் காட்டிய நெறிகள் | அருள்நெறிக் கூட்டம் |
| 24 | ச | 7-00 | ,, | சங்கீத அபிவிருத்திச் சபா | ,, | பண்ணும் பரதமும் | சங்கீத அபிவிருத்திச் சபா |
| 25 | ஞா | 10-00 | காலை | கலாமண்டபம் | ,, | (குரு பூசை) யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் | யோகர் சுவாமிகள் குருபூசைக் குழு |
| 25 | ஞா | 4-00 | மாலை | ,, | ,, | பிரியாவிடைக் கூட்டம் | சைவ தேவாலய, சமய, கலாசார, சமுதாய எல்லாச் சங்கங்களும் |
| 25 | ஞா | 6-30 | ,, | ,, | ,, | சேக்கிழாரின் செந்தமிழ்ப் புலமை | சிலங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் |
| 26 | தி | 7-00 | ,, | விவேகாநந்த மண்டபம் | சிறம்பான் | சைவ சித்தாந்தம் | நெகிரி செம்பிளான் இலங்கையர் சங்கம் |
| 27 | செ | 6-00 | ,, | நகரசபை மண்டபம் | மலாக்கா | சுந்தரர் செந்தமிழ் | மலாக்கா இந்து சங்கம் |
| 28 | பு | 6-00 | ,, | ஸ்ரீ ராசமகாமாரி யம்மன் கோவில் மண்டபம் | யொகூர்பாரு | சிவபணியின் சிறப்பு | இராமகிருஷ்ண சங்கம் |
| 29 | வி | 6-30 | ,, | ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயம் | சிங்கப்பூர் | ஆலயம் அவசியமா * | சிங்கப்பூர் இலங்கைச் சைவர் சங்கம் |
| 30 | வெ | 6-30 | ,, | ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயம் | ,, | வாக்குக்கருணகிரி | தண்டாயுதபாணி கோவிற் சபை |
| மே 1 | ச | 6-30 | ,, | ஸ்ரீநிவாசப் பெருமாள் ஆலயம் | ,, | கம்பர் கவிதை * | பெருமாள் கோவில் தர்மகர்த்தாக்கள் சபை |
| 2 | ஞா | | | கொழும்புக்கு விமானத்தில் பிரயாணம் | | | |

விலை : ரூபா 6-00

சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில், குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பெற்று, தெல்லிப்பழை, இந்து இளைஞர் சங்கத்தினரால் வெளியிடப்பெற்றது.